http://www.magudammichael.blogspot.com

# மகுடம்

கலை இலக்கிய சமூக பண்பாட்டுக் காலாண்டிதழ்

இதழ் - 03

ஜூலை-செப்

2012

ஆசிரியர் : வி. மைக்கல் கொலின்




கி.பி. 1ம் நூற்றாண்டின்
மட்டக்களப்பு நாணயத்தை பார்வையிடும்
பேராசிரியர் சி.மௌனகுரு



மானுடம் சிறக்க உழைப்பது மகுடம்
தானதுவாகி தழைப்பதும் மகுடம்

விலை
ரூ.100

“மகுடம்” தமிழ் மொழியின் மகுடமாய்
தரணியெங்கும் மகுடம் சூட
தாண்டவன்வெளி புனித காணிக்கை மாதாவின்
ஆசீர்வாதங்கள்



# EAST LINK COMMUNICATION & STATIONERS

365B, TRINCO ROAD,
THANDAVANVELY – BATTICALOA.
Tel- 065 – 2224768

# HDFC BANK

HDFC BANK
உங்களுக்கான வீடமைப்பு வங்கி



இதோ...! உங்கள் இல்லங்களை அலங்கரிக்க...

## Life Style Loan



- ❖ அரச ஊழியர்களுக்கான ரூபா 1,000,000/= வரையிலான Guaranters Loan
- ❖ ஊழியர் சேமலாப நிதிக்கு எதிரான கடன் EPF Loan
- ❖ காணியைப் பிணைவைத்து Mortgaged Loan
- ❖ தங்க நகை அடகுக் கடன் Gold Loan
- ❖ சுயதொழில் மற்றும் வியாபாரம் புரிவோருக்கு விசேட கடன் திட்டம்



உங்கள் எதிர்கால வீட்டுக் கனவை நனவாக்க ஓர் சேமிப்புக் கணக்கின் மூலம் அத்திவாரம் இடுங்கள். எமது “Palm Top” நடமாடும் கணணி வங்கி மூலம் இலகுவான சேவை
“Group Housing Fund” சேமிப்புக் கணக்கிற்கு அதிகூடிய வட்டி
உங்கள் நிலையான வைப்புகளுக்கு அதிகூடிய வட்டியும் அத்துடன் குறைந்த வட்டியில் வீடமைப்புக் கடன்



அரச உத்தரவாதத்துடன் கூடிய நம்பகரமான துரித சேவை

இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபன வங்கி
58/1, Baily Road, அரசடி,மட்டக்களப்பு.
Tel: 065 2222792, 065 2227573. Mob.: 077 7142380, 071 5881804

# மஞ்சுள வெடிவர்தன கவிதைகள்

## மட்டக்களப்பில் வைத்து

தென்றல் வீச மறந்த கணப் பொழுதில்...
களப்பில் எப்போதேனும் அலையெழும்.
வேதனை மிகுந்த மீனொன்று மேலெழுந்து
நெஞ்சில் அடித்தழுது
தடதடவென்று செட்டைகளை அசைத்து
வாலால் நடந்தபடி தன் துயரத்தைச் சத்தமிட்டரற்றி
நீரில் வீழ்ந்து மறைந்து போகும் - அதுவும்
உறுதியான கணமொன்றில் மாத்திரமே

தூரக் கரைதனில் நெளியும் எல்லா ஒளிப் புள்ளிகளும்
களப்பு நீரில் நீண்ட தம் வெளிச்ச ரேகைகளை வரையும்.

கல்லடிப்பாலம்
அரண் போல உயர்ந்து எழுந்தாலும்
தன் தலை கவிழ்ந்து விழி புதைத்து
புன்னகைக்க மறந்து துயர் தாங்கும்
ஓர் தந்தையைப் போல



சிந்தனை மறந்த வாகனங்கள்
பாலத்தை அவசரமாய்க் கடந்து செல்லும்
அர்த்தமற்ற தம் வெளிச்சங்களை
களப்பின் மீது நீண்ட கோடுகளாய்த் தீட்டி

இந்தக் களப்பு அம்மாவைப் போன்றது.
ஆழ்ந்த விழிகளால் மௌனித்து
எல்லாத் துயரங்களையும் தாங்கும்
முகத்தில் அலையெழுப்பும் தென்றலுக்குப் புன்னகைக்கும்
எல்லா ஒளிக்கோடுகளையும் கலக்கும் இணைக்கும்
களப்பின் மார்பு அலைகளையும் சுழிகளையும் உயிர்ப்பிக்கும்.

புத்தரின் நினைவெழும் நிக்கினி போயா கூட - வெறும்
சுண்ணாம்பாய்க் களத்தினுள் கரைகிறது.
புத்தபிரான் சொர்க்கம் நுழைந்த பின்னர் பௌர்ணமியும் - கடும்
இருளாயே இங்கு விடிகிறது.
வசந்தம் உதயமானாலும் உதிக்க மறக்கிறதா சூரியன்?
இது கிழக்கு!

சிங்கள மூலம்
**மஞ்சுள வெடிவர்தன**

தமிழில்
**ஃபஹீமாஜகான்**

# சித்தண்டி கண்ணீர்

திகிலி வெட்டை குளமதில் பூத்த தாமரையொன்றில்
உதிர்ந்த இதழ்களிடையே சிங்கத்தின் உரோமங்கள் சிக்கிக் கிடந்தன
தாமரையில் கண்ணீர் தேங்கியிருந்தது
அது இருளில் கிடந்த
ஆயிரக்கணக்கான விழிகளைத் திறக்கச் செய்தது

கிழக்கில் உதயமாகிச் சூரியனும் உச்சிக்கு வந்தது
ஒளி வழங்காத சூரியனிடமிருந்து இருளே கசிந்தது
வெள்ளை நிற மல்லிகை மொட்டொன்று இருளில் தனித்துப் போனது
மெல்லிய புகைபோன்று சூரியன் கசிந்து கொண்டிருந்தது

வாளினை ஏந்திச் சிங்கம் கொடிதனில் அசைந்தாடியது
இலிங்கத்தை ஏந்தியபடி இராணுவம் எங்கும் அலைந்தது
மல்லிகை மொட்டொன்றை நடுவீதியில் சிதைத்தது
கீதம் பாடும் மீனொன்றை வதைத்துக் கொன்றது

அரசனோ இளவரசனோ ஒப்புதல் தந்தது
அத்துனை எளிதாயிற்றா மகளை சிங்கத்துக்குக் கொடுத்தது
தங்க விதைகளையா இனியும் தேடுவது
சிங்கங்களே இனி உங்களை நாய்களென்றா அழைப்பது

தாய்ப்பால் வாசனை மறவாத அழகிய பூவொன்றுக்கு
தான் விளையாடித் திரியும் ஊர்மனை தொலைதூர இடமில்லை
தாய்நாட்டைக் காக்கும் வீரர்கள் இருக்கும் பாதையில்
சௌபாக்கியமெங்கே சுவாசிக்கக் கூட முடியவில்லை



புற்பூண்டிழந்து போய்க் கிடக்கின்றது சித்தண்டி - அங்கே
மனமெங்கும் வியாபித்திருந்த விஷத்தை மட்டுமா கொட்டினீர்கள்
வாய் திறந்தாலே தர்ம போதனைகளை உரைக்கின்றவர்களே
இந்த நரகக் கிடங்கு உங்களுக்கு அழகாகத் தெரிகிறதா

சிங்கள மூலம்
**மஞ்சுள வெடிவர்தன**

தமிழில்
**ஃபஹீமாஜகான்**

*(மட்டக்களப்பு சித்தண்டியில், திகிலி வெட்டை அரச பாடசாலையில் ஐந்தாம் ஆண்டில் கல்வி கற்கும் ஒன்பது வயது சிறுமியொருத்தி மூன்று இராணுவ வீரர்களினால் வல்லுறவுக்குட்படுத்தப்பட்டாள். அதனை எதிர்த்த ஊர்வாசியொருவரின் உயிரற்ற சடலம் மறுநாள் தடாகமொன்றிலிருந்து கிடைத்தது.)*

மகுடம்

கலை இலக்கிய சமூகபண்பாட்டு காலாண்டிதழ்

இதழ் – 03 காலாண்டு இதழ் ஜூலை – செப் – 2012



05. தலையங்கம்

76. கடிதங்கள் – கருத்துக்கள்

# மௌனமே வாழ்க்கையாக....

– ச.ராகவன் –

54. நேர் காணல் – பா.துவாரகன்





**கட்டுரை**

09. பிரித்தானிய அரும்பொருட்காட்சியகத்தின் கண்ணாடிப் பெட்டிக்குள் மட்டக்களப்பில் 1ம் நூற்றாண்டில் வழக்கத்திலிருந்த நாணயம். – பேராசிரியர். சி.மௌனகுரு –





**சிறுகதைகள்**

52 "யாருமிங்கே தீர்ப்பிடலாம்" – வி.மைக்கல் கொலின் –

28 துணிவே துணை – சூசை எட்வேட் –

21 வல்லகுருநாதன் – வே. தில்லைநாதன்–

01 மொழி பெயர்ப்புக் கவிதை

சிங்கள மூலம் மஞ்சுள வெடிவர்தன

தமிழில் ஃபஹீமாஜகான்

**நூல் மதிப்புரை**

15 "மரணத்தில் துளிர்க்கும் கனவு" – சி. ரமேஷ் –

35 சேகுவாரா இருந்த வீடு – மகாலிங்கசிவம் –

25 நெல்லிமரப் பள்ளிக்கூடம் –முல்லைவீரக்குட்டி–

**கட்டுரைகள்**

11 புது வடிவங்களை சூல் கொள்ளக் காத்திருக்கும் கலை இலக்கிய பெருவெளி – மு.பொன்னம்பலம் –

38 மட்டக்களப்பின் பன்முகப்பாட்டு ஓவியராக ஸ்ரீகமலச்சந்திரன் – சு.சிவரெத்தினம் –

44 புனைவுடன் புனையாத கோட்பாடும் கோட்பாட்டுப் புனைவும் – திசேரா –

48 ஆதார நிலைகளில் மறுவினை – அ.ச.பாய்வா –

**கவிதைகள்**

04 எம். ரிசான் ஷெரீப்

06 வாசுதேவன்

07 ஜபார்

20 சமரபாகு சி. உதயகுமார்

24 கவிமணி நீலாபாலன்

24 சத்திய மலரவன்

24 நா.ஜெயபாலன்

43 எஸ்.பி.பாலமுருகன்

47 கோ.நாதன்

51 புலோலியூர் வேல்நந்தன்

# எம்.ரிஷான் ஷெரீப் கவிதைகள்

## துயர் விழுங்கிப் பறத்தல்

பறந்திடப் பல
திசைகளிருந்தனவெனினும்
அப் பேரண்டத்திடம்
துயருற்ற பறவையைத் தேற்றவெனவோ
சௌபாக்கியங்கள் நிறைந்த
வழியொன்றைக் காட்டிடவெனவோ
கரங்களெதுவுமிருக்கவில்லை

ஏகாந்தம் உணர்த்தி உணர்த்தி
ஒவ்வொரு பொழுதும்
காற்று ரணமாய்க் கிழிக்கையில்
மௌனமாகத் துயர் விழுங்கும் பறவை மெல்ல
தன் சிறகுகளால்
காலத்தை உந்தித் தள்ளிற்றுதான்

முற்காலத்திலிருந்து தேக்கிய வன்மம்
தாங்கிட இயலாக் கணமொன்றில் வெடித்து
தன் எல்லை மீறிய பொழுதொன்றில்
மிதந்தலையும் தன் கீழுடலால்
மிதித்திற்று உலகையோர் நாள்

பறவையின் மென்னுடலின் கீழ்
நசுங்கிய பூவுலகும் தேசங்களும்
பிதுங்கிக் கொப்பளித்துக் காயங்களிலிருந்து
தெறித்த குருதியைப் பருகிப் பருகி
வனாந்தரங்களும் தாவரங்களும்
பச்சை பச்சையாய்ப் பூத்துச் செழித்திட

வலி தாள இயலா நிலம் அழுதழுது
ஊற்றெனப் பெருக்கும் கண்ணீர் நிறைத்து
ஓடைகள் நதிகள்
சமுத்திரங்கள் வற்றாமல் அலையடித்திட

விருட்சக் கிளைகள்
நிலம் நீர்நிலைகளெனத் தான்
தங்க நேர்ந்த தளங்களனைத்தினதும்
தடயங்களெதனையும் தன்
மெலிந்த விரல்களிலோ
விரிந்த சிறகுகளிலோ
எடுத்துச் செல்லவியலாத் துயரத்தோடு
வெளிறிய ஆகாயம் அதிர அதிர
தொலைதுருவமேகிற்று

தனித்த பறவை



## காலத்தின் கொலைகாரன்

வினைகளின் சருகுகளைத் தீண்டிடவென
புதிதாக விழுந்திருக்கிறது
ஐங்கூர் பழுத்த இலை
சிவப்புக் கலந்த நிறமதற்கு
உடைசல்களின் சிதிலங்களுக்கிடையில்
சிக்கியிருக்கிறது புதுத் தளிரொன்றும்

எப்படிப் பூத்ததுவோ
பசுமையெரிந்த செடிகளுக்கிடையில்
எதற்கும் வாடிடா மலரொன்று
அன்றியும்
எந்தக் கனிக்குள் இருக்கின்றது
அடுத்த மரத்துக்கான விதை

எல்லா வாசனைகளும் பூக்களாகி
நாசிக்குள் நுழையும் கணமொன்றில்
செழித்த ஏரியின்
கரைகளைக் காக்கின்றன ஓர மரங்கள்

வசந்தத்தின் முகில் கூட்டங்களையும்
சுவரோவியங்களில் தோப்புக்கள்
எவ்வளவு ரம்யமானதாயிருக்கின்றன

இங்கு நீர் தேங்கிய குட்டைகளில்
தலைகீழாக வளருகின்றன
அருகாமை சடப்பொருட்கள்

விம்பங்கள் மட்டுமே காட்டுகின்றன
வாழ்வின் நிறங்களை
கனவுக் கண்ணாடிகளில்

தேய்ந்திடும் காலமொன்றை நோக்கியே
நகரும் எண்ணங்களுக்குக் கூடமைத்து
வர்ணங்களைத் தீட்டலாமினி

ஆமாம்
காத்திருப்பு

காலத்தின் கொலைகாரன்தான்

ISSN - 2279-1906

# மகுடம்

கலை இலக்கிய சமூகபண்பாட்டு காலாண்டிதழ்

மானுடம் சிறக்க உழைப்பது மகுடம்
தானதுவாகிதழைப்பதும் மகுடம்

இதழ் – 03 ஜூலை – செப் – 2012

ஆசிரியர் :
வி.மைக்கல் கொலின்.

E-mail:
w.michaelcollin@ymail.com
w.michaelcollin@gmail.com

Web:
www.magudammichael.blogspot.com

Layout by : Michael

கணனி வடிவமைப்பு :
நோயல் பிரதீபன்

முன் அட்டை :
உள் ஓவியங்கள் : } ஸ்ரீ கமலச்சந்திரன்

'மகுடம் பப்ளிகேஷன்ஸ் (பி) லிமிட்டட்டிற்காக
மட்டக்களப்பு வணசிங்கா அச்சகத்தில்
அச்சிட்டு வெளியிடுபவர்
ஹஜேந்தினி மைக்கல் கொலின்

சகல விதமான தொடர்புகளுக்கும்

ஆசிரியர்
'மகுடம்'
இல.90, பார்வீதி,
மட்டக்களப்பு 30000
இலங்கை
Tel : 0774338878

Contact :
EDITOR
MAGUDAM
90, Bar Road,
Batticaloa - Sri Lanka.

படைப்புக்களுக்கு படைப்பாளர்களே பொறுப்பு.

## கலைஞரிடம் பாடம் கற்ற பான் கீ மூன்

முப்பது வருட கால ஈழப்போராட்டத்தின் இறுதிக்கட்ட யுத்தத்தின் போது ஐ.நா செயற்பட்டவிதம் குறித்து விசாரித்து அறிக்கை சமர்ப்பிப்பதற்காக சார்லஸ் பெட்ரியின் தலைமையில் ஐ. நா செயலாளர் நாயகம் அமைத்த குழுவினர் தமது அறிக்கையினை 128 பக்கங்களில் சமர்ப்பித்திருந்தனர்.

அந்த அறிக்கையின் பிரகாரம் இறுதிக்கட்ட யுத்தகாலத்தில் ஐ.நா பிரதிநிதிகள் வன்னியை விட்டு வெளியேறியமையே யுத்தத்தின் போது பொதுமக்கள் அதிகளவில் (அறிக்கையின் பிரகாரம் 40 ஆயிரத்திற்கு மேற்பட்ட) பொதுமக்கள் கொல்லப்படுவதற்கு காரணமாக அமைந்தது என தெளிவுற கூறுகிறது. யுத்தம் நடைபெற்ற காலங்களில் பொதுமக்கள் கொல்லப்படாமல் தடுப்பதற்கு முயல வேண்டும் என்பதை கொழும்பிலுள்ள மூத்த ஐ.நா அதிகாரிகள் தங்களது பொறுப்பாகவே கருதவில்லை. நியூயோர்க்கிலுள்ள ஐ.நா தலைமையக அதிகாரிகளும் அவர்களுக்கு அறிவுறுத்தல்களையோ மாற்று உத்தரவுகளையோ பிறப்பித்திருக்கவில்லை. பொதுமக்கள் உயிரிழப்புக்களுக்கு பெரும்பான்மையான காரணம் ஷெல்தாக்குதல்கள்தான் என்பதை இலங்கை அரசின் அழுத்தத்தின் காரணமாக ஐ.நா தெளிவுபடுத்தவில்லை என்பதை இந்த உள்ளக விசாரணை அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும் இதன் பல பிரிவுகள் கறுப்புமையினால் அழிக்கப்பட்டுள்ளதும் தெரிய வருகிறது.

இலங்கையின் இறுதிக்கட்ட யுத்தத்தின்போது ஐ.நா பாதுகாப்புச்சபையோ வேறுமுக்கிய ஐ.நா நிறுவனங்களோ ஒருமுறை கூட உத்தியோகபூர்வமாக கூடியிருக்கவில்லை. இத்தகைய தவறுகளை ஐ.நா படிப்பினையாக கொண்டு எதிர்காலத்தில இப்படியான விடயங்கள் நடக்காமல் பார்த்துக்கொள்ள வேண்டும் எனவும் அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

பல்லாயிரக்கணக்கான பொதுமக்கள் கொல்லப்பட்டு 3 வருடங்களின்பின் ஐ.நா தனது தவறை ஒத்துக்கொண்டுள்ளது. ஆனால் இதனால் என்ன பயன்? தவறிழைத்ததை ஒத்துக்கொண்ட பான்கீமூன் என்ன செய்தார்? பொதுவாக மேற்குலகில் விமான விபத்தோ, ரயில்விபத்துக்களோ அல்லது வேறு விதமான பொது மக்கள் உயிரிழப்புக்களோ ஏற்பட்டால்கூட குறித்த துறைக்கு பொறுப்பான அமைச்சர் அதற்கான தார்மீக பொறுப்பை ஏற்றுக் கொண்டு தனது பதவியை ராஜினாமாச் செய்வார். ஆனால் இத்தனை ஆயிரம் பொதுமக்கள் கொல்லப்பட்டபின்பும் அதற்கு பதில் கூறக்கூடிய உலகின் அதிஉன்னத அமைப்பான ஐ.நா வெறுமனே அனுதாபம் தெரிவிப்பதும் இது ஒரு பாடமாக இருக்கட்டும் என பான்கீமூன் அறிக்கைவிடுவதும் யுத்தகாலத்தில் உண்ணாவிரத பூச்சாண்டி காட்டி, மனித சங்கிலி கைகோர்ப்பு நடாத்தி டெல்லிக்கு அறிக்கை விட்ட கலைஞரிடம் பான்கீ மூன் பாடம் கற்றுக் கொண்டுள்ளாரோ என்ற சந்தேகத்தை ஏற்படுத்துகின்றது. எல்லோரும் பாடம் கற்றுக்கொள்ளவும் அறிக்கைகள் விடவும் தமிழர்களின் உயிர்கள்தான் பகடைக் காய்களா என தமிழ்மக்களை கேட்கத்தூண்டியுள்ளது. 1994ம் ஆண்டில் ருவண்டாவில் இனக் கொலைகளைத் தடுக்கத் தவறியதன் விளைவாக இலட்சக்கணக்கான மக்கள் படுகொலை செய்யப்பட்டனர். 1995ல் செர்பொனிக்காவிலும் ஐ.நா. தலையிடத் தவறியதால் ஆயிரக்கணக்கான மக்கள் படுகொலை செய்யப்பட்டனர். மீண்டும் 2009ல் இலங்கையில். ரூவண்டா, பொஸ்னிய படுகொலைகளை கண்டும் காணாமல் இருந்துவிட்டு பின்னர் நீதி விசாரணை என்று கிளம்பியது போலவே இலங்கை மீது போர்க் குற்ற விசாரணைக்கு தயாராகின்றது ஐ.நா. இதற்கக்கமைய அந்த அறிக்கையை வைத்து அரசின் மீது போர்க்குற்ற விசாரணை வேண்டும் என பல அமைப்புக்கள் குரல் கொடுக்கத் தொடங்கிவிட்டன. ஆனால் இந்த விசாரணைகள் இனிமேல் என்ன செய்து விடப்போகிறது?

இத்தனை உயிரிழப்புகளுக்கு காரணமான தலைமைப் பதவியை வைத்துள்ள ஐ.நா செயலாளரும் குறைந்த பட்ச குற்றத்தை ஏற்றுக்கொண்டு தமது பதவியைக்கூட இழக்கத்துணியாத போது இலங்கை அரசை விசாரணை செய்வதற்கான தார்மீக உரிமையை ஐ.:.நா இழந்துள்ளது. .இது மேலும் மேலும் தமிழ் மக்களை சிக்கலுக்குள் உட்படுத்தக்கூடியதாக இருக்கும். ஏனென்றால் யுத்தவிசாரணை ஒன்று வரும்போது யுத்தம்செய்த அனைவரும் தண்டிக்கப்படவேண்டும் (புலிகள் உட்பட)அதற்கும் மேலாக இங்கு யுத்தத்தினை முன்னெடுத்த **அரசுகளும்** தண்டிக்கப்பட வேண்டும். இது சாத்தியமா? எனவே இந்த அறிக்கை இனிமேலாவது யுத்தத்திற்கு சாவுமணி அடிக்கும் அறிக்கையாக அமைய அனைவரும் வேண்டி நிற்போம்.

ஆசிரியர்.

# புதிய வீதியில் போதலும் வருதலும்



புதிய வீதியில்
போய் வருகிறேன்...

வாழை இலையில்
வழுக்கும் சவர்க்காரமாய்
வாகனங்கள் சறுக்கும்
புத்தம் புது
வீதியில்
போய் வருகிறேன்

எல்லை இட்டதுபோல்
இரு கரையும்
இரு கோடுகள்

சட்டம் போட்டதுபோல்
திட்டவட்டமாய்
நட்ட நடுவில்
ஒரு கோடு

வருவதற்கு ஒரு வழி
போவதற்கு ஒரு வழி

யாரும் வரலாம்
யாரும் போகலாம்

புதிய வீதியில்
போய் வருகிறேன்....
புதுப் புது முகங்கள்
அடிக்கடி தென்பட
புத்தம் புது
வீதியில்
போய் வருகிறேன்

வருவதற்கு ஒரு வழி
போவதற்கு ஒரு வழி

யாரும் வரலாம்
யாரும் போகலாம்

யார் வருவரோ!
யார் போவரோ!

– வாசுதேவன்

# மிகைக் களிப்பின் மரணம்

மாய வித்தைக்காரன் மேடையில் தோன்றினான்
அரங்கம் நிறைந்து வழிந்தது
இதோ தொடக்கம் என்ற அறிவிப்புடன்
ஆரம்பமானது வித்தை நிகழ்வு.
கரகோசம் வானைப்பிளந்தது

உயர்ந்த தொப்பியைக்கையிலெடுத்தான்
அரங்கிற்குக் காட்டிய வெற்றுத் தொப்பியை
கையிலழுத்தி மூடித்திறந்தான்
சிறகடித்துப் பறந்தன ஒரு சோடி வெண்புறா.
கரகோசம் வானைப் பிளந்தது

வாயில் செருகிய சவர அலகை
தண்ணீர் அருந்தி வலிந்து விழுங்கினான்
சற்றைக்கெல்லாம் வாந்தியெடுத்தான்
வந்து விழுந்தன அலகுக் குவியல்கள்.
கரகோசம் வானைப் பிளந்தது

வித்தைக்காரனைச் சிறுவர்கள் சூழ்ந்தனர்
வெட்டி வீழ்த்தினான் சிறுவன் ஒருவனை
அரங்கம் திகைத்தது
அரங்கக்காரரைக் கண்ணைக்கட்டிக்
காட்டிலே விட்டான்
வெட்டுண்ட சிறுவனை எழும்படி அழைத்தான்
சிறுவன் எழுந்து உயிருடன் வந்தான்.
கரகோசம் வானையும் தாண்டிப்பிளந்தது

பலவர்ண நீளக் காகிதக் கீற்றுகளை
உண்டபின் நீர்மொண்டு பருகினான்
குறுபொழுது ஓய்வின்பின் விரித்தவாய்க்குள்
விரல்கள் விட்டு
இழுக்க இழுக்க வந்து கொண்டிருந்தன
வர்ணக் காகிதங்கள் நீளநீளமாய்.

கரகோசமும் சீழ்க்கை ஒலிகளும்
துருவங்கள் தாண்டியும் வானைப்பிளந்தன.

மிகைக்களிப்பில் நிலைகொளாது
வித்தைக்காரன் இழுத்துக் கொண்டேயிருந்தான்.
'குடல்இழுபட்டு உயிர் போகப் போகிறது போதும் போதும்'
அரங்கில் ஆங்காங்கே எச்சரிக்கைக் குரல்கள்
குதூகலத்தின் உச்சத்தில் குரல்களைச் செவியுறாது
விழிகள் பிதுங்கி மேடையில் விழுந்து செத்துப் போனான்
பேரமுகையால் அதிர்ந்ததிர்ந்து குலுங்கியது அரங்கம்.

அவன் பட்டியலில் நிகழ்த்தத் தவறி
நிலுவையில் இருந்தன ஏராளம் வித்தைகள்



## சவாரிகள் மீளவும் மீளவும்

மரித்ததாய் நினைத்தபடியேதான்
நினைவிழந்தேன்.
மூர்ச்சை தெளிந்தெழுந்த போது
நீள்பொழுது கடந்ததாய்க் காலம் சொன்னது.
கழன்று விழுந்திருந்த கபாலங்கள்
காய்ந்து கருத்த குருதித் திட்டுகள்
காற்று காவிச் செல்லும் ஓலங்கள்
கண்ணீர் பெருகி உறைந்த உப்புப் படிவுகள்
கடந்து நடக்கையில் சிறு முனகல்
உடைந்த தண்டாயுதங்கள்
ஒடிந்த அம்புகள் வளைந்த ஈட்டிகள்
தலைகளைக் கொய்த பின்
திரும்பிச் செல்லாத நாக பாண எச்சங்கள்
கலைத்துக் குலைத்த குவியல் நடுவே
கால்கள் நிமிர்த்தி எழுந்ததென் குதிரை
சேணம் பிடித்துத் தாவி ஏறி
கடிவாளம் அழுத்தித் தலையை நிமிர்த்த
நெடிதொரு கனைப்பு
காற்றில் நிமிர்ந்தன முன்னங்கால்கள்
விரைந்தது குதிரை பின்னென்ன
மீளவும் தொடங்கிற்று என்சவாரி.

## வீழ்வு எழுவு மற்றும்

மேற்கு பசியுடன் இருந்தது
செம்மஞ்சள் நிறத்திலான ரொட்டியொன்றைக்
கடித்து மெல்லத் தொடங்கியது.
கடைசித் துண்டும் விழுங்கப்பட்ட பின்
காரிருள் கூடையைச் சுமந்த படி நடக்கலானேன்.
முகில் படலங்கள் விலக்கி
வான் நதியெங்கும் விண் மீன்கள் பிடிக்கலானேன்.
பாதிக்கூடை நிறைந்த போது
முன்னிரவு தீர்ந்திருந்த போது
விடிவிண்மீனைப் பிடிக்கக் கடும் பிரயத்தனமாயிற்று
மீதிக் கூடையையும் நிறைத்து நிமிர்ந்தேன்.
என்னே வியப்பு!
கடல் கிழித்து நிமிர்ந்த கிழக்கின் கைகளில்
அதே செம்மஞ்சள் நிற ரொட்டி.
திகைத்து நின்ற என்னிடம்
ஆர்ப்பரித்தெழுந்த அலைகள் கூறின
மேற்கு எப்பொழுதும் பசித்திருக்கிறது
கிழக்கு எப்பொழுதும் பசியைத் தணிக்கிறது.



**ஜபார் 'திறக்கப்படாத தீப்பெட்டிகள்', 'தரப்பட்டுள்ள அவகாசம்' ஆகிய கவிதைத் தொகுதிகளின் சொந்தக்காரர் திருகோணமலையில் இருந்து வெளிவந்த "ஆகவே" சிற்றிதழின் ஆசிரியர். நீண்ட கால இலக்கிய மௌனத்தின் பின் மீண்டும் தன் எழுத்துக்களுக்கு மகுடம் சூட்டுகின்றார். - ஆசிரியர்.**

ஈழத்தின் மிக முக்கியமான 'சிற்றிதழாக' தன்னை பதிவு செய்திருக்கும் மகுடத்தை உங்கள் நண்பர்களுக்கும் அறிமுகம் செய்யுங்கள். சந்தாக்களை பெற்று உதவி எமது தொடர்ச்சியான வருகைக்கு உதவுங்கள்.

- ஆசிரியர் -

# பிரித்தானிய அரும்பொருட்காட்சியகத்தின் கண்ணாடிப் பேழைக்குள்: மட்டக்களப்பின் கி.பி 1ம் நூற்றாண்டில் வழக்கிலிருந்த நாணயம்

பேராசிரியர் சி.மௌனகுரு




இவ்வாண்டு ஜூன் மாதக் கடைசியில் இலண்டன் மாநகர் சென்றிருந்த போது பிரிட்டிஸ் அரும்பொருட் காட்சியகத்திற்குச் செல்லும் வாய்ப்புக் கிட்டியது. தாம் ஆட்சி செய்த நாடுகளின் புராதன பொருட்கள் பலவற்றை பிரித்தானிய அதிகாரம் அங்கிருந்து எடுத்துக் கொண்டு சென்று தமது அரும்பொருள் காட்சியகத்தில் வைத்திருந்தமையை காட்சியகத்தில் உணர முடிந்தது.

அங்குதான் கி.பி 1ம் நூற்றாண்டைச் சேர்ந்த கிழக்கு_மாகாணத்தில் புழக்கத்திலிருந்த நாணயம் ஒன்றினைக் காணும் வாய்ப்புக் கிட்டியது. கண்ணாடிப் பேழைக்குள் பத்திரமாக வைக்கப்பட்டிருந்த அந்த நாணயம் பற்றி பின்வரும் குறிப்புக்கள் காணப்பட்டன.

**Bronze coin showing elephant svastika standard, tree in railing & hill symbols.** 1st century AD. This type has been recorded from Batticaloa district on the East coast. Similar coins are also found at Anuradhapura, the ancient Buddhist capital.

இந்நாணயத்தில் யானை, சுவஸ்திகா, மரம் போன்ற சின்னங்கள் காணப்படுகின்றன என்றும் இதே போன்ற நாணயங்கள் அனுராதபுரத்தில் காணப்பட்டன என்றும் இந்நாணயம் கிழக்கு கரையோரத்தில் மட்டக்களப்பு மாவட்டத்தில் கண்டெடுக்கப்பட்டதென்றும் இருந்த குறிப்புக்கள் என்னை வியப்பிலாழ்த்தின.

மட்டக்களப்பின் வரலாற்றிற்கான கல்வெட்டுத் தடயங்கள் கி.பி 13ம் நூற்றாண்டில் இருந்துதான் கிடைக்கின்றன என்ற சில வரலாற்று ஆசிரியர்களின் கூற்றிற்குச் சவால் விடுவதாக கி.பி 1ம் நூற்றாண்டில் மட்டக்களப்பு பிரதேசத்தில் ஒரு நாகரிகம் இருந்ததாக இந்நாணயம் உறுதிப்படுத்துகிறது.

நாணயப் புழக்கம் இருக்க வேண்டுமாயின் அங்கு வாணிபம் இருந்திருக்க வேண்டும். வாணிபம் இருந்திருக்க வேண்டுமாயின் அங்கு ஒரு வளர்ச்சி பெற்ற நாகரிகமும் இருந்திருக்க வேண்டும். மட்டக்களப்பின் பண்பாடு பிராமணியத்திற்கு மாறுபாடான ஒரு பண்பாடு. அது ஆதி திராவிடப் பண்பாட்டின் கூறுகளைக் கொண்டுள்ளது. வணக்க முறைகள்(வேலனாட்டம், வெறியாட்டம், தெய்வமாடுகையில் பறைமுழக்கல், இறந்தோரைப் புதைத்தல் (முதுமக்கட்தாழி))என்பன அவற்றுட் சில.) கலைகள், சமூக அமைப்பு, வழமைகள் என்பவற்றையும் வாய்மொழிக் கதைகளையும் கொண்ட மட்டக்களப்பின் வரலாறு மிகப் பழமையானது என்று கூறமுடியும் எனினும் அதை நிறுவ ஆதாரங்கள் தேவை. அந்த ஆதாரங்களுள் ஒன்றாக நாம் இந்த நாணயத்தையும் கொள்ளலாமா? நாணயவியல் நிபுணர்கள்தான் இதற்கு மறுமொழி கூற வேண்டும்.

செப்டம்பர் 6ம் திகதி வீரகேசரியில் பேராசிரியர் பத்மநாதன் சுயாட்சி அமைப்புக்களான கிழக்கிலங்கை வன்னி அரசுக்கள் பற்றிய தொடர் கட்டுரை ஒன்று எழுதியிருந்தார். அதில் அவர் இலங்கையின் ஆதி வரலாற்றுக் காலம் முதலாக அரசியல் அதிகாரம் பெற்ற பல குறுநிலப் பிரிவுகள் இருந்தன என்றும் அவற்றின் உற்பத்தி, தமிழ் மொழியினைப் பேசிய ஆதியிரும்புக்கால (பெருங்கல் பண்பாட்டுக்காலம்) மக்கள் ஏற்படுத்திய குடியிருப்புக்களோடு தொடர்புடையதென்றும் அனுராதபுரம், பொலநறுவை போன்ற இராசதானிகளின் செல்வாக்கு மேலோங்கிய காலத்தில் குறிப்பாக தமிழர் வாழும் பிராந்தியங்களில் சுயாட்சி அதிகாரம் கொண்ட அரசுகள் தொடர்ந்து நிலை பெற்றன என்று குறிப்பிடுகின்றார்.

வன்னி எனும் சிற்றரசுகள் நிலவிய நிலப் பகுதிகளைஅடங்காப்பற்று, திருகோணமலைப் பிரதேசம், மட்டக்களப்பு பிரதேசம், நுவரகலாவிய, தெமள ஹத்பத்து என 5 பிரிவுக்குள் அடக்கிக் கூறும் அக்கட்டுரையில் சுவையானதும், புதியதுமான ஒரு செய்தியையும் கூறுகிறார். அதில் மட்டக்களப்பின் வெல்லாவெளிக் கிராமத்தின் அடர்ந்த காட்டுக்குள் கண்டெடுக்கப்பட்ட அளவிற் சிறியளவான இரு பிராமிச் சாசனங்களைப் பற்றிக் குறிப்பிட்டு இதன் ஆண்டை அவர் கி.மு 2ம் நூற்றாண்டு என வரையறுத்து அச்சாசன எழுத்துக்கள் பழந்தமிழ்ச் சொல்லின் பிரா கிருத வடிவம் என்றும் கூறுகிறார்.

இற்றைக்கு 2200 வருடங்களுக்கு முன்னர் (ஏறத்ததாழ கி.மு 200ம் ஆண்டில் வெல்லாவெளியில் தமிழ், பேச்சு வழக்கு மொழியாக விளங்கியமைக்கு இக்கல் வெட்டு சான்று என்கிறார்.

**கி.பி 1ம் நூற்றாண்டைச் சேர்ந்ததும் பிரிட்டிஸ் அரும்பெரும் காட்சியகத்தில் உள்ளதுமான இந்த நாணயம், வர்த்தகம் செய்யுமளவு வாழ்ந்த மட்டக்களப்பின் ஒரு சமூகத்தின் செல்வ வளத்தைக் குறிப்பதாக இருக்கலாம் எனக் கொள்ள முடியுமா?**

அனுராதபுரத்தில் இத்தகைய நாணயங்கள் கிடைத்தன என்றால் இவ்வாதாரம் மட்டக்களப்பு கிழக்குக் கரையோரப் பகுதிக்கும் அனுராதபுர அரசுக்கும் இடையே வர்த்தக உறவுகள் இருந்தமைக்கு ஒரு சான்றாகலாம் அல்லவா?

இரண்டு வாரங்களுக்கு முன்னர் பேராசிரியர் பத்மநாதனைச் சந்திக்கும் வாய்ப்பு கிடைத்த போது நான் லண்டன் மியூ சியத்தில் கண்ட இந்த நாணயம் பற்றிக் கூறினேன். மிகவும் அவதானத்துடனும், ஆர்வத்தடனும் இச்செய்தியைச் செவிமடுத்த அவர் அந்தப் படத்தினை தனக்கு அனுப்பும் படியும் கூறினார்.

**படத்தில் சரியான படி நாணயத்தில் உள்ள குறிகள் தென்படவில்லை. அது என் படப்பிடிப்பில் உள்ள தவறு. லண்டன் மியூ சியம் செல்வோர் அதனை நன்கு படம் பிடித்து அனுப்பி வைப்பின் நன்றிக்குரியவர்களாவர்.**

**எமது சரித்திரத்தை மீள நோக்கிப் பார்ப்பதற்கான ஆவணங்கள் உள்நாட்டில்தான் உண்டு எனினும் இன்னும் பார்வைக்குட்படாத பல ஆவணங்கள் நம்மை ஆட்சி செய்த போர்த்துக்கேய, ஒல்லாந்து, பிரித்தானியா போன்ற நாடுகளின் அரும்பொருட் காட்சியகங்களுக்குள்ளும் முடங்கிக் கிடக்கின்றன என்ற உண்மையையும் நாம் வலுவாக மனதில் இருத்தல் வேண்டும். இத்துறையில் பாண்டித்தியம் பெற்ற எமது வரலாற்று ஆசிரியர்கள் வெளிநாட்டிற் கிடைக்கும் சான்றுகளிலும் கவனம் செலுத்த வேண்டும்.**

● ● ●


**மகுடம் சந்தாவிபரம்**

| | உள்நாடு | வெளிநாடு |
|---|---|---|
| தனிப்பிரதி | ரூ.100.00 | 05 (US $) |
| ஆண்டுச்சந்தா (தபால்செலவு உட்பட) | ரூ.500.00 | 25 (US $) |
| இரண்டாண்டு சந்தா (தபால் செலவு உட்பட) | ரூ.900.00 | 50 (US $) |
| ஆயுட்சந்தா | ரூ.20,000.00 | 500 (US $) |

சந்தாவை காசோலை மூலமாகவோ, மணி ஓடர் மூலமாகவோ அனுப்பலாம். மணி ஓடர் மட்டக்களப்பு பிரதம தபாலகத்தில் மாற்றக்கூடியதாக **வி.மைக்கல்கொலின்** என்ற பெயரிற்கு அனுப்புதல் வேண்டும். எதுவித செலவுமின்றி சந்தா அனுப்பும் வழி, தங்கள் பகுதியில் உள்ள மக்கள் வங்கிக்கிளையில் **W.Michaelcollin Peoples Bank. Town Branch, Batticaloa.** சேமிப்பு கணக்கு இலக்கம் 113-2-001-0-7728743 என்ற கணக்கில் வைப்பு செய்து, வைப்பு செய்த வங்கி ரசீதை எமக்கு அனுப்புதல் வேண்டும்.

- ஆயுட் சந்தா செலுத்துபவர்களுக்கு "மகுடம்" பப்ளிகேஷன் பிரைவட் லிமிட்டட்டின் சகல வெளியீடுகளும் இலவசமாக அனுப்பி வைக்கப்படும்.
- மகுடம் விளம்பர விபரங்களைத் தெரிந்து கொள்ள ஆசிரியருடன் தொடர்பு கொள்ளவும்.

# புது வடிவங்களை சூல் கொள்ளக் காத்திருக்கும் கலை இலக்கியப் பெருவெளி





மு.பொன்னம்பலம்

இன்றைய சில இளம் எழுத்தாளர்கள் தாம் தான் நவீனத்துவம் பின் நவீனத்துவம் அனைத்தையும் குத்தகைக்கு எடுத்தவர்கள் போலவும் தம்மிடமிருந்தே நவீன தமிழ் இலக்கியமும் உலக இலக்கியமும் பெருக்கெடுத்து ஓடுவது போலவும் எழுதுகிறார்களே, இவர்களைப் பற்றி என்ன நினைக்கிறாய்" என்று என் நண்பனைக் கேட்டேன்.

"இதுதான் இன்றைய இளம் எழுத்தாளர்களின் நோய்க்கூறு. எங்காவது படித்து இரண்டொன்றைத் தெரிந்து கொண்டதும் முழுவதையும் கரைத்துக் குடித்த மாதிரியான பாவனை, அதை வைத்துக்கொண்டு மற்றவர்களுக்குப் போதனை, மிரட்டல், இவர்கள் என்னதான் புதுமையாளர்கள் மாதிரிக் கதைத்தாலும் இன்னும் பழைய அடையாளங்களுக்குள்தான் சிக்கிக்கொண்டு தவிக்கிறார்கள்" என்றான் நண்பன்.

"இதைக் கொஞ்சம் தெளிவுபடுத்துவாயா?" நான் கேட்டேன்.

"நான் கூறும் பழைய அடையாளங்கள் என்பது, இன்னும் இவர்கள் புதுக்கவிதை, நவீன கவிதை, சிறுகதை, நாவல் என்னும் பழைய அடையாளங்களுக்குள்தான் சிக்கிச்சுழல்கிறார்கள் என்பதைக் காட்டவே. இவர்களின் இந்நிலையைப் பார்க்கும்போது, இவர்களுக்கு இன்று எழுந்துவரும் கலை இலக்கியப் போக்கே என்னவென்று தெரியாதது போலவே படுகுது.

"நீ கூறும் இந்த புதிய கலை இலக்கியப் போக்கின் தன்மை பற்றி சிறிது விளக்குவாயா?" நான் தூண்டினேன்.

"நான் மேலே கூறிய அடையாளங்களை அதிகம் பொருட்படுத்தக்கூடாதென்ற போக்கு இருபதாம் நூற்றாண்டின் நடுப்பகுதியிலேயே வந்துவிட்டது. மேற்குலக விமர்சகரான ஜோன்வெயின் ஒரு எழுத்தாளனை மதிப்பீடு செய்யவேண்டுமானால் அவன் எழுதிய சகலவற்றையும் கணக்கிலெடுத்துத் தீர்மானிக்க வேண்டுமென்கிறார். அவன் சிறுகதையில் சோபிப்பதில்லை. கவிதையில் நன்றாக சோபிக்கிறான். என்றும் "அவனுக்கு விமர்சனம் வராது, ஆனால் நாவல் நன்றாக எழுதுவான்" என்றும் ஒரு எழுத்துலகவாசியை பிரித்துப் பிரித்துப் பார்த்து மதிப்பீடு செய்வதை அவர் ஏற்றுக்கொள்வதில்லை. அவரது பார்வை முழுமை தழுவியது. எதற்குள்ளும் கலைத்துவ ஊடாட்டத்தைப் பார்ப்பது, இவரது இந்நோக்கு இன்றைய பின்நவீனத்துவப் பார்வைகளையும் தாண்டிப் போவது. 1970ல் இவரது கட்டுரையை நான் மொழிபெயர்த்து வெளியிட்டபோது அது பல இளம் எழுத்தாளர்களை ஈர்த்தது." என்றான் நண்பன்.

"இன்னும் புதுக்கவிதை, நவீன கதை என்றும் மற்றும் பின்நவீனத்துவ நாவல் என்று ஒருவரும் அழைப்பதைக் காணவில்லையே என்றும் ஆதங்கப்படுவோருக்கு இவை புரியுமா?" என்றேன் நான்.

"இவர்களின் புரிதலைப் பற்றி நான் அக்கறைப் படவில்லை. அவர்கள் தாம் பின் நவீனத்துவக்காரர்கள் போல் காட்டிக் கொண்டு இன்னும் பழைய அடையாளங்களின் நச்சுச் சுழலுக்குள் (Vicious Circle) சிக்கிக்கொண்டு சுழல்வதை குழப்பக்கூடாது. மேலும்

இத்தகைய அடையாளங்களைக் கட்டிப்பிடித்துக் கொண்டே, "பின்நவீனத்துவ நாவல் என்று ஒருவரும் அழைப்பதைக் காணவில்லையே என்றும்" கவலைபடும் இவர்களைப் பற்றி என்ன சொல்ல உண்டு?" அவன் சிரித்துக்கொண்டே சொன்னான்.

"சரி நீயே சொல்லு, நவீனத்துவ எழுத்துக்கள் எப்போது ஆரம்பித்தன?" நான் விடாக் கண்டனாய்க் கேட்டேன்.

"1860-1930க்கும் இடைப்பட்ட காலத்தை மேற்குலக விமர்சகர்கள் பலர் இலக்கிய உலகில் நவீன போக்குகளுக்குரிய புரட்சி ஏற்பட்ட காலமாகக் கொள்கின்றனர். அமெரிக்கப் புரட்சி, பிரஞ்சுப் புரட்சி என்பதுபோல் இது இலக்கிய உலகில் ஏற்பட்ட புரட்சி எனலாம். அதாவது சிறுகதை, நாவல், கவிதை, நாடகம் என்று பலதுறைகளிலும் ஈடுபட்ட் இலக்கியப் பிரம்மாக்களான றொஸ்ரோவ்ஸ்கி (1821-1881), ஹென்றிக் இப்ஸன் (1828-1906), ஜோசெப் கொன்றாட் (1857-1924), தோமஸ் மான் (1875-1955), மார்ஷல் பிறவுஸ்ற் (1991-1922)


T.S.Eliot

ஜேம்ஸ் ஜொய்ஸ் (1882-1941),ரி.எஸ். எலியட் (1888-1965),லுாய்ஸ் பிறின்டல்லோ (1867-1936) பிரான்ஸ் காஃகா (1883-1924) ஆகியோர் தம்புகழ்பெற்ற ஆக்கங்களைத் தந்து மறைந்தது இக்காலப்பகுதியில்தான். இவர்கள் மேற்குலகக் கலை இலக்கியத்தில் நவீன போக்குகளை ஆரம்பித்து வைக்க இவர்களுக்குப் பின்வந்த சாமுவல் பெக்கட், ஐயனஸ்கோ, ஷோன் போல்சாத்தர், அல்பேர் காமு, குந்தர் கிறாஸ், மிலன் குண்டா ஆகியோர் மேலும் நவீனப்படுத்துகின்றனர்." என்றான் அவன்.

இடையில் குறுக்கிட்ட நான், "இவர்களுள் காஃகா எழுதிய கரப்பான் பூ ச்சியாக மாறும் மனிதன்" பற்றிய கதை (Metamorphosis), இன்றைய பின்நவீனத்துவக் கதைகளையும் தாண்டிப் போவதாக உள்ளது என்று நீங்கள் நினைக்கவில்லையா?" என்று கேட்டேன்.


Henrik Ibsan

"நிச்சயமாக" என்று அவன் ஆமோதிக்க, "சரி இனி பின்நவீனத்துவம் பற்றி கொஞ்சம் சொல்லுங்கள்" என்றேன் நான்.

"பின்நவீனத்துவக்கதைகள் எழுதுகிறேன் என்று சொல்லிக்கொண்டு எவரும் எழுதுவதில்லை. ஆனால் அவ்வாறான கதைகளை எழுதுவதற்கான காரணங்களை லத்தீன் அமெரிக்க எழுத்தாளரான ஜோர்ஜ் லூயி ஃபோர்கே பின்வருமாறு கூறுகிறார். "மனிதக் கற்பனையின் அத்தியாவசியங்கள் யாவும் எப்போதோ சொல்லப்பட்டும் எழுதப்பட்டும் விட்டதால் கதை சொல்பவனின் கவனம் மறுசிந்தனை மறுசொல்லல், ஆகியவற்றில் கவனம் செலுத்தப்பட வேண்டும்." என்கிறார். இதையே அமெரிக்க எழுத்தாளரான ஜோன் பார்த் (John Barth) தனது "களைத்துத் தீர்ந்துபோன இலக்கியம்" (The Literature of Exhaustion) என்ற கட்டுரையில், "வாசகர்கள் வழமையான வடிவங்களுக்குட்பட்ட கதைகளையும் இலக்கிய ஆக்கங்களையும் படித்துப் படித்து களைத்துப் போய்விட்டார்கள்,அலுப்புத் தட்டியவர்களாகிவிட்டார்கள். இவர்களை மீண்டும் வாசிக்கச் செய்யவும் சிந்திக்கச் செய்யவும் அதன் வழியில் இயங்கச் செய்யவும் புதுமையான உத்திகளும் எடுத்துச்சொல்முறைகளும் பாவிக்கப்பட வேண்டும் என்பதே இன்றைய வித்தியாசமான பின் நவீனத்துவ கதைகளுக்கு காரணமாகும் என்கிறார் இவர். ஆனால் இது இத்துடன் முடிந்து விடவில்லை" என்று அவன் கூறியபோது நான் குறுக்கிட்டேன். "மனித வரலாறு ஒற்றைப் பரிமாணம் உடையதல்ல. இயங்கியல் சார்ந்த பல பரிமாண - பரிணாம வளர்ச்சி கொண்டது. டார்வினுடைய



காலத்தில் பார்த்த உலகைத்தான் இன்னும் நாம் பார்த்துக் கொண்டிருக்கிறோம் என்றில்லை. எத்தனையோ தடைகளைத் தாண்டி எதிர் நீச்சல் போட்டு வந்த பார்வை இது, இல்லையா?" "இதைத்தான் நானும் சொல்கிறேன்" என்று ஒரு அழுத்தத்தோடு தொடர்ந்தான் நண்பன். "கலை இலக்கியத்தில் வைக்கப்படும் இந்த நவீன நோக்கு, தான் தோன்றித்தனமாக இத்துறையில் மாத்திரம் அழுத்தப்படும் ஒன்றல்ல. இன்றைய விஞ்ஞானம், நவீன பௌதிகவியல், மெய்யியல், உளவியல் மொழிஅலசல் ஆகியவற்றில் ஏற்பட்டுவரும் மாற்றங்களின் விளைவே இது என்பதும் நம் கவனத்துக்குரியது. அமைப்பியல், பின்அமைப்பியல் என்பவை எவ்வாறு மொழி, மனித சிந்தனை எட்ட முயலும் இடங்களை எட்டவிடாது விலங்கிடுகிறது என்பதும் எண்ணத்தில் ஏற்படும் விபத்துக்கள் கலையுலகை எவ்வாறு பாதிக்கின்றது என்பதும் தனியானவை. மற்றும் ஃபூக்கோவின் பார்வையில் மொழியென்பதே ஆதிக்கத்தை கட்டமைக்கும் ஒன்றாகப் பார்க்கப்படுகிறது. இவ்வாறு ஒவ்வொரு கருத்தியல்களின் கூறுகளின் செல்வாக்குக குட்பட்ட பின்நவீனத்துவம், முழு உலகந்தழுவிய கொள்கைகள் மரணித்துவிட்டதாகக் கூறுவதோடு அதனால் தொட்டந்தொட்டமாகச் செயல்படும் (fragmentation) ஒவ்வொரு அமைப்புக்கும் கொள்கைக்கும் ஆதரவளிப்பதாக உள்ளது. பெரும் அடக்குமுறை அமைப்புகளிலிருந்து பிரிந்துபோகும் தேசியங்களுக்கும் அவற்றின் போராட்டங்களுக்கும் இது ஆதரவளிப்பதாகவும் வியாக்கியானங்கள் பல எழுந்துள்ளன" என்று அவன் பெரிதாகவே பேசிவிட்டு என்னைப்பார்த்தான்.


மு.தளையசிங்கம்

"இவற்றுக்கெல்லாம் பிரதான காரணமாக இருப்பது தெரிதாவின் (Jacques Derrida) சிந்தனைதானே?" என்று நான் சந்தர்ப்பத்தை நழுவவிடாது கேட்டேன்.

"ஆம் அவர்தான் பெரும்பெரும் சிந்தனை அமைப்புகளைத் தகர்த்தார். அதன் மையங்கள்-பெருங்கதையாடல்கள் தகர்க்கப்பட அதிலிருந்து ஓரங்கட்டப்பட்டவை விளிம்புநிலை எய்தின, சிறுகதையாடல்களாகின. இதைத்தான் fragmentation என்கின்றனர்" என்றான் என் நண்பன்.


FRANZ KAFKA

"பின்நவீனத்துவவாதிகள் விஞ்ஞான முடிவுகளை சீரிஸ்ஸாக எடுத்துக்கொள்வதில்லை, அல்லவா?" நான் துருவினேன்.

"உண்மைதான், "உலகம் ஏன் இருக்கிறது?" போன்ற பல கேள்விகளுக்கு விஞ்ஞானம் ஒழுங்கான பதில் தராததால் ஏனைய விஞ்ஞானப் பார்வைகளையும் அது பெரிதாக எடுத்துக்கொள்வதில்லை. அதனால் விஞ்ஞானப் பார்வையால் புறந்தள்ளப்பட்ட பல்வகை இனக்குழுக்களின் நம்பிக்கைகள், சடங்குகள், வழிபாடுகள், மூட நம்பிக்கைகள் என்பவை சகலவற்றுக்கும் இது முக்கியத்துவம் அளிக்கிறது. இதனால்தான் பாமர மக்களிடையே காணப்படும் நம்பிக்கைகள் கதைகள் யாவும் அதியதார்த்தம், மஜிகல் றியலிசம் போன்ற உத்திகள் இன்றைய கலை இலக்கிய உலகில் கோலோச்சுகின்றன. கப்றியல் மார்க்குசேத்தின் ஒரு நூற்றாண்டுத் தனிமையில் இத்தகைய விவரணங்களைக் காணலாம். எஸ்.ராமகிருஷ்ணனின் "நெடுங்குருதியில்" இதன் பாதிப்புகள் அதிகம். பின் நவீனத்துவப் போக்குகள் பற்றி நன்கு தெரிந்துகொண்டு தமிழ்நாட்டில் கலை இலக்கிய முயற்சிகளில் ஈடுபடுபவர்களாக எஸ்.ராமகிருஷ்ணன், ஜெயமோகன், யுவன்சந்திரசேகர், இமயம், சுரேஷ், தமிழவன், அம்பை பாமா, குப்டிரேவதி, சுகிர்தராணி, வேணுகோபாலன் போன்ற இன்னும் பலரைக்



குறிப்பிடலாம். இவ்வாறு விளக்கத்தோடு கலை இலக்கிய ஆக்கச் சிருஷ்டிகளில் ஈடுபடுபவர்கள் நம்நாட்டில் இரண்டொரு புறநடைகளைத் தவிர மொத்தத்தில் இல்லை என்றே கூறலாம். இவை பற்றியெல்லாம் அறியாது, சில பெயர்களைப் பட்டியலிட்டு இவர்கள் "நவீன கவிதை" எழுதுகிறார்கள் என்று கூறும் நம் சில "விமர்சகர்கள்" புதுக்கவிதைக்கும் நவீன கவிதைக்கும் உள்ள வித்தியாசம் என்ன என்று கேள்வி எழுப்பினால் இவர்கள் பதில் சூன்யமாகவே இருக்கும். இவர்களுக்கு இன்று கவிதை என்பது எல்லா வடிவங்களையும் கடந்து ஒவ்வொரு படைப்பையும் கவிதையாக்கும் ஊட்டச் சத்தாக இயங்குகிறது என்பதை அறிவார்களோ என்னவோ! என்று கூறி அவன் சிரித்தான்.

இச்சந்தர்ப்பத்தில் நான், "தெரிதா மையங்களைத் தகர்ப்பது பற்றித் தன் கொள்கைகளை முன்வைத்த காலத்தில்தான் ஈழத்திலும் ஓர் எழுத்தாளர் "கலையை அழிக்கும் கலை, இலக்கியத்தை அழிக்கும் இலக்கியம்" என்று கூறி இன்று நடைமுறையில் உள்ள சிறுகதை, நாவல், கவிதை, நாடகம், கட்டுரை என்கின்ற வடிவங்களை அழிக்க வேண்டும் என்றும் இவையே மனம் எடுக்கப்போகும் அடிப்படைச் சிந்தனை மாற்றத்திற்கு, இனிவரப்போகும்




புதிய வடிவங்களுக்கு தடையாக இருக்கிறது என்றும் கூறினார், இல்லையா, இது பற்றி உன் கருத்து?" என்று கேட்டேன்.

"இந்த கலை இலக்கிய அழிப்பு வேலையைத் தான் அவர் மெய்யுள் என்றார். இல்லையா?" நண்பன் கேட்டான்.

"அப்படியானால், இந்த அழிப்பினால் எப்படி புதிய கலை இலக்கியம் தோன்றும் என்று தெரியவில்லையே?" நான் கேட்டேன்.

எப்படி தெரிதா, பெருங்கதையாடல்களைத் தகர்க்கும் போது, ஒதுங்கி விளிம்புநிலை எய்தியவை யெல்லாம், சிறு கதையாடல்களாகி புதுவடிவங்கள் பெற்றுக்கொண்டனவோ அவ்வாறே இன்று நடைமுறை யிலுள்ள சிறுகதை, கவிதை, நாவல், நாடகம் என்பவற்றை அழிக்க முன்வைக்கும் எழுத்து முறை புதிய கலை இலக்கிய வடிவங்களாகப் பரிணமிக்கத் தொடங்கும். இது இவ்வாறே முடிவில்லாமல் தொடரும். இதற்கு உதாரணமாக அவர் எழுதிய ஆக்கங்களில் ஒன்று "கலைஞனின் தாகம்" (முதல்பாகம்). இதைப் படித்த சுந்தர ராமசாமி அதனால் பெரிதும் பாதிக்கப்பட்டார் என்பதை அவரது "பிரபஞ்ச யதார்த்தம்" கட்டுரையில் காணக் கூடியதாக உள்ளது. அதனால் "கலைஞனின் தாகத்து"க்கு எதிர்வினையாகவே அவர் "ஜேஜே சில குறிப்புகளை" எழுதினார். நான் ஜே ஜே சில குறிப்புகள் பற்றி 20 வருடங்களுக்கு முன்னர் எழுதிய "ஓர் கலைஞனின் தேடல்" என்ற விமரிசனத்தில் இது பற்றிச் சுட்டிக்காட்டியுள்ளேன். அதை நீ வாசித்தாயா?" நண்பன் ஆவலோடு கேட்டான்.

"ஆம், வாசித்திருக்கிறேன், அதை மீண்டும் வாசிப்பது விஷய விளக்கத்துக்கு உதவும். அது உன் கட்டுரைத் தொகுப்பான "யதார்த்தமும் ஆத்மார்க்கமும்" ல் இருக்கிறது. இல்லையா" நான் கேட்டேன்.

"ஆம்" என்று கூறிவிட்டு, அவன் தொடர்ந்து சொன்னான். "இது காலவரை ஏன் புதுவகையான கலை இலக்கிய எடுத்துச்சொல் முறைகள் தேவை என்பதற்கு பின்நவீனத்துவவாதிகள் ஆழமான பதில் எதையும் தரவில்லை. ஆனால் மெய்யுள் என்ற புது இலக்கிய வகை பற்றிப் பேசிய நம்மூர் எழுத்தாளர் தெளிவாக இதன் தேவையைப் பின்வருமாறு விளக்குகிறார். 12ம் 13ம் நூற்றாண்டுகளில் ஏற்பட்ட மறுமலர்ச்சிக் காலம் அடிப்படைச் சிந்தனை மாற்றத்தைக் கொண்டு வந்தபோது, அக்காலத்தில் கோலோச்சிய செய்யும் இலக்கியம் கைவிடப்பட்டு உரைநடை நிலைப்பட்ட சிறுகதை, நாவல் கவிதை, நாடகம் என்கிற புதிய இலக்கிய வடிவங்கள் தோற்றம் பெற்றன. அவ்வாறே தற்போது மற்றொரு அடிப்படைச் சிந்தனை மாற்றத்தின் வாசற்படிகளில் உலகம் நின்று கொண்டிருக்கிறது. மனதை அடிப்படையாகக் கொண்ட இந்த சிந்தனை மாற்றத்தை உயிரியல் விஞ்ஞானி ஜூலியன் வறக்ஸ்லி 'phycho metabolism' என்றார். இதை தனது பார்வைக்கெடுத்துக்கொண்ட நம் எழுத்தாளர் இனி வரப் போகும் இப்பெருமாற்றத்துக்கு தடையாக இருக்கப்போபவை பழைய கலை இலக்கிய வடிவங்களும் அதன் வழிவரும் சிந்தனையும் என்று கூறி இவற்றை அழிக்க வேண்டும் என்றும் அந்த அழிப்பை மேற்கொள்ளும் எழுத்தே புதிய வடிவங்களாக மாறும் என்றும் அதற்குரிய பெயரே மெய்யுள் என்றும் கூறினார்..." அவன் முடித்தான்.

"அப்படியானால் மெய்யுள் என்பது எந்தக் கட்டுகளுமற்ற, எல்லாக் கட்டுகளையும் கோட்பாடு களையும் நிராகரித்துக்கொண்டு புதியவற்றை சூல்கொள்ளும் தாகத்தோடு விரிந்து கொண்டிருக்கும் கலைத்துவ வெளியெனலாமா?" நான் கேட்னே.

"சரியாகச் சொன்னாய்" என்று உற்சாகமாக ஆமோதித்தான் நண்பன்.



நூல் ஆய்வு




# மரணத்தில் துளிர்க்கும் கனவு

**சி.ரமேஷ்**

நுண்ணுணர்வின் வெளிப்பாடாக அமையும் கவிதை,சொற்களுக்குள் கட்டுண்ட அர்த்த உற்பத்தியை உள்வயப்படுத்திஅதன் கருத்துருவாக்கம்,வெளிப்பாட்டு முறைமை, வடிவ அமைப்பால் பன்முகத்தன்மைக் கொண்டு 'விரிந்த எல்லைகளைச் சாத்தியமாக்குகிறது.இரண்டாயிரம் ஆண்டுகளுக்குப்பின் மொழியின் உச்சபட்சசாத்தியங்களை நிகழ்த்தும் ஈழத்து நவீன தமிழ்க்கவிதை, அதீத புனைவு, புதிய உத்திகளுக் கூடான வடிவமைப்பு, குறியீட்டு முறைமைகளுக்கூடான பிரக்ஞை பூர்வமான முன் வைப்பு,முதலியவற்றால் செறிவிறுக்கம் கொண்ட நிகழ்கவிதையாகப் பரிணாமம் கொள்கிறது.

இரண்டாயிரத்துக்குப்பின் ஈழத்தில் எழுந்த கவிதைத் தொகுதிகளில் பெரும்பாலானவை தமிழரின் துன்பியல் வாழ்வியலையும் அது வேரூன்றிய பூர்வீக பூமியையும் அவாவுறுகின்ற கவிதைகளை உள்ளடக்கி தொகுக்கப்பட்ட பிரதிகளாகவே காணப்படுகின்றன.தமிழர் வாழ்வில் நிலம் பற்றிய பதிவுகள், வரலாற்று ஆவணமாகவும் முதன்மையானதாகவும் முக்கியமானவையாகவும் கருதப்படுகின்ற இச்சூழலில் தமிழரின் வாழ்வியல் இருப்பியலின் சுவடாகத்துலங்கும் இக்கவிதைகள், ஈழப்போராட்டத்தையும் சிதைந்துபோன போரியல் வாழ்வையும் அதன் வலிகளையும் வன்கொடுமைகளையும் பாடுபொருளாகக் கொண்டவை.மரணங்கள் மலிந்த பூமியில் வாழ்வுக்கும் சாவுக்கும் இடையில் மையம் கொள்ளும் இக்கவிதைகள் பூர்வீக பூமியை இழந்து தவிக்கும் நலிவுற்ற மக்களின் வாழ்வியலை உயரோட்டமாகவும் உணர்வு பூர்வமாகவும் பதிவு செய்கின்றன. இடிபாடுகளுக்குள் சிதைவுண்டு அழிவுண்ட காலவெளிக்குள் அமிழ்ந்து நொந்து நைந்து போன துயரியின் அவலக் குரலாய் எழுந்து நிற்கும் இக்கவிதைகள் இராணுவ ஆக்கிரமிப்புக்களால் பலியாகிப் புதையுண்டு போன உறவுகளின் வலிகளையும் தொடர்ச்சியான இடப் பெயர்வுகளையும் இழப்புக்களையும் பயங்கரவாதத்தின் வன்கொடுமையை எதிர்கொண்ட வாழ்க்கைச் சூழலையும் பேசுகின்றன.இத்தடத்தில் முகம் கொள்ளும் "மரணத்தில் துளிர்க்கும் கனவு அழிவென்ற பேரிலக்குடன் நடத்தப்பட்ட போரில் ஈழத்தமிழரால் தொலைக்கப்பட்ட புதையுண்ட வாழ்வியலை ஆழமாகவும் அழுத்தமாகவும் பதிவு செய்யும் அதே வேளை மூடுண்ட வெளிக்குள் குரல்வளைகள் நெரிக்கப்பட்ட மக்களின் நிகழ்சார் இருப்பை ரணமும் வலியுமாக முன்மொழிகிறது. ஈழத்து மக்களின் புரையேறிபோன வாழ்வை வெவ்வேறு கோணங்களில் பல்வேறு அனுபவங்களுக்கூடாக வெவ்வேறு காலகட்டங்களைக் காட்சிப்படுத்தும் இத்தொகுப்பு, கவிதைகள் வாயிலாக வடக்கு, கிழக்கு அப்பால் வடமேல்மாகாணத்தையும் ஒன்றிணைக்கிறது. அனார், அலறி, பஹிமாஜகான், சித்தாந்தன், துவாரகன், தீபச்செல்வன், பொன்.காந்தன், தானா.விஷ்ணு என எட்டு கவிஞர்களின் எண்பது கவிதைகளை உள்ளடக்கி வெளிவந்த இத்தொகுப்பின் தொகுப்பாசிரியர் கவிஞரும் ஊடகவியலாளருமான பாலேந்திரன் பிரதீபன் எனப்படும் தீபச்செல்வன் ஆவார்.

யுத்தபூமியின் மூடுண்ட நகரத்தின் வாழ்வியல் பொழுதுகளைப் பாடும் தீபச் செல்வனின் கவிதைகள் சமகால நிகழ்வுகளின் பதிவுகளாகத் தன்னைக் கட்டமைத்துக் கொள்கின்றன.துயர் மண்டிய மரண வாழ்வின் பொழுதுகளைக் கண்டு நொந்து புண்ணுற்றுப்பாடும் இக்கவிதைகள் ஈழத்தமிழரின் வாழ்வியலை வெளியுலகுக்கு வெளிச்சம் போட்டுக்காட்டுபவை.ஒரு கோயிலைக் கைப்பற்ற தொடங்கிய யுத்தம் பேரழிவாய், பெருஊழியாய் மாறி ஈழத்தமிழரை அழித்த கதையைச் சொல்லும் "போர்தொடங்கும் குழந்தைகளின் கனவுகள்" பொருட் பெறுமானமுள்ள வரலாற்று நிகழ்வின் ஒரு பதிவை ஆவணப்படுத்துகிறது.

"போராளிகள் மடுவை விட்டுப்
பின்வாங்கினர்
நஞ்சூரிய உணவைத் தின்ற
குழந்தைகளின் கனவில்
நிரம்பியிருந்த

இராணுவ
நடவடிக்கையிலிருந்து
போர் தொடங்குகிறது.
நகர முடியாத இடைஞ்சலில்
நிகழ்ந்து வருகிற
எண்ணிக்கையற்ற
இடம் பெயர்வுகளில்
கை தவறிய
உடுப்புப் பெட்டிகளை விட்டு
மரங்களுடன்
ஒதுங்கியிருக்கின்றனர் சனங்கள்..."

(மரணத்தில் துளிர்க்கும் கனவு -88)

மனித வாழ்வின் உயிர்ப்பின் கணங்களை நிதர்சன வாழ்வுக்கூடாக இக்கவிதை புடம் போட்டுக்காட்டுகிறது.

அச்சுறுத்தும் வன்முறைகளினதும் அவ்வன்முறைகளினால் நிகழ்த்தப்பட்ட மனிதப் படுகொலைகளினதும் கோரமுகங்களை இதயசுத்தியுடன் மென்னுணர்வுத்தளத்தில் வெளிப்படுத்தும் 'தீபச்செல்வனின்' எல்லாக் கண்களையும் இழந்த சகோதரியின் கனவு' நிகழ்வின் வழி மனிதம் ஏந்திய பெருந்துயரை தத்துருபமாகக் கண்முன் நிறுத்துகிறது.

"குழந்தைகளின் குருதியால்
ஊறியிருந்தபடி
பெருநிலத்தை அவள் இறுதியில் பார்த்திருக்கிறாள்
என்றும் தன்னால் தன் நிலத்தை
பார்க்க முடியாதபடி திரும்பியிருக்கிறாள்
கடலால் கொண்டு செல்லப்பட்ட நாளிலிருந்து
கனவிழந்து தன் உலகத்தை தேடிக்கொண்டிருக்கிறாள்
உடலெங்கும் ஷெல் துண்டுகள் ஓடியலைகின்றன
கண்களை இழந்த சகோதரி கனவுகளைப் பற்றியே பேசுகிறாள்..."

(மரணத்தில் துளிர்க்கும் கனவு -103)

யுத்தம் குழந்தையின் அகப் புற உலகைச் சிதைத்து நகரைச் சின்னா பின்னப்படுத்துகிறது. அழிவுண்ட நகரத்தில் இருந்து எழும் மனித பேரவலத்தின் குரல் தீபச்செல்வனின் கவிதைகளில் மனிதத்தின் வலியாய் ஒளிர்கிறது.

காயத்திலிருந்து கொட்டுகின்ற கனவுகளைக் கூடச் சிதைக்கின்ற இராணுவ நடவடிக்கையால், பதுங்கு குழிக்குள் பல்லாயிரக்கணக்கான துன்பங்களை வாழ்வின் வலிகளாகத்தாங்கி கூனிக் குறுகி வாழும் ஈழமக்களின் அவல வாழ்வைக் காட்சிப்படுத்தும் தீபச் செல்வனின் 'கடல் நுழைகிற மணற் பதுங்கு குழி' பெருந்துயர் பொதிந்த அழிவின் குறிகாட்டியாய் முகம் கொள்கிறது. காலவடுவின் நிகழ்ப் புற பொருண்மையில் உருக்கொள்ளும் இக்கவிதை போரினால் காவு கொள்ளப்பட்ட சூழலில் வாழ்தலுக்கான எத்தனிப்பின் சுவடுகளை உணர்த்தி நிற்கிறது.

குருதியின் பாரத்தையும் கண்ணீரின் உவர்ப்பையும் கொடுந் துயரின் அவலத்தையும் அகதி வாழ்வின் நீட்சியையும் இழப்பின் சுவடுகளையும் தீப்ச்செல்வனின் கவிதைகள் வரலாற்றின் வழி பதிவு செய்கின்றன. ஒருவிதப் பிரச்சாரத்தன்மை தீபச்செல்வனின் கவிதைகளில் ஒளிர்ந்திருந்தாலும் இக்கவிதைகளை ஈழத்து இலக்கியப்பரப்பிலிருந்து ஒதுக்கிவிட முடியாது. ஏனெனில் இவை காலத்தின் சாட்சியாய் நிற்பவை. யுத்த சன்னதத்தின் அழிவின் சிதைவிலிருந்து எழும் இக்கவிதைகள் வாழ்வுக்கும் சாவுக்கு மிடையிலான வலியிலிருந்து பிறப்பவை.

நவீன சிந்தனையை உள்வாங்கி பன்முகத்தளத்தில் இயங்கும் அனார் பெண்ணுக்குள்ளே முடங்கிக்கிடக்கும் அநுபவங்களைப் பெண்ணிலை, பெண்ணியநிலை சார்ந்து நுட்பமாய் வெளிப்படுத்தும் இயல்புடையவர். இத்தொகுப்பில் இடம்பெறும் அனாரின் கவிதைகள் கண்டு கொள்ளப்படாத வெளிப்படுத்த முடியாத பெண்மொழிசார் அனைத்து கூறுகளையும் தன்னகத்தே கொண்டு இயங்குகிறது. ஆணின் அனுபவக் குரலில் இருந்து வேறுபட்ட இக்குரல் அதீத குறியீடுகளையும் அனுபவ வெளிப் பாட்டுவழி கட்டமைக்கப்பட்ட நவீன கருத்தியலுக்கான மொழிசார் கூறுகளையும் கொண்டு இயங்குகிறது.

ஒரு சமூகப்பண்பாட்டு நடத்தைக்குள் சிக்குண்டு உள, உடல் ரீதியாக ஒடுக்கப்பட்ட பெண்ணின் குரலாய் வெளிப்படும் 'ஓவியம்' அனுபவப் பதிவின் மூலம் பெண்ணுக்கென்று எதுவுமில்லாத ஆண்மையச் சிந்தனையால் உருவாக்கப்பட்ட நலிவுண்ட நிஜவுலகைக் காட்சிப்படுத்துகிறது.

" வெறும் ஓவியத்தின் வாழ்வில்
என்ன அர்த்தமிருக்க முடியும்
அசைய முடியாக் கைகளும்
நகர முடியாக் கால்களும்
பேசமுடியா உதடுகளும்
சந்தேகமே இல்லை
வாயில்லா ஜீவன் ஆடாதசையாது
சுவரில் மாட்டப்பட்டிருக்கிறது
பல்லிகள் எச்சில் படுவதையும் எதிர்க்காமல்"

(மரணத்தில் துளிர்க்கும் கனவு -11)

சமூகநியதியைத் தகர்க்க முடியாது அத்தளைக்குள் சிக்குண்டு நலிவுற்று வாழ்வின் ஆத்தமின்மைக்குள் உழலும் குரூரவெளியை அனாரின் 'யாருக்கும் கேட்பதேயில்லை' கவிதையிலும் தரிசிக்கலாம்.

அதிக அலங்காரமில்லாத சொற்கள், நேர்த்தியானமொழியமைவு, எளிமையானபுனைவு நுட்பமாகக் கையாளப்படும் மொழிப்பிரயோகம் எனவிரியும் அலரியின் கவிதைகள் மிகைநிலை கவியாடலாக அமையாது அநுபவத்தை உள்வாங்கிய பகிர்தலாகவே அமைகின்றன. ராணுவ ஒடுக்குமுறையும் ஆயுதப் போராட்டமும் வலுப் பெற்ற யுத்த பூமியில் எவ்வித பிரக்ஞையும் ஏற்படுத்தாத மனித இறப்புக்களின் நிதர்சனத்தை, இயல்புற வாழ்வை 'ஒருவன் கொல்லப்படும் போது' என்னும் கவிதை மிக எளிமையாகப் பதிவு செய்கிறது. அதே சமயம் அக்கவிதை ஏற்படுத்தும் தாக்கம் அதீதமானது.

"ஒருவன் கொல்லப்படும் போது
பெரிதாக என்ன நடக்கப் போகின்றது.
குருதி பெருகி வடிந்து
பச்சை பசும் புல்தரை
செவ்வரத்தம் பூக்கள்
போலாகப் போகின்றது.
மல்லிகை மணம் கசியும் காற்று
பிணநெடி
சுமந்து வீசப் போகின்றது
அழும் குரல்கள் கணப் பொழுதில்

ஓய்ந்து விடப்போகின்றன.
இவை தவிர
ஒருவன் கொல்லப்படும் போது
பெரிதாக என்ன நடக்கப் போகின்றது..."

(மரணத்தில் துளிர்க்கும் கனவு -23)

இனப்படுகொலைகள் தீவிரமடைந்த சூழலில் குரூரத் தாக்குதல்களுக்குள்ளாகி வதையுண்ட மனிதர்கள் ஆழ்கடலிலும் ஆற்றங்கரையோரங்களிலும் பிணங்களாக மிதப்பர்கள். 'கடலில் மிதக்கும் சடலங்கள் யாருடையதென்று யாருக்கும் தெரியாது" எனத் தொடங்கும் 'இனந்தெரியாத சடலங்கள்" கடந்த கால நிகழ்வெளியை அப்பட்டமாக எடுத்துரைக்கிறது.

"யாருடைய சடலங்கள் கடலில் மிதக்கிறதென்று
சடலங்களுக்கு தெரியாதது போலவே
கடலில் மிதக்கும் சடலங்கள் யாருடையதென்று
கடலுக்கு தெரியாது."

(மரணத்தில் துளிர்க்கும் கனவு -26)

'சொல் பொருள் பின்வரும் நிலையணியை நிகழ்கால இருப்புக்கு ஏற்ப வெவ்வேறு கோணத்தில் பயன்படுத்திய அலறி ஒரு பொருட்படக் கையாளும் சொற்களைக் கொண்டு சொல்லின் வெளியைத் திறக்கிறார். இவ் மீப்பொருண்மையில் கட்டுறும் பிறிதொரு கவிதையே சித்தாந்தனின் 'பசியோடிருப்பவனின் அழைப்பு".

"மலைகளை உண்ணும் நுட்பங்களைப் போதித்தாய்
பிறகுமலைகளின் சுவை பற்றிய பாடல்களை
இசைத்துக் காட்டினாய்
மழைப் பொழிவுகளுக்குள்
மலைகள் வளரும் அதிசயங்களை
வசியச் சொற்களில் சொன்னாய்
மலைகள் தீர்ந்து போகும்
ஒருநாள் வருமெனில்
அப்போது
மலைகளைத் தின்று
மலைகளாகிய நாம்
நம்மையே பகிர்ந்துண்டு
பசியாறலாம்"

(மரணத்தில் துளிர்க்கும் கனவு -57)

முழுக்கமுழுக்க கருத்தியலை உள்வாங்கி நவீன கதையாடல்வழி இயங்கும் இக்கவிதை பிரச்சினைக்குட்பட்டு மறைந்து போகும் யுகத்தில் கண்ணீர் வழி மனிதனால் மனிதன் காவு கொள்ளப்படும் துன்பியல் நிகழ்வைத் துக்கித்துக் காட்டுகிறது. சிதைவாக்கம் என்னும் பின்நவீனத்துவ களத்தில் இயங்கும் இக்கவிதை வெளிமாயையால் கட்டுண்ட அகவெளியைப் படிமத்துக் கூடாகக் காட்சிப்படுத்துவதுடன் அடக்கி ஒடுக்கப்பட்டு வேட்டையாடப்படும் மக்களின் வாழ்வை மலையென்னும் குறியீட்டுக்கூடாகவும் துல்லியமாக முன்வைக்கிறது.

ஈழத்தின் போரியல் வாழ்வை, அதன் வரலாற்றை, மரபை, தத்துவத்தை கதையாடல் வழி கட்டமைக்கும் சித்தாந்தன்கவிதைகள் ஆழ்ந்த பொருட் பெறுமானம் மிக்கவை. மொழிவழி இயங்கும் நுட்பமான சொல்லிணைகளால் உருவாக்கப்படும் இக்கவிதைகள் பன்முகத்தளத்தில் இயங்குபவை. மூடுண்ட நகரத்தின் இருண்ட வாழ்வின் ஆறாத ரணங்களையும் கொடுமையான மரண வெளிகளையும் காட்சிப்படுத்தும் 'மூடுண்ட நகரத்தில் வாழ்பவனின் நாட்குறிப்பு' குருதி சுவரப்பட்ட கடந்த காலத்தின் ஆவணப் பெட்டகம்.

"தெருமரங்கள்
சவத்துணி போர்த்தியுள்ளன
இரவுகள்
நாய்களின் குரல்வழி அவலமுறுகின்றன.
சட்டத்தால் கட்டப்பட்டிருக்கிறது இரவு
வாகனங்களின் இரைச்சல்
கனவுகளில் எதிரொலிக்கிறது
கபாலத்தில் எதிரொலிக்கிறது
கபாலத்தில் உதிரத்தின் நெடி தெறிக்கிறது
இந்த இரவை எப்படித்தாண்டப் போகின்றேன்
ஆசுவாசப்படுத்த எவருமில்லை."

(மரணத்தில் துளிர்க்கும் கனவு -58)

கடந்த கால ஈழத்தின்சனநடமாட்டமில்லா அச்சமூட்டும் இரவு பொழுதினைக் காட்சிப்படுத்தும் இக்கவிதை யதார்த்த நிகழ்வின் நிழற் பிரதி. தூக்கத்தை தொலைத்து விட்டு நடுநிசியில் மரணத்துடன் இறந்து இறந்து வாழும் உருச்சிதைக்கப்பட்ட தமிழ் ஆத்மாக்களின் இதயத் துடிப்பைப் பதிவு செய்கிறது.

உருமாறும் தேசத்து தலைமைகளால் மனிதப்படு கொலைகள் சப்தமின்றி அரங்கேற்றப்படுகின்றன. ஒப்பாரிகளும் ஓலங்களும் நிறைந்த மலிந்த மரணவெளிக்குள் நாற்சிகளினல் உருவாக்கப்பட்ட மொத்'வுசன் முகாமை விட கொடூர வதைமுகாங்கள் வன்மங்கள் உறையும் கண்களுடன் ஒளிர்கின்றன. அச்சமே வாழ்வாய்ப் போன அசமந்த சூழலில் உயிரைக் கையில் பிடித்தபடி அலையும் மனிதவாழ்வைக் காட்சிப்படுத்தும் 'கடவுளர்களின் நகரங்களில் வாழுதல்' என்னும் கவிதை ஈழத்தின் உண்மையின் தோற்றத்தை நகல் பிரதியாய் எடுத்து உரைக்கிறது. மக்களின் யதார்த்த வாழ்வியல் புறப் படிமங்களுக்கூடாக இக்கவிதையில் நன்கு காட்சிப் படுத்துகிறது. இப்பின்னனியில் எழும் 'மகா ஜனங்களின் அழுகை அல்லது அரசர்களின் காலம்' கனவுகளால் நிரப்ப பட்ட வர்ணம் குழையாத வாழ்வை அவாவுகின்றது. குழந்தைகளை மகிழ்வூட்டாத பொழுதுகள், குருதி, அச்சம், துயரம் முதலானவற்றுக்குள் உழன்று கொண்டு போலி வார்த்தைகளை உண்மையென நம்பி ஏமாறும் மக்கள், உணர்வுகளற்ற உறவுகளுடன் கழிக்கும் பொழுதுகள் என விரியும் இக்கவிதை மனித வாழ்க்கை வாழ்வதற்காக அன்றி அரசை சந்தோசிப்பதற்காகவும் அரசனை வாழ்விப்பதற்காகவும் உருவாக்கப்பட்டது என்னும் ஈழத்தின் இன்றைய நடப்பியல் நிலையையும் விளக்கி நிற்கிறது.

உயிர்ப்புடன் மேலான்மை செலுத்திய அரசியல் பின்னனியில் வன்மப்பட்டு சிதைக்கப்பட்ட வாழ்வைப் பாடும் சித்தாந்தன் கவிதைகள் மறைக்கப்பட்ட, மறுக்கப்பட்ட பகுதிகளை தன்னுள் இணைத்து இயங்குகிறது. உணர்வுகளுக்கப்பால் செறிவிறுக்கம் கொண்ட புதிய சொல்லாட்சி, புதிய சொல் முறைமைக்களுக்கூடாக நவீன கவிதைக்கான இயங்கு வெளியைச் சாத்தியமாக்கும்

சித்தாந்தன் மீபொருண்மையில் இயங்கும் அசாத்தியமான படிமங்கள், குறியீடுகளுககூடாக நிகழ்கவிதைக்கான புதியவெளியைத் திறக்கிறார்.

சமூக அரசியல் பிரக்ஞையின் வெளிப்பாட்டுச்சாதனமாக விளங்கும் கவிதை கவிஞனின் அனுபவத்துக் கூடான அகப்புற உலகை கட்டமைக்கிறது.அக்கவிதை உணர்வு பூ ர்வமாகவும் உயிரோட்டமான முறையிலும் தான் வாழ்ந்த சூழலையும் அச்சூழலுக்குள் நிர்பந்திக்கப்பட்ட வாழ்வியலையும் அடையாளப்படுத்துகிறது. அவ்வகையில் உணர்வின் தடத்தில் எழும் பொன்.காந்தனின் கவிதைகள் போரினால் புண்ணுண்ட மக்களின் கோர இருப்பை ஆவணப் படுத்துகிறது.அகதி முகாம் என்னும் பெயரில் இயங்கிய சமகால வதை முகாம்களில் வாழ்ந்த மக்களின் மனங்களில் மேலெழும் விரக்தியையும் ஆபத்தையும் துயரையும் பேசும் இவரது கவிதைகள் தனித்துவமானவை.

"...நாம் மரணித்துக் கிடக்கையில்
எமது பிணம் எதிர்பார்க்கக்கூடிய
எமது குழந்தையின் மாபெரும் அழுகை
இல்லாதிருக்கும் சாபக்கேடு
எமை சிதையில் வதைத்தெரிக்கும்"

(மரணத்தில் துளிர்க்கும் கனவு -118)

மரணங்கள் மலிந்த யுத்த பூ மியில் பிணங்களை எண்ணி உரத்து அழுவதற்கு கூட குழந்தைகளற்ற சூழலை முன்வைக்கும் 'நமது கடன்' ஈழத்தமிழனின் நாதியற்ற அவல வாழ்வின் நிகழ்தன்மையை விளக்குகிறது.

சமூக,அரசியல் பரிமாணங்கள் உள்ள ஒருவரது இலக்கிய ஆளுமை, அவரது படைப்பினூடாகச் சுவரப்படும் போது அப்படைப்பு யதார்த்ததன்மை கொண்ட கனதியான பன்முகப் படைப்பாக உருப்பெறும்.அவ்வகையில் வரலாற்று நிகழ்வின் உள்முக இயங்கியலை மனித வாழ்வியலுக்கூடாகப் பதிவு செய்யும் கவிதைகளே பொன்.காந்தன் கவிதைகள். வாழ்வதற்கு இடமற்று துரத்தப்படும் ஈழத்தமிழர் வீடிழந்து, வாழ்விழந்து அகதிமுகாமில் மந்தைகளைப் போல் அடைக்கப்பட்டு வாழ்வதனை தந்தையின் மரணத்துக் கூடாகக் காட்சிப்படுத்தும் 'அப்பாவின் சுதந்திரம் பற்றிய குறிப்பு' யதார்த்தவாழ்வின் இயல்புநிலையை எடுத்துகிறது.

"அகதிவாழ்வைவிடஅவருக்குச் சாவுமேலானது
அப்பா ! செத்துவிட்டார்
சந்தோசம்
இப்போதுஅப்பாமுதுமையோடுகால் கடுக்க
நிவாரணத்திற்காககாத்திருக்கத்தேவையில்லை
சிலவேளைநெரிசலில் சிக்குண்டு
தடக்கிவிழுந்து
எழமடியாமல் தவிக்கவேண்டியதில்லை
அகதிவாழ்வைவிடஅவருக்குச் சாவுமேலானது..."

(மரணத்தில் துளிர்க்கும் கனவு -120)

காலத்தின் சாட்சியாக நிற்கும் இக்கவிதை தான் வாழும் கொடிய சூழலின் மெய் உருக்காட்டியாக விளங்குகிறது. அப்பாவின்பாடல்,உன் எஜாமானின் மரணச்சான்றிதழ் முதலான கவிதைகளும் இத்தளத்திலேயே இயங்குகின்றன.

எதிர்காலம் பற்றிய கனவுகள் தொலைந்த நிலையில் போலிமைகளால் உள்ளமைக்கப்படும் வாழ்வே நிகழ்கால இருப்பாக கட்டமைக்கப்படும் ஈழச் சூழலில்,ஒளிமயமான காத்திருப்புக்கள் தொடர்கின்றன. ஆயினும் நம்பிக்கையிழந்து அல்லலுற்று ஏமாந்து வாழும் வாழ்வோ வேம்பெனக் கசக்கிறது.காருண்யம் மிக்க மனிதப்பண்புகள் மனிதனாலே வேட்டையாடப்படுகிறது.பொன்.காந்தனின் "காத்திருப்பின் கடைசிக்காலம்" என்னும் கவிதையும் இப்பின்னனியில் புறப்பொருட் படிமங்களுக்கூடாக தன்னை முன்மொழிகிறது.

இன்றைக்கும் நாளைக்கும் இடையில் உயிர் வாழ்வதற்கும் உணவுக்கும் அல்லாடும் மனிதனின் உயிர்த்துடிப்பை "ஆடை" கவிதையில் தரிசிக்கலாம்.அகதி முகாமில் கொடும் நெருக்கடிக்குள்ளாகி வதைபட்டு நொந்து நொடிந்து வாழும் மனித வாழ்வியல் உணர்வுத்தளத்தில் காட்சிப்படுத்துகிறது.

"ஆடை வழங்கலாம் என அகதி முகாம்
ஒலி பெருக்கி அலறியது
விழுந்தடித்து
நிவாரண அட்டையோடு ஓடிய
சனத்திரலில்
கலந்த
அவள் திரும்பி வரும்பொழுது
வெயிலை அணிந்து வியர்வை கொட்ட
ஏமாற்றத்தை அணிந்து
ஆடைகள் முடிந்ததாம்
இனி அடுத்த முறையாம்
என்பதை
அணிய முடியாத முகத்துடன்
அணிந்து போன ஆடை நெரிசலில்
கிழிந்ததும் தெரியாமல் நின்றாள்"

(மரணத்தில் துளிர்க்கும் கனவு -123)

விதிக்கப்பட்ட வாழ்வைப்பாடும் பொன்.காந்தன் கவிதைகள் மரணத்தில் துளிர்க்கும் கனவாகவும் வதைக்கப்பட்டு சிதைக்கப்பட்ட வாழ்வின் மேலெழும் துன்பியல்குரலாகவும் எழுகிறது.

அடக்குமுறை,அதிகாரத்துக்கெதிரான குரலாக வெளிப்படும் ஃபஹிமாஜகானின் கவிதைகள் பெண் மொழிப்பிரக்ஞைக் கூடாகத் தன்னை விசாலித்துச் செல்கிறது.யுத்த சூழலுக்குள் வலியோடும் வாழ்வின் அனுபவங்களோடும் வெளிப்படும் இக்கவிதைகள் உள்ளடக்க முறையிலும் வெளிப்பாட்டு முறையிலும் தனித்தன்மையை பெற்றுள்ளன.

கதையும் கவிதையும் ஊடாடி ஒன்று கலக்கும் இடமாக ஃபஹிமாவின் 'உயிர்வேலி' அமைகிறது. ஆழ்பொருள் குறியீட்டுக் புனைவுக்கூடாக உயிர் பறிக்கும் வாழ்வின் நிகழ்வினைப்பாடும் இக்கவிதை பெருந் தேசியத்தின் வன்மத்தின் வெளிக்குள் உழலும் நிகழ் இருப்பைச் சித்திரிக்கிறது.

"குருவி குந்தியிருந்த மரத்தின்
கீழே வீழ்ந்து கிடந்தது
இற்றுப்போன ஒரு நிழல்
தொலை தூர ஆற்றுப்படுக்கையில்

மறைந்து கொண்டிருந்தது கடைசிச் சூரியன்
அசைந்து வரும் கரிய யானைகளைப்
பார்த்தவாறு கைவிடப்பட்ட தன் கூட்டை
எண்ணிக் கண்ணீர் உகுத்திடலாயிற்று
அடைகாத்த முட்டைகளைப் பெருங்காற்றில்
போட்டுடைத்த கரங்களில்
எல்லா அதிசயங்களும் இருந்தது
"ஏன் செய்தாய்" எனக்
கேட்க முடியாத அடக்கு முறையில்
காலம் சிக்கியிருந்தது..."

(மரணத்தில் துளிர்க்கும் கனவு -37)

போர் தின்னும் பூமியில், கையில் உயிரை பிடித்தவாறு இருண்ட சூன்யவெளிக்குள் அலையும் மனித வாழ்வு இக்கவிதையில் நுட்பமாகப் பதிவு செய்யப்படுகிறது. தேசத்து மானுடத்தின் பேரவலத்தையும், இடம்பெயர் வாழ்வையும், போரின் பிடிக்குள் சிக்குண்டு அல்லலுறும் மக்களின் வாழ்வையும் குறியீட்டு, காட்சிப் படிமங்களுக் கூடாக வெளிப்படுத்தி நிற்கும் பிறிதொரு கவிதை 'அடவி 2007' ஆகும். ஈழத்தின் வன்முறைச் சூழல்பற்றிய ஒரு மொத்தமான சித்திரத்தை தரும் இக்கவிதை எம்.ஏ. நுஃமான் கூறுவதைப் போல 'ஈழத்தின் அவலம் பற்றிய ஒரு முழுமையான குறியீடு' எனலாம்.

தமிழ் ஈழ விடுதலைப் போராட்டத்தின் தீவிரப் போக்கு தமிழ், முஸ்லிம் உறவுகளுக்களுக்கிடையே விரிசலை ஏற்படுத்திய சூழலில் ஃபஹிமாஜகானின் கவிதைகள் நட்புறவின் பாலமாக இருந்தன. போரளி மீது கொண்ட காதலின் தீவிர, மென் போக்குகளின் நுண் இழைகளை ஆழமாகவும் அதே சமயம் அழுத்தமாகவும் 'ஒரு கடல் நீரூற்றி' என்னும் கவிதையில் ஃபஹிமா பதிவு செய்கிறார்.

"இன்று வீரர்கள் துயிலும் சமாதிகள் மீது
காலத்துயரின் பெரு மௌனம் கவிழ்ந்துள்ளது !
சமுத்திரத்தையே சமாதியாகக் கொண்டவனே !
இங்கு ஏதுமற்ற உன் கல்லறையில்
ஒரு கடல் நீரூற்றி நிரப்பிடவோ? "

(மரணத்தில் துளிர்க்கும் கனவு -36)

ஒடுக்கு முறைக்குள் உழன்று தவிக்கும் தமிழ் மக்களின் ஆதார சுருதியாக அமைவும் இக்கவிதை தமிழ் தேசியத்தின் உரிமைக்கு உயிர் கொடுக்கும் குரலாகவும் ஒலிக்கிறது. அடக்குமுறை, வன்முறைக்கெதிரான கலகக் குரலாக ஒலிக்கும் ஃபஹிமாவின் கவிதைகள் தமிழ்த் தேசிய நோக்கு நிலையை வெளிப்படுத்தி நிற்கிறது. இப்பின்னனியில் எழும் 'பாதங்களில் எழும் முற்ற வெளி , முகவரியற்ற நெருப்பு நிலவுக்கு , உங்கள் மொழியும் எங்கள் வாழ்வும் வேறாக்கப்பட்ட பின்' முதலான கவிதைகளும் அரச வன்முறையின் உச்சபட்ச நிகழ்வுகளையும் இனத்துவ முரண்பாட்டின் மையத்தில் எழும் போராட்டச்சிந்தனையின் தார்மீக எழுச்சியையும் வெளிப்படுத்தி நிற்கினறன.

ஈழத்து சமகால வாழ்வியலை நுண் அரசியலோடு இணைத்து இயல்பான மொழியில் கவிதைகளுக்கூடாக மென் அதிர்வுகளை ஏற்படுத்தியவர் துவாரகன் ஆவார். சிக்கலில்லாத வாழ்வின் அர்த்தங்களைத் தேடும் இவரது கவிதைமொழி வாழ்வின் அனுபவங்களுக்கூடாகக் கட்டுருபவை. அன்றாட வாழ்வில் எதிர்நோக்கும் வாழ்வின் அபத்தங்களை எழும் வலிகளை எளிமையாகவும் நேர்த்தியாகவும் அங்கதமாகவும் வெளிப்படுத்தும் துவாரகன் கவிதைகள் சமகால நிகழ்வின் பதிவுகள்.

குழந்தைகள் முதல் முதியோர் வரை யாவரையும் குருதியுமிலும் கோரப்பற்களுடன் காவு கொள்ளும் மரணம், எம் தேசத்தில் தெருவோரங்களிலும் வெளிகளிலும் பதுங்கியுள்ளது. பிணம் தின்னும் கழுகு போல் காத்துக் கிடக்கும் மரணத்தை எவ்வித பிசிரலுமின்றி 'ஒரு மரணம் சகுனம் பார்க்கிறது' என்னும் இவரின் கவிதை தத்துருபமாகப் பதிவு செய்கிறது.

"நடந்து செல்லும் வயல் வரம்புகளில்
படுத்திருக்கும் பாம்புகள் போல்
வீதிகளின் வெளியெங்கும்
பதுங்கியிருக்கிறது மரணம்
கலகலப்பான
மழலைக்குரல்களையும் தம்
நீண்ட பிரிவின் பின்னான
உறவுகளையும்
தம் கடமை முடிக்க விரையும்
எல்லோரையும் தோற்கடித்து
வெடித்துச் சிதறும் வெடிகுண்டைப் போல்
காத்திருக்கிறது மரணம்..."

(மரணத்தில் துளிர்க்கும் கனவு -78)

இராணுவ அரண்களுக்கு அருகாமையில் நாம் செல்லும் போது மீண்டும் மீண்டும் எம்மை நாமே பரிசீலித்து வாழ வேண்டிய துர்ப்பாக்கிய நிலைக்குள்ளாகிறோம். இவ்வலநிலையை அங்கதமாகவும் அதேசமயம் அழுத்தமாகவும் வெளிப்படுத்துகிறது 'மீளவும் மரங்களில் தொங்கி விளையாடலாம்'.

"ஓடிய சைக்கிளில் இருந்து
இறங்கி நடந்து
ஓட வேண்டியிருக்கிறது
போட்ட தொப்பி
கழற்றி போட வேண்டியிருக்கிறது
எல்லாம் சரிபார்த்து
மூடப்பட்ட
கைப்பை
மீளவும் திறந்து திறந்து
மூடவேண்டியிருக்கிறது
என் அடையாளங்கள் அனைத்தும்
சரியாகவே உள்ளன
என்றாலும்
எடுக்கவும் பார்க்கவும் வைக்கவும் வேண்டியிழுக்கிறது.."

(மரணத்தில் துளிர்க்கும் கனவு -73)

அச்சத்துடனும் ஆற்றாமையோடும் ஒவ்வொரு ஈழக்குடிமகனும் கழித்த வாழ்நாட்களை கண்முன் நிறுத்தும் இக்கவிதை காலத்தோடு கருத்தூன்றி நிற்கிறது.

நாதியற்று வெறுமனே கழியும் பொழுதுகள், எம்மை கேட்காமலே எம்மிடம் இருந்து பறிக்கப்படும் எம் உடமைகள், எல்லைகளின்றி காத்திருப்பின் நடுவே பழுத்துப்போன இலைகளாய் உதிரும் வாழ்வு என மூடுண்ட

நகரத்தின் அகப் புறவெளிகளைக்காட்சிப்படுத்தும் துவாரகனின் கவிதைகள் மனித துயரின் பதிவுகளாய் அவற்றின் சாட்சிகளாய் விளங்குபவை.

அதிகார வன்முறையின் கீழ் இழைக்கப்பட்ட அநீதிகளையும் கடந்தகால நிகழ் பொழுதில் நடந்த கொடூரங்களையும் எடுத்துரைக்கும் இத்தொகுப்பு மரணத்துக்குள் விதிக்கபட்ட வாழ்வை வரையறுத்து நிற்கிறது.வாழ்வும் போரும் ஒன்றாகக் கலந்த சூழலில் எழுதப்பட்ட இக்கவிதைகள் மனித உணர்வுகளின் உள்வயத்தன்மையில் கட்டுறுபவை. ஆங்காங்கே அளவுக்கு அதிகமாகத் தென்படும் எழுத்துச், சொற்,பொருட் பிழைகள் தொகுப்பினை பலவீனமான பிரதியாக முன்மொழிந்தாலும் காத்திரமான எடுத்துரைப்பும் கனதியான வடிவமைப்பும் சமகாலப் பொருட்புலப்பாடும் சிறப்பான தொகுப்பாக இதனை முன்நகர்த்துகிறது.ஈழத்து இளம் தலைமுறையினரின் ஆளுமைமிக்க கவிதைகளைத் தாங்கி வரலாற்றின் ஆவணமாகவும் காலத்தின் சாட்சியாகவும் நிற்கும் இத்தொகுப்பு சோகமும் அவலமும் நிறைந்த அநுபவத்தின் வாயிலாகவே முகம் கொள்கின்றது. மனிதப்படுகொலைக்குப்பின்னர் துயரத்தையும் அதன் வழி நிறையும் கண்ணீரையும் உள்ளார்ந்த தொனியில் வெளிப்படுத்தும் இத்தொகுப்பிலுள்ள கவிதைகள் தீவிரத்தன்மை கொண்டவை. மரணத்தில் துளிர்க்கும் கனவாகவும் ஒன்றாய் வாழ்தலுக்கான குரலாகவும் ஒலிக்கும் இக்கவிதைகள் அழிவுண்ட காலத்தில் கரையாமல் காலத்தைக் கடந்தும் தன்னை முந்நிறுத்தும் இயல்புடையவை. ●

# நந்திக்கடல் வாவி மீன்குஞ்சுகள்

நெஞ்சு நெஞ்சாய் அடித்து மண்ணில் புரண்டு
கத்திக் குழறி அழுதார் என் அம்மா!

பிஞ்சு உள்ளங்களும் செய்வது அறியாது
நெஞ்சு துவட்டி விம்மி அழுதனர்!

இரத்தம் ஓடி மணகுழிந்த இடமும்
இரத்த உறவுகளின் உயிர்பிரிந்த இடமும்
இதுதான்!

கட்டுமரம் ஏறிடுவோம்
கண்கள் வலிக்க வலிக்க
நித்திரை முழிப்புகள் பிடித்து
வாடியிருந்த கொக்குகள் போல் ஏங்கியிருந்தோம்!

வலையில் சிக்கி வரும் மீன்களை
தலையில் சுமந்து காததூரம் நடந்தால்
விலையிலும் குறைவிருக்கும்.......

இருந்தும்
விற்று சிறு காசு பெற்றுவிட்டால்
இரு சிறங்கை அரிசி வாங்கி வந்து
முற்றத்து முருங்கை இலைகள் ஒடித்து
கஞ்சி காய்ச்சித் தருவார் அம்மா!

அம்மாவைச் சுற்றியிருந்து
நானும் என் இளவல்கள் நால்வருமாய்
பக்குவமாய் கஞ்சி குடித்து ஏப்பம் விட்டு
சிறு நிம்மதி பிடித்து உறங்கிடுவோம்!

அம்மாவைப் போல்
எத்தனை எத்தனை அம்மாக்கள் கத்திக் குழறினர்!

நெஞ்சு முட்டிய வலிகள் இன்னும்
நீண்டுகொண்டே இருப்பது கனமாய்த் தெரிந்தன!

ஐயோ...! ஐயோ....!
என்று அலறும் அவல ஓலங்கள்
வஞ்சகர்களின்
வயிறினைக் கிழித்துக் கீலங்கள்
போடாதோ..?

இன்னும் பொறுத்திடுமா நெஞ்சு.......!
பிஞ்சுகள் கொஞ்சும் குரல் கேட்டாவது
நஞ்சுண்டகண்டன் வந்து
மீன் குஞ்சுகளுக்கும்
உயிர்தரமாட்டானோ....?

வானமே கூரையாக வாழ்ந்திருந்தோம்
வாழ்வாதாரம்
இதுவென்றே
சாய்ந்திருந்தோம்!
வாரத்தில் ஒரு நாள் மட்டுமே
பச்சை அரிசி சோறும்
ஆங்காங்கே
மீன்கள் தெறித்திருந்த புளித்தியலும்
அரிதரிதாய் கிடைத்திருந்தன!

எப்போதுமே
அரைவயிறு கால்வயிறு நிரப்பி
பசிப்பிணி போக்கிய அந்தர உயிர்களுக்கு
இனி ஏது மீட்சி...!

வாழ்விழந்துபோன எங்கள் வாழ்வாதாரம்
இன்னும் வலுவிழந்திருக்கிறது!

எங்களால் எத்தனை முறை சாகமுடியும்
எங்களால் எத்தனை வலிகளை
சுமக்கமுடியும்!

எங்களைக் கவனிப்பார்
இனி யாருமில்லையோ..!
எங்களுக்கென்று இனி எதுவுமில்லையோ....?

நந்திக்கடல் வாவியில் மிதந்தவை
மனித உடலங்கள் மட்டுமில்லை
உயிர் இழந்த மீன்குஞ்சுகளும்தான்.....!

நெஞ்சில் நஞ்சு கலந்த வஞ்சக மனிதா........
மீன் குஞ்சுகளிலுமா நஞ்சு கலந்தாய்......!

இறைவன்
நின்று கொல்வான்
என்பதெல்லாம் அந்தக்காலம்!

இறைவன்
என்று கொல்லும்......? என்று கொல்லும்.......?
என்று
ஏங்கி இருந்து விடாதே வஞ்சக மனிதா.....!

நிச்சயம்
அவன் இன்றே கொல்வான்....!
உனை
அவன் நன்றே கொல்வான்.....!
என்பதையும்
மறந்து விடாதே வஞ்சக மனிதா..!!

**சமரபாகு உதயகுமார்.**

# வல்ல குருநாதன்



வே. தில்லைநாதன்

திருகோணமலை- கொழும்பு பஸ் ஹபறணையை அடைய மூன்று மணித்தியாலம் வரை எடுத்திருந்தது. வீதியைச் செப்பனிடுகிறோம். என்று சம்பந்தப்பட்ட வாகனங்களை ஊர்ந்து வரச் செய்திருக்கிறார்கள்.இதோ வாகனத்தின் வேகம் சற்று அதிகரிக்கிறது என நிம்மதிப் பெருமூச்சுக் கிளம்பும் மூச் செடுத்து முடிவதற்குள்ளாகவே மீண்டும் நத்தை வேகத்தில் ஊரத் தொடங்கும்.

ஹபரணை வந்துவிட்டது. இனித் தாமதமிருக்காது விரைந்து போய்விடலாம்: என்று நான் மகிழ்ச்சியுற பயணிகளின் சிரமபரிகாரத்துக்கென ஒரு கடை வாசலில் பஸ் குலுங்கி நின்றது.

கழிவறைக்குச் சென்று வந்தவன் மீண்டும் எனது இருக்கைக்குத் திரும்பினேன் உடல் அசதியாக இருந்தது. தேநீர் அருந்த வேண்டும் போலிருந்தது ஆயினும் சிரமத்தடன் மனதைக் கட்டுப்படுத்திக் கொண்டேன். வயது போய் உடல் இயக்கம் குன்றித் தசை நார்கள் தளர்வடைந்த நிலையில் மீண்டும் கழிவறையை நாடிச் செல்வதைத் தவிர்ப்பதற்காகவே இந்த அவஸ்தை.

கையோடு கொண்டு வந்திருந்த பத்திரிகையைப் புரட்டினேன் "நாம் ஏன் பொறுப்புக்கூற வேண்டும். பயங்கரவாதத்தை முறியடிபத்தோமே தவிர நாம் யாறுக்கும் தீங்கிளைக்க வில்லை இவையெல்லாம் அந்நிய சக்திகளின் சதி. அவர்கள் பயங்கர வாதிகளின் பாட்டுக்கு தாளம் போடுகிறார்கள் என ஓர் அமைச்சர் முழங்கியிருந்தார். அறிவார்ந்த அமைச்சரின் உரையில் மூல்கியிருந்த போது. " சேர் டீ குடிக்கிறிங்களா? என்று ஒரு குரல் கேட்டது. தலையை நிமிர்த்தினேன்

தாடி மீசையுடன் ஐம்பது வயது மதிக்கத்தக்க ஓர் உருவம் கையில் தேநீர் கோப்பையை ஏந்தியவாறு என் கண் எதிரே நின்றது.

என் முகத்தில் தேங்கியிருந்த ஆச்சரியம் அவனை பேசவைத்தது "சேர் என்னை மதிக்க முடியுதா? நான் உங்கட பழைய மாணவன். நீங்கள் கஸ்டப்பட்டு ஏறி இறங்கினதைப் பார்த்தேன். எங்க சேர் போரியல்"

நான் சட்டென்று அவனை அடையாளம் கண்டு கொண்டேன். எனது கண்பார்வை இப்போதும் தெளிவாகத்தான் இருக்கிறது. அவன் பெயர் மட்டும் ஞாபகத்துக்கு வர மறுத்தது. அவனும் சொல்லவில்லை ஆனாலும் நான் அவனுக்குச் சூட்டிய பேர் ஞாபகத்தில் இருக்கிறது. குருநாதன். அவனை அவ்வளவு எளிதில்

மறந்துவிடத்தான் முடியுமா? என் குருநாதன் அல்லவா அவன் .

"தாங்ஸ் தம்பி கொழும்பில வேலை செய்கிற மகனிட்டப் போறன்" என் கை என்னை அறியாமலே அவன் பக்கம் நீண்டது. ஆவி பறக்கும் தேநீர் என்னைச் சுண்டி இழுத்தது. அத்தோடு எனக்காக இவ்வளவு தூரம் சிரமப்பட்டவரை நோகடிப்பதும் நாகரிகமான செயலாக தோன்றவில்லை.

"சேர் குடியுங்க நான் பிறகு வாரன் கப் எடுக்க" அவன் பஸ்சை விட்டு இறங்கினான்.

தாடியோடு இந்த வாகனத்தில் யாறும் கண்ணில் பட்டதாக ஞாபகத்தில் இல்லை அவன் வெறோரு வாகனத்தில் பயணித்திருக்கவேண்டும்.

திருகோணமலையில் உள்ள ஆண்கள் பாடசாலை ஒன்றில் நான் கற்பித்தபோது அவன் எனது மாணவனாக இருந்தவன் அச்சமயம் நான் அவனது வகுப்பாசிரியராக இருந்ததாகவும் ஞாபகம். எனது வகுப்பில் இருந்த அனைவருமே விவேகிகள் அவர்களுட் சிலர் ஏதோ ஒரு துறையில் தனித்தன்மை படைத்தவர்களாகவும் விளங்கினர். குருநாதனைப் போன்ற ஒரு சிலர் தவிர்ந்த ஏனையோர் வசதி படைத்தவர்கள். விவேகிகளுக்கே இயல்பான துடி துடிப்பும் குறும்புத் தனமும் அந்த மாணவர்களிடம் நிறையவே குடி கொண்டிருந்தன.

அவர்கள் ஆசிரியர்களுக்கு வைத்த பட்டப் பெயர்களும் சுவாரசியமாக இருக்கும் அடிக்கடி லீவில் நிற்கும் பரத சீலன் 'வராத சீலன்' என்று நாமம் பெற்றார் ஏனைய ஆசிரியர்களின் பட்டப்பெயர்கள் என் முன்னிலையிலேயே அவர்களின் வாய்களில் கூச்சமின்றித் தவழும் என்னுடைய பட்டப் பெயர்களை அவர்களிடமிருந்தே நான் அறிய முயன்ற போது " உங்களுக்குப்பட்டப் பெயர் வைக்க இயலுமா சேர்" என்று ஐஸ் வைத்தார்கள். மற்ற ஆசிரியர்களின் தயவினாலேயே நான் அதை அறிந்து கொள்ளக் கூடியதாக இருந்தது.

அடியாத மாடு படியாது என்று காலங் காலமாக நிலவிய தவறான அடிப்டையற்ற காரணத்தினாலோ என்னவோ ஆசிரியர் மேசையில் எப்போதும் ஒரு பிரம்பு இருக்கும். நானும் அதே மனோ பாவத்தில் வளர்கப்பட்டவன் என்பதால் அவ்வப்போது அதை உபயோகித்தது உண்டு .

பொதுவாகவே எனக்கும் மாணவர்களுக்குமிடையே நல்லுறவு நிலவி வந்தது. நான் பிரம்பேந்திய போது கூட அதை தகுந்த காரணமின்றி பயன்படுத்தியதில்லை. ஒரு நாள் என்னை என்ன பிசாசு ஆட்டிவைக்குதோ தெரியவில்லை தகுந்த காரணம் எதுவுமின்றி ஏதோ இடக்காக பதில் கூறினான் என்பதற்காக எனது குரு நாதனின் கண்ணத்தில் பலீர் என்று அறைந்து விட்டேன்.

முழுவகுப்புமே ஆச்சரியத்தில் உறைந்தது. பக்கத்து வகுப்பில் பாடம் எடுத்துக்கொண்டிருந்த வட்ட கருவிழி மங்கையும் அதிசயமாப் பார்த்தாள் நீண்ட மண்டபத்தில் அடுத்தடுத்து இருந்த மண்டபத்தில் அடுத்தடுத்து இருந்த வகுப்புகளில் அவள் அடுத்த வகுப்பில் இருந்தாள்.

அந்த வட்டக் கருவிழி மங்கையின் கடைக்கண் பார்வைக்காக நானும் என்னை ஒத்த வயதுடைய இன்னமொரு ஆசிரியரும் அழைந்து திரிந்த நாட்கள் அது. அவளது பார்வையில் நான் ஒரு ஹீரோவாக திகழ வேண்டும் என்ற உந்துதல் எனது அடி மனத்தில் இருந்திருக்கிறது என்ற உண்மையை இப்பொழுது என்னால் ஏற்றுக் கொள்ள முடிகிறது. அந்த நாட்களிலோ அதை நான் ஏற்றுக் கொள்ளத் தயங்கினேன்.

வகுப்பு முடிந்து நான் வெளியே சென்று கொண்டிருந்த போது வட்டக் கருவிழி மங்கை என் அருகில் நடந்த படி "அவன் திமிர் பிடிச்சவன் அவனுக்கு அது வேணும் " என மெதுவாகக் கூறிய போது எனது உச்சி குளிர்ந்ததும் உடலில் இதமான வெம்மை பரவியதும் இப்போது என் ஞாபகத்துக்கு வருகிறது. அந்தச் சுகாஅனுபவம் ஒரு சிறிது நேரமே நீடித்தது. அதன் பின்னர் அந்த குற்ற உணர்வு என்னை உழுப்ப ஆரம்பித்தது. தவறு முற்றுமுழுதாக என்மேல் தான் நான் அப்படி நடந்திருக்கவே கூடாது. என என் மனம் திரும்பத் திரும்ப கூறிக்கொண்டே இருந்தது.

ஒரு வர்த்தகப் புள்ளி அல்லது ஓர் உயர் பதவி வகிப்பவரின் மகனாக அவன் இருந்திருந்தால் நீ அவன் மீது துணிந்து கை வைத்திருப்பாயா? என்று இன்னொரு பக்கம் என் மனம் துடித்துக் கொண்டிருந்தாலும் அதனை பெரிது படுத்தவில்லை. என் அவசர புத்தி பற்றியே மனம் அங்கலாயித்துக் கொண்டிருந்தது. ஆனாலும் அவனை சமாதானப்படுத்த எனது வீம்பு இடம் தரவில்லை.

அடுத்தடுத்து வகுப்புகளிருந்தமையால் சிறிது நேரத்தில் எனது மனப்பாரங் குறைந்தது. இப்போது போலன்றி அப்போது மதிய உணவு இடைவேளைக்கு முன்பும் பின்பும் வகுப்புக்கள் நடை பெறும். மாலை நேரம் சக ஆசிரியர்களோடு கரம் விளையாடிக் கொண்டிருந்து விட்ட நூலகம் நோக்கிச் சென்றேன்.

பொது நூலக நூலகர் என நண்பர். " என்ன மாஸ்டர் எல்லா இங்கிலிசுக் கதைப் புத்தகங்களையும் வாசிச்சிட்டியளே நான் என்ன செய்ய ? கொஞ்சம் புதுப் பத்தகங்கள் வாங்கியிருக்கிறம் பாக்கிறியளா? என வேடிக்கையாக அவர் என்னை வரவேற்றார்.

"என்ன செய்ய? நாய் வேசம் போட்டால் குலைக்கத்தானே வேணும். இங்கிலிஸ் வாத்தியாராப் போயிட்டனே" என நானும் வேடிக்கையாகப் பதிலிறுத்தவாறே புதிய புத்தகங்களில் இரண்டைப் பொறுக்கிக் கொண்டு சிறிது நேரம் கடற் கரையில் அமர்ந்து காற்று வாங்கினேன்.என்ன தான் செய்தாலும் மனதில் ஒரு வித நெருடல் அதைத் தவிர்க்க முடியாது இருப்பிடம் நோக்கிப் புறப்பட்டேன்.

பாதி வழியில் இஸ் என்ற சத்தம்".. சைக்கிள் முன் சில்லிருந்து காற்று இறங்கியிருந்தது. சைக்கிளை உருட்டிக் கொண்டு நடக்க ஆரம்பித்தேன். சிவன் கோவிலைத் தாண்டியாயிற்று நான் வதியும் இடமான சமாது லேனை நோக்கித் திரும்புமிடத்தில் ஒரு சைக்கிள் கடை இருக்கும் தைரியத்தில் நிதானமாக நடந்தேன்.

எனது துரதிர்ஷ்டம் சைக்கிள் கடை பூ ட்டப்பட்டிருந்தது நான் திகைத்த நின்றிருந்த போது எனது குருநாதன் என்னெதிரே காட்சியளித்தான் அவன் முகத்தில் எவ்வித சலனமுமின்றி " என்ன சேர், காத்துப் போயிட்டதா? கொஞ்சம் நில்லுங்க" என்றான் சிறிது நேரத்தில் கதவை உட்புறமாகத் திறந்து கொண்டு வந்து தானே ஒட்டுப் போட ஆரம்பித்தான்.

ஏங்களிடையே கனத்த மெளனம் நிலவிய அந்த வேளையில் கூட எனது வரட்டுக் கௌரவத்தை விட்டுக் கொடுக்க நான் சிறிதும் தயாராக இருக்கவில்லை அவன் வேலை முடிந்து சைக்கிளை என்னிடம் பாரம் கொடுத்து விட்டுத் திரும்பினான். நான் " தம்பி, காசு" என்று பணத்தை

நீட்ட அவன் என் பக்கம் திரும்பாமலே கதவை இழுத்து மூடினான்.

நான் உன்னுடன் இணங்கிப் போகத் தயாராகவே இருக்கிறேன் ஆனாலும் எனது தனித்துவத்தை நான் இழக்கத் தயாராக இல்லை என்ற அவன் தனது செயல் மூலம் சொல்லாமல் சொல்வது போலிருந்தது.

அன்று தான் அவன் எனது குருநாதர் ஆனான் அவனிடம் வருத்தம் தெரிவிக்குமளவுக்கு எனக்குப் பெரிய மனசு ஏற்பட்டிருக்காவிட்டாலும் அன்றிலிருந்து நான் பிரம்பைத் தொட்டதே இல்லை.

ஆரம்பத்தில் எனது வரட்டுக் கௌரவத்துக்குத் துணை சேர்த்த வட்டக் கருவிழி மங்கையின் ஆறுதல் வார்த்தைகள் இன்னொறு சம்பவங் குறித்து அவள் இருவேறு சந்தர்ப்பங்களில் எடுத்த இரு வேறு நிலைப்பாடுகள் காரணமாக அவள் மீதும் என் மீதும் எனக்கிருந்த நம்பிக்கையைப் பின்னர் தகர வைத்தன.

அவள் வாயாடி, துடுக்குத் தனம் மிருந்தவள் தனக்குச் சரியென்று பட்டதை யாரெவர் என்ற தராதரம் பார்க்காது தயங்காது எடுத்துச் சொல்பவள் என நான் நம்பியிருந்ததால் அவளை எனக்கு மிகவும் பிடித்திருந்தது. அதனால் வரத சீலன் மாஸ்டருடனான ஒரு பயணத்தின் போது எனக்கு ஏற்பட்டிருந்த ஒரு கசப்பான அனுபவத்தை அவளுக்கு மனம் விட்டுச் சொல்லியிருந்தேன்.

ஓர் அதிகாலை வேளை நான் திருகோணமலை செல்வதற்காக ஏற்கனவே ஆசனம் பதிவு செய்து யாழ்ப்பாணம் பஸ் நிலையத்தில் நின்றிருந்தேன் அப்போது எனது முதுகில் யாரோ தட்டுவது போலிருந்தது. வரதசீலன் நின்று கொண்டிருந்தார். "தம்பி என்ரை அவவுக்குச் சீட் புக்பண்ணேலாமப் போச்சுது உம்முடைய ஆசனத்தை அவவுக்குக் குடுமன் நீர் ஸ்கூட்டரில திருகோணமலைக்கு வரலாம் எனக்கும் பேச்சுத் துணையாக இருக்கும்" என்றார்.

எனக்கும் தயக்கமாக இருந்தது. அப்போது தான் காய்சலில் இருந்து மீண்டிருந்தேன். வேகாத வெயிலில் நூற்றைம்பது மைல் தூரம் குழுங்க குழுங்கப் பயணம் செய்வதை நினைத்தாலே என்னவோ செய்தது. அவர் தனது வார்த்தை ஜாலத்தால் என்னை மயக்கி இயங்கவைத்தார் வவுனியா வந்ததும் அவர் ஸ்கூட்டருக்கு பெற்றோல் போட்டு பணம் செலுத்திவிட்டு என்னிடம் வந்து. பணத்தில் அரைப்பங்கு" தருமாறு கேட்டார் கணன்றெழுந்த கோபத்தை அடக்கிக் கொண்டு பணத்தை எண்ணிக் கொடுத்தேன்.

இந்தச் சம்பவத்தை நான் முதல் தடவையாக வட்டக் கருவிழி மங்கையிடம் கூறிய போது இப்படியும் ஒரு மனிசனா என்று வரத சீலனைக் கேலி செய்து எனக்காக வெகுவாக உருகியிருந்தாள்.

வரதன் சிண்டு முடிவதிலும் வல்லவர் அவர் அடிக்கடி லீவில் நிற்பது காரணமாக அதிபருக்கும் அவருக்கும் இடையே ஒரு விதமான கசப்பு உணர்வு இருந்தது. ஒரு தடவை ஏதோ ஒரு காரணத்திற்காக அதிபர் அழகியை லேசாக கண்டித்த போது வரத சீலன் மெது மெதுவாக அதை ஊதி பெரிதாக்கி யிருந்தான் குமுறிக் கொண்டிருந்த அழகியிடம் அது ஒன்றும் பெரிய விடயமில்லை என்று சொல்லப் போய் நான் வாங்கிக் கட்டிக் கொண்டேன்.

அதன் பின்னர் ஒரு சமயம் ஏதோ ஒரு சந்தப்பத்தில் எனது ஸ்கூட்டர் பயணத்தை நான் அவளுக்கு நினைவுபடுத்த "அவர் செய்தது சரிதானே" என்று அவள் என்மேல் பாய்ந்தாள். அவளது "நம்மவர்" பட்டியலில் வரதசீலன் இறுதியாக இடம்பிடித்திருந்தது என்னை ஆழமாகக் காயப்படுத்தியது.

குருநாதன் பற்றிய பேச்சு மீண்டும் எழுந்திருந்தால் நிச்சயமாக அவள் என்னைக் குற்றவாளியாக்கியிருப்பாள். அவள் ஒரு சந்தர்ப்பவாதி என அறிந்ததன் பின் என்னை அறியாமலேயே எனது மனதில் அரும்பியிருந்த காதல் மொட்டும் இதழ் விரிக்காமலேயே கருகிப்போனது.

சடுதியான இடமாற்றத்தினால் எனக்கும் எனது குருநாதனுக்குமிடையே இருந்த உறவு திடீரென அறுந்தது. இன்றைய எமது சந்திப்பு வரை இருந்த இடைவெளியில் காலஓட்டத்தில் எத்தனை சம்பவங்கள் தாம் அரங்கேறிவிட்டிருந்தன. தேசிய நீரோட்டத்தில் இணைந்து கொள்ள வேண்டுமென்ற ஆசையில் ஓர் எழுத்தாளர் "அவர்களுக்கு வயது வந்துவிட்டது" என்று ஒரு நாவல் எழுதினார். இந்த இடைவெளியில் யாருமே பராயமடையவில்லை என்று உணர்த்துவது போல நடந்துவிட்ட கோரங்கள்... எனது நண்பரான பொது நூலக பொறுப்பாளர் போன்ற எத்தனையோ உயிர்களைக் காவுகொண்ட இனக்கலவரங்களிலிருந்து மண்ணை சிவப்பாக்கிய எண்ணற்ற உடல்களின் குருதிவரை என்னன்னவோ நடந்து நாடு நாற்றமடிக்கிறது. என்னுள்ளே இருந்து எனக்கு வரும் அழுத்தம் போன்று எமது ஆட்சியாளருக்கும் வெளியிலிருந்து அழுத்தம் வந்திருக்கிறது. நீ உனக்கு இருந்ததாகக் கூறும் அதிகாரத்தை துஷ்பிரயோகம் செய்தாயா? பொறுப்புக் கூறு. என்று ஏதோ ஆதாரங்களை வைத்துக் கொண்டு சில சக்திகள் அவர்களை நிர்ப்பந்திக்கும் அளவிற்கு இன்று நிலைமை மாறிவிட்டிருக்கிறது. இந்த சக்திகள் நமக்கு சாதகமான சமிக்ஞைகள் கிடைக்குமிடத்து நாளைக்கே பிடிவாதமாக பொறுப்புக் கூற மறுப்பவர்களின் மீதுள்ள பிடியைத் தளர்த்திவிடலாம் என்ற எண்ணம் என்னை ஆக்கிரமித்திருந்தது. எனது குருநாதன் தேனீர்க் கோப்பைக்காக என்னைத் தேடிவந்தான்.

அவனோடு பேச வேண்டுமென்று ஆசை எழுந்தாலும் சாரதி தனது இருக்கையிலமர்ந்து பயணிகளின் கவனத்தை ஈர்ப்பதற்காக 'ஹோரன் ஒலி' எழுப்புவது என் கண்ணில் பட்டது.

நான் அவசர அவசரமாக எனது குருநாதனின் கரத்தைப் பற்றி "என்னை மன்னித்துக் கொள்ளடா தம்பி" என்றேன்.

என்னைப் போலவே அவனது நெஞ்சிலும் நடந்த சம்பவம் பசுமையாக இருந்திருக்க வேண்டும். அவன் முகத்தில் ஆச்சரியத்தைக் காட்டாது "சரி சேர்" என கூறியவாறு மெல்ல நடந்தான்.

இணக்கப்பாட்டை நான் நிராகரிக்கவில்லை. ஆனாலும் எனது தனித்துவம் பேணப்படவேண்டும் என்ற தனது நிலைப்பாட்டை அவன் மீண்டும் உறுதிப்படுத்தியது போல எனக்குப் பட்டது.

பஸ் கிளம்பியது. எனக்கு ஏதோ சாதனை செய்துவிட்டது போன்ற திருப்தி ஏற்பட்டது. எவ்வளவு காலம் போனாலும் பொறுப்புக் கூற வேண்டியவர்கள் பொறுப்புக் கூறித்தானே ஆக வேண்டும் என்ற எண்ணம் என் மனதில் மேலாங்கியது.

● ● ●

## வெள்ளை வெள்ளையாய் நரைமுடி

அங்கிங்கென்றே தலையில் அரும்பிவரும் வெண்முடியே!
கண்ணாடி எனக்குன்னைக் காட்டிக் கொடுத்தது...
கண்ணாடி தான் உன்னைக் காட்சிப்படுத்தியது.

கண்ணாடியில் உன்னை என் தலையில் கண்டவுடன்
உண்மையிலேகொஞ்சம்
உடைந்த தொன்றும் பொய்யில்லை
என்ன இது,எங்கிருந்து நீ வந்தாய் திடீரென்று?..
என்மேல் உனக்குறவு ஏற்பட்ட தெவ்வாறு?..
உன்னை விதைத்த உழவன் எவன் சொல்லு
எத்தனை நாளாய் இந்த ஊடுருவல் நடக்கிறது?..
எத்தனை நாளாகிறது என் தலைக்கு நீவந்துஃ..
சத்துக் குறைவு சாப்பாடு சரியில்லை,
நித்திரையில் லாவிடினும் நீவருவாய் என்பார்கள்
எத்தனைநாளாகிறது என்தலைக்கு நீவந்து?..

என்னை இங்குள்ள இளையோர் முதியவர்கள்
என்னோடு வேலை செய்யும் "ஸ்டாப்மார்" தொழிலாளர்
எல்லோரும் "ஐயா" என்றே அழைப்பார்கள்
கல்வி பதவி அதிகாரம் எல்லாமே
'ஐயாவாய்' என்னை ஆக்கிற்று என்றிருந்தேன்
பொய்யாய் விளங்கி பூரித்தும் போயிருந்தேன்
ஐயா பெரியவர் என்பதெல்லாம் நீதந்த
கைங்கரியம் பளிச்சென்று இப்போது புரிகிறது.

உன்னை மறைத்து இளம்பொடிகள் போல் இன்னும்
மின்னலாம் அதற்கும் சாயங்கள் மிகவுண்டு.

வண்ண விளையாட்டால்
எத்தனைபேர் மாப்பிள்ளைபோல்
மின்னுகிறார் எமக்கும் விளங்குமந்த மாற்றீடு.
என்றாலும் சுயத்தை
இழந்து உருமாற
எண்ணமில்லை
அவற்றில் எனக்கு விருப்பமில்லை

மிச்சநாளாக எனக்குள் முளைவிட்டு
கஸ்டம் தராது என்னைக்
கண்ணிய படுத்தியுள்ளாய்
சீப்பால் என்றாலும் உன்னைச்
சீண்டியிருக்கின்றேனாஃ
எண்ணை தடவியுன்னை
இளக்கியதும் உண்டோ நான்?

ஒளியில் பளீரென்று
ஒளிர்கின்ற உன்னாலே
பழமானேன்,
என்னை பழமாக்கி விட்ட உன்னை
மனமுடையப் பேச மனமில்லை
நான் உயிரோடு
இருக்குமட்டும் சோந்தே இரு.

கவிமணி நீலாபாலன்

## காக்கும் கணம் ஒரு பதுங்கல்

வெளியேறி வெண்மையானது
காலக்கதியில் நூற்றாண்டு
கடவுளின் கட்டமைப்பு அனைத்தும் அண்மித்த அலை
கடலில் மூண்டது
வைரமாய்க் கிடந்தது நம்மிருப்பு
இக்கணம் நிலம் விழைந்தது
பெருகின மென்பறவைகள்
புதுமெய் கொடியேறி
பறக்கலாயின மின்மினிப்பூச்சி
இருள் பற்றிய இடமெல்லாம்
ஒரு கணம்
ஒரு சொல் காத்திருந்தது
ஒரு பதுங்கிச்சுடுபவனின் துப்பாக்கி போல

சத்தியமலரவன்

## அகந்தையால் அழியுது!

வளம் கொழிக்கும்
திருநாட்டில்
வாழ்வாதாரம்
கொச்சைப்படுத்தப்படுகிறது!

மனவெளி சுருங்கி
மண்வெறி பெருகி
பொன்னுக்கும் மண்ணுக்கும்
பொல்லா(த்) ஆசை கொண்டு
வில்லனாக மாறிவிட்டான்
விலங்கு மனிதன்

ஆட்டுக்குட்டிக்கும்
ஆதரவு கரம் நீட்டிய
ஆத்மஞானம்
வீட்டு நாய்க்கும்
விசம் வைத்து கொல்லப்பார்க்கிறது

என்ன வளம் இல்லை
எங்கள் திருநாட்டில்
மாவலி ஓடுது
மலைகளில் பசுமையாய்!
தேயிலை செழிக்குது
திறமையுள்ளோர் உழைப்பினால்!
பாடு மீன் துள்ளுது
பைந்தமிழர் கிழக்கில்
எத்தனை செல்வம் எங்களைச் சுற்றி
அத்தனையும் அழியுது
அகந்தையால் இங்கு

நா.ஜெயபாலன்

# யதார்த்தம் பிறழாது சம்பவங்களை விபரிக்கும் ஆற்றல் உடையவர் நந்தினி சேவியர்

**முல்லை வீரக்குட்டி**

( நந்தினி சேவியர் ஈழத்தில் அதிகம் பேசப்பட வேண்டிய ஆனால் பேசப்படாத (திட்டமிட்டு) ஒரு ஆளுமையுள்ள படைப்பாளி. 'அயல்கிராமத்தைச் சேர்ந்தவர்கள்' என்ற இவரது முதல் சிறுகதைத் தொகுதி வெளிவந்து ஒரு தசாப்த காலத்திற்கு பின்னர் வெளிவந்திருக்கும் இவரது இரண்டாவது தொகுதி **'நெல்லி மரப்பள்ளிக்கூடம்'** இன்னும் இளமை மாறாது இருக்கும் நாற்பது வருடங்களுக்கு முற்பட்ட எழுத்து நடையை இதில் தரிசிக்க முடியும். – ஆசிரியர்)

நினைத்துப் பார்க்கின்றேன்... ஆண்டு 1973 இல் நாடு தழுவிய ஐந்து இலக்கிய அமைப்புக்கள் இணைந்து திருமலையில் நடாத்திய புதிய ஜனநாயக முற்போக்கு எழுத்தாளர் மகாநாடு நான்கு தினங்கள் தொடர்ந்து நடந்ததாக நினைவுக்கு வருகிறது. அந்த நாட்களில்தான் நந்தினி சேவியருடன் அறிமுகமானேன். அவரது சிறுகதை ஒன்றினையும் அந்த வேளையில் விமர்சனம் செய்து வைத்தேன்.

ஒட்டுமொத்தமாக நான்கு தசாப்தங்கள் ஓடி மறைந்து போன இன்றைய காலகட்டத்தில் நண்பர் நந்தினி சேவியரின் சிறுகதைத் தொகுதியொன்றை ஆய்வு செய்ய முற் படுகின்றேன். சமூகத்தின் இயங்கு திசையின் யதார்த்தம் பிறழாது சம்பவங்களை விபரித்து கதையினை நகர்த்திச் செல்லும் பாங்கு பாராட்டுக்குரியது. **இங்கே வலிந்து தேடிப் புகுத்தும் மேதாவித் தனமான வார்த்தை ஜாலங்கள் நவீனத்துவம் என்னும் புரிதலற்ற வியாக்கியானங்கள் கிடையாது.**




மொத்தமாக எட்டு சிறுகதைகளைக் கொண்ட இந்த தொகுதியில் நெல்லி மரப் பள்ளிக்கூடம் என்பதும் ஒரு சிறுகதையாகும். இதுவே இந்த தொகுதிக்கும்சூட்டப்பட்ட நாமமாகும்.

முதலாவது சிறுகதை'மேய்ப்பன்' என்னும் பெயரோடு வந்துள்ளது. இரு வருடங்கள் பூசை நடை பெறாத புனித தோமையார் ஆலயம்.... காலம் தப்பாது ஒலிக்கும் திருந்தாதி... சங்கிலித் தாம் கிறகோரியின் முடிவோடு முற்றுப் பெறுகிறது.

இக் கதையை வாசிக்கும் போது ஒரேயொரு சிறு சம்பவமே நிகழ்வுகளுக்கு கருவாகிறது என்று புரிகிறது. வலைக்குள் சிக்கிக் கொண்ட மீனின் அவலம்... நிர்ப்பந்தத்தின் பிடிக்குள் முடங்கிப் போகும் நிலை... வலை இழுவையாக ஞானத் தந்தையின் நினைவு... மிதப்புக் கட்டையின் அசைவை வெறிக்கும் விரக்தி... என்று குறியீடுகளை வாக்கியக் கோப்பினூடு புகுத்தி வாசகர் உணர்வுகளைக் கட்டிப் போடும் கதையோட்டம்... இதுதான் அன்றிலிருந்து இன்றுவரை நான் சிலாகிக்கும் நந்தினி சேவியரின் எழுத்தோட்டம்...!

இங்கே தெரேசா என்னும் விதவைப் பெண்... கந்தசாமி என்னும் ஒருவருக்கு மறுமணம் செய்து வைக்கப் படுகின்றாள். பெயர்கள் மூலமாக உணர்த்தப்படுகின்ற இருவேறு மதங்களின் பிணைப்பு சமூக அங்கீகாரமின்றிப் போவதால் விளையும் செயற்பாடுகளே இந்தக் கதை.

முன்னும் - பின்னும்... மெல்லவும் முடியாமல்... விழுங்கவும் முடியாமல் தவிக்கும் கதையோட்டம்... இது கிறகோரியின் ஆழிச் சங்கமத்தோடு பூ ரணத்துவம் பெறுகின்றது. ஒரு சமூக முரண்பாட்டிற்கு ஏதுவான கதை நகர்தலின் அடிப்படை சிறு சம்பவமே...! '... இழிவேதும் ஏற்படாமலிருக்கவே... கிறகோரி... தெரேசாவையும் - கந்தசாமியையும் நேர்மையான விதத்தில் இணைத்தார்... ...என்று வரும்போது இங்கே சமூக ஒழுக்கச் சீரமைப்புக்காகவே மதக் கட்டுப்பாடு மீறப்படுவதாக எடுத்துக் கொள்ளாம்.

பொதுவாக 'மேய்ப்பன்' சிறுகதை நல்ல சொல்லாட்சியுடன் சித்தரிக்கப் பட்டுள்ளது. இங்கு தனியொருவரின் நடைமுறைகளால்... பராபரிக்கப் படாமல் கைவிடப்பட்ட புனித தோமையார் ஆலயம்... 'பூ ... இவ்வளவுதானா இந்த மக்களின் தெய்வீக ஈடுபாடு' என்று கேள்வி தொடுக்க நியாயமான காரணமாகின்றது.

இரண்டாவது சிறுகதை 'ஒற்றைத் தென்னை மரம்' நல்லதொரு கருப்பொருள் குருநகரில் எதற்குமே அஞ்சாத இரண்டு தென்னைகள். ஒன்று... அது... மற்றது சந்தியாக்

கிழவன்... என்று கதை முடிகிறது. இதுவும் கடற் தொழிலாளர்களின் சமூக வாழ்வியல் தடத்திலே புனையப்பட்டுள்ளது. மீனவர் சமூக வாழ்வு முறை... அவர்களது இழப்புக்கள்... குடும்பப் பிரிவுகள்... வேதனைகள் என்று கதை நகர்த்தப் படுகிறது. சமூக நடைமுறையின் மீதான படிப்பினைகள்... சமூக மாறுதலுக்கான முன்னெடுப்புக்கள் சொல்லப்படா விட்டாலும்... நல்லதொரு சிறுகதையாகும்.

நந்தினி சேவியருக்கே உரித்தான விபரிப்புக்கள் விஞ்சி நிற்கின்றன. தனி ஒருவனான சந்தியாக் கிழவனைப் பற்றியே கதை பின்னப்படுவது... யதார்த்தத்தை மீறிய ஒரு றொமான்டிக் ஸ்ரோறி போல் சில வசனங்களில் தொய்வு தெரிகிறது. இருந்தாலும்... கதையின் கருவும் சமூக ஊடாடலும் ஒற்றைத் தென்னைமரத்தினை அப்படியே தூக்கி நிறுத்தி விடுகின்றது.

அடுத்தது 'கடலோரக் குடிசைகள்' 'கொம்யூனிச சித்தாந்தத்தை நடைமுறையிடுவதாக புனையப் பட்டுள்ளது. இக்கதை எழுதப்பட்ட காலகட்டத்தில் நாம் எல்லோரும் இப்படித்தான் சிந்தித்தோம்... எழுதினோம்..! இதனைப் புறநீங்கலாக விட்டு இச் சிறுகதையை நோக்கினால் மிக சிறந்த சமூக உணர்வுகளை நாம் தரிசிக்கலாம்.

**சமூகத்தின் இயங்கு திசையின் யதார்த்தம் பிறழாது சம்பவங்களை விபரித்து கதையினை நகர்த்திச் செல்லும் பாங்கு பாராட்டுக் குரியது. இங்கே வலிந்து தேடிப் புகுத்தும் மேதாவித் தனமான வார்த்தை ஜாலங்கள் நவீனத்துவம் என்னும் புரிதலற்ற வியாக்கியானங்கள் கிடையாது.**

நீண்டகாலம் வெளிநாடுகளில் வாழ்ந்து... தனது சொந்தக் கிராமத்திற்கே... அதுவும் தான் ஞானஸ்நானம் பெற்ற புனித சவேரியார் கோயிலுக்கே குருவானவராக.. வணக்கத்துக்குரிய சுவாமி மரியசேவியராக வருகின்றார் அவர். இங்கே... வித்தியாசமான பல மனிதர் தம் அணுகு முறைகளை காணுகின்றார். அதிலும் தனது உடன் பிறப்பான தம்பியே அவரது விசுவாசம், இறை நம்பிக்கை, அந்தஸ்து ஆகிய பல விடயங்களை கேவலப்படுத்தும் ஒருவராக இனங் காணப்படுகின்றார். தனது தம்பி எட்வட் மீது சுவாமி மரியசேவியர் மிகுந்த நம்பிக்கை வைத்துக் கொண்டு தேடிப் போகிறார். சுயநலனுக்காக ஏழைத் தொழிலாளர்களின் உழைப்பை சுரண்டுவதோடு மேல்த்தட்டு வர்க்க நலனுக்காக எதனையும் செய்வதற்கு தயங்காது சொத்துடமைவாதிகளின் துன்புறுத்தலுக்குள் சிக்கிச் சீரழிந்து நிற்கும் எட்வட்டின் மனைவி-பிள்ளைகள்-அந்த தொழிலாளர் சமூகம் இவையெல்லாம் சுவாமி மரிய சேவியரின் கண்களுக்குப் புலப்படவில்லை என்பது ஆச்சரியமில்லை.

ஆனால்... அவருக்கும் மனசு இருக்கிறது. அதனால் தான்... மேசையில் ஞானம் சமைத்துவைத்த உணவை அவருக்கும் உண்ண முடியவில்லை இறைச்சி... முட்டை... மரக்கறி... ஊர் அரிசிச்சோறு... கப்பல் வாழைப்பழம்... எதுவுமே அவரால் சாப்பிட முடியவில்லை எட்வேட் வீட்டிலும் அந்தக் கடலோரக் குடிசைகளனைத்திலும் ஒடியல்புட்டு... மரவள்ளிக்கிழங்கு... கியூ வில் நின்று பெற்ற பாண்... பச்சைத் தண்ணி... பட்டினி... என்று நந்தினி சேவியர் நிரைப்படுத்தும் போது... நிதர்சனமாக அந்தக் குடிசைமக்களின் துயர வாழ்வு வாசகரின் உணர்வுகளில் குத்தத்தான் செய்யும்.

சற்று மனிதாபிமானத்துடன் பார்க்கும் போது சுவாமி மரியசேவியர் குற்ற மற்ற அப்பாவியாகத் தென்படுகிறார். நல்ல மனசோட மக்களை அணுக முற்பட்டவருக்கு... தன் அண்ணன் என்றும் பாராமல் எட்வேட் பேசிய வார்த்தைகள்... வியாக்கியானங்கள் நிச்சயமாக அந்தக் கதாபாத்திரத்தின் மனசையே சுக்கு நூறாக உடைத்து... வேதனைப்படுத்தி இருக்கும். இந்த இடத்தில் கதாசிரியர் சமூக ஏற்றத் தாழ்வு... மற்றும் சுரண்டல் முதலான பல கொடுமைகளுக்கு வெறித்தனமாக தன் பேனா வெனும் ஆயுதத்தைப் பயன் படுத்தி விட்டார் என்றே எண்ணத் தோன்றுகிறது.

"மனிதம்" இது நான்காவதாக வரும் சின்னஞ் சிறிய கதையாகும். நாங்கள் கடந்த கால நாட்களில் எத்தனையோ கணக்கிட்டுச் சொல்ல முடியாத மனித உடல்கள் வெடித்துச் சிதறிச் செந்நீரில் மிதந்ததை அறிவோம். இவற்றில் ஒன்றைக் கதாசிரியர் உணர்வு பூர்வமாக... மனித விழுமியங்களுடன் சித்தரித்துள்ளார்.

இங்கே... நிகழ்வுகள் உண்மையானவையே..! ஆனால் ... தொழில் உதவிக்காக வவுனியா விலிருந்து கூட்டி வரப்பட்ட மலையகத்துச் சிறுவன்... குண்டு வீச்சில் அழிந்து போன குடும்பத்தில் எஞ்சிய வாரிசான ஒரு பச்சிளங் குழந்தை... மனித அவலங்களின் மிக உச்சத்தைத் தொட்டுவிடுகின்ற யதார்த்தம்.

சம்பவம் நடந்த இடத்தில் துணிந்து வந்த வயோதிபரிடம் பயத்திலும் - பசியிலும் வாடிப்போன அக் குழந்தையைக் கொடுத்த சிறுவன்... தான் எழுந்து செல்ல மறுத்து விடுகின்றான். "... எனக்கும் பசிக்குது தான்... அம்மாவையும் காகம் கொத்திப்போடும்... நீங்க தங்கச்சிய கொண்டு போங்க...." என்று கூறுவது மனித குலத்தின் நன்றி உணர்வுக்கு மிகப் பெரிய எடுத்துக்காட்டாகும்.

அடுத்ததாக வருவது நெல்லிமரப்பள்ளிக்கூடம் எனும் ஐந்தாவது சிறுகதை. இதில் சில கதாபாத்திரங்களை நினைவேற்றம் செய்த ஒரு சோகமான நினைவுத் தேடலை - உள்மன நெருடலாகப் படைத்துள்ளார் கதாசிரியர். இங்கு வேதக் கோயில் கிராமத்திற்கும் -நெல்லிமரப்பள்ளிக்கூடம் இருந்த கிராமத்திற்கும் ஏற்பட்ட வெறுப்புணர்வுதான் என்ன என்பதை வாசகன் புரியக் கூடியதாகச் சொல்லாமல் விட்டு விடுகின்றார்.

ஆனால் பாத்திரங்களுக்குப் பல காரணப் பெயர்கள் இட்டு... அந்தந்தப் பெயருக்கேற்பக் கதையை நகர்த்திச் செல்வது... மனக்கண் முன்னால் அந்தச் சம்பவங்களை நினைவுத் திரையில் நடமாட விடுவதாக இருக்கின்றது. வாசகன் ரசனை உந்தலுடன் கதையை வாசித்து முடித்து விட்டு ஒரு ஏப்பத்துடன் காரணத்தைத் தேடிக் குழம்பிப் போவதும் நந்தினி சேவியரின் தனித்துவமான உரு உத்திதான்.

அழிந்தொழிந்து இல்லாமற் போன அந்த நெல்லி மரப்பள்ளிக் கூடம் அங்கே கற்பித்த ஆசிரியர்களின் பெயர்களும் - செயற்பாடுகளும் மாணவப் பருவத்து வாழ்க்கையின் இனிமையான அனுபவங்கள் பின் நாட்களில் எவ்வாறெல்லாம் மாறிப்போன வாழ்க்கைத்தடங்கள் யாவும் நினைவுத் தேடலின் சுக, துக்க அனுபவங்கள்.

இருந்தாலும்... தான் எடுக்கின்ற கதையின் சமூகப் பின்னணியில்... ஏதோவொரு குழு நிலை முரண்பாட்டை.... அல்லது வர்க்க ரீதியிலான பிரச்சினைகளை நந்தினி சேவியரின் கதைகள் தொட்டுச் செல்லாமல் விடுவதில்லை.

அடுத்ததாக வருகின்ற சிறுகதை "தவனம்" என்பதாகும். கருத்து புரியாதவர்கள் தமிழ் அகராதியைப் புரட்ட வேண்டிய பெயர். கடந்து போன 83 யூ லைக் கலவரத்தை... அப்போது கொழும்பு நகர வாழ்க்கை பட்ட பதட்டத்தை அப்படியே படம் பிடிக்கின்றார் கதாசிரியர். மூன்று இனத்து ஆட்களும் வேலை செய்யும் ஒரு இறால் வியாபாரக் கம்பெனி. அங்கே ஒருவர்க்கொருவர் உதவி புரிந்தே இந்தப் பிரச்சினைக்கு முகம் கொடுக்கிறார்கள்.

தலை நகரில் அந்த நாட்களில் அரங்கேற்றப்பட்ட இன அழிப்பு வெறியாட்டம் இந்தச் சிறுகதையில் சொல்லப் பட்டுள்ளது. எவருக்கம் நோகாமல் சம்பவங்களை மட்டும் நாசூக்காக நிரலிட்டுள்ளதோடு... ஒரிருவரின் பதை பதைப்புக்கள் விபரிக்கப்பட்டுள்ளன.

அடுத்து வருவது 'எதிர்வு' என்னும் நீண்ட சிறுகதை... கனதியான ஒரு படைப்பு. இது படைக்கப்பட்டுளள்ள கதைப்புலம்... அந்தச் சமூக நடைமுறைகள் பழக்க வழக்கப்பண்பாட்டுக் கோலங்கள் மிகவும் சிறப்பாகச் சித்தரிக்கப்பட்டுள்ளன. அந்தப் பிராந்தியத்திலுள்ள ஊர்களின் பெயர்கள்... போக்கு வரத்துச் சிரமங்கள் என்பன விபரிக்கப்பட்டுள்ள பாங்கு பாராட்டுக்குறியது. விதந்து கூறத்தக்க ஒரு பெரும் சமூகத்தின்... அன்றாட நிகழ்வுத் தொகுப்பே இந்தச் சிறுகதை எனலாம்.

ஒரு கதாசிரியரின் சமூக நடைமுறைகளை... பண்பாட்டு விழுமியங்களை உள் வாங்கி.. தனது படைப்பாற்றல் எனும் தனித்திறமையால் கலா பூர்வமாகப் படைத்தளிப்பதே படைப்பிலக்கியம் ஆகும். ஆனால் அந்தப் படைப்பு வாசகர்களான அச் சமூகத்திற்கு பல்விதமான பிரதிபலிப்புத் தாக்கங்களை நிச்சயமாக உருவாக்க வேண்டும். அப்போதுதான் அந்தப் படைப்பாளி தனது பணியில் வெற்றி பெற்றவன் ஆகிறான் இங்கே நந்தினி சேவியரின் படைப்புக்கள் யாவும் மேற்படியான கருதுகோளின் படி வெற்றிக்கம்பத்தின் உச்சத்தில் நிற்பனவாகவே நான் கருதுகின்றேன்.

இறுதியான சிறுகதை... "விருட்சம்" என்ற பெயர் பெறுகிறது. ஒன்றுமே இல்லாமல் ஒரு நல்ல சிறு கதை... நனவோடை உத்தியாக நிறையவே சொல்லி முடிகிறது. விருட்சங்கள் ஊடாக பல்வேறு நினைவுத்தேடல்களை நிகழ்த்தி முடிக்கும் ஒரு திருப்தியுடன் இந்த நூலை நிறைவு செய்கின்றார் நந்தினி சேவியர் என்று கூறலாம்.

ஆனால்... விருட்சங்கள் கதையில் இவர் தொட்டுவிடும் பல நினைவேட்டுச் சுரண்டுதல்கள்... வாசகரைப் பல தூரச் சிந்தனையுள் புதைத்து விடுகின்றது. "கடைக்காரத் துரைச்சாமி உலக்கையால் பிடரியில் அடித்துக் கொல்லப்பட்டமை......." "ஞான் இப்பொழுது கேள்வி கேட்கும். நீங்கள் சரியாக சொல்லாமல் விட்டால் ஞான் உங்களுக்கு அடிக்கும்..." என்ற கேரளத்து ஆசிரியரிடம் கல்வி பயின்ற நினைவு, "பெரும் புயலொன்றில் மாறம்புலம்பிள்ளையார் கோயில் ஆலமரம் வேரோடு சாய்ந்த சோகம்" "வெடிப் பொன்னப்பா தான் செய்த வெடிகளினாலே விபத்துக்குள்ளாகிப் போன கொடூரம்.." .... "விவசாயப் படையில் இணைந்து ஒரு பெரிய ஏமாற்றத்துக்குள்ளான அவலம்...."....... யாழ்ப்பாணத்து வாழ்வியல்.., நண்பர்கள் ..., பிரிவுகள்..., ஏக்கங்கள் என்றின்னோரன்ன நினைவுப் பதிவுகள் யாவும் இந்தக் கதை வாசிப்போர்களை நிச்சயமாக கட்டிப்போடும்.

ஒட்டு மொத்தமாக நோக்கும் போது இதில் அடங்கியுள்ள சிறு கதைகள் எட்டும் எமது சமூக வாழ்வியலின் சில அம்சங்களை...கதைப்புலம்சார்ந்த பிரதேசப் பிரச்சினைகள்... கொடுமைகள்...., முதலான இன்னோரன்ன விடயங்களை அற்புதமாகப் படம் பிடித்துக் காட்டுவனவாகும். ஈழத்து இலக்கிய உலகம் தொடர்ந்து பின்பற்றி வருகின்ற சில கொள்கைகளான..., சிலரை மட்டும் தூக்கிப்பிடித்தல், பல்கலைக்கழகங்கள் தான் சிறந்த இலக்கிய விற்பன்னர்களை உருவாக்குமென்ற எண்ணம்.., சமூகத்தில் எரிகின்ற பிரச்சினைகளை மையப்படுத்தும் படைப்புகளை மையப்படுத்தும் படைப்புக்களை முன்னெடுத்து விமர்சிக்க அஞ்சுதல் - தவிர்த்தல் போன்ற நடைமுறை செயற்பாடுகளை தவிர்க்க வேண்டும். அப்போது தான் நண்பர் நந்தினி சேவியர் போன்ற தலை சிறந்த எழுத்தாளர்களின் படைப்புக்களைத் தமிழ் உலகம் தரிசிக்க முடியும்.

★ ★ ★


**மீண்டும் நந்தலாலா**

வெளிவந்துள்ளது

தொடர்புகளுக்கு :

**நந்தலாலா - 133-1/1, தம்புள்ள வீதி, ஹட்டன்.**


**மகுடர் வாசகர் வட்டம்**

அன்பு வாசகர்களே...!

ஈழத்து இலக்கிய வளர்ச்சிக்கு நீங்கள் செய்ய வேண்டியது மகுடத்தின் சந்தாதாரராக இணைந்து மகுடம் வாசகர் வட்டத்தில் சேர்ந்து கொள்வதும், ஆகக் குறைந்தது உங்கள் நண்பர்கள் நால்வரை மகுடத்தின் சந்தாதாரராக இணைத்துத் தருவதுமே.

- ஆசிரியர் -

சிறுகதை

# துணிவே துணை

- சூசை எட்வேட் -



என்னப்பா செய்யுறீங்க! நீங்க பேப்பர புடிச்சிங்க எண்டா உலகம் இருண்டதும் விடிஞ்சதும் பிரண்டதும் தெரியாது உங்களுக்கு! வெள்ளம் வந்து அள்ளிக் கொண்டு போனாலும் பத்திரிகையைப் பிடிச்சுக் கொண்டுதான் கிடப்பீங்க! எங்கேயோ ஆபிரிக்காக் கண்டத்தில் நடக்கிற பிரச்சனையை இங்க இருந்து படிச்சு யோசிச்சுக் கொண்டு இருக்கிறீங்க, இங்க இந்த தெருவில அக்கம் பக்கத்துல என்ன நடக்கிறது எண்டு தெரியுமா உங்களுக்கு!'

'அதுக்குத்தான் நீ இருக்கிறியே ஊர் துழவாரம் எல்லாம் பாத்து வந்து சொல்லுறதுக்கு, நானுமா பின்னால வரவேணும். என்ன நடந்தது சொல்லன்! என்ன திட்டாட்டி உனக்கு பத்தியப்படாதே!' 'எங்கட தெருத் தொங்கல்ல மணியம் கடமுதலாளி மணியத்தார், அவர்ர பொடியன எல்லே கடத்திப் போட்டாங்களாம்'

'எங்க வைச்சுக் கடத்தினாங்களாம் வீட்டில வைச்சோ, கடைத்தெருவில வைச்சோ?' 'பொடியன் சோதின எழுதிப் போட்டு வரக்குள்ள நடுத்தெருவில வானக் கொண்டுவந்து மறிச்சி ஏத்திக் கொண்டு போயிற்றாங்கள்!'

'இப்ப என்ன கேக்கிறாங்கள்? தங்களுக்கு ஆக்கள் சேர்க்கிறாங்களோ, அல்லது காசு கேக்கிறாங்களோ?'

'காசுதான் கேக்கிறாங்களாம்! அஞ்சு இலட்சம் தரட்டாம்! பொடியனக் கொண்டே போனில பேசியிருக்கிறார்கள்! அவன் பொடியன் அழுதழுது பேசியிருக்கிறான். எப்படியெண்டாலும் தன்னக் காப்பாற்றட்டாம். இல்லாட்டி தன்ன உயிரோட பார்க்க முடியாதாம்!'

'இப்ப என்னவாம் செய்யப் போறாங்க'. 'பொலிசுக்கும் போகேலாது, அவங்களும் சேர்ந்து நிக்கிறாங்க. காசத்தான் குடுக்க வேணும். வேறென்ன செய்யுறது!'

'அதுக்குத்தான் இப்ப பேச்சுவார்த்த நடக்குது. போனில காசக் கொஞ்சம் குறைச்சுத் தாறம் எண்டு கெஞ்சுறாங்கள். ஒவ்வொருக்காவும் கதைக்கக்குள்ள போன் நம்பர மாத்தி மாத்தி வேற போனில கதைக்கிறாங்கள்.! பிடி குடுக்காம கதைக்கிறாங்ககள்!'

'அதுக்கு நீ ஏனப்பா கதிகலங்கிப் போய் நிக்கிறாய்! அவங்கள்ற கடைக்கு நல்ல வியாபாரம்! காசுக்காரர், கொஞ்ச அநியாயமா செய்து காசு சேத்திருக்கிறார்கள்! அக்கிரமம் செய்து சம்பாரிக்கிறவர்கள்ற சொத்தெல்லாம் ஏதோ ஒரு வழியில அநியாயமாப் போகும்தானே! நீயேன் கிடந்து அவதிப்படுகிறாய்!' 'அவங்களென்ன அநியாயமா சம்பாதிச்சது, நேர்மையா உழைச்சதெண்டு பார்த்தா கடத்துறாங்கள்? நக்கிற நாய்க்கு செக்கென்ன சிவலிங்கமென்ன! நாளைக்கு நமக்கும் நடக்காதெண்டு என்னப்பா நிச்சயம்!'

'நமக்கு அப்படியெல்லாம் நடக்க கடவுள் விடமாட்டார். நாங்கள் ஆருக்கும் அநியாயம் செய்யல்ல! நீ இருந்து பார், ஆருக்கோ ஏதோவெல்லாம் நடந்துதான் இருக்கு, நமக்கு ஏதும் நடந்துதா எண்டு' என்னத்துக்குச் சொல்லுறன் எண்டால் நான் என்ன பாடுபட்டு முதுகால முறிஞ்சி வாழை நட்டு தணணீர் இழுத்து வளர்த்து எவ்வளவு காலமாக காத்திருந்து பாத்திருந்து முற்றி பழுத்துவர, ஒவ்வொண்டும் எந்தப் பெரிய பழம். மதம் கொண்டு வெடிச்சிருந்தது!

கண்ணூறு பட்டுடும்! அந்தக் கண்கெடுவானிட்டக் கொண்டு போனா கிலோ முப்பது ரூபாப்படிதான் தந்தான்! நிறையாலயும் வெட்டிப் போட்டான். தண்டுக்கும் கழிச்சிப் போட்டான். பிறகு அவன் கிலோ எழுபது ரூபாப்படி விற்றது எனக்குத் தெரியும், பலசரக்குக் கறியோட மரக்கறிகள், பழவகைகள் எல்லாம்போட்டு விக்கினம். இப்படித்தான் பாடுபடுகிற ஏழையிர வயிற்றில அடிச்சு அறாவிலைக்கு வாங்கி அநியாய விலைக்கு விக்கிறாங்கள் அறுவான்கள்! இவங்களுக்கெல்லாம் இப்படித்தான் நடக்க வேணும்!' சிவத்தார் ஆவேசமாகப் பேசினார்!

'அவங்கள் கடைக்காரரில மட்டுமில்லையப்பா, எங்களப்போல வெளிநாட்டுக்காரரிலதான் கூடக் கண் வைச்சுக் கொண்டு திரியறாங்க! ஒரு நாளைக்கு வீடு பூ ந்து உங்கட காதோட்டைக்க துவக்க வைச்சுக் கொண்டு கேக்கக்குள்ளதான் தெரியும் உங்களுக்கு! அப்ப எந்தக் கடவுள் வந்து காப்பாற்றப்போறார் சொல்லுங்க பாப்பம்!' என்று பார்வதியம்மாள் பேசியபோது சிவத்தார் கொஞ்சம் ஆடித்தான் போய்விட்டார்!

பார்வதி இறுதியாக பகர்ந்த வாய்மொழி கேட்டு சிவத்தார் வாய் 'சிவ சிவ' என்று முணுமுணுத்துக் கொண்டது! அவர் அரசாங்க சுங்க இலாகாவில் மேற்பார்வையாளராக வேலைபார்த்தவர்! இப்போது உபகாரச் சம்பளம் பெற்று மனைவியோடு மட்டும் நிம்மதியாக வாழ்ந்து கொண்டிருக்கிறார்! மகள் பேருக்கே குடியிருந்த் சின்ன வீட்டையும் காணியையும் எழுதி விட்டார். மகள் வெளிநாட்டுக்காரி! மூன்று பிள்ளைகளோடு அங்கே வாழ்ந்து கொண்டிருக்கிறாள். மகள் மருமகன் அனுப்பிய பணத்தில் இருக்கும் வீட்டோடு சேர்த்து பெரிதாக கட்டி மாளிகையாக்கியிருக்கிறார்! சிவத்தாருக்கு இதுவெல்லாம் பிடிக்காது, சனங்கள் அவலப்பட்டு அல்லோல கல்லோலப்பட்டு திரியும்போது நாம இப்படி ஆடம்பரமாக வீட்டக் கட்டுறது சரியில்ல என்று அவர் சொன்னால் கேட்டால்தானே! தாங்கள் வெளிநாட்டுக்காரராம், எப்போதாவது வந்தால் தங்கிச் செல்லவோ அல்லது நிரந்தரமாகவோ இருக்க வேண்டி வந்தால் அதற்கேற்ற மாதிரித்தானே சகல வசதிகளோடும் மதிப்பாக வீட்ட வாசலக் கட்ட வேண்டும் என்று வீட்டு மாதிரிப் படிவத்தையும் அனுப்பி வைத்தார்கள்!

புள்ளைக்கே வீடுவளவெல்லாம் கொடுத்தாயிற்று! அவங்கட காணியில என்னெண்டாலும் செய்யட்டும். நீங்க குழம்பாதீங்க என்று பார்வதியும் சொன்னதால் இவர் அடங்கிப் போனார், அடங்கியதென்ன அவர்களின் திட்டப்படி இவர்தான் வீட்டையும் கட்டி முடித்தார்!

சுங்க திணைக்களத்தில் அதிகாரியாக கடமையாற்றும்போது உள்துறைமுக வீதியில் நீண்ட வரிசையில் பார வண்டிகள் காத்துக் கிடக்கும்! திருகோணமலை துறைமுகத்தில் தரித்து நிற்கும் கப்பல்களில் இருந்து இறக்கப்படும் பொருட்களை ஏற்றிச் செல்லத்தான் இத்தனை பார ஊர்திகளும் தவம் கிடக்கின்றன. பின்னுக்கு நிற்பவர்கள் தம்மை முன்னுக்கு விடுமாறு இலஞ்சமாக நீட்டுவார்கள் பணத்தை! இவருக்கு முன் வேலை செய்தவர்கள் அந்த வழியாலே ஆயிரக் கணக்கில் நாளாந்தம் சம்பாதித்திருக்கிறார்கள்! ஆனால் இவர் மனுஷன் இப்படியான வேலைகளில் முகத்தைத் திருப்பிக் கொண்டு 'சிவசிவா' என்று முணுமுணுத்துக் கொண்டு போய்விடுவார்! ஆள் நேர்மையான மனிதன்தான். அதனால்தானோ என்னவோ இன்றளவும் நிலையாக நிலைத்திருக்கிறார் செல்வாக்கோடு! இவரோடு நின்று அநியாயமாக உழைத்து ஆடம்பரமாக வாழ்ந்தவர்கள் எல்லாம் இப்போது எங்கிருக்கிறார்களோ, என்ன ஆனார்களோ!

இப்போது நடக்கும் அக்கிரமங்களை அநியாயங் களைப் பார்த்தால் நியாயமான மனிதரென்ன பக்த சிகாமணிகளென்ன யாருக்குமே பாதுகாப்பில்லைப் போல் தெரிகிறதே! கடவுள் காப்பார் என நம்பி பத்திரிகை களோடும் புத்தகங்களோடும் தன்னை மறந்தே நிம்மதியாக அமைதியாகப் பொழுதைப் போக்கியவருக்கு மனைவியாரின் பேச்சு அமைதியிழக்கவே வைத்தது!

ஒரு வாரம் சென்றிருக்கும் இன்னொரு அதிர்ச்சிச் சம்பவம், மனைவி கொண்டு வந்தாள்! இவர்தான் புத்தக உலகத்தை விட்டு அங்கால இங்கால எட்டியும் பார்க்க மாட்டாரே! சவம் படலை தாண்டி போகக்குள்ளதான் கேட்பார்! ஆராம் செத்ததென்று' 'சிவபாதத்தார் பேக்கரி இருக்கெல்ல நீங்க இடைக்கிட போய் பாண் வேண்டுவீங்க. அந்த வேக்கரிக்க உள்ளிட்டு பாதத்தார்ர கன்னப்பொட்டில துவக்கோட்டைய வைச்சி காசு கேட்டிருக்கிறாங்கள்!' 'எவ்வளவாம் கேட்டவங்கள்...'

'எவ்வளவெண்டு தெரியாது' அவங்களென்ன ஆயிரக்கணக்கிலேயே கேட்கிறவங்கள், இலட்சக் கணக்கில கேட்டிருப்பாங்கள்...' 'அவங்கள் எல்லாம் பெரிய பவர் காட்டுறவங்கள், கழுத்துச் சங்கிலியும் மோதிரமும் பட்டுப் பீதாம்பரமும் கார் சவாரியும் செய்து கொண்டு பெரிய பவிசு காட்டுறவங்கள். இப்படி ஏழைகளிற வயிறெரிய வாழிறவங்களுக்கு இப்படித்தான் நடக்கும். வேலை செய்யிறவங்களுக்கு ஆன சம்பளம் குடுக்க மாட்டாங்கள். கூட்டிச் சம்பளம் கேட்காதுகள், குடுக்கிறத வாங்கிக் கொண்டு பேசாம போகுங்கள் எண்டு சொல்லி பொம்புளப் புள்ளைகளத்தான் வேலைக்கு வைச்சிருப்பாங்கள்' பழுதான காஞ்ச பாணுகள மடத்தல் விஸ்கோத்து செய்து காய்ச்சல்காரருக்கு விப்பினம். இப்படி எத்தின அக்கிரமம் செய்யுறவங்களுக்கு இப்படித்தான் வேணும்!'

'ஆக நீங்க மட்டும்தான் நேர்மையான மனுசன், பக்தியான ஆள், உங்களுக்கொண்டும் வராது எண்டு நினைச்சுக் கொண்டீங்களோ! இருந்து பாருங்க தலைக்கு மேல வெள்ளம் வந்த பிறகு தான் ஓடி முழிக்கப் போறீங்க.'

ஒரு வாரம் சென்றிருக்கும். அலறிக் கொண்டு பெண்கள் சிலபேர் ஆர்பரித்துக் கொண்டு இவர்கள் தெருவால் போயினர்! பார்வதியம்மாள் குழறல் சத்தம் கேட்டு துருவிக் கொண்டிருந்த தேங்காய் சிரட்டையையும் விட்டெறிந்து விட்டு ஓடினாள் படலை தாண்டி! வாயிலைக் கடந்து போகிறவர்களை மறித்து என்ன நடந்தேறியது என்று வினவியிருக்கிறாள். விபரமெல்லாம் திரட்டிக் கொண்டு வந்து கணவனிடம் சொல்ல வந்தாள். சொல்ல வந்தவள் கணவனைப் பார்த்தாள். அவர் புத்தகத்திலே பார்வையைப் பதித்தபடி சுவாரஸ்சியமாக எதனையோ படித்துவிட்டாரோ என்னமோ தன்னை மறந்து சிரித்துக் கொண்டிருந்தார்!

இவளுக்கு எரிச்சல் எரிச்சலாக வந்தது! புத்தகத்தைப் பறித்து அடுப்பிலே போட்டு எரிக்க வேண்டும் போல இருந்தது! அவள் ஆத்திரத்துக்கும் நியாயமிருக்கிறதுதானே! அயலிலே நடக்கும் அவலங்களைக் கண்டுகொள்ளாமல்

கற்பனைக் கதையிலே மனதை ஆளவிட்டு மூழ்கிப் போய் சிரிப்பதும் அழுவதுமாய் இருந்தால் வீட்டுப் பெண்ணுக்கு ஆத்திரம் வராதா என்ன?

'நீயும் ஒரு மனுஷனாப்பா! எத்தின சனங்கள் குய்யோ முறையோ எண்டு படலையடியில செத்துக் கிடந்தாலும் நீங்கள் புத்தகத்தப் பார்த்துக் கொண்டு சிரிச்சுக் கொண்டு இருப்பீங்கள்! உங்களப் போல மனுஷனப் பார்த்தா விசராஸ்பத்திரிக்குத்தான் அனப்புவாங்கள்!' பார்வதி பொரிந்து தள்ளினாள்!

'எதக் கதைக்க முதலும் என்னத் திட்டாட்டி உனக்குப் பத்தியப்படாதே! உண்மையிலேயே பெரிய ஆபத்தான விஷயமெண்டா முதல்ல அத எல்லே முதல்ல சொல்ல வேணும்! உனக்குத்தான் விசர்! சரி என்ன நடந்தது சொல்லித் துலையன்!'

'எங்கட திருவேங்கடத்தாரையும் கடத்திப் போட்டாங்களாம்! பாவம் அந்த அந்த மனுஷனும் உங்களப் போல பென்சன்காரன் தான், இரண்டு பிள்ளைகள் வெளிநாடுதான், எண்டாலும் அந்த மனுஷன் ஆடம்பரம் பவுசு ஒண்டும் காட்டுறதில்ல, உங்களப் போலதான் தானுண்டு தன்ர பாடுண்டு எண்டு திரியும், கோவில் குளம் எண்டுதான் போகும். அந்த ஆளப்போய் கடத்திப் போட்டாங்களே!'

'அவன் பிச்சைக்காரனுக்கு ஒரு சதம் கூடப் போட்டிருக்க மாட்டான் வாழ்க்கையில! அவன் தரவழிக்கு இப்படித்தான் வேணும்!' என்று நினைத்துக் கொண்டவர், 'இப்ப எங்கவாம் மாரடிச்சி கத்திப் புலம்பிக் கொண்டு போறாங்கள்!' 'எங்க போறது எங்க போறதெண்டு தெரியாம பொலிசுக்கும் இயக்க ஒப்பீசுக்கும் போய் கெஞ்சிக் கொண்டு திரியுதுகள்! பார்க்க பரிதாபமாயிருக்கு. அவங்கள் எங்களுக்கு தெரியாதெண்டு கைய விரிச்சு பேசிக் கலைக்கிறாங்களாம்!'

அடுத்த நாள் அதே கதையை அவர்கள் வீடு போய் அறிந்து கொஞ்சம் விபரமாகச் சொன்னாள் பார்வதி. 'பிள்ளைகள் வெளிநாடெண்டு தெரிஞ்சி போச்சு, பத்து லட்சம் தரச் சொல்லி போனிலதான் பேரம் பேசுறாங்கள்! தவணையும் போட்டிருக்கிறாங்கள்! குறிப்பிட்ட தவணைக்க பிரச்சனையைத் தீர்க்காட்டி சவப் பெட்டியை எடுத்து வைக்கட்டாம்.'

என்று கூறி நிறுத்தியவள் 'நீங்க எல்லே பிள்ளைகள் அனுப்புற காச வீட்டில வைக்கப் பயந்து வங்கியிலேயே போட்டு வைச்சு கவலையில்லாம நிம்மதியாயிருக்கிறீங்க. இப்ப அதுக்கும் ஆபத்து வந்து போச்சுது! அவங்கள் வங்கியிலேயே எல்லாற்ர கணக்கு விபரத்தையும் பார்த்து இலட்சக் கணக்கில் காசு போட்டவங்கள்ற பேர் விபரங்கள் எல்லாம் தெரிஞ்சு தேடி வந்து கொள்ளையடிச்சுக் கொண்டு போறாங்கள்!'

'கடவுளை நம்பினோர் கைவிடப்படார், ஒரு பாவமும் செய்யாதவர்கள தெய்வம் காப்பாற்றும்.' என்று மனதுள் சொல்லிக் கொண்டிருந்தாலும் ஏனோ பார்வதியம்மாளோடு உறுதியாகப் பேசி வாதிட அவர் மனம் ஏவவில்லை! மனஉறுதி கொஞ்சம் கொஞ்சமாக குலைந்துதான் போயிற்று! மனஉறுதி குலைந்து என்னதான் செய்வது? கடவுளே நீ தான் துணை! உன் சித்தப்படி எல்லாம் நடக்கட்டும்! அவர் தனக்குள் சொல்லிக் கொண்டார்.

சிவத்தாரின் மகனும் வெளிநாடுதான். அவன் போனபின் அவர் பாடு செல்வாக்குத்தான். என்றாலும் அவர் மகன் அனுப்பும்போது அவர் மனம் என்ன அவரின் மனைவியின் மனமும்தான் பெரிதாக மகிழ்வதில்லை! வெளிநாடு போனவர்களுக்குத்தான் தெரியும். அங்கே அவர்கள் படும்அவலம்! ஆணும் பெண்ணுமாக உழைத்தால்தான் அங்கே சமாளிக்கலாம். வரிவிதிப்பு மிக்க மோசம். சம்பளத்தில் அரைவாசி அந்தவரி இந்தவரி என்று போய்விடும். என்ன தேவைக்கும் கடன் வேண்டலாம். ஆனால் சம்பளத்தில் வட்டியோடு சேர்த்து வெட்டி விடுவார்கள். சொற்ப காசுதான் மீதமாக கிடைக்கும்! அந்தப் பணத்தில்தான் தங்கள் பெற்றோரையும் வீடு வாசல் நிலபுலன்களையும் பாதுகாக்க வேணும் என்று ஏதோ கஸ்ரப்பட்டு அனுப்புகின்றார்கள். அதற்கே ஆபத்து நிகழ்ந்தால் எப்படி நிம்மதியாக இருக்கவேலும்! அதுகள் பாவம் பனி குளிருக்க இரவு பகலாக மேலதிகமாக வேலை செய்து, ஓய்வு ஒழிச்சலின்றி பாடுபட்டு நிம்தியான நித்திரை கூட இல்லாமல் திரிந்து எந்த சுகங்களுமில்லாமல் இயந்திர வாழ்க்கை வாழ்ந்து அனுப்புகின்ற பணத்துக்கு ஆபத்து என்றால் எப்படிப் பொறுத்துக் கொள்ள ஏலும்.

சிவத்தாருக்கு இப்போதெல்லம் மூட் நல்லாகவே இல்லை! முன்னர் போல் எதையும் மனதைப்பறித்து ஆழ ஊன்றி படிப்பதில்லை! எதையும் பிடிக்கவில்லை, எதையோ பறிகொடுத்தவர் போல்.... பறி கொடுக்கப் போகிறவர் போல், எங்கேயாவது வெறித்துப் பார்த்துக் கொண்டிருப்பார்! சிந்தனையில் ஆழ்ந்திடுவார்.

சாமி அறையில்தான் அதிக நேரம் செலவழிப்பார். பார்வதியம்மாளும் அங்கேதான் அதிக நேரம் மினக்கெடுவாள்! அந்த அறையில் அகல் விளக்கு எப்போதும் எரிந்து கொண்டிருக்கும் ஊதுபத்தி சாம்பிராணி வாசனை இடைக்கிடை என்றாலும் மணம் பரப்பும்! எல்லாத் தெய்வங்களின் படங்களும் கொலு வீற்றிருக்கும்! எந்தத் தெய்வத்திற்கும் வேண்டுதல்? எல்லாக் கடவுளரும் சேர்ந்து எம்மைக் காப்பாற்றட்டும் என்ற எதிர்பார்ப்போ!

அன்றொரு நாளிரவு சாப்பாட்டறையில் சாப்பிட்டுக் கொண்டிருந்தார் சிவத்தார். அறுசுவை உணவை வழமைபோல் பரிமாறிக் கொண்டிருந்தார் பார்வதி. 'ஏனப்பா இவ்வளவு பெருசா சமைத்துப் போட்டிருக்கிறாய். நானொரு சாப்பாட்டுக்காரனெண்டு நீயும் பெரிய ஏற்பாடு! விடிஞ்சா நாய்க்கும், காகத்திற்கும்தான் நல்ல விருந்து! சனங்கள் தின்னக் குடிக்க வழியில்லாம மெத்த அவலப்பட்டுத் திரியக்குள்ள நீ இப்படி அவிச்சு அவிச்ச கொட்டுறது சரியே?'

'ஒரு சுண்டு அரிசிதானே போட்டனான், கறிவகைகள் எல்லாம் காக்கிலோவாகத்தானே வாங்கினனான், இதுலையும் குறைச்சிக் காய்ச்சினால் பார்க்கிறவங்கள் என்ன நினைப்பாங்கள். பரிகாசம் பண்ண மாட்டங்களே! எப்பவும் இன்னொருவருக்கு வைச்சுக் கொண்டு தான் தின்ன வேணும், அதுக்கேற்ற மாதிரித்தான் சமைக்க வேண்டும் தெரிஞ்சுதே!'

'நீதான் சொல்லுவாய், பிள்ளையிர காச வீணாகச் செலவழிக்கக் கூடாது, அதுகள் என்ன பாடுபட்டு அனுப்புதுகள் எண்டு! இப்படி சொல்லிப் போட்டு இப்பிடி ஒவ்வொரு நாளும் கொட்டிக் கொண்டு இருக்கிறது சரியே!

நீ என்ன சொன்னாலும் கேட்கமாட்டாய், அம்மாட்டப் பழகின பழக்கத்தைச் செய்து கொண்டுதான் வருவாய். நீங்கள் மாறமாட்டீங்கள், உங்களத்திருத்தேலாது! எல்லாம் ஒரு மனநோய்தான்! உனக்குத் தெரியுமா? உலகத்தில் நாலில் ஒன்றுக்கு மனநோய்!' 'ஏன் என்ற தாய் தகப்பன இழுக்கிறீங்க! எல்லோருக்கும் விசர்பட்டம் சூட்றீங்க!' இவர்கள் வாய்த்தர்கப்பட்டுக் கொண்டிருக்கும் போது திடீரெண்டு மின் விளக்குகள் எல்லாம் அணைந்தது! எங்கும் இருள் மயமானது இவர்கள் சண்டையும் முடிவு கண்டது. சிவத்தார் மெல்ல எழுந்து தட்டுத் தடுமாறி நடந்து திண்ணை வாசலில் நின்று வெளியே எட்டிப் பார்த்தார். எங்கும் இருள் மயம். அதைத் தொடர்ந்த அவலச்சத்தம்... குய்யோ முறையோ என அழுகுரல்கள் கேட்டன! அதி தூரத்தில் இல்லை மூன்றாவதோ நான்காவதோ வீடாக இருக்கலாம்! அதைத் தொடர்ந்து வெடிச்சத்தமொன்று கேட்டது. காதைப்பிளந்தது! துவக்கு வெடிதானது! அழுகைச் சத்தம் கூக்குரல் அதிகமாகியது.

பாவம் வயதான இவர்கள் இரண்டு பேரும் பெரிதாக கதிகலங்கித்தான் போயினர்! செய்வதறியாது திகைத்துப் போய் நின்றனர்! சாமியறைக்குப் போய் சிவசிவா என்று கதறியழுதனர். இவர்களால் செய்ய முடிந்தது இதுதான். அன்றிரவு முழுவதும் மின் இனைப்பு துண்டிக்கப்பட்டே இருந்தது. அழுகுரல்களும் கேட்டுக்கொண்டுதானிருந்தது! விடியுமட்டும் சிவத்தாருக்கும் பார்வதிக்கும் நித்திரையே இல்லை. எப்படி வரும் நித்திரை! கடவுள் நாமத்தை ஜெபிப்பதைத் தவிர வேறொன்றும் செய்யத் தோன்றவில்லை அவர்கட்கு!

விடிந்ததும் விடியாததுமாக பார்வதியம்மாள் புறப்பட்டாள் என்ன நடந்தது என்று அறிவதற்கு! சிவத்தார் வாசலையே பார்த்துக் கொண்டு நின்றார், மனைவி கொண்டு வரும் செய்தியை எதிர்பார்த்து! மனைவி கொண்டு வந்த செய்தியோடு கதிகலங்கிப் போனார் அவர் 'இரவு என்ன நடந்ததாம் தெரியுமோ! பாக்கியம் வீட்ட போயிருக் கிறாங்கள் கள்ளர், கள்ளர் என்ன கொள்ளைக்காரர்! இவங்களிட்ட துவக்கு இல்லையாம், கத்தி வாள் பொல்லுகள்தான் வைச்சிருந்தவங்களாம்! இவர்கள் நகையத்ததான் அள்ளிக் கொண்டு போகத்தான் வந்தவங்களாம்! ஆக்களக் கடத்தி காச கேக்கிறவங்கள், ரெலிபோனில் மிரட்டி பணம் பறிக்கிறவங்கள் இப்படிப் பலரகம்! எங்களிட்ட எந்த ரகம் வரப்போகுதோ, நாமென்ன செய்யப் போறமோ அந்தக் கடவுளுக்குத்தான் தெரியும்! எங்கட முன்சந்தி சென்றியில எவ்வளவு ஆமி பொலிசெல்லாம் நிக்குது இந்தச் சத்தமெல்லாம் கேக்காமலா இருக்கு! பேசாமல் இருக்கிறாங்கள்! எல்லாரும் சேர்ந்து தான் நாடகம் நடக்குது...'

'அட! பாக்கியம் வீட்ட என்ன நடந்ததெண்டு சொல்லாம என்னென்னவோ புலம்புறாய்' 'என்ன நடந்திருக்கும் எண்டு உங்களுக்குத் தெரியாதா? அதுகள் பாவம் எல்லாம் பொம்புளைகள், ஆம்பிளத்துணையே இல்லாததுகள், சின்னப் பொடியன்கள் தான் நிக்கிறாங்கள், இவங்கள் போய் துவக்கக் காட்டி பட்டாச வெடிக்கப் பண்ணி ஆயுதங்களைக் காட்டி மிரட்டிப் பிரட்டி எடுத்து உள்ள நகையெல்லாம் பறிச்செடுத்துக் கொண்டு போயிற்றாங்களாம், அறுவான்கள்! கடவுளும் பார்த்துக் கொண்டிருக்கிறார், நீங்களும் பேசாம இருங்க. ஐயோ கடவுளே! நீதான் காப்பாற்று! என்ர புள்ள ஒய்வு ஒளிச்சலில்லாமல் பனிகுளிருக்க கிடந்து பாடுபட்ட பணம் எல்லாம் பாழ்பட்டுப் போறதே!' அவள் புலம்பிக் கொண்டே இருந்தாள்! கணவன் மனதுக்குள் வெதும்பிக் கொண்டிருந்தார்! அடுத்தது நமக்குத்ததான் என்ற பயம் பிடித்தாட்டியது!

'இதுகள் தின்ன வழியில்லா விட்டாலும் வெளியில வெளிக்கிட்டால் உள்ளதெல்லாம் போட்டுக்காட்டி குலுக்கிக் கொண்டு மினிக்கிக் கொண்டு தங்கள விட்டால் ஆள் இல்ல எண்ட ஆகவும் தான் பவர் காட்டிக் கொண்டு கெப்பர் குணத்துல திரியுதுகள். இப்பிடித் திரியிறத்துகளுக்கு இப்பிடி எல்லாம் நடக்கும் தானே'.

'ஒமோம் நீங்கள் ஒவ்வொரு ஆட்களுக்கும் ஒவ்வொரு கதை சொல்லிப் போடுவியள். நாளைக்கு உங்களுக்கு ஒண்டு நடந்ததாத்தான் தெரியும் உங்காத்தையும் எங்காத்தையும்'.

அன்று பகல் அதே வீட்டில் ஆரவாரமாய் இருந்தது. பகல்தானே, பார்வதியும் பயமில்லாமல் அதே வீட்டிற்குப் போனாள் சிரத்துக் கொண்டுதான வந்தாள்.

'கேட்டிங்களே கதையை. அவங்கள் கொள்ளையடிச்ச நகையெல்லாம் விட்டெறிஞ்சி போட்டு ஏசிப்போட்டு போறாங்கள்.' 'ஏனாம்'. 'எல்லாம் கிலிற்று நகையாம். தங்கத் தண்ணி துவைச்சதாம். தங்களை ஏமாத்திப் போட்டாங்களாம் என்றுதான் பெண்டுகளெல்லாம் உழைக்கிறிங்க, வேலைக்குப் போறிங்க ஏன் தங்க நகை போடல்ல என்ற கத்திப் பேசிப் போட்டு போயிற்றாங்கள்'

'இனி ஒறிஜினல் தங்கப் பவுண் போட்ட ஆட்களைத் தேடித் திரிவாங்கள். எங்களைக் காட்டிக் குடுக்கவோ ஆட்கள் இல்லை. என்ற பரமேசா கோணேசா நீதான் காப்பாற்று.'

'அதுதான் வயது போனதிற்குப் பிறகும் உனக்கேன் நகைகள் என்று எப்பவோ துவக்கம் நான் சொல்லிக் கொண்டு வந்தநான். கேட்டால்தானே.' 'ஆ! பாருங்களேன் அவர்ர கதையை! உங்களோட இத்தனை வருஷமா சீவிச்சு என்னத்தக் கண்டனான். ஒரு காதுத் தோடெண்டாலும் செய்து போட்டநீங்களே! உங்கட உழைப்பில்! என்ர பிள்ளைகள் உழைக்கத் துவங்கின பிறகெல்லே நகையெண்டு கண்டநான்! ஒரு நல்லது கெடியதுக்கு ஆனமான நகையில்லாமல் போக வெட்கப்பட்டுக் கொண்டிருந்தனான். இப்பதான் நானும் ஒரு மனுஷியாகச் சீவிக்கிறன்! இப்ப என்னடா எண்டா உனக்கென்னத்துக்கு நகையெண்டு கேக்கிறீங்களோ?'

'நீயேனப்பா இப்ப சண்டையாக்கிறாய்? நம்மட சொத்துக்களைப் பாதுகாக்கிற வழி என்ன எண்டதுக்காகத்தான் அப்பிடிக் கதைச்சனான். இப்ப இந்தக் கள்ளரிட்ட இருந்து நாம தப்புற வழி என்ன. அதைப் பற்றி யோசி கதை! நாநென்ன நெடுக நகைகளைப் போட்டு பவர் காட்டுறநானே! காதுத் தோட்டோடதான் திரியுறநான்! அப்ப எங்கதான் இவ்வளவு நகைகளையும் ஒழிச்சு வச்சிருக்கிறாய்!' 'அத ஆருக்குச் சொன்னாலும் உங்களுக்கு மட்டும் சொல்ல மாட்டன். நீங்க ஒரு சாதி ஆள்! அவங்கள் வந்தவுடனே தூக்கி குடுத்துப் போட்டு நிப்பீங்கள். ஆனா ஒண்ட மட்டும் சொல்லுவன். அது அலுமாரிக்குள்ளயோ பெட்டிக்குள்ளயோ மட்டும் இல்ல.'

அடுத்த நாள் பகல் நேரம் கொஞ்ச இளைஞர்கள் கூடிக் கொண்டு வந்தார்கள். அவர்கள் தெரிந்த பொடியள்தான். இந்தத் தெருவில்தான் குடியிருப்பவர்கள். அவர்களைக் கண்டதும் இவர்கள் இருவரும் வரவேற்று இருக்கச் செய்தனர்.
அவர்களில் ஒருவன் கடைக்கார மணியத்தார்ர மகன்தான் பேசினான். 'ஐயா, இப்ப எல்லா இடமும் நடக்கிற களவுகள் கொள்ளைகளப் பற்றி உங்களுக்குத் தெரியும்தானே, எல்லோரும் பயந்து போய் இருக்கிறதால ஒரு பிரயோசனமும் இல்ல! பொலிசுக்குச் சொன்னாலும் கவனிக்கிறாங்களில்ல! எங்கள நாங்களேதான் பாதுகாக்க வேணும்! ஒற்றுமையா எல்லாரும் சேர்ந்து ஒரு நடவடிக்கை எடுக்க வேணும்...!'
'கட்டாயம் நீங்கள் இளந்தாரிகள் எல்லோரும் சேர்ந்துதான் ஒரு நடவடிக்கை எடுக்கவேணும் தம்பிமார்! நல்ல யோசனையோடுதான் வந்திருப்பீங்க, என்ன செய்யப்போறீங்க சொல்லுங்க!' சிவத்தார் ஆவலாக கேட்டார்.
'நாளையில் இருந்து வீட்டுக்கு ஒருவராகச் சேர்ந்து இரவில காவல் இருக்கப்போறம்! ஏதும் நடந்தது எண்டால் சத்தம் போடுங்ங காணும், நாங்கள் ஓடிவந்து பிடிச்சுப் போடுவம்!'
'நல்ல முயற்சிதான், உங்களப் பாராட்டுறன்! இப்ப நாங்கள் என்ன செய்யவேணும் உங்களுக்கு?'
உங்கட வீட்டில இப்ப இளம் ஆக்கள் ஒருவரும் இல்லையே! நீங்க ஒரேஒரு சின்ன உதவி மட்டும் செய்யுங்க, உங்கட தெருப் படலைக்கு முன்னால லைற் ஒண்டு போட்டுவிடுங்க, உங்கட வீடுதான் முதல் வீடு. உங்களத் தாண்டித்தான் வருவாங்கள், நாங்கள் மறைஞ்சு நிண்டு கவனிக்க வசதியாயிருக்கும்.!'
'ஓ உடனடியாப் போட்டு விடுறனே கன்றட்பவர் பல்ப்ப!' சிவத்தார் மிக உற்சாகமாகப் பதில் சொல்லி வழியனுப்பி வைத்தார். பார்வதிக்கு உச்சி குளிர்ந்தது! இருவருக்கும் மனதில் அமைதி பிறந்தது. கடவுள் ஒரு வழி காட்டாமலா விடுவார்.
அடுத்த நாளிலிருந்து இரவு ஒன்பது மணிக்குப் பிறகு தெருப் பொடியள் எல்லாம் ஒன்றுகூடி ஊர்காவல் படையாக மாறி காவல் கடமையில் ஈடுபட்டனர்.! இரவு ஒன்பது பத்து மணியளவில் படலையிலே தட்டி குரல் கொடுத்துவிட்டுப் போவர்! யாமிருக்கப் பயமேன் என்று எமக்கு தென்பூ ட்டுவது போலிருக்கும்! பதினொரு மணிபோல் பெரிய சுடுதண்ணிப் போத்தலில் நிரம்ப தேனீர் போட்டு கூப்பிட்டுக் கொடுத்துவிட்டு பார்வதி படுக்கைக்கு போயிடுவாள். நிம்மதியான தூக்கம் இருவருக்கும்! சில நாட்கள் நிம்மதிப் பெருமூச்சோடு மன அமைதியோடு காலம் கடந்து கொண்டே சென்றது.

ஆனால் அந்த மன அமைதி நீடிக்கவே இல்லை! சாமமிருக்கும். வாகனமொன்று இரைந்து கொண்டு போகும் சத்தம் கேட்டது! அதைத் தொடர்ந்து வெடிச் சத்தமும் கேட்டது! தம்பதிகள் இருவரும் ஆழ்ந்த உறக்கத்திலிருந்து விழித்துக் கொண்டனர்! என்ன நடந்ததோ என்று கலவரப்பட்டனர். கத்திப் பேசும் சத்தமும் திமுதிமு என்று ஓடும் சத்தமும் தகர வேலிகளில் அடித்து ஒலி எழுப்புவதும் கேட்டுக் கொண்டே இருந்தது! விடியுமட்டும் இவர்களின் தூக்கமும் கெட்டது! என்ன நடந்திருக்கும்!

விடிந்த பின்பு பார்வதியம்மாள் செய்தியறிந்து வர புறப்பட்டாள். ஆனால் படலை தாண்ட முடியவில்லை! தெருவெல்லாம் இராணுவம்! அதன் ஆணவம்! வீடெல்லாம் தேடுதல் வேட்டையாம்! யாரும் வெளியேற முடியாது, வெளியிலிருந்து எவரும் உள்ளே வரக்கூடாது!
இவர்கள் வீட்டுக்கும் வந்தனர்! இளம் மட்டங்கள் இல்லை என்று தெரிந்ததும் அவ்வளவாக மினக்கெடவில்லை. வீட்டை, அறைகளை, வளவை மேலோட்டமாகப் பார்த்துவிட்டு இரண்டொரு கேள்விகளைக் கேட்டுவிட்டு அகன்றுவிட்டனர்.
வரும்போது 'ஒக்கொளங்காவ கீதெனக் இன்னவத?' (உங்கள்ள எத்தன பேர் இருக்கிறாங்க) என்று கேட்டுக் கொண்டு வந்தனர்! 'மமய் பவுள வித்தறய் இன்ன'. (நானும் மனைவியும் மட்டும்தான் இருக்கிறம்.) இந்தப் பதிலோடு தம்பதிகளுக்கு தொந்தரவு இல்லாமல் போய்விட்டனர்.
அன்று பகலுக்குப் பின்னர்தான் நடந்த விடயம் தெரியவந்தது. திடீரென்று ராணுவ கவசவாகனமொன்று ரோந்து போயிருக்கிறது! காவல் படை இருப்பதாக துப்புக் கிடைத்ததோ என்னமோ! கவச வாகனத்தைக் கணடதும் காவல் கடமையில் நின்ற பொடியள் விழுந்தடித்துக் கொண்டு ஓடியிருக்கிறார்கள்! இவர்கள் வேட்டுகளைத் தீர்த்திருக்கிறார்கள்! இதன் பிரதிபலிப்புத்தான் இந்தத் தேடுதல் வேட்டை! ஊரையே கலக்கி பிரட்டி எடுத்துப் போட்டார்கள்! கொஞ்சப் பொடியளைப் பிடித்துப் போய் விட்டார்கள். அவர்களை மீட்க பெற்றோர் கண்ணீரும் வியர் நீரும் சிந்த அலைக்கழித்தனர்! அந்தப் பகுதி அலங்கோலப்பட்டது. குழம்பிப் போனது! அமைதியிழந்தது!.
சிவத்தாரும் மனைவியும் சில நாட்கள் இருந்த அமைதியை இழந்து அவதிப்பட்டனர்! 'இனி என்னப்பா செய்யுறது!' தலையிலே கையை வைத்துக் கொண்டு இடிந்து போய் உட்கார்ந்து விட்டாள் பார்வதி! அவரும் நாடியிலே கையை வைத்துக் கொண்டு கவலையில் மூழ்கி விட்டார்! பாவம்! அவர் எந்தப் புத்தகத்தையும் எடுத்துப் படிக்க முயவில்லை. எதிலும் மனம் செல்லவில்லை!
பீதியான செய்திகள் நாளும் பொழுதும் வீதியெங்கும் வருவதாயிற்று! பாவம் பார்வதியும் கணவனும் கொஞ்சம் வயதானாலும் கடைசிக் காலத்தில் செல்வத்தோடு செல்வாக்கோடு நிம்மதியாக இருக்கலாம் என்று பார்த்தார்கள்! ஆனால் இந்தச் செல்வம்தான் நிம்மதியை செல்லாக் காசாக்கிவிட்டது!
'இரண்டு பேரும் நித்திரையில்லாமல் நிம்மதியில்லாமல் யோசிச்சி யோசிச்சே கிட்டடியில சீவன விட்டுடுவம் போல கிடக்கே! உங்களுக்கொண்டெண்டா நான் உயிரோட இருப்பனா! அல்லது நான் கண்ண மூடினா நீங்கதான் சீவிக்க ஏலுமா...!' பார்வதியம்மாள் புலம்பினார்!
'நீ ஏனப்பா இல்லாததையும் பொல்லாததையும் நினைச்சி அந்தப் பயத்தாலேயே சாகப் போகிறாய் போல கிடக்கு! நாம கடவுளுக்கு விரோதமில்லாமல் மனச்சாட்சிக்கு மாறில்லாமல் நேர்மையா நடந்த நாங்கள். அதுதான் ஆண்டவன் இற்றை வரைக்கும் ஒரு பழுதில்லாமல் காப்பாற்றிக் கொண்டிருக்கிறான்! இனிமேலும் காப்பாற்றுவான் என்று நம்பியிருப்பம்!' சிவத்தார் படித்த புத்தகங்களில் பெற்ற அறிவைக் கொண்டு பேசினார்! 'அப்ப இப்ப சனங்கள் எல்லா விதத்தாலயும் கஸ்ரப்படுதுகள்

உயிரவிடுதுகள். இப்படி எத்தனையோ! இதெல்லாம் பாவம் செய்த சனங்களா?' அவள் யதார்த்த அனுபவத்தோடு பேசினாள். இந்தக் கதைக்கு அவர் வாய் பேசாதிருந்தார்! பார்வதியம்மாள் மீண்டும் பேசலானாள்' 'எங்கட சொந்தக்காரர் இந்த அயலல எத்தின குடியிருக்கு! வீட்டுக்கு வீடு குமருகள் இளந்தாரிகள் எல்லாம் இருக்கு! ஒருவர் எண்டாலும் பாவம் அதுகள் வயது போனதுகள் தனியக் கிடந்து பயந்து போய் இருக்குதுகள் எண்டு இரவில ஒரு ஆள எண்டாலும் அனுப்ப மனம் வருகுதில்ல. அவையளுக் கெல்லாம் பொறாமை' எங்கள நம்பியே பிள்ளைகள வெளிநாடு அனுப்பினவை எண்டு கேப்பினம். இன்னு மின்னும் நாங்கள் அவையளுக்கு எவ்வளவு உதவிகள் செய்து போட்டம். வாய்விட்டுக் கேட்ட என்ன உதவியை நாங்கள் செய்யல்ல! அவங்கள் பெருசா எதிர்பார்க்கிறாங்கள்! ஆயிரக் கணக்கில இல்ல, காணி வேண்டத்தா! வீடு வேண்டத் தா! வெளிநாடு அனுப்பத் தா! எண்டு' பெருவாரியாக எதிர்பார்க்கிறார்கள். அந்த அளவு குடுக்க இல்ல எண்டுதான் ஆத்திரப்படுகிறாங்கள்! கள்ளர் வந்து எங்களுக்கு என்ன செய்து துலைச்சாலும் இவர்களுக்கு சந்தோசம்தான்! இவங்களுக்குத் தெரியுமே அங்க எங்கட பிள்ளைகள் படுகிற பாடு! ஹலோ எண்டா கிலோவில அனுப்பறவங்கள் எண்ட நினைப்பு! அதெல்லாம் இவங்களுக்கெங்க விளங்கப் போகுது. சொன்னாலும் நம்பாதுகள் எங்கள முனிஞ்சு கொண்டிருக்குங்கள்'.' பார்வதி பேசத்தொடங்கினால் இப்படித்தான் தரிப்பே இருக்காது. விடாமல் பேசிக் கொண்டே இருப்பாள்! பார்வதியை மேடையேற்றி பேச விட்டால் தான் தேர்தலில் வென்றுவிடலாம்! என்றும் அவர் எண்ணிப் பார்ப்பதுண்டு!

'பொறாமை உள்ளவர்களுக்கு எவ்வளவு கொடுத்தாலும் அண்டாது. எரிந்து கொண்டுதான் இருப்பார்கள். அந்த நெருப்பில எரிந்தே அழிவார்கள்!' சிவத்தார் படித்த திருக்குறள் கருத்தைத்தான் சொன்னார்! 'இனிக் கடவுள் நம்பிக்கையும் தன்நம்பிக்கையும்தான் நமக்குத் துணை! கடவுள் படங்கள்ள வர்ர மாதிரி நேரடியாக வந்து உதவி செய்யுறதில்ல! நல்ல மனுஷரைக் கொண்டுதான் அல்லது எங்களக் கொண்டுதான் நிறைவேற்றி வைப்பார்! சும்மா பயந்து சாகாத. கடவுளே துணை! துணிவே துணை!' 'உங்களுக்கெங்கப்பா துணிவிருக்கு? பூச்சி பூ ரானக் கண்டு அடியயப்பா எண்டால் காலக் கதிரைக்கு மேல தூக்கி வைச்சுக் கொண்டு நிப்பீங்கள்'. அவள் பேச்சைக் கேட்டு அவர் சிரித்தார்.

'நாங்கள் அவ்வளவா பயப்படத் தேவையில்ல. நாலு பக்கமும் சுற்று மதில் இருக்கு. மேலுக்கு கண்ணாடித் துண்டு போட்டிருக்கு. வெளி இரும்புக் கேற்றுக்கு உள்ளால ஆமப்பூ ட்டால பூ ட்டிப் போட்டுத்தான் படுக்கிறநாங்கள். என்ன பயம்? அதுக்கு மேல எண்டா ஆண்டவன் பாத்துக் கொள்ளுவான்! அவள் தனக்குத்தானே சமாதானம் சொல்லிக் கொண்டாள்'.

அவர்கள் என்னதான் தங்களுக்குத் தாங்களே தென்பூ ட்டிக் கதைச்சாலும் அமைதியில்லாமல்தான் நாட்களைக் கடத்தினர்! ஒரு நாள் தான் கேள்விப் பட்டதாக புதுக்கதை வந்து சொன்னாள் பார்வதி. 'இப்ப புது மாதிரி எல்லே களவு நடக்குதாம். வேற பக்கங்கள்ள இருந்து கதை வருகுது. இரகசியமா வந்து ஏதோ பொடியோ மருந்தோ கொண்டுவந்து அறைக்குள்ள அடிச்சுப் போட்டு ஆக்கள் பிரேதம் மாதிரி மயங்கிக் கிடக்கக்குள்ள தாங்கள் நினைச்சத எல்லாம் செய்து போட்டுப் போயிடுவாங்களாம். இது எப்படி இருக்குது! இது காலச் சுத்தின பாம்பு கடிக்காம விடாது!'

'ஒரு பயந்தவன் இருந்தாக் காணும்! பத்துப் பேர பயந்தாங்கொள்ளி ஆக்கிடுவான். நீ ஒவ்வொரு கதையாச் சொல்லி என்னக் கோழையாக்கிப் போடுவாய்!' 'இல்லாட்டி இவர் பெரிய வீரன்! எத்தின பேரை அடிச்சி விழுத்தினனீங்கள்!'

'நாம் எதை நினைத்து கூடுதலாக பயந்து கொண்டிருக் கிறோமோ, அது தானாகவே நமை வந்து பிடித்துக் கொண்டு விடும்!' அன்று இரவு வழமை போல அந்த வயோதிப தம்பதிகள் வெளிவாயில், வீட்டுவாயில் எல்லாம் ஆமைப்பூ ட்டால் பூ ட்டி பந்தோபஸ்து நடவடிக்கைகளை எல்லாம் மேற்கொண்டுவிட்டு சாமி அறையிலும் மன்றாடிவிட்டு விளக்குகளையும் அணைத்துவிட்டு படுக்கைக்குப் போயினர்.

'இப்ப அவங்கள் வந்தா என்னப்பா செய்யுறது!'. 'இப்ப எல்லே கடவுளக் கும்புட்டநீர்? உமக்குக் கடவுள் நம்பிக்கையே இல்ல! தெய்வ நம்பிக்கை இருந்தா ஏன் பயப்பட வேணும்! கடவுளே துணை! துணிவே துணை!' 'நான் பயப்பட இல்ல! பயப்பட மாட்டன்!' அவர்கள் ஆழ்ந்த உறக்கத்தில் இருந்தனர். திடீரென்று வெடியோசை ஒன்று கேட்டது. வெளிவாயில் இரும்புப் பூ ட்டு பிரிந்தது. அடுத்த வெடி! வீட்டுக் கதவும் தானாகவே திறந்து கொண்டது! திமு திமு என்று ஆர்ப்பரித்துக் கொண்டு நாலைந்து பேர் உள்ளிட்டனர்! இவர்கள் திணறிக் கொண்டு விழித்தெழுந்தனர்! அவர்களுக்கு முன்னால் வந்து நின்றனர் அஞ்சியபடி! பரிதாபத்திற்குரியவர்களாக மெத்தப் பவ்வியமாக வந்து நின்றனர்! ஓநாய்களின் முன்னால் ஆட்டுக் குட்டிகள் இப்படித்தான் நின்றிருக்கும்!

'ஐயோ ராசாக்கள் நாங்கள் வயது போனாக்கள்! ஒருவர்ர துணையும் இல்ல! எங்கள ஒண்டும் செய்து போடாதீங்க!' பார்வதி கையெடுத்துக் கும்பிட்டாள். ஒருவன் கடுந்தொனியில் பேசினான். அவனுக்கு இளம் வயதுதானிருக்கும். முரட்டுத் தோற்றம். ஆஜானுபாகுவான தேகம்!

'நீங்கள் ஒண்டுக்கும் பயப்படாதேங்க. எங்களுக்கும் தாய் தகப்பன் இருக்கு. நாங்கள் மோசமா நடக்க மாட்டோம்.! நீங்கள் இருக்கிறத குடுத்தீங்கள் எண்டால் நாங்கள் பேசாம போயிருவம். தகராறு பண்ணினீங்கள் எண்டால்தான் உங்களுக்கு ஆபத்து! உங்கட பிள்ளைகள் வெளிநாட்டில இருக்கிறது எங்களுக்கெல்லாம் தெரியும்! அவங்கள் அனுப்பிக் கொண்டே இருப்பாங்கள்! நீங்கள் நிம்மதியாச் சீவிச்சுக் கொண்டே இருப்பிங்கள். உங்கட வங்கிக் கணக்கில எத்தனை லட்சம் இருக்குதெண்டும் எங்களுக்கு தெரியும்! இப்ப நீங்க வீட்டுக்குள் ஒழிச்சு வைச்சிருக்கிற நகைய, காச தந்தாக் காணும்!' வேறொருவன் தொடர்ந்து பேசினான். இவன் ஒல்லியாக நெடுத்து வளர்ந்திருந்தான். குரலும் கீச்சுக் குரலாக இருந்தது. 'நாங்கள் எங்களுக்காக இந்தக் காசக் கேக்கல்ல. பயங்கரவாதிகளிட்ட இருந்து நாட்டையும் உங்களையும் பாதுகாக்கிறதுக்குத்தான் கேக்கிறம்'.

சிவத்தார் மனைவியின் காதோடு கிசுகிசுத்தார்' 'ஒழிச்சு வைச்சிருக்கிற நகையெல்லாம் எடுத்துக்குடும்' நாம

இப்போதைக்கு உயிர் தப்பினாக் காணும்!' பார்வதி மந்திரத்தால் கட்டுண்டவள் போல குசினிப் பக்கம் போனாள். எல்லோரும் வியப்போடு பார்த்துக் கொண்டிருந்தனர். சிவத்தாருக்கும் ஒன்றும் புரியவில்லை. ஒருவேளை அடுக்களைக்கதான் ஒழிச்சு வெச்சிருப்பாள் நகைகளை எல்லாம் என்று நினைத்துக் கொண்டார்.

எல்லோர் கருத்தும் அவர் மீதே இருந்தது.... பாத்திரங்களை பேணிகளை உருட்டும் சத்தம் கேட்டுக் கொண்டே இருந்தது. சற்று நேர தாமதத்தின் பின் சமையலறையிலிருந்து வெளிப்பட்டாள். மெல்ல மெல்லத்தான் நடந்து வந்தாள். இரண்டு கைகளையும் பின் கட்டாகக் கட்டியிருந்தாள். அவர்கள் முன்னால் போய் நின்றாள். அவர்கள் ஆயுதங்களை நீட்டிப் பிடித்துக் கொண்டிருந்தனர். நல்ல எதிர்பார்ப்போடு புன்னகை பூத்திருந்தது.

பார்வதி பின்புறமாகக் கட்டிய கையோடு எல்லோரையும் நிமிர்ந்து பார்த்தாள். 'இப்ப என்ன உங்களுக்கு வேணும். காசும் நகையும்தானே! இந்தா தாறன்...' என்று சொல்லிக் கொண்டே பின் கட்டைத் தளர்த்தினாள். இரண்டு முஸ்டியிலும் நிரம்பி வைத்திருந்த மிளகாயத் தூளை எல்லோர் முகத்தையும் நோக்கி வீசினாள். அவர்கள் மரணஓலம் எழுப்பினர்! அலறினர்! ஆயுதங்களையும் வீசியெறிந்தனர்! இப்போது சிவத்தாருக்கும் துணிவு பிறந்து விட்டது. வாலிப மிடுக்கு வந்தே விட்டது! அருகிலிருந்த தும்புத் தடியை எடுத்து சுழற்றினார் தாறுமாறாக!

அவர்கள் அடிதாங்கமாட்டாமல் கத்திக் குழறிக் கொண்டே ஓடிக் கொண்டிருந்தனர்!

*( யாவும் கற்பனை)*

# ஓவியரின் இல்லத்தில் ஓவியக் கண்காட்சி

# கட்புல நர்த்தனம்

கிழக்குப் பல்கலைக்கழக சுவாமி விபுலானந்தா அழகியற் கற்கைகள் நிறுவகத்தின் கற்புல தொழில்நுட்ப கலைத்துறையின் முதல் தொகுதி மாணவர்களான **வேதாரணியம் கோகுலரமணன், கணேசமூர்த்தி ரினுஜா** ஆகிய இருவர்களினதும் **ஓவிய சிற்பக் கண்காட்சி (Painting & Sculpture Exhibition)**
29,30-11-2012, 01,02-12-2012, ஆகிய நான்கு தினங்களும் மட்டக்களப்பு இல - 09 கொலட்லேனில் அமைந்துள்ள அரங்க ஆய்வு கூடத்தில் நடைபெற்றது.

அரங்க ஆய்வுகூடம் அமைந்திருப்பது மட்டக்களப்பின் பிரபல ஓவியரும் பேராசிரியர் சித்திரலேகா மௌனகுருவின் தந்தையும், பேராசிரியர் சி.மௌனகுருவின் மாமனாருமான அமரர் P.வைரமுத்து கணபதிப்பிள்ளை அவர்களின் இல்லமாகும். இதுவரை மண்டபங்களில்,அரங்குகளில் ஓவியக் கண்காட்சியை, வரிசையாக சென்றுபார்த்தவர்களுக்கு ஒரு வீட்டில், வீட்டு அறைக்குள் காட்சிப்படுத்தப்பட்ட முதல் ஓவிய கண்காட்சியாக இது அமைந்தது. அனைவரையும் கவர்ந்தது. ஓவியங்களுடன் மிக நெருக்கமாக நின்று, அதனுடன் கதைக்கவும், சம்பாஷிக்கவும் கூடிய ஒரு சூழ்நிலையில் மிக அழகாக காட்சிப் படுத்தப்பட்டிருந்த இவ் ஓவியக் கண்காட்சி 1950களில் மட்டக்களப்பின் பிரபல ஓவியராக திகழ்ந்தவரின் வீட்டில் நடைபெற்றது மேலும் சிறப்பாக அமைந்தது.

கிழக்குப் பல்கலைக்கழக சுவாமி விபுலானந்த அழகியல் கற்கைகள் நிறுவன விரிவுரையாளர் திரு.சு.சிவரெத்தினம் குறிப்பிடுவதுபோல் தமிழர்களிடத்தில், சிங்களவர்களிடத்தில், ஓவியம், சிற்பம் என்பவற்றில் புகழ்பெற்ற சனாதனன், சந்திரகுப்த தேனுவர போன்றவர்களிடம் ஓவியம், சிற்பம் பயின்று ஆனால் அவர்களுடைய எந்தவிதமான பாதிப்பும் இன்றி தங்களுக்கான படைப்பாக்கத்தில் ஈடுபட்டுக் கொண்டிருப்பவர்கள் வித்திலிருந்து முளைவிடுபோல் வகுப்பறைகளை விட்டு படைப்புலகுக்கு **கட்புலநர்த்தனம்** எனும் பெயருடன் பிரவேசிக்கிறார்கள் என ஓவியர்களை அறிமுகப் படுத்துவதைப்போல் புதிய சிந்தனைகளையும், தேடல்களையும் நோக்கிய இவர்களது ஓவியங்கள் மட்டக்களப்பின் நவீன ஓவியத்துறைக்கு வளம் சேர்க்கும் என்பது உறுதி.

- ஹஜேந்தினி

யோ.கர்ணனின்

# சேகுவரா இருந்த வீடு

## சிறுகதை தொகுதியை முன் வைத்து..........

## ஓர் அறிமுகம்.




ம.பா.மகாலிங்கசிவம்

**யோ.கர்ணனின் இரண்டாவது சிறுகதை தொகுப்பு சேகுவரா இருந்த வீடு! இவரது முதல் சிறுகதை தொகுப்பு தேவதைகளின் 'தீட்டுத்துணி.' எதிர்ப்பிலக்கிய வரிசையில் முதன்மைப்படுத்தக் கூடிய யோ.கர்ணன் யுத்த சாட்சியத்தின் நிதர்சனமானவர். இவரது எழுத்துக்களை எதிர்ப்பிலக்கியமாகப் பார்க்காமல் அதனுள் மறைந்திருக்கும் எதிர் மறையான உண்மையை தரிசிப்பவர்கள் யோ.கர்ணனின் மறுமுகத்தை உணர முடியும்.**

**ஆசிரியர்**

**1983** இனக் கலவரத்தின் பின்னரான ஈழத்துத் தமிழ் இலக்கியம் என்பது பெரும்பாலும் ஒரு பக்கசார்பானதாகவே உருவாகியிருந்தது. அல்லது வன்மறை வழியே உருவாக்கப்பட்டிருந்தது. அனைவருக்கும் பொதுவானதென நிர்ணயிக்கப் பட்டிருந்த எழுத்தாக்க முறைமையிலிருந்து திமிறி வெளிக்கிளம்ப முயன்றவர்கள் பல்வேறு நுட்பங்கள் மூலம் மௌனிக்கச் செய்யப்பட்டனர். சிவரமணி உயிர்துறந்தார். சேரன் புலம்பெயர்ந்தார்.

ஈழத்தில் ஒரு சார்பு இலக்கியங்கள் பெருகிக் கொண்டிருக்கப் புலம்பெயர் தேசங்கள் இதற்கு எதிர்ச்சார்பு இலக்கியங்களுக்குள் களம் அமைத்துக் கொடுத்தன. ஈழத்தில் எந்த வகையான எழுத்துக்கள் அச்சுறுத்தல்களுக்கும் உயிராபத்துகளுக்கும் உரியனவாக இருந்தனவோ அந்த வகையான எழுத்துக்களிலேயே புலம்பெயர் தமிழர்களிற் பெரும்பாலானவர்கள் ஈடுபட்டவர்கள் என்பது குறிப்பிடத்தக்கனவாகும்.

எல்லாமே கனவு மயமாகி மேய்ப்பர்கள் காணாமற் போய்விட்ட இன்றைய சூழ்நிலையில் தடுக்கப்பட்டிருந்த எதிர்ப்பிலக்கியங்கள் புதுவீறுடன் எழுச்சி பெற்று வருவதை அவதானிக்க முடிகிறது. அத்தகைய இலக்கிய படைப்பாளிகளுள் முதன்மைப்படுத்தி ஆராயப்பட வேண்டிய ஒருவராக யோ.கர்ணன் விளங்குகின்றார். நாலாங்கட்ட இறுதிப் போருக்குள் மூழ்கிப் போயிருந்தும் மூச்சடங்காமல் தெய்வாதீனமாக வெளிவந்தவர். யுத்தக் கொடூரத்தின் சாட்சியாக ஒரு காலை இழந்தவர். எனினும் தன்னம்பிக்கையையும் கலைத்துவத்தையும் இழக்காமல் சேகுவேரா இருந்த வீடு, தேவதைகளின் தீட்டுத்துணி ஆகிய இரு சிறுகதை தொகுப்புகளையும் தந்துள்ளார்.

இவற்றுள் சேகுவேரா இருந்த வீடு தொகுதியில் திரும்பி வந்தவன் தொடக்கம் இரண்டாவது தலைவர் வரை பதின்மூன்று சிறுகதைகள் வெளியாகின. இவற்றுட் பெரும்பாலானவை வன்னிப்போரின் இறுதிக் கட்டத்தில்

இரு பகுதியினராலும் நிகழ்த்தப்பட்ட பாதக செயல்களையும் சீர்கேடுகளையும் பதிவு செய்பவையாக உள்ளன. நூலின் தலைப்பாகவும் அமையும். சேகுவேரா இருந்த வீடு என்னும் சிறுகதை ஒரு கிராமப்புற வீடு. எவ்வாறு ரெலோ, விடுதலைப் புலிகள், இந்திய ராணுவம், ஆகியோரின் இருப்பிடமாக மட்டுமன்றி சித்திரவதைக்கூடமாகவும் விளங்கியது என்பதை சித்தரிக்கிறது. இங்கு வீட்டாரின் உரிமையின்றி வீட்டை அபகரித்தல், தமக்கு எதிரானவர்கள் மீது மேற்கொள்ளும் சித்திரவதை என்பவற்றின் மேற்கூறப்பட்ட 4 தரப்பினருமே ஒரே தட்டில் வைத்து நோக்கப்படுகின்றனர்.

அரிசி என்ற சிறுகதை முள்ளிவாய்க்கால் என்ற சிறுகதை முள்ளிவாய்க்கால் சார்ந்த சூழலில் தாயின் மரணம் கூட அடுத்த கணம் சாதாரண சம்பவமாகும். அவல நிலையை சித்தரிக்கின்றது. கஞ்சியையே நாளாந்த உணவாக கொள்ளும் தனது சகோதரிகளின் வலுவிழந்து போயிருக்கும் உடலைப் பார்க்கும் ஒருவன் அவர்களுக்கு கோழிஇறைச்சி சமைப்பதற்காக பக்கத்து தறப்பாளிலிருந்து இரண்டு கோழிகளில் ஒன்றை திருடி வருகின்றான். (அப்போது புலிகளிடமிருந்த விமானங்களின் எண்ணிக்கையை விட முள்ளிவாய்க்காலிலிருந்த கோழிகளின் எண்ணிக்கை குறைவு என்கிறார். கதை சொல்லி) ஆனால் சமைக்க அரிசி இல்லை. ஒரு சங்கிலி கொடுத்து ஒரு கிலோ அரிசி வாங்கும் சூழல் உமி கொட்டப்பட்டிருந்த இடத்திலிருந்து இரு நாட்களாக அரிசியை பொறுக்குகின்றனர். அரிசி பொறுக்குமிடத்தில் தமக்கை மேல் உரசும் இளைஞர் செல்லடி, புலிகளின் ஆள்பிடி என பல சோதனைகள். இறுதியில் சேர்த்த அரிசியைக் கொண்டு உணவு சமைக்க முற்படும்போது செல் விழுந்து அரிசி கிழைந்து கொண்டிருந்த அம்மா இறந்து போகிறார். மாமனும் அவனுமாக சாரத்தின் மூலம் தூக்கிச் சென்று புதைத்துவிட்டு வருகிறார்கள். அவன் கதை இவ்வாறு நிறைவடைகிறது.

"சரி நடக்கிறது நடக்கட்டுமென்று திரும்பி தரப்பாளுக்கு நடக்கத் தொடங்கினான். ஆராரோ எல்லாம் என்னன்னவோ கேட்டினம். இவன் ஒரு பதிலும் சொல்லவில்லை. தரப்பாளுக்குள் உள்ளே அங்கே இளைய தமக்கை அரிசியை கழுவிக் கொண்டிருந்தாள்.

இங்கே ஊரெல்லாம் கூடி ஒருங்கு திரண்டழுது
பேரினை நீக்கி பிணமென்று பேரிட்டுச்
சூரியன் காட்டிடைக் கொண்டுபோய் சுட்டபின்
நீரினில் மூழ்கி நினை பொழிந்தார்களே

என்ற சித்தர் பாடல் நினைவுக்கு வருகிறது. தினந்தோறும் மரணத்தைப் பார்த்து மரத்துப்போன முள்ளிவாய்க்காலில் இதைவிட வேகமான மாற்றம். பக்கத்திலிருந்த வெளியில் தாயைப் புதைத்துவிட்டு தம்பி வரும்போது தாய்விட்டுச் சென்ற அரிசி கழுவும் பணியை தான் தொடர்ந்து அடுத்த வேளை உணவுக்கு தயாராகும் மகளை கதாசிரியர் யதார்த்தபூர்வமாக சித்தரிக்கிறார்.

கதாசிரியர் புலிஎதிர்ப்பு நிலைப்பாட்டை மட்டும் கொண்டவரல்ல. அநியாயங்களை யார் செய்தாலும் தட்டிக் கேட்கின்ற நடுநிலையான விமர்சகர் என்பதை 'ஐயனின் எஸ். எல். ஆர்.' 'இரண்டாவது தலைவர்' ஆகிய இரு கதைகளும் வெளிப்படுத்துகின்றன. ஜனநாயக வழிக்குத் திரும்பியவராகவும் தூய்மையானவராகவும் காட்டிக் கொள்கின்றன

"நாங்கள் ஜனநாயக வழிக்குத் திரும்பினதே உங்களுக்காகத்தான்.... எங்கட தலைவரை பாருங்கோ அவர் கலியாணமே கட்டயில்ல. தனக்கொரு வாரிசையே உருவாக்காமல் இருக்கிறார் என்று தொண்டர்களால் நம்பப்படும் ஒரு தலைவரின் பாலியல் லீலைகளை எடுத்துக்காட்டுவது ஐயனின் எஸ். எல். ஆர் கதை

கர்ணண் கதை சொல்லும் முறையிற் பல சிறப்புகள் காணப்படுகின்றன. கதை ஒவ்வொன்றும் பல்வேறு உத்திகளை கையாண்டு சொல்லப் படுகின்றமை முதலாவது சிறப்பாகும்.

திரும்பி வந்தவன், திரும்பி வந்தவள் முதலிய கதைகள் பாத்திரமே கதை சொல்வதாக அமைக்கப்பட்டுள்ளன "கதை கதையாம் காரணமாம்" பாத்திரங்களின் வாக்கு மூலங்கள், புலம்பல்கள் என்பவற்றைக் கொண்டு பின்னப்பட்டுள்ளது. வேதாளத்திற்குச் சொன்ன கதை "தன் முயற்சியில் சற்றும் மனம் தளராத வேதாளம் மீண்டும் அந்த விசாரனைக் குறிப்பை புரட்டியபடி இருந்தது." என விக்கிரமாதித்யன் கதைப்பாணியில் ஆரம்பித்து.

"வேதாளம் விசாரனைக் குறிப்பை மூடிவைத்து விக்கிரமாதித்தன் ஒரு நிரபராதி என எழுதியது.... வேதாளம் தன் மூக்குக் கண்ணாடியைக் கழற்றி மேசையில் வைத்துவிட்டு பெரு மூச்சு விட்டது. பின்னர் மெதுவாகக் கேள்வியைக் கேட்டது.

அந்தப் புதையல் இருக்குமிடத்தை எனக்கு இரகசியமாக அடையாளங் காட்ட உன்னால் முடியுமா? புதையலை இருவரும் பாதிபாதியாகப் பகிர்ந்து கொள்ளலாம் சம்மதமா?

விக்கிரமாதித்தன், கண்களையும் வாயையும் இறுக மூடிக் கொண்டு காத்திருக்க ஆரம்பித்தான். தலை சுக்கு நூறாக வெடித்து இறந்து போகும் கணத்துக்காக என முடிகிறது.

பாவ மன்னிப்பு சிறு கதை கிறிஸ்தவ பாதிரியார் முன் பாவமன்னிப்புப் பெற நிற்கும் ஒருவனின் அறிக்கையிடலாக அமைகிறது.

கர்ணனின் இன்னொரு சிறப்பம்சம் கொடுப்புக்குள் சிரிக்க வைக்கின்ற நாசூக்கான கிண்டல் ஆகும். கதை முழுவதும் இப்பண்பு ஆங்காங்கே பரவி வியாபித்திருக்கும்.

"அப்புக்காத்துவின் அனேக கதைகளில் வரும் பெண் பாத்திரமான பாமா இந்தக் கதையிலும் நாயகியாவாள்.... பாமாவை ஒரு தனிப் பொம்பிளையாக விட அப்புக் காத்துவின் மனம் ஒப்பவில்லை. இப்ப காலம் கெட்டுக்கிடக்குது. கலியாணம் செய்யாத பெட்டையென்றால் போற வாற பொடியன் நொட்டை சொல்லுவினம். ஒரு நொட்டைக்குப் பெட்டை சிரித்தால் கதையே சரி. ஒரு பெடியனைப் பிடித்துக் கொடுத்துவிட்டால் சோலியில்லையென நினைத்து ஒரு பொடியனையும் கொண்டு வந்தார். பெயர் அகத்தியன் ஏதாவது தொழில் துறை வேணுமே....

மே மாதம் சம்பந்தமான கதைகளில் வரும் பாத்திரங்கள் சிங்கள இனவாத அரசில் சம்பளம் வாங்குபவையாகப் படைக்கப்படுவதையும் விரும்பவில்லை. பலதையும் யோசித்து விட்டு ஆளைப் பிடித்துக் இயக்கத்தில் சேர்ந்து விட்டார்.

(தமிழ்க் கதை)

வீட்டுக்குவாற வழியெல்லாம் மனிசி சோசலிசத்தைப் பற்றித்தான் யோசிச்சுக் கொண்டு வந்தது. தன்ரை (இயக்கத்துக்குப் போன) பெட்டைக்கும் சோசலிசத்துக்கும் என்ன தொடுப்பென்பது விளங்கயில்லை. சில நேரம் சோசலிசம் ஒரு பெடியனாயிருந்து தன்ரை பெட்டையை கூட்டிக் கொண்ட ஓடிடுவானோ என்றும் பயம் வந்தது.

(சோசலிசம்)

நல்ல சிறுகதை கதை முடிந்தபின் தான் தொடங்கும் என்பார்கள். கதையின் முடிவுப் பகுதியில் திடீர்த் திருப்பம் ஒன்றை ஏற்படுத்துவதன் மூலமும் சிலர் இத்தகைய பண்பை ஏற்படுத்த முயன்றிருக்கின்றனர். ஓ. ஹென்றி, மாப்பஸான் ஆகியோரின் சிறு கதைகளில் இத்தகைய திடீர்த் திருப்பப் பண்பை அதிகம் காணலாம். கர்ணனின் சிறுகதை முடிவுப் பகுதிகளும் திடீர்திருப்பத்தை ஏற்படுத்தி வாசகருக்கு அதிர்ச்சி அளிப்பனவாக உள்ளன.

சீட்டாட்டம் சிறுகதை இதற்குச் சிறந்த உதாரணமாக உள்ளது. விசுவமடுச் சந்தியில் கதை சொல்லியும் மாஸ்ரரும் இறங்கும் போது இருவரும் மது போதையில் இருக்கின்றனர். அப்போது மாஸ்ரர் நடு றோட்டில் நின்று கொண்டு என்னயிருந்தாலும் மகிந்த ஒரு நரியன் தான் இஞ்ச விட்டான் துரும்பை... அங்கே அடிச்சான் கம்மாரிஸ் என்று கூறுகிறார். இதைப் போதை ஏறியதால் ஏற்பட்ட உளறல் என்றே கதை சொல்லி கருதுகிறார். இதை மாஸ்ரர் அடிக்கடி கூறிக் கொண்டே இருக்கிறார் எவரும் கருத்தில் எடுக்கவில்லை சீட்டாட்டத்தின் நுட்பங்கள் பற்றியும் கதை சொல்லியின் ஒன்று விட்ட சகோதரி பற்றியும் கதை சொல்லப் பட்டுக் கொண்டு இருக்கிறது. கதையின் இறுதிப் பகுதியில்.

தம்பி துரும்படிச்சு கம்மாரிஸ் அடிச்சான்... மகிந்த இஞ்ச துரும்படிச்சான் அங்க முள்ளி வாய்க்காலில் கம்மாரிஸ் அடிச்சான்.

பொடியன் வெருண்டு போய் நிக்கிறான். எனக்கு ஏறிட்டுது "என்ன மாஸ்ரர் திரும்பத் திரும்ப புசத்திரியள்.... என்ன பிரச்சினை யெண்டதைச் சொல்லுங்கோ...."

மாஸ்ரர் ஒரு நிமிசம் வடிவாச் சிரிச்சார் அப்படியே அலகைப் பொத்திப் போட வேணும் மாதிரிக் கிடக்குது பிறகு சொன்னார். "எடேய்.... ஜனாதிபதி எலெக்சன் நேரம் இஞ்ச வைச்சுத்தான்ரா மகிந்த இயக்கத்துக்கு இருபது கோடி காசு கொடுத்தவன். தனக்கு வோட் போடச் சொல்லி" என்றார். என எமது ஏமாளித்தனத்தையும் எதிரியின் புத்திசாலித்தனத்தையும் காட்டி அதிர்ச்சியை ஏற்படுத்துவதாகக் கதை முடிகிறது. இத்தகைய உத்தியை கதை முடிக்கும் அவரது ஏனைய சிறு கதைகளிலும் காண முடியும்.

தொகுத்து நோக்கின் பொருள், வடிவம் ஆகிய இரண்டிலுமே சிறந்து விளங்கும் யோ. கர்ணனின் சிறுகதைகள் ஈழத்துச் சிறுகதை வளர்ச்சியின் முக்கிய கட்டத்தை எடுத்துக் காட்டுகின்றன. "இவரையும் இவரைப் போன்றவர்களையும் இணைத்து உருவாக்கப்படும் ஒரு முழுமையான யத்த சாட்சியமே விஞ்ஞான பூர்வமானதாகவும் அனைத்துலகக் கவர்ச்சி மிக்கதாகவும் அமையும் அது தான் தமிழ்த் தேசியத்தின் ஜனநாயக மற்றும் தார்மீக அடித்தளத்தைப் பலப்படுத்தும்" எனக் கர்ணன் பற்றிய நிலாந்தனின் மதிப்பீடு மிகைப்படுத்தப்பட்டது ஒன்றல்ல.

● ● ●

# போரின் அபந்த ஓசை

வயல்வெளிகள், நீர்நிலைகள், மரக்காடுகள்
பூஞ்சோலைகள் நறுமணத்தால்
ஊடல்பட்ட என் பழுங்குடிக்கிராமம்
போரின் சண்டை மூண்டலான
செல் எறிகணை பல்பீரங்கி வீச்சுகளின்
தீப்பற்றலான எரிவில்
கத்தல், கதறல், ஒப்பாரி, அழுகை, கதறல்
உறுத்தலான ஓசைகளுக்குள்...
மனிதப் பிணங்கள் காய்த்து சொறியும்,
பறவைப் பீதிகள் மகரந்தம் பூத்தும்
வெறிஞ் சோடிய படி நீள்கிறது.

ஊரே அவஸ்தையுற்று
துன்பங்களால் கணங்கள் கருகிட
இராப் பொழுதுகள் இரையாகி
இருள இருள ஆங்காங்கே
ஆலமர விதைபோல் துவக்குகள் முளைக்கும்
என் இதயம் தொண்டை ஏறிப் பொறுப்பதாகவும்,
நெஞ்சு வெடித்துப் பிளப்பதாகவும்,
பசித்தேறிய குடல் பைகள் அறுந்து போனதாகவும்,
தாகத் தவிப்பு முடறியை முறிப்பதாகவும்
உடல் மாற்றங்கள் உணர்வுகளை பயங் கொள்ளும்.

உணவு பற்றாக் குறை வாழ்வில்
தாய் மழலைக்காய் வற்றிய பால் மார்பை
ரத்தம் கசியும் வரை துவட்டி
பிடிப்புடன் உமிழ விட வலி
சிறுநீர் கழித்து நனைந்த சேலையோடும்,
கண்ணீர் வடித்து உறைந்து நித்திரையோடும்,
காலத்தை வேதனையின் கோடு உறிஞ்சும்.
வல்லுறவின் வன்மச் சகோதரிகள்
வக்கிரச் சுமைகளால் வடுப்பட்டு
மயிர்கொட்டிப் புழுவின் சுனை
நரம்பு நீள்வில் ஊறிக் கொண்டிருந்தது.

கடவுள் சம்பிரதாயச் சடங்குகள்
முழங்கும் சந்நிதானச் சிற்பங்களை
ரத்த தெளிப்புக் கறைகள் படிந்து
மனித எலும்புகளின் சுடலைச் சாம்பல்களை
திருமறை மூலமாயும்.
மாடு, ஆடு, பன்றி, கோழி, ஊண் இறைச்சி
அபிஷேகப் படைப்பில் புனித நிலங்களையும்,
தலங்களையும், துர்நாற்றமாய்.. பிரவாகமெடுத்தது.

23.09.2008

கோ.நாதன்

# மட்டக்களப்பின் பன்முகப்பாட்டு ஓவியராக

# ஸ்ரீகமலச்சந்திரன்.

மிக நீண்ட காலமாக மட்டக்களப்பு ஓவியத்துறைக்கு தனித்துவமான பங்களிப்பினை வழங்கி வரும் திரு. சோமசுந்தரம் ஸ்ரீ கமலச்சந்திரன் கொழும்பு அரசினர் ஓவியக் கல்லூரியில் (College of fine Arts – Colombo) பயின்று பட்டம் பெற்றவர்.
கோப்பாய் அரசினர் கலாசாலையின் விசேட பயிற்றப்பட்ட சித்திர ஆசியரான இவர் இலங்கை ஆசிரியர் சேவையின் தரம் 1 இன்ஆசிரியராவார்.
ஆரம்ப காலங்களில் மரபு வழியில் நின்று ஓவியங்கள் வரைந்தாலும் அதன் பின்னர் இவருக்கு ஏற்பட்ட இலங்கையில் பிரபல சிங்கள ஓவியர்களின் தொடர்புக்கு பின்னர் நவின ஓவியங்களிலும் கூடிய விருப்புடன் தனது பயணத்தை தொடர்ந்துள்ளார்.
சுவாமி விபுலானந்தா அழகியற் கற்கைகள் நிறுவகம், கிழக்கு பல்கலைக்கழகத்தில் வருகை தரு விரிவுரையாளராக இளம் பட்டதாரி மாணவ ஓவியர்களை உருவாக்கி கொண்டிருக்கும் ஸ்ரீ கமலசந்திரன் மட்டக்களப்பின் நவீன ஓவியத்துறையின் முன்னோடிகளில் ஒருவர் என்பது குறிப்பிடத்தக்கது.

(ஆசிரியர்)

பாடசலைகளில் சித்திரம் கற்பிப்பவர்களை மூன்று வகையினராக வகைப்படுத்த முடியும்.

1. சித்திர ஆசிரியர்களாக நியமனம் பெற்று சித்திர ஆசிரியர்களாகவே இருப்பவர்கள்.
2. சித்திர ஆசிரியர்களாக நியமனம் பெற்று கலைஞர்களாகப் பரிணமித்தவர்கள்.
3. கலைஞர்களாக பரிணமித்து சித்திர ஆசிரியர்களாக கடமையாற்றுபவர்கள்.

பாடசாலைகளில் கடமையாற்றிய போதும் 2ம்,3ம், வகையினரே சமூகக் கணிப்புக்குரிய கலைஞர்களாக கொள்ளப்படுகின்றனர்.

ஸ்ரீகமலச்சந்திரன் அவர்கள் 2ம் வகைப்பாட்டுக் குரியராவார் அதாவது சித்திர ஆசிரியராக நியமனம் பெற்று கலைஞராகப் பரிணமித்தவராவார். இவர் 1950 ம் ஆண்டு மட்டக்களப்பில் பிறந்தவர். சிறுவயதிலிருந்தே ஓவியத்தில் ஆர்வம் கொண்டிருந்த இவர், ஓவியத்தினை ம.கைலாயபிள்ளை எனும் ஆசிரியரிடமும் பிற்காலத்தில் கணபதிப்பிள்ளை ஆசிரியரிடமும் கற்ற பின் 1973ம் ஆண்டு கொழும்பு அரசினர் ஓவியக் கல்லூரியில் ஓவியத்தில் டிப்ளோமா பெற்று 1975 ம் ஆண்டு கல்விச் சேவையில் ஒரு சித்திர ஆசிரியராக இணைந்து கொண்டதிலிருந்து மட்டக்களப்பின் ஓவியத்துறைக்கு தனித்துவமான பங்களிப்பினை ஆற்றிவரும் ஒருவர். இதனால் மட்டக்களப்பில் இளம் ஓவியர்கள் பலரை உருவாக்கியவர். தனது திறமையின் காரணத்தினால் கல்விப் புலத்தில் ஓவியத் துறையில் பல பதவிகளை வகித்து 2007ம் ஆண்டு ஓய்வு பெற்றதன் பின்பு தற்போது சுவாமி விபுலாநந்தா அழகியற் கற்கைகள் நிறுவகம், கிழக்குப் பல்கலைக் கழகத்தில் வருகை தரு விரிவுரையாளராக இளம் பட்டதாரி மாணவ ஓவியர்களை உருவாக்கிக் கொண்டிருப்பவர்.



கமலச்சந்திரன் அவர்கள் ஓய்வின்றி ஏதாவது வரைந்து கொண்டிருப்பதையே தனது மூச்சாகக் கொண்டவர். இவ்வாறு தொடர்ச்சியாக வரையப்பட்ட இவரது ஓவியங்கள் 1978ம் ஆண்டு வீசிய சூறாவளியினாலும் அதன் பின்பு 1990ல் ஏற்பட்ட யுத்த இடப்பெயர்வினாலும் இறுதியாக 2004ம் ஆண்டு உருவான ஆழிப்பேரலையினாலும் முற்றாக அழிந்து போக தற்போது அவரிடம் கைவசம் உள்ள ஓவியங்கள் 2004ம் ஆண்டு ஆழிப்பேரலையின் பின்பு வரையப்பட்ட ஓவியங்களேயாகும். இதன் காரணத்தினால் இவருடைய ஆரம்பகால இடைக்கால ஓவியங்கள்

தொடர்பாகவும் கமலச்சந்திரனில் ஏற்பட்ட மாற்றங்கள் வளர்ச்சிகள் தொடர்பாகவும் நோக்கமுடியாமலுள்ளது. தற்போது அவரிடம் கைவசம் உள்ள ஓவியங்களை மூன்று பிரிவாகப் பிரிக்க முடியும்.

1. மட்டக்களப்பின் நிலத்தோற்றங்கள்.
2. சுனாமி, யுத்த அனர்த்தங்கள் தொடர்பானவை
3. தன்னுணர்வு சார்ந்தவை

**மட்டக்களப்பின் நிலத்தோற்ற ஓவியங்கள்.**

மட்டக்களப்பின் நில அமைப்பு என்பது இயற்கை வரைந்த ஓவியம் என்று கூறக்கூடியளவுக்கு அழகுபொருந்தியது. சுற்றிவளைத்துச் செல்லும் மட்டக்களப்பு வாவியும் அதன் வேர்களாக குறுக்கும் நெடுக்குமான நீரோடைகளும் அதனையண்டிய வீடுகளும் தென்னைமரங்களும் இவற்றுக்கூடாகச் வளைந்து நெளிந்து செல்லும் சிறு சிறு வீதிகளும் என ஒரு தனித்துவ அடையாளமாக இருப்பவை. உருவாக்கும்போது ஊடகத் தேர்வும் அந்த ஊடகத்தை தனது கட்டுப்பாட்டுக்குள் வைத்துக் கொள்வதும் முக்கியமாகின்றது. வர்ணங்கள் தன்னிச்சையாக நகர்ந்து செல்லாமல் ஓவியனின் விருப்புக்கேற்ப தொழில்படுவதும் முக்கியமாகின்றது. கமலச்சந்திரன் இவ்விடயங்களில் மிகப் பொறுமையுடன் செயற்பட்டு மட்டக்களப்பின் சில காட்சிக் கோணங்களை தனது கன்வசில் உயிர்பித்திருக்கின்றார். கீரியோடை, கோட்டை, கல்லடிப்பாலம், வெளிச்சவீடு, வீதி, என்பன குறிப்பிட்டுச் சொல்லக்கூடியனவாக இருக்கின்றன. இவ்வோவியங்கள் ஒரு அமைதியினையும் அழகினையும் வெளிப்படுத்தி நிற்கின்றன. யுத்த வடுக்களோ அல்லது நகரின் பரபரப்போ இன்றி ஓவியத்துக்குள் அமைதி குடிகொண்டிருக்கின்றது. இது அவரின் உள்ளார்ந்து விரும்பும் அமைதியாக வெளிப்பட்டிருக்கிறது போல் தெரிகிறது. பரபரப்புடன் இயங்கிக் கொண்டிருக்கும் பார்வையாளர் களுக்கு இது ஔடதமாய் அமையக்கூடியன.



கீரியோடை

கமலச்சந்திரன் இந்த மட்டக்களப்பின் கட்புல அழகியலிருந்தே தன் படைப்புக்களுக்கு வேண்டிய புத்துணர்ச்சியினைப் பெற்று அவற்றை மற்றுமொரு படைப்பாக உருவாக்க முனைகிறார். இவ்வாறு மரங்களையும் நீரேரிகளையும் பொறுமையுடன் எடுத்து விளக்கும் கமலச்சந்திரன் இவற்றுடன் இணைந்து

காணப்படும் மனிதர்களை உயிர்ப்பற்றவர்களாக தட்டைத்தன்மையாக வரைவது அவருடைய அலாதியான வெளிப்பாட்டு முறையாக அமைகிறது. இது இவ்வழகிய இயற்கையை சீரழிக்கும் மனிதர்களை வெறுத்தொதுக்கும் மனப்பாங்கின் வெளிப்பாடாக இருக்குமோ என எண்ணத்தோன்றுகிறது.

கமலச்சந்திரனின் இவ் நிலக்காட்சி ஓவியங்களைப் பார்க்கும் பொழுது எமக்கு அமைதியும் சுகமும் கிட்டுகின்றது. அவற்றின் எளிமையும் புரிந்து கொள்ளலில் இல்லாத் தடையும் மேலும் மேலும் பார்க்கத் தூண்டுபவையாக இருப்பதும் அவரின் கலையாக்கத்தின் வெற்றியாக கொள்ளமுடியும். இன்னொருவகையில் மட்டக்களப்பின் இவ்வாறான வெட்டுமுகத்தோற்றங்களை முதல் முதல் ஓவியத்தினூடு பதிவு செய்திருப்பவர் என்ற வகையிலும் போற்றுதலுக்குரியவராகின்றார்.

அழகாக வெளிப்படுத்தும் இவ்வோவியம் கமலச்சந்திரனின் வெளிப்பாட்டில் முற்றிலும் வித்தியாசமானதும் சிறந்த படைப்புக்களுள் ஒன்றாகவும் விளங்குகின்றது. அவர் தேர்ந்தெடுத்த கொலாஜ் முறையிலான வெளிப்பாட்டு உத்தியும் அவற்றின் தொகுப்பமைவும் வர்ணஓட்டமும் ஒரு

ஆழிப்பேரலையை நம்முன் கொண்டு நிறுத்துகின்றன. இந்தப்படைப்பில் ஓவியரின் அனுபவம், ஆற்றல் என்பன ஆழிப்பேரலையின் குணாம்சத்தினை வெளிப்படுத்த உதவியிருக்கின்றது எனலாம். எங்கு பார்ப்பினும் நீரின் பிரவாகமும் அழிவின் எச்சங்களுமே ஓவியம் முழுக்க ஆக்கிரமித்து பார்ப்போரை பிரமிப்படைய வைக்கின்றது.




கோட்டை

**சுனாமி, யுத்த அனர்த்தங்கள் தொடர்பான ஓவியங்கள்**

சுனாமி, யுத்தம் தொடர்பான அனுபவங்களையும் அவ்வனுபவவெளிப்பாடுகளையும் பொதுவாக இலங்கைக் கலைஞர்கள் பலர் பல்வேறு வெளிப்பாட்டு உத்திகளையும் கையாண்டு ஓவியமாகப் படைத்திருக்கின்றார்கள். ஆனால் ஆழிப்பேரலை தொடர்பான கமலச்சந்திரனின் ஓவியம் தனித்துவமானதாக விளங்குகின்றது. அழகின் அழிவினை யுத்த அனர்த்தம் தொடர்பான ஓவியத்தில் இடப்பெயர்வு எனும் ஓவியம் முக்கியமான ஒன்றாகும். யுத்தம் காரணமாக இயல்பான ஒரு இடப்பெயர்வும் துரத்தியடித்தலான ஒரு இடப்பெயர்வும் இடம்பெற்றன. கமலச்சந்திரனின் ஓவியம் துரத்தியடித்தலான ஒரு இடப்பெயர்வைப் பிரதி பலிக்கின்றது. உருவங்களின் நிலைகளும் வர்ணங்களின் தன்மையும் தூரிகைப் பிரயோகமும் இறப்பின் அச்சத்தினையும் வாழ்வின் ஆசையினையும் ஒரு உயிரோட்டமான ஓட்டமாக பதிவு செய்திருக்கின்றது. ஓவியத்துக்குள் இருக்கும் அந்த பதற்ற நிலையும் அசைவுப் போக்கும்

ஆழிப்பேரலை




பாத்திரங்களின் தவிப்பும் நல்ல முறையில் வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

## இடப்பெயர்வு

**தன்னுணர்வு சார்ந்தவை**

அவரின் 3வது வகையான தன்னுணர்வு சார்ந்த படைப்புகளுக்குள் தனது விருப்பங்கள் கோபதாபங்கள் மற்றும் சமூகமாற்றங்கள் எனபவற்றை தன்னிலையிலிருந்து வெளிப்படுத்துகின்றார். இவ் வெளிப்பாட்டுக்கு அவர் பெருமளவுக்கு அரூபத்தன்மைகளைச் சார்ந்திருப்பதை அவருடைய தலைப்பிடப்படாத ஓவியங்கள் புலப்படுத்துகின்றன. உருவங்கள் பார்வையாளரின் கருத்தேற்றக் கட்டமைப்புக்கு உட்பட்டவை என்கின்ற படியால் உருவங்களினூடான உணர்வு வெளிப்பாடுகள் பல்வேறுபட்ட வியாக்கியானங்களை உண்டு பண்ணக்கூடியவையாகும். இதனால் நவீன ஓவியர்கள் தங்களது வெளிப்பாடுகளை மொழியற்ற இசைபோல் உருவமற்ற அரூபத்தில் வெளிப்படுத்துவதில் திருப்தியடைகின்றனர்.

தலைப்பிடப்படாத அவரின் அரூப ஓவியங்கள் இந்தவகையில் முக்கியம் பெறுகின்றன. கீழ் காணப்படும் ஓவியம் பல்வேறு வர்ணங்களை சமநிலையாகப் பேணிய போதும் மத்தியில் பளிச்சிடும் மஞ்சள் வர்ணம் பண்பாட்டுப்பின்னணியில் எதிர்காலம் குறித்த கலைஞரின் நம்பிக்கையினை வெளிப்படுத்துவதாக அமைந்திருக்கின்றது எனலாம். யுத்தத்தினாலும், சுனாமியினாலும், மற்றும் தனது சொந்த விடயங்களினாலும் பாதிக்கப்படும் கலைஞன் தனது படைப்புகளினூடாக அந்தச் சுமைகளிலிருந்து விடுபட்டு எதிர்காலம் நோக்கி பாய்ந்தெழும் புத்தெழுச்சியினை இவ் வோவியம் உணர்த்துவதாக அமைகின்றது. இது போலவே அவருடைய அனேக அரூப ஓவியங்கள் மனதுக்கும் கண்ணுக்கும் இதமளிப்பதோடு வாழ்வில் நம்பிக்கையினையும் ஏற்படுத்துபவைகளாக அமைந்திருக்கின்றன.

முடிவாக ஓவியரின் மூன்றுவகையான ஓவியங்களையும் நோக்குகின்றபோது ஒவ்வொரு வகைக்கேற்றாற்போல் அவருடைய ஓவிய வெளிப்பாடுகள் அமைவதனைக் காண்கின்றோம். 1லாம் வகையில் ஓரளவுக்கு இயற்பண்பை வெளிப்படுத்தியவர் 2ம் வகையில் அதனை அடியோடு மறந்து கியூபிச வெளிப்பாட்டு முறைக்குள்ளால் அந்தக்கருத்தின் கனதியை கொண்டுவர முயன்றிருக்கின்றார். 3ம் வகையில் இவையெல்லாவற்றையும் விட்டு விட்டு அரூபத்தன்மையை தேர்ந்தெடுப்பதைக் காண்கின்றோம். எனவே இவரைப் பொறுத்தவரை படைப்பென்பது வடிவம்


13/09/2012 00:08






சார்ந்ததாக இல்லாமல் அந்தக்கருவுக்கு என்னவடிவம் பொருத்தமானதாக இருக்குமோ அந்த வடிவம் அவரையறியாமல் தன்னியல்பாக வெளிக் கிளம்புகின்றது. ஒரு தேர்ந்த கலைஞனிடம் காணப்படும் இவ் கட்டுக்கடங்காத் தன்மை கமலச்சந்திரன் அவர்களிடமும் இருப்பதால் எதிர் காலத்தில் புதிய புதிய படைப்புக்களை அவரால் தொடர்ச்சியாக வழங்க முடியும் என்ற நம்பிக்கையினை ஏற்படுத்துகின்றது. ● ● ●

## புதிய வரவுகள்

புத்தக அறிமுகம் தொடர்பான 'புதிய வரவுகள்' பகுதி அடுத்த இதழில் இடம் பெறும்.

# பயங்கரமானதொரு அமைதி

மிகவும் பெரிய
அமைதி நிலவுகிறது
மிகவும் பயங்கரமானதொரு
அமைதியின் பின்னால்

ஏதோ
நடந்திருக்கிறது
நடக்கிறது
நடக்கலாம்

இதனை பற்றி பேசவும்
முடியவில்லை
பேசாமல இருக்கவும் முடியவில்லை

யாரும் பேசாத
கருவில் கவிதைகள்
உருவெடுக்கின்றன
அவை பிறப்பிக்கபோகும் விடயங்கள்
அதிர்ச்சியையும் தரக்கூடும்
காலத்தின் தேவையையும்
கடந்துபோன காலத்தின்
அவசியத்தையும் கூறும்

குருதி தோய்ந்த
நிலங்கள் எல்லாம்
தடங்கள் இல்லாமல் மாற்றியமைத்த
பின் குறிதவறிப்போன அம்புகளாய்
நிலைகுழைந்து நிற்கின்றனர்
எல்லாம் வென்றவர்கள்

தடமில்லாது போன்றவற்றை
பற்றி
தடமழிக்கபெற்றவற்றை எல்லாம்
கைவிடப் போகின்றனர்

சூழலின் சமனிலையைப்
ஓர் அங்கியினத்தின் அழிவானது
வாழும் அங்கியினத்தின்
மிகையுற்பத்தியால் வீழச்சி எனும்
தத்துவத்தினை
மீளாய்வு செய்ய
திட்டங்கள் உருவாகின்றன.

மௌனங்களின் வார்த்தைகளும்
கண்களின் வார்த்தைகளும்
இப்போ கேட்கின்றனர் தடுமாற்றத்துடன்

எது எப்படியோ
காலம் பதில் சொல்லுவதுபோல

குருதி தேய்ந்த
நிலங்களில்
குறுத்தோலைகளை வளரவிட
வேண்டிய தேவை
அவர்களுக்கு வந்து விட்டது.

ஓர் அதிர்ச்சி
மீண்டும் அழிக்கப்பட்ட
இனத்தை
புத்துயிர்க்காவிடின்
புத்தனும் புதைக்கபட்டுவிடுவான்
என்பதை
புரிந்து விட்டனர்.

**எஸ்.பி. பாலமுருகன்**

திசேரா

# புனைவுடன் புனையாத கோட்பாடும் கோட்பாட்டுப் புனைவும்

ஒ ஒன்றும் இல்லாத ஒன்றைப்பற்றி ஒன்றுமில்லாமல் ஒன்று சொல்லலாம் என எத்தனிக்கிறேன் எதனையும் பிரித்துப் பார்ப்பதனூடு அதனுள் இருக்கக் கூடியதை பகுத்துப் பார்த்தல் இலகுவாக இருக்கலாம் என்ற நம்பிக்கையில் இக் கட்டுரையை மூன்று பகுதிகளாக பிரிக்க நினைத்தேன்.



என் படைப்பனுபவத்தைக் கொண்டும் இது பார்க்கப் பட்டதால் முழு ஆய்வு என்ற நிலை தாண்டி ஒரு புனைவாகக் கூட இது தோன்றலாம். கட்டுரை அமைப்பும் முறையும் இங்கு சிதைக்கப்பட்டுத்தான் இருக்கும்.

## முதலாம் பகுதி

ஒரு புனைவை எந்தக் கோட்பாட்டைக் கொண்டும் நோக்க முடியும். ஆனால் படைப்பினுள் புதைந்து கிடக்கும் சிந்தனை, அனுபவம், பரிசோதனை விடுபட்டுப் போகலாம். சில வேளைகளில் படைப்பாளியின் சிந்தனையில் அழுத்தத்தைக் கொடுத்து செம்மைப்படுத்துவதாகவும் அமையலாம்.

## 6ஆம் அறிவுக்கு எட்டாத 3ம் பால்

I

தேவதைகள் பற்றிய விவாதம் தொடங்கி மிகவும் உக்கிரத்தில் நிகழ்ந்து கொண்டிருந்தது. இன்னமும் சந்தேகம் தீர்க்கப்படாமல் பெண்ணா? ஆணா? என இழுபறிபட்டுக் கொண்டிருந்த நிலையில் நானும் நாங்களும் சந்தோசப்பட்டுக் கொள்ள முடியாத நிலையில் நேற்று-முழுவதுமாக எனை விழுங்கி இருந்தது.

II

நான் எனை உணரத் தொடங்கிய நாள் முதலாய் எனை எப்போதும் கவ்விக் கொண்டிருக்கும் சுரண்டலை - அவமானங்களை விலக்கி விட எத்தனையோ போராட்டங்களைத் தொடர்ந்தேன். ஆயுதம் ஏந்தாமல் எங்கள் உழைப்புக்கான பெறுமதியை அவர்களால் தீர்மானிக்க முடியாத நிலை, குழந்தை ஊதியத்தை கொடுத்ததுடன் நாங்களும் தாக்கப்பட்டோம். உடலை மூலதனமாக்கினால் அதிக ஊதியத்தை தர முடியும் என்றார்கள். இதனாலும் தொடரும் இன்னும் தொந்தரவுகளாலும் எனக்கும் எனது சகாக்களுக்கும் பாதுகாப்பு வேண்டி நாங்கள் அமைத்துக் கொண்ட சங்கத்தினூடு புதிய புதிய வழிமுறைகளைக் கலந்தாலோசித்தோம். – கலந்தாலோசித்துக் கொண்டிருக்கிறோம்.

III

1) சமூகப் பெறுமானம்
2) சகஜ வாழ்வு
3) தொழில் ஒதுக்கீடு

என்பனவும் இன்னும் பிறவும் எங்களுக்கான தேவையாகக் கருதியதினால் இதற்கான சட்ட நடவடிக்கைகளிலும் ஈடுபாட்டுடன் செயற்பட்டுக் கொண்டிருக்கிறோம்.

IV

**உங்களுக்குத் தெரியுமா?**

என் அம்மா என்னைச் செத்துப் போகச் சொன்னாள். என்னால் தங்கள் குடும்பம் அவமானத்துள் மூழ்கி கேலியுள் விழிப்பதாக அப்பா, அண்ணன், தங்கை என் எல்லோரும் ரெத்தமும் கண்ணீரும் வர என்னைக் கிழித்தார்கள். இது வெளியிலும் தொடர்ந்து கொண்டே இருந்தது.

V

பொட்டும் பூவும் எனக்கு புதுமலர்ச்சி தந்தது. சேலையுள் இருக்கும் மென்மை எனக்கு சிலிர்ப்பூட்டியது. கண்மை பூசி அலங்கரித்துக் கொள்கையில் நட்சத்திரமாய் நான் மின்னிக் கொள்வதாய் உணர்ந்தேன். இப் போக்கை பகுத்தாய்ந்த சிந்தனையாளன் இக் கொள்கைகளுக்கு அமைவான

கோட்பாட்டை உருவாக்குகிறான். இதுதான் காலந்தோறும் நடந்தேறுகின்றது.

சங்க காலத்தில் இயற்கை முதன்மைப்பட்டிருந்ததால் இயற்கை நெறிக்கோட்பாடு அதனுடன் அகம் சார்ந்த ஒழுக்கம், புறம் சார்ந்த ஒழுக்கம்

சங்கமருவிய காலத்தில் அறத்தைப் பாடி இருந்ததால் அறநெறிக் கோட்பாடு

இலக்கியத்தின் கூறுகளையும் - சிந்தனையையும் கொண்டே கோட்பாடுகள் பின்னப்படுகின்றன.

கோட்பாடுகளை அதன் கூறுகளைக் கொண்டு ஆக்கப்படும் புனைவுகள் நல்ல புனைவுகளாக தன்னை இனங்காட்டாது. அவ்வாறு வலிந்து செய்யப்படும் புனைவுகள் வாசகருக்கு வரட்சியையே புலப்படுத்தும்.

"கதை வடிவின் வீச்சினை விரிவு படுத்தியும் நவீன விமர்சனக் கோட்பாட்டின் பிரதான விஷயங்களை முன்னுணர்த்தியும் யதார்த்தத்தையும் பிரதிபலிக்கின்றது. பிரதி என்பதை மறுதலித்தும், நவீன இலக்கியத்தில் நாவலுக்குள்ள தலைமை இடத்தை நாட்டார் கேள்விக்குள்ளாக்கியும் கட்டுக்கதை, குட்டிக்கதை, கதை, இதிகாசம் என்னும் நாவலுக்கு முற்பட்ட கதை சொல்லல்களில் ஈர்ப்புக் கொண்டும் அப்பாலைத் தத்துவத்தையும் இறையியலையும் கூட புனைவிலக்கியத்தின் கிளைகளாகக் கருதமுடியும் என்றும் கருதியும் - இயங்கியும் வந்த ஜேர்ஜ் லூயிபோர்ஹேஸ் என சா.தேவதாஸ் குறிப்பிடுவார்.

மேற்கத்திய மரபில் புனைவுகளை திரவமாக்கும் முயற்சி 1950-60 களிலேயே நிகழ்த்தப்பட்டுவிட்டதை கவனத்திற் கொள்ள வேண்டும்.

அது குறுவட்டமாகி ஒற்றைத் தளத்தில் ஓடிக்கொண்டு புனைவுத் தன்மையிலிருந்து தோற்று வாசகரிடம் மடிந்துவிடும். படைப்பினூடு இதைச் சொல்லிவிட வேண்டும் என முனைந்தால் அது செய்தியாகத்தான் முடியும்.

மன உணர்வின் ஆழமும் விரிவுபட்ட பார்வை வீச்சும் புனைவை செம்மைப்படுத்துவதுடன் சிந்தனைத் தளத்தில் பயணிப்பதாக வாசகனை சூழல் பாதையுடன் அழைத்துச் செல்லும்.

விஞ்ஞானக் கண்டுபிடிப்புகள் தற்செயலாகவும் விபத்தினாலும் உருவானது போல புனைவுகள் அனுபவத்திலிருந்தும் கனவுகளிலிருந்தும்தான் தோற்றம் கொள்கின்றன.

வாசகரைக் கொண்டாட செய்யப்பட்ட பரிசோதனைகள் சொல்லல்முறை – சொல்மொழி – வடிவம் மாற்றமுறுகின்றது. சமூகம் - குடும்பமாகி – மனம் - ஆழ்மனம் - அறிவு – விஞ்ஞானம் எனப் புனைவின் தளம் விரிகின்றது.

நேற்றுத் திண்மமாக் இருந்த புனைவு
இன்று திரவமாக்கப்பட்டுள்ளது.
நாளை ஆவியாக்கப்படக்கூடிய சாத்தியமிருக்கலாம்.
நேற்று சூழ்நிலையில் உதித்த புனைவு
இன்று மனநிலை – ஆழ்நிலைக்கு மாறி இருக்கின்ற வேளை நாளை என்நிலை எனச் சொல்லமுடியாது.

எல்லாவற்றையும் காலம்தான் தீர்மானிக்கிறது.

படைப்பின் இயல்பை போக்கை – முறைமையை காலத்தின் தேவைதான் தீர்மானிக்கிறது. ஒன்றின் போதாமையே இன்னொன்றை ஆக்குகின்றது. படைப்பாளியின் சிந்தனையும் மனக்கிளர்ச்சியும் அனுபவமும் மாறுபட மாறுபட ஒரு போக்கை உடைத்துக் கொண்டு மாற்றுவழியைத் தீர்மானிக்கின்றான்.

ஒரு கோட்பாட்டினடிப்படையில் இவர்கள் மார்க்கிச எழுத்தாளர்கள். இவர்கள் தலித்திய எழுத்தாளர்கள். இவன் பின்நவீனத்துவ எழுத்தாளர்கள் என பொது வகைப்பாடு ஒவ்வொருவரிடமும் இருக்கும் தனித்துவ தன்மையை அறியமுடியாமல் செய்யும்.

## இரண்டாம் பகுதி

### நிகழ்வு I :-

நானும் மகனும் கடற்கரை சென்றிருந்தோம். மிதந்து சென்றுகொண்டிருக்கும் மேகங்களைப் பார்த்து "அப்பா டைனோசர், அந்தா ஏலியன்ஸ்" என்றான். நானும் கூர்ந்து பார்த்தேன் "சேகுவேராவும் போர்ஷேசும் போனார்கள்" அங்க பாருங்க "பென்10, Nimo Fishla லாற ஏதோவொன்றைச் சொன்னான்.

எனக்கு "பறக்கும் பட்டமரம்தான் தெரிந்தது"

* இது பார்ப்பவனின் பார்வையை அனுபவம் சிந்தனை அறிவு மாற்றியமைக்கின்றன.

### நிகழ்வு II :-

சம்பவம் - வயது முறுகி, கூன்விழுந்து, கறுத்து, சுருங்கி முக்காலுடன் நடந்து வந்த முழுக்கிழவன்

பாடல் I :- பிள்ளைகள் அவனது உழைப்பில் படித்து உயர்ந்ததும் தம் கௌரவத்துக்காக அவனைத் துரத்தி விட்டார்கள் - யதார்த்தவாதம்

பாடல் II :- தகுந்த ஊதியமற்று – ஓய்வூ தியமுமற்று உழைப்பை மட்டும் சுரண்டப்பட்டது – மார்க்சிசம்

பாடல் III :- அவன் இங்கு வந்ததற்கான வெவ்வேறு சாத்தியப்பாடுகளை புனைதல் - கியூ பிசம்

பாடல் IV :- உளவியல்

பாடல் V :- எடுத்துரைப்பியல்

பாடல் VI :- தலித்தியம்

பாடல் VII :- குறியீட்டியல்

பாடல் VIII :- கட்டவிழ்ப்பு

பாடல் IX :- கட்டுடைப்பு

பாடல் X :- தொடர்ச்சியுறு எழுத்து

எனப் பாடிக் கொண்டே செல்லலாம். இதில் எது சிறந்தது? அதைத் தீர்மானிக்கும் அளவுகோல் என்ன?

### தொகுப்பு

ஒரு விடயத்தை அதன் கருத்தை பார்ப்பவனின் மனநிலை சூழ்நிலை இயல்புநிலை என்பன தீர்மானித்து பதிவு செய்கின்றது.

இதை ஒரு படைப்பாளி உணர்வு – சிந்தனை – அனுபவம் - அறிவு என்பவற்றை ஒருங்கிணைத்து புனைவு செய்கின்றான். இக்கலவையுள் சிலருக்கு சிலதை அல்லது ஒன்று அதிகமாகி விடலாம். அதுவேறு விடயம் புனைவுகள் எங்கிருந்து தொடங்குகின்றன எப்படிச் சொல்ல வேண்டும்

என்பதையெல்லாம் விட அவை நம்மை எங்கே அழைத்துச் செல்கின்றன என்பதை கவனத்தில் கொள்ள வேண்டும். அது போதனையாக வரலாறாக சுயசரிதமாக இருக்க வெண்டும் என்பதைவிட அது நம்மை இட்டுச் செல்லும் புதிர் வெளியும் அது கொடுக்கும் உச்சக்கட்ட பயண இன்பமும் வாசகனைக் கொண்டாடி முதன்மைப்படுத்த வேண்டும்.

இங்கு எல்லாமே புனைவுதான் கற்பனை இன்றி எதையும் சொல்லிவிட முடியாது. அப்படிச் சொல்லுவது படைப்பும் ஆகாது. புனைவொன்றில் செய்தி இருக்கலாம். சாப்பாட்டுக்கு ஊறுகாய் போல ஒட்டிக் கொண்டு வரும். சமயம் - அரசியல் கோட்பாடு சார்ந்து முழுவதுமாக சொல்லப்படும் போது இது அவரவர் அனுபவம் சிந்தனை அறிவு சார்ந்ததுடன் அவரிடம் இருக்கும் கோட்பாடு சார்ந்ததாகவும் இருக்கலாம். ஆனால் உண்மையில் படைப்பின்மீது யாரும் ஆதிக்கம் செலுத்த முடியாது. படைப்பை படைப்பேதான் ஆளும்.

## படைப்பனுபவம் சார்ந்தது (எனதும் நண்பர்களதும்)

கபாலபதி தொகுப்பு – நான் வாசகனாக இருந்து அலுத்த சொல்லல்முறை வடிவம் மாற்ற வேண்டும். வித்தியாசமாக செய்ய வேண்டும் என்ற எண்ணம் மட்டும்தான் இருந்தத. எல்லாக் கதைகளுள்ளும் நானும் எனது அனுபவமும் என்னையறியாமல் நுழைவதை என்னால் தடுத்துவிட முடியவில்லை. வடிவங்களும் அப்படித்தான். இப்படிச் செய்தாலென்ன என பாதி கோபத்தில் சொல்லப்பட்டவை தொகுப்பு வந்தபின் வித்தியாசமாக இருக்கிறது விளங்கவில்லை, அவர்போல, இவர்போல, இது இது இருக்கிறது ஆகவே இவ்வகை சார்ந்தது. அது அது இருக்கிறது ஆகவே அவ்வகை சார்ந்தது. நான் அறிந்திராத பல பெயர்கள் எனக்குச் சொல்லப்பட்டன.

இதில் எதுவும் பிழையுமில்லை. முழுச் சரியுமில்லை. மறுமொழியளிக்கத் தேவையுமில்லை. அது அவரவர் நிலை சார்ந்தது.

புரியவில்லை – விளங்கவில்லை என்றும் இருந்தது. வித்தியாசமாக இருக்கிறது - இன்னமும் சொல்லலாம் - தேட வேண்டும் எனவும் சொல்லப்பட்டது.

ஆனால் சொல்லப்பட்ட எல்லாமும் எனை நிறையத் தேடச் செய்தன. பின்னர் என்னுள் ஏற்பட்ட அனுபவ சிந்தனை மாற்றம் இதையிதை இன்னமும் அழகாய் வேறுமாதிரிச் சொல்லி இருக்கலாம் எனத் தோன்றியது.

இது காலம் தந்த பாடம் அனுபவம் தேடல் சூழ்நிலை இவற்றுடன் கோட்பாடுகள் என்றும் சொல்லலாம். ஆனால் என் உணர்வுகள் அவர்களுக்கு ஒன்பதாய்த்தான் வட்டமிட்டன.

என் உடல் மட்டும் பலருக்கு கிளர்ச்சியூ ட்டியது.

## V

தேவதைகள் ஆணா? பெண்ணா? இருந்தும் அல்ல என்றுதான் ஞானிகள் கூறுகிறார்கள். அதனாலேயே நாங்கள் தேவதைகளின் இடத்தில் இருப்பவர்கள். மற்றவர்களை விட மேலான இடத்தில் என்று கூறவில்லை. ஆனால் இருபாலாரினதும் பிரச்சனைகளையும் ஒரே அளவில் புரிந்து கொள்ள எங்களால் முடியும் - அம்மாவைப் போல பாசம் காட்டவும் அப்பாவைப் போல கண்டிக்கவும் எங்களால் முடியும்.

### தலைப்புப் பற்றி

ஆண் பெண்என்ற பால் அடையாளம் தாண்டி ஆண் - பெண்ணாகி இருக்கும் திருநங்கையர் என்ற மூன்றாம் பாலினம் எம் பகுத்தறிவுக்கு எட்டாத அவர்களின் உணர்வு (6+3+=9)

### கோட்பாடு

ஆண் பெண் உழைப்பே சுரண்டப்படுகையில் இவர்களின் நிலை பற்றிய கேள்வி எழுந்தபோது தான் வர்க்க பாலின முரண்பாடுகளைக் கொண்டுதான் சொல்லப்பட்டது.
அவ்வகையிலும்
மன உணர்வுகள் பதிவு செய்யப்பட்டிருப்பதையும்
வடிவம் சிதைக்கப்பட்டிருப்பதையும்
ஒதுக்கப்பட்டவர் பற்றிப் பேசி இருத்தலையும்
சொல்லல்முறை பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டு இருப்பதையும் கொண்டு இப்புனைவை மார்க்கிசம் உளவியல் மனக்கிளர்ச்சி கட்டுடைப்பு கட்டவிழ்ப்பு நவீனத்துவம் பின்நவீனத்துவம் திருமங்கையரிசம் தொடர்ச்சியறு எழுத்து என எவ்வகையிலும் பார்க்கலாம். இதுவல்ல அதுதான் என வாதிடவும் முடியும். இது இந்தக் கோட்பாட்டுள் அடங்கி விடாது என ஒதுக்கி விடவும் முடியும்.
புனைவுகளின் போக்கும் வடிவமும் சொல்லல்முறையும் நாம் ஏற்பினும் ஏற்காவிடினும் காலத்துக்குக் காலம் மாறிக் கொண்டேதான் இருக்கும். அதுதான் இயல்பு நிலை. அதைவிட்டுச் செல்லவும் முடியாது. தூக்கிக் கொண்டே இருக்கவும் முடியாது.

### மூன்றாம் பகுதி

கோட்பாடு மையமாகக் கொண்டு செயற்படும் சூழற்பரப்பை அது காட்டும். காட்ட வேண்டிய வீச்சை அவதானிக்கலாம் என நினைக்கிறேன்.

1) ஐரோப்பிய, அமெரிக்க இலக்கியப் போக்குகளைக் கொண்டு கட்டமைக்கப்பட்ட கோட்பாடு மேற்குலகின் சமூக கலாசார அரசியல் சிந்தையை புலப்படுத்தி நிற்பதாய் அமையும். சமூக அமைப்பு முறையில் பாரிய வித்தியாசத்தைக் கொண்டிருக்கும் மேற்குக்கும் கிழக்கிற்கும் பொதுவாக இக்கோட்பாடுகள் சமநிலைத் தன்மையைப் பேணுமா? இரு எதிர்நிலைகளையும் திருப்தி செய்யுமா?
கோட்பாடுகளை விளங்குதல் - விளக்குதலில் இம்முரண்பாடும் காரணமாக இருக்கலாம்.
இங்கு மாற்றுக் கேள்வியும் முளை கொள்கிறது.
எம்தளச் சூழலுக்குத் தக்க – படைப்பை மையப்படுத்திய கோட்பாடு, விமர்சன முறை ஏன் கண்டடையப்படவில்லை.
2) இவைகள் புனைவின் வீச்சை குறுக்கு வெட்டாகக் கொண்ட கோட்பாடுகள்தான்.இதைக் கொண்டு படைப்பை உருவாக்குவதென்பது விமர்சனத்தை

இலகுபடுத்தி திருப்தி செய்யும் செயற்பாடாக அமையுமே தவிர புனைவு நிலையில் வாசகரிடம் தோற்றுப் போகும்.

3) தொடர்ந்தும் இயங்கிக் கொண்டிருக்கும் வாசகர் நிலையில் ஒரு போக்கை உடைக்கும் சோதனைப் படைப்புகள் தேடல் குறையும் ஒரு சாரரை விட்டு மற்றைய சாரரை மட்டும் அழைத்துச் செல்லும் படைப்பாக மாறிவிடும்.
எம்மிடம் நிகழ்ந்து கொண்டிருக்கும் இரு எதிர்ச்சிந்தனை முறையில் - இரண்டையும் சமநிலைப்படுத்த முயலும் திருப்தி செய்ய முயலும் படைப்பு வரமுடியாது. வருமாயின் அது புனைவாகவும் இருக்க முடியாது. சமரச கூரையாகவே இருக்கும்.

4) கோட்பாடுகளை விமர்சனத்துக்கு துணைக் கழைத்துச் செல்லும் போது, புனைவுக்கு சமாந்தரமான கோட்பாட்டைக் கொண்டு பார்த்தால்தான் சிறந்ததாக இருக்கலாம்.
இது பின்னவீனத்துவத்துவக் காலம் இக்காலப் படைப்புகள் பின்னவீனத்துவ முறையிலேயே விமர்சிக்கப்பட வேண்டும் என்றால் சகல படைப்புகளும் இதனுள் பொருந்துமா? நம்மைப் பொறுத்தவரை இது சாத்தியமாக கூடியது எனத் தோன்றவில்லை. கவிதைக்குள் என்னன்னவோ மாற்றங்கள் ஏற்பட்டுவிட்ட நிலையில் இன்னமும் மரபு சார் கவிதைகள் வந்து கொண்டிருப்பதையும் நோக்க வேண்டும்.
ஒரு பகுதிக்குள்ளேயே இம்முரண்பாடு என்றால் மேற்கிற்கும் கிழக்கிற்குமான முரண்பாட்டுத் தொகையை கணக்கிட முடியும் எனத் தோன்றவோ – பொருத்திப் பார்க்க முடியும் என்ற எண்ணமோ இல்லை.

குறிப்பு –

**மேற்கத்திய சிந்தனை மரபில் பின்நவீனத்துவத்தை மீறிய படைப்புக்கள் வருவதனால் அவற்றைச் சுட்டக்கூடிய புதிய முறைகளும் சொற்றொடர்களும் தேடப் பட்டுக் கொண்டிருக்கின்றனவாம்.**

5) எப்போதும் புதிய சிந்தனைக்கும் பரிசோதனைக்கும் ஆரம்பத்தில் எதிர்ப்பு தெரிவிப்பதுவும் - பின்னர் ஏற்பதும் தமிழ் இலக்கிய உலகின் சிந்தனைக் குறைபாடா? மனநிலைக் குழப்பமா? சுய இருப்பைக் காக்கும் முயற்சியா? எனத் தெரியவ்வை. இது தொடர்ந்து கொண்டிருக்கும் என்பதை மட்டும் மாற்ற முடியாது.

6) தமிழில் உள்ள புதுச் சொல்லல் முறையை பரிசோதனை முயற்சிகளை இனங்காண போர்த்தப்பட்டிருக்கும் பின்நவீனத்துவம் என்ற திரையை விலக்கினால் தமிழுக்கென தனித்துவ ப்பட்ட சொல்லல்முறை, புராணிக கதைமரபு கிராமியச்சொல்லாடல் மாத்திரம் தோய்ந்த சொற்கள் ஆழ்மனவடுக்கள் சிதைவுகளால் கட்டப்பட்ட கோட்டைகள் எனத் தமிழிலக்கியம் கொண்டாட வேண்டிய தனித்துவம் புரியும்.

7) பாடமாக்கிக் கொண்டு சொல்லும் வாய்ப்பாட்டை கொஞ்சம் மாத்திச் சொன்னால் தெளிவும் அதன் மடங்குத் தன்மை அழகாகவும் புலப்படும். என்னவென்றே புரியாமல் உச்சரித்துக் கொண்டும் பழி போட்டுக் கொண்டும் இருக்கும் கோட்பாடுகளின் நுண்ணியல்புகளை அறிந்தால் அதில் தேவையான கூறுகளும் மாற்ற வேண்டிய கூறுகளும் தெளிவாய்ப் புலப்படும்.

● ● ●

---

# மகுடம் மலையகச் சிறப்பிதழ்

ஈழத்து இலக்கிய உலகிற்கு புதுரத்தம் பாய்ச்சிய மலையக இலக்கியம் பற்றிய இதுவரை அறியப்படாத புதிய ஆய்வுகளையும், தகவல்களையும், தாங்கி, நவீன தமிழ் இலக்கியத்திற்கு அண்மைக் காலமாக மலையகம் ஆற்றி வரும் பங்களிப்பு தொடர்பாகவும் புதிய தகவல்களுடன் எமது அடுத்த மகுடம் (இதழ் -04) மலையகச் சிறப்பிதழாக மலரவுள்ளது.

(படைப்பாளிகளே உங்களது மலையகம் தொடர்பான ஆக்கபூர்வமான படைப்புக்களை மகுடம் ஆவலுடன் எதிர்பார்க்கின்றது.)

30-12-2012க்கு முன் உங்கள் படைப்புக்களை அனுப்பி இதழ் சிறப்புற உதவுங்கள்

-ஆசிரியர்-

(நாம் இதுவரை ஏற்றுக் கொண்டிருந்த இலக்கியக் கோட்பாடுகள் பிதாமகர்களுக்கான கனவுகள் இதற்கு இவர் அதற்கு அவர் என்ற மாயைகள் இவற்றின் மீதெல்லாம் புதிய கேள்விகளைத் தொடுக்கும் இக்கட்டுரை தொடர்பான மறுதலிப்புகளையும் கருத்துக்களையும் எதிர்பார்க்கின்றோம். -ஆசிரியர்.)

அ.ச.பாய்வா

# ஆதார நிலைகளில் மறுவினை – I -

## சில கேள்விகளை முன்வைத்து

உலகம் முன்வைக்கும் வளர்ச்சியின் வரைபடத்தில் நாமெங்கு நிற்கிறோம்? மூலோபாய தந்திரங்களால் நம்மை முன்னிலைப்படுத்தி நமக்கு நாமே சூட்டிக் கொண்டதைத் தவிர நாம் சாதித்ததென்ன? நம்மை முன்னிலைப்படுத்தும் ஈன நிலையிலிருந்து நாம் விடுதலையாவதெப்போ என்கிற கேள்விகள் நம்முள் எத்தனை பேருக்கு எழுகின்றனவோ தெரியாது.

நம் உச்ச வளர்ச்சி வெறும் பண்டைப் பழங்கணக்குகள் மீதான உசாவல்கள்தான். இந்தப் பண்டைப் பழங்கணக்குகளை கேள்வி கணக்கின்றி ஏற்றுக் கொள்ளும் நம் பிடிவாதம்தான். இன்னன்ன கேள்விக்கு இன்னன்னதான் விடையென்கிற ஒருவித ஆயத்த நிலையிலிருந்து விடுபடமுடியாத பழமை சார்ந்த மயக்க நிலைதான். பழமை என்கிற 'மம்மி'கள்மீது கொண்ட தீராத பிரேமையும் பிரமையும்தான்.

மனிதனைப் பெரும் விவாதங்களுக்கும், ஆழ்ந்த கருத்து வேற்றுமைகளுக்கும் புதிய சிந்தனைகளுக்கும் இட்டுச் செல்லும். 'கேள்வி' என்னும் படிமத்தைப் பண்டைய இலக்கியங்கள் மட்டில் நாம் பிரயோகிப்பதில்லை. ஏனவை கேள்விக்குட்படுத்தப்பட முடியாதவையா இல்லை, அவைகளைக் கேள்விக்குட்படுத்தும் தகுதி நமக்கில்லையா என்கிற கேள்விகளுக்கு விடை காண்பதிலிருந்து நாம் சமத்காரமாக விலகியே நிற்கிறோம்.

சமநிலையைக் குலைக்கக்கூடியதும் ஒழுங்கமைவைச் சிதைக்கக்கூடியதுமான நவீன இலக்கியங்கள் உருவாகும் இக்காலகட்டங்களில் பண்டைய இலக்கியங்கள் கேள்விக்குள்ளாக்கப்படுவது தவிர்க்க இயலாததே என்கிற ஒற்றைப் பதிலே இதற்குப் போதுமென எண்ணுகிறேன்.

கடலினைத் தாவும் குரங்கும், வெங்கனலிற் பிறந்தோர் செவ்விதட்பெண்ணும் வடமலை தாழ்ந்ததால் தென் திசைக்கு வந்து சமன் செய்த குறுமுனியும், நதியினுள்ளே மூழ்கிவந்த நாகருலகிலோர் பாம்பின் மகளை விதியுறவே மணஞ்செய்த திறல்வீமனும் கற்பனையெனக் கண்டோமில்லை. அவ்வாறு கண்டிருந்தால், தனது நெடும் பயணங்களாலும் உருமாற்றங்களாலும் அட்சய பாத்திரமென்கிற அமுத சுரபியைப் பெற்று உலகுக்களித்த 'தொல்தாய்' மணிமேகலையை விடுத்து உலகுக்கே அமுதத்தை உவந்தளிக்கும் பெண்மையின் அடையாளமாகக்



கருதப்படும் மணிமேகலையை வட்டித்தெறிந்து மதுரையை எரித்த கண்ணகியைத் தூக்கிப் பிடித்திருக்க மாட்டோம்.

தன் குடும்ப வெளி சிதைக்கப்பட்டதும், தன் வெடிப்பின் மூலம் ஒரு சமூக வெளியையே அழித்துத் (தீ யார் யாரையெல்லாம் பாதிக்கக்கூடாதென்கிற கருணை இணைப்பு வேறு) 'தன்' துயருக்கு வடிகால் சமைத்தவள் தானே கண்ணகி. தன் அவயவமும் தன் குடும்பமும் தான் என்பதும் மையமாகிப் போக பிற என்பவை அழிக்கப்படவேண்டுமென நம்பியவள்தானே கண்ணகியென்கிற காவியநாயகி.

உழைக்காமல் வறுமை வறுமை என்று பிதற்றிக் கொண்டே வீட்டுக்குள் அடைந்துகிடந்து முழுநேர ஊழியராக இருபத்தேழு பிள்ளைகளைப் பெற்று மனைவியையும் மனநோயாளியாக்கிய குசேலரின் கதை கூறும் 'குசேலோபாக்கியானமும்' ஒரு பழந்தமிழிலக்கியந்தான். உழைக்காமல் கடவுளுக்கே (கிருஷ்ண பரமாத்மா) அல்வா (அவல்) கொடுத்து செல்வத்தில் உயர்ந்த மனிதனின் கதைதான் அது.

பனிநிறைந்த, பிராணவாயுவற்ற இமயத்தை மனிதன் வெற்றி கொண்டதே நாற்பதுகளில்தான். ஆனால் பன்னூற்றாண்டுகளுக்கு முன் இமயத்தை வென்றங்கு சேரன் எவ்வாறு கொடியேற்றினான் என்பதற்கு இதுவரை விடையில்லை. 'தாஜ்மஹாலின்' முன்னின்று நிழற்படமெடுக்கும் விவஸ்தையில்லாத காதலர்களைப்

போன்றுதான் நம் பழமை மீதான விவஸ்தைகளும் நம்பிக்கைகளும்.

(தாஜ்மஹாலினுள்ளிருப்பது மும்தாஜ் அல்ல. ஷாஜஹானின் செவிலித் தாய். மும்தாஜ், புகழ் பெற்று விடுவதை விரும்பாத ஔரங்கசீப் அவளது உடலை ஏற்கனவே அகற்றி விட்டதாகவும் ஒரு வரலாறுண்டு.)

ஈராயிரமாண்டு பழமை வாய்ந்த நம் இலக்கியம் இரு நூற்றாண்டு இலக்கியத்தின் முன் தவண்டையடிப்பதை மறந்து விட்டு கல்தோன்றி மண்தோன்றாக் காலத்து முன்தோன்றிய மூத்த குரங்கு தமிழ்க்குரங்கே என்பது முதல் 'ஓம்' என்கிற பிரணவ முட்டையை உடைத்துக் கொண்டு வெளிவந்த கற்பனைகளை நிறுவுதலென்கிற வரை காலவித்தியாசத்தின் குரூரங்களாகவே வாழ்ந்து கொண்டிருக்கிறோம்.

தமிழ் சைவத்தாலும் சைவம் தமிழாலும் வளர்ந்த வரலாறு ஒருபுறமிருக்க, தமிழை சைவத்துக்குரிய தொன்றாகக் கொள்ளும் (சைவமும் தமிழும் ஒன்று என்பது போன்ற) ஒரு மௌன எடுகோளின் அடிப்படையில் ஏனைய மதத்தவர்கள் ஆக்கி வைத்தவற்றின்மீது தமிழுக்காற்றிய தொண்டு என்கிற பெயர்ச் சுட்டியை ஒட்டிவிடுவதும் தமிழிலக்கிய வரலாற்றில் நிகழ்ந்த விபத்தல்ல. (பேராசிரியர் கா.சிவத்தம்பி) இதற்குள் இஸ்லாமியத் தமிழ் என்கிற விஷமத்தனமான கோட்பாடு வேறு. (இதுபற்றி பிறிதொரு இதழில் ஆராயப்படும்)

ஒரு மொழியை குறிப்பிட்டதொரு சமயத்துக் குரியதாகக் கொண்டாடும் வழக்கம் உலகில் நாம் கேள்விப்படாததொன்று. உலக மொழியான ஆங்கிலம் அதன் பேச்சு வழக்கினால் (American English, British English) மாற்றங் கொண்டதே தவிர அதனை எந்தக் கடவுளும் கொண்டுவந்து கொடுத்ததாகத் தகவலில்லை.

யாரோ சொன்னது போல் தொன்மையென்கிற பிரமிப்புடன் யுகம்யுகமாய் மந்தமாய் அவலட்சண உறக்கம் கொள்ளும் 'பிரமிட்டுகள்'தான் நாம். ஈராயிரமாண்டு பழமை வாய்ந்த நம் இலக்கிய வளம் நவீன இலக்கியத்துக்குச் சேர்த்த பெருமை தான் என்ன? உருவத்துக்கு முக்கியத் துவம் கொடுத்தோமே தவிர நம்மிலக்கியம் உத் வேகம் பெறவில்லை. அதனையும் மீறி எழுச்சி பெறும் சில முயற்சிகளும் காயடிக்கப்பட்டதே வரலாறு.

**தன் குடும்ப வெளி சிதைக்கப்பட்டதும் தன் வெறுப்பின் மூலம் ஒரு சமூக வெளியையே அழித்துத் (தீ யார் யாரையெல்லாம் பாதிக்கக் கூடாதென்கிற கருணை இணைப்பு வேறு) 'தன்' துயருக்கு வடிகால் சமைத்தவள் தானே கண்ணகி. தன் அவயவமும் தன் குடும்பமும் தான் என்பதும் மையமாகிப் போக பிற என்பவை அழிக்கப்படவேண்டுமென நம்பியவள் தானே கண்ணகி யென்கிற காவியநாயகி.**

தமிழின் ஒற்றைச் சோக்கிரட்டீஸ் வள்ளுவரையும் பாரதியையும் வைத்துக்கொண்டு இன்னும் எத்தனை காலத்துக்கு உடுக்கடிக்கப் போகிறோம்?

இந்தக் கேள்விகளின் காலநீட்சி முறியடிப்பு பற்றிய விவாதங்கள் நம்முட் சிலருள் மௌனமாய் அல்லது மந்த கதியில் நிகழ்ந்தாலும் அதன் உத்வேகம் பெறப்போகும் காலம் எத்தகையது அல்லது எத்துணை சக்தி வாய்ந்தது என்பதற்கெல்லாம் இப்போது விடையில்லை.

சிறுகதைக்கு 'ஊனாவும் ஊவன்னாவும்' கவிதைக்கு 'ஆனாவும் ஆவன்னாவும்' நாவலுக்கு 'டோவன்னாவும் டையன்னாவும்' எனச் சில சில சுய பிரதிஷ்டைகளை தங்களுக்குள் நிகழ்த்தும் இலக்கியச் சண்டியர்கள் முற்போக்கர் காலத்தில் மட்டுமல்ல, இன்றும் இருந்து கொண்டுதானிருக்கிறார்கள்.

கருவிலிருந்தே எழுத்தாணிகளோடு குதித்து வந்தவர்கள் தாங்கள் என்றும் எந்த எழுத்துமே தங்களைப் பாதிக்காத அதிபரிசுத்தவான்கள் என்றும் தங்களைப் பிரகடனப்படுத்துவதில் மிகுந்த கவனமும் சிரமமும் எடுத்துக் கொள்ளும் இவர்களில் சிலர் 'நொபேல்' பரிசுக் கனவுகளில் மிதப்பவர்கள்.

உலக இலக்கியங்கள் மேற்கத்தைய தத்துவங் களிரண்டுமே புதுமைப்பித்தனைப் பாதித்திருக்கின்றன. அந்த உலகப் போக்குகள் பாதிக்கும்படி தன் மனக் கதவுகளை அவர் திறந்தே வைத்திருந்தது முக்கியமானது. ஆங்கில மொழியின் பாதிப்புகளைக் கொண்டது. அவரது தமிழ். அது அவர் கண்ட அம் மொழியின் அழகியல் சார்ந்தது.

இருபது வயது வாக்கில் தன் முதற் கதையை எழுதிய சு.ரா. உண்மையிலது புதுமைப்பித்தன் மீது தான் கொண்டிருந்த பித்து உச்சக் கட்டத்திலிருந்த காலத்தில் எழுதியதாகவும் அக்கதை முற்றிலும் புதுமைப்பித்தன் எதிரொலிகளைக் கொண்டிருந்ததாகவும் தன் சாட்சியத்தை நேர்மையாகப் பதிவு செய்கிறார்.

ஆக, படிப்பனுபவத்திலிருந்து படைப்பனுபவத்தைப் பிரித்துவிட முடியுமென்று தோணவில்லை. சிறந்த படைப்புகளைப் படிக்கும்போது இதுபோல் நம்மால் எழுதமுடியுமா என்கிற ஆதங்கம் தோன்றும். இந்த ஆதங்கமே படைப்பை உருவாக்கும் சக்தியாகப் பரிணமிக்கிறது.

இந்திய எழுத்துக்களைப் பிரமிப்புடன் பார்த்த காலமொன்றிருந்தது. ஒரு படைப்போ நூலோ தமிழகத்தில் வெளிவருவது அதன் தரத்துக்குச் சான்று என்கிற மாயைக்குள்ளாகியிருக்கின்றோம். இன்றும்.

இந்திய எழுத்தாளர்களின் பட்டியலில் இடம்பிடிக்கும் அவஸ்தையும் சிலர் எழுத்துக்களில் தொனிப்பதை உணரமுடிகிறது. (ஈழத்தி லிருந்து ஒருகுறிப்பிட்ட சில எழுத்துக்களே தனக்குப் படிக்கக் கிடைப்பதாக ஜெயமோகன் தனது நூலொன்றில் குறிப்பிட் டிருப்பது நினைவுக்கு வருகிறது.)

ஆசையின் காரணமாகத் தனக்குத் தானே சூட்டிக் கொள்ளும் கிரீடங்கள் இலக்கிய உலகில் செல்லு படியாகா. தங்களைப் பெரிய படைப்பாளிகளென்று கூறிக் கொள்பவர்களையும் அவ்வாறு தோரணை கொள்ப வர்களையும் அவ்வாறு யாராவது சொல்லும்போது வெட்கமின்றி முகத்தில் வாரி அப்பிக் கொள்பவர்களையும் தமிழ் சூழலில் நிறையவே பார்த்தாகி விட்டது.

தங்கள் பெயர்களுக்குப் பின்னால் என்றோ தொலைந்து போன தம் தொழில்களைக்கூடத் துறந்து விட முடியாமல் 'முன்னாள்' என்று எழுதி விகாரங் கொள்பவர்களாயும் 'கலாபூஷண' விருதுக்காய் அரச அலுவலகங்களில் நாக்கைத் தொங்கப் போட்டுக் கொண்டு

திரிபவர்களாயும் தங்கள் பெயர்களோடு சேர்ந்த அடைமொழிக்காய் அலைபவர்களாயும் தானறிந்த மொழிக்குள் மட்டும் தன் படைப்பாற்றலைச் சுருக்கிக் கொள்பவர்களாயும் 'மரியாதைராமன்' போன்ற கதாரசனையிலிருந்து விமுக்தி பெற விரும்பாது ரசஞான சிகரங்களாகவே இன்னும் எத்தனை காலம் வாழப் போகிறோமோ யாமறியோம் பராபராமே.

**யாரோ சொன்னது போல் தொன்மையென்கிற பிரமிப்புடன் யுகம்யுகமாய் மந்தமாய் அவலட்சண உறக்கம் கொள்ளும் 'பிரமிட்டுகள்'தான் நாம் ஈராயிரமாண்டு பழமை வாய்ந்த நம் இலக்கிய வளம்நவீன இலக்கியத்துக்குச் சேர்த்த பெருமை தான் என்ன? உருவத்துக்கு முக்கியத்துவம் கொடுத்தோமே தவிர நம்மிலக்கியம் உத்வேகம் பெறவில்லை. அதனையும் மீறி எழுச்சி பெறும் சில முயற்சிகளும் காயடிக்கப்பட்டதே வரலாறு.**

**தமிழின் ஒற்றைச் சோக்கிரட்டீஸ் வள்ளுவரையும் பாரதியையும் வைத்துக்கொண்டு இன்னும் எத்தனை காலத்துக்கு உடுக்கடிக்கப்போகிறோம்?**

## ஆதார நிலைகளில் மறுவினை - II -

இலக்கியத்துக்கு விமர்சனம் தேவையா என்று கேட்டால் இல்லையென்றுதான் சொல்வேன். விமர்சனத்தால் இலக்கியமும் அதன் ரசனையும் உயர்ந்துள்ளது என்ற கருத்தை நான் ஏற்கவில்லை. மனிதாபிமான தனிநபர்வாத இலக்கிய விமர்சனம், விமர்சனமென்கிற தளத்திலிருந்து ஆய்வுப் பாங்கான ஒருவகைக் கோட்பாட்டுத் தளத்தை நோக்கி நகர்வதும் இதற்கொரு காரணமாகலாம்.

இலக்கிய ரசனையும் மதிப்பீடும் வாசக தளத்தில் அந்தரங்கமாக நிகழ்ந்து முழுமை பெறுதலே போதும். வாசகனின் உணர்வுத் தளம் படைப்பாளியின் உணர்வுத் தளத்துக்கு நிகராவதில்லை என்பது மட்டுமல்ல, நிராகரிக்கமுடியாது என்பதே உண்மை. அதுவே எனது வாதமும்.

யாவும் கற்பனையென்கிற விவகாரமே துரதிர்ஷ்டம் வாய்ந்த பதப் பிரயோகந்தான். பார்வையனுபவமற்றவர்களின் மொழியில் சம்பவ சோடனை விவகாரமடைவதுதான். நிரூபிப்பதல்ல, அபிப்பிராயத்தைப் பற்றிய அபிப்பிராயமே விமர்சனமென நான் ஒருவன். சுயபாதிப்புத் தன்மை கொண்ட படைப்புகள் தன்னை எவ்வாறு பாதிக்கின்றன என்கிற தனது ஆதார எண்ணங்களுக்கப்பால் செல்லாது நிறுத்திக் கொள்வதே விமர்சனத்துக்கான எல்லை. அதற்கப்பால் இலக்கியம் எவ்வாறு படைக்கப்பட வேண்டுமென்று பேசுவதற்கான அருகதை அவனுக்கில்லை.

ஒருவன் சிருஷ்டிக்க எண்ணியிருந்த அதே உணர்வுகளனைத்தையும் அவன் சிருஷ்டித்து விடுகின்ற உணர்வுகளாகி விடுவதில்லை என்பதால்தான் விமர்சனம் எனக்குள் கேள்விக்குள்ளாகிறது. அதற்கப்பால் ஒரு வாசகனோ அன்றி விமர்சகனோ பெறுகின்ற அனுபவம் வெவ்வேறானவை. படைப்பதற்கு முன் படைப்பிருந்த நிலை, படைத்த பின் அதுவே தன்னினின்று வேறாகிச் செல்லும் நிலை ஆகியன விமர்சகனால் உணரப்படுவதில்லை. தன் படைப்பே முழுமை பெறவில்லை என ஆதங்கப்படுமொரு படைப்பாளியை எவ்வாறு விமர்சிக்க முடியும்? படைப்புக்கள் என்றைக்குமே முழுமை பெறுவதில்லை என்பதுதானே யதார்த்தமுங்கூட.

**தங்கள் பெயர்களுக்குப் பின்னால் என்றோ தொலைந்து போன தம் தொழில்களைக்கூடத் துறந்து விட முடியாமல் 'முன்னாள்' என்று எழுதி விகாரங் கொள்பவர்களாயும் 'கலாபூஷண' விருதுக்காய் அரச அலுவலகங்களில் நாக்கைத் தொங்கப் போட்டுக் கொண்டு திரிபவர்களாயும் தங்கள் பெயர்களோடு சேர்ந்த அடைமொழிக்காய் அலைபவர்களாயும் தானறிந்த மொழிக்குள் மட்டும் தன் படைப்பாற்றலைச் சுருக்கிக் கொள்பவர்களாயும் 'மரியாதை ராமன்' போன்ற கதாரசனையிலிருந்து விமுக்தி பெற விரும்பாது ரசஞான சிகரங்களாகவே இன்னும் எத்தனை காலம் வாழப் போகிறோமோ யாமறியோம் பராபராமே.**

இலக்கியத்தின் போக்கைத் தீர்மானிப்பவன் தானேயென்று எண்ணுகின்ற இன்றைய வாசகர்களால் படைப்பின் ஒரு பகுதியை மட்டுமே தரிசிக்க முடியும். படைப்பின் அழகியற் கோணத்தை தாண்டாதவரை படைப்பாளியை விமர்சகனால் நெருங்கவே முடியாது. கவிதை போன்ற ஒரு நுட்பமான தளத்தை ஒருவனால் எவ்வாறு விமர்சிக்க முடியும்? இலக்கியத்தின் வாழ்க்கைச் சலனங்களையும் அதன் அடியோட்ட அர்த்தங்களையும் உள்ளடக்கிய பார்வை கொண்ட விமர்சகர்கள் நம்மில் யார் இருக்கிறார்கள்?

தன் சிந்தனானுபவத்தை மொழியெனும் ஊடகம் மூலம் வெளிப்படுத்துவதே யொழிய ஒரு இலக்கியக்காரனின் அக்கறையை புரிய வைப்பதில்லை. ஏனெனில் வாழ்வின் சலனங்கள்தான் மொழிரூபம் பெற்றிருக்குமே தவிர, அதன் அடியோட்ட அர்த்தங்களும் தனித்துவமான பார்வையுமல்ல.

ஒரு படைப்பின் இலக்கிய வளத்தை மட்டும் மதிப்பீடு செய்வதற்கப்பால் படைப்பின் மூலாதாரத்தை இவர்கள் நாடுவதில்லை. இவர்களால் தொடவும் முடிவதில்லை. இதனையும் மீறி தனது சுயேச்சையையும் தனித்துவத்தையுமிழந்த படைப்பாளியே விமர்சகனிடம் பிழைப்புக்காக கையேந்துபவனாகிறான்.

அண்மையில் நண்பரொருவர் தான் உள்ளூர் கிறிஸ்தவ சஞ்சிகையொன்றை புரட்டியபோது, தன்னையொரு விமர்சகராக கருதுமொருவர் கலண்டர் கவிஞரான தனது கணவர் உட்பட கிழக்கின் எழுத்தாளர்கள் சிலரைப் பட்டியலிட்டிருந்ததாகவும் அப்பட்டியலில் தனது பெயரில்லை எனவும் ஆதங்கப்பட்டு (இத்தனைக்கும் நானந்தக் குறிப்பிட்ட சஞ்சிகையில் எழுதுமொருவன்) இதுவொரு திட்டமிட்ட வேலையென்பதால் காட்டமான

**தமிழ் சைவத்தாலும் சைவம் தமிழாலும் வளர்ந்த வரலாறு ஒருபுறமிருக்க, தமிழை சைவத்துக்குரிய தொன்றாகக் கொள்ளும் (சைவமும் தமிழும் ஒன்று என்பது போன்ற) ஒரு மௌன எடுகோளின் அடிப்படையில் ஏனைய மதத்தவர்கள் ஆக்கி வைத்தவற்றின்மீது தமிழுக்காற்றிய தொண்டு என்கிற பெயர்ச் சுட்டியை ஒட்டிவிடுவதும் தமிழிலக்கிய வரலாற்றில் நிகழ்ந்த விபத்தல்ல. (பேராசிரியர் கா.சிவத்தம்பி) இதற்குள் இஸ்லாமியத் தமிழ் என்கிற விஷமத்தனமான கோட்பாடு வேறு.**

பதிலொன்றை எழுதும் படி என்னைக் கேட்டுக் கொண்டார். நானெவருக்குமே பதிலெழுதுவதில்லை. எனவே பதிலெழுதிப் புரிய யேண்டியளவிற்குப் புரியாதவர்களோடும் பட்டிய லிபவர்களோடும் நமக்கென்ன சரசமென்று மறுத்து விட்டேன். (இவ்வாறு விமர்சகரென்றில்லாது பட்டியலிடுவதற்கென்றே நம்முட்பலர் உருவாகிக் கொண்டிருப்பது நமது துர்ப்பாக்கியம்.) கல்விப் பின்புலத்தில் பட்டங்களை மூட்டையாய் முதுகில் சுமந்து நிற்பதையெல்லாம் விமர்சகராவதற்கான தகுதிகளல்ல என்பதை யாராவது இவர்களுக்குப் புரியவையுங்கள்.

சமூகமும் இலக்கியமும், படைப்பாளியும் அவன் பின்புலமும், படைப்புமதன் காலமும், படைப்புமதன் தளமுமென்கிற பார்வைகளூடாக விமர்சனத்துக்குக் கனதி சேர்த்த சிவத்தம்பி, தனையசிங்கம், நுஃமான் போன்றவர்களை யடுத்து ஒரு பாரிய வெற்றிடம் உள்ளதும் கவனத்திற்குரியது. வாழ்வின் வகைமையை வெளிப்படுத்த 'வாழ்கியலனுபவம்' ஒரு படைப்பாளிக்கு எத்தனை முக்கியமோ அதேயளவு முக்கியம் ஒரு விமர்சகனுக்கும் இருக்க வேண்டுமென்பதற்கு அந்த மூவரும் நல்ல உதாரணம். அவர்களின் பொறிகளில் பதிவுள் வீழ்ந்தளவுக்கு ஏனையோரிலது நிகழவில்லை.

இலக்கியப் படைப்பை வெறும் தகவல்களாக்கி இன்று எழுதப்படுபவை உரைகளே. இந்த உரையாசிரிய மரபே விமர்சன மரபாகப் பொதுமைப்படுத்தப்படுவதும் படைப்பாளி இதனைக் கண்டும் காணாதது போல் நடந்து கொள்வதும் இலக்கியத்துக்குவப்பாகா. படைப்பில் இல்லாததைச் சொல்வதும் அறிமுகஞ் சார்ந்த பிரேமைகளில் மூழ்குவதும் உள் நோக்கங்கொண்ட பார்வைகளும் உயர்த்துவது அல்லது அதே விகித அளவுக்கு குறைத்து மதிப்பிடுவதென்கிற சில அளவு கோல்களோடு படைப்பை அணுகுவதென்பதெல்லாம் தமிழ்ச் சூழலில் ஆரோக்கியமானவைகளல்ல.

மூன்றாவது மனிதனாக விமர்சகன் மூக்கு நுழைப்பதைத் தவிர்த்து படைப்பாளிளும் வாசகனும் கைகோர்த்து நிற்குமந்த அந்தரங்க வெளியிலவர்களை விட்டு விடுவதே நலம்.

● ● ●



கண்ணகி ஓவியம் : க.ரினுஜா

## மேய்ப்பனை இழந்த வெளி

ஒவ்வொரு
நம்பிக்கைச் சொற்களாய்
கழன்று விழுகின்ற
காலக் கடப்பொன்றில்
மீண்டும்
அர்த்தமில்லாமல்
கழிகிறது எங்கள் வாழ்வு
அரசியலே இல்லாமல்
இருந்திருக்கலாம்
அழுகிறது பட்டறிவு
கல் தோன்றி
மண் தோன்றாக் காலத்து...
உச்சரிக்கும் போதே
உள்ளுக்குள்
அழுகின்றது மனம்
முப்பது வருடச் சுமையை
எங்கே இறக்கி வைப்பது
புரியாமல் விழிக்கிறது
மேய்ப்பன் இழந்த வெளி

**புலோலியூர் வேல்நந்தன்**

# யாருமிங்கே தீர்ப்பிடலாம்......




சிறுகதை

## வி.மைக்கல்கொலின்

ஒலிவமலை மலையடிவாரம் என்றுமில்லாதவாறு தகதகத்துக் கொண்டிருந்தது. மாலைச்சூரியன் தன் பொன்னிறக் கதிர்களை மேலிருந்து எங்கும் விசிறிக் கொண்டிருந்தாலும் மலையடி வாரத்தின் கீழே ஒரு மனிதச்சூரியன் நின்றது அங்கே மேலும் மேலும் ஒளிச் செறிவை அதிகரித்துக் கொண்டிருந்தது.

ஆம் இயேசுகிறிஸ்து என்னும் தேவசூரியன் ஒலிவ மலையின் மேலே தனது தந்தையாம் பரமபிதாவுடனான சம்பாஷனைகளை முடித்துக் கொண்டு கீழே இறங்கி வந்திருந்தது.

தூரத்தே அவரது போதனைகளை கேட்பதற் காகவும் அவரிடம் ஆசி பெறுவதற்குமாக வழமை போலவே மக்கள் பெருங்கூட்டம் திரளாக திரண்டிருந்தது. சற்று ஓய்வு பெறும் பொருட்டு இயேசு மலையடிவார மணல்வெளியில் அமர்ந்தார்.

திடீரென அங்கு ஒரு கும்பல் வந்து நின்றது. அவர்கள் ஒரு அபலைப் பெண்ணை இழுத்து வந்து அவரின் முன்னே தள்ளினார்கள். மறைநூல் அறிஞர்களும் பரிசேயர்களும் வேதபராகர்களும் தலைமைக்குருக்களும் அவரை ஏளனமாகப் பார்த்துக் கொண்டனர். அவரை எப்படியாவது தமது கேள்விகள் மூலமும் அவரது நடத்தைகளையும் போதனைகளையும் வைத்தே அவர் மேல் குற்றம் கற்பித்து அவர் மீதான தமது யுத்தத்தை ஆரம்பித்துவிட வேண்டும் என்பதும் அந்த யுத்தத்தில் அவரை பழி வாங்கி கொலை செய்துவிட வேண்டும் என்பதும் அவர்களது நீண்டநாள் ஆசையாக இருந்தது.

மேசே தமக்களித்த திருச்சட்டங்களை மீறுபவராகவும் புதியபுதிய வேதபாராயணங்களை பிரசங்கிப்பவராகவும் இயேசு விளங்கியதால் அவர்களது மரபுவழி ஆளுகை மக்கள் மத்தியில் செல்வாக்கு இழந்து போவது பற்றிய பெருங்கவலை அவர்களை ஆட்கொண்டிருந்தது.

சீசருக்கு வரி செலுத்துவது தொடர்பான இயேசுவின் கருத்தினை அறிந்து அதன்மூலம் அவரை இராஜதுரோக குற்றச்சாட்டின் மூலம் அரச விரோதியாக்கிவிட எடுத்த முயற்சிகளும் அவர் ஒரு நாணயத்தில் பொறிக்கப் பட்டிருந்த உருவத்தையும் எழுத்தையும் குறிப்பிட்டு 'சீசருக்கு உரியதை சீசருக்கும் கடவுளுக்கு உரியதை கடவுளுக்கும் கொடுங்கள்.' என உரைத்ததை தொடர்ந்து அவர்களால் அவர்மேல் குற்றம் சாட்ட முடியவில்லை. இப்படி எத்தனையோ நிகழ்வுகள். அவரை பலமுறை குற்றவாளியாக்கி தீர்ப்பிட முனைந்த யூ தர்களும் பரியேசரும் மறைநூல் வல்லுநர்களும் கடைசியாக கையிலெடுத்த ஆயுதம் பெண். அதுவும் விபச்சாரப் பெண்.

'போதகரே இப்பெண் விபச்சாரத்தில் ஈடுபட்டிருந்த வேளை கையும் மெய்யுமாகப் பிடிபட்டாள். இப்படிப்பட்டவர்களை கல்லால் எறிந்து கொல்ல வேண்டும் என்பது மேசே நமக்குக் கொடுத்த திருச்சட்டத்திலுள்ள கட்டளை. நீர் என்ன சொல்லுகின்றீர்' எனக் கேட்டனர்.

‘ஒருவரது வாக்குமூலத்தைக் கேளாது அவர் என்ன செய்தாரென்று அறியாமல் ஏன் செய்தாரென்று புரியாமல்? ஒருவருக்கு தீர்ப்பளிப்பதுதான் மோசேஸ் உங்களுக்கு அளித்த திருச்சட்டமா…?’ இயேசு புன்னகைத்தபடியே மறுவினாவினைத் தொடுத்தார். அக் கேள்விக்கு அவர்களால் உடனடியாகப் பதில் சொல்லிவிட முடியவில்லை. மறைநூலில் கூறியுள்ளதைப் போன்று கலிலேயர்களிலிருந்து இறைவாக்கினர் ஒருவரும் தோன்றுவதில்லை என்ற நம்பிக்கை கொண்ட அவர்கள் இயேசுவைப் பார்த்து ‘மோசேயின் திருச்சட்டமே எங்களுக்குப் பெரியது. அவரது திருச்சட்ட நூலில் உள்ளபடியே விபச்சாரத்தில் ஈடுபட்டவர்கள் கல்லால் எறிந்து கொல்லப்பட வேண்டும் என்பது நியதி. எனவே இவள் கொல்லப்பட வேண்டியவளே’ என வாதிட்டனர்.

‘மோசேயின் திருச்சட்டத்தின் மூலம் இன்று விடுமுறை நாளாக இருந்தால் இவள் மீது நீங்கள் கல்லெறிந்து கொல்வது அவரது ஓய்வுநாள் சட்டத்தை மீறுவது போலாகி




விடாது..?’ என்று அவர் கேட்டதும் அவர்கள் திகைத்து நின்றனர்.

ஒருமுறை பார்வையற்ற ஒருவனுக்கு இயேசு ஓய்வுநாள் தினமொன்றில் அவனது பார்வையற்ற கண்களின் மேல் சேற்றைப் பூசி பின் அதனை கழுவச் சொல்லி அவனுக்கு பார்வை வழங்கியதும் அன்றைய தினம் ஓய்வு நாளாக இருந்ததை காரணம் காட்டி அவரை ஒழித்துக் கட்ட அவர்கள் முயன்றதும் அவர்களுக்கு ஞாபகத்திற்கு வந்தது. தமது ஓய்வு நாள் சட்டத்தை வைத்து அவர் மீண்டும் தம்மையே திருப்பித் தாக்குவது அவர்களுக்குப் புரிந்தது. அவர் தொடர்ந்து அவர்களை நோக்கி ‘தன் வயிற்றின் பசி போக்க இப் பெண் தனது உடலை விற்று விபச்சாரம் செய்தாள். இன்று உங்களில் எத்தனையோ பேர் தாம் கொண்ட கொள்கைகளை கைவிட்டு தமது கடந்த கால செயற்பாடுகளை மறந்து தமது ஆடம்பர வாழ்க்கைக்கும் உல்லாச பயணங்களுக்கும் என தமது கொள்கைகளை விற்று பிழைப்பு நடாத்துகிறார்கள். தமது சுயலாபங்களுக்காக தம்மை நம்பிய மக்களையே விற்று மன ரீதியாகவும், உடல் ரீதியாகவும், கொள்கை ரீதியாகவும் விபச்சாரம் செய்யும் பலபேர் ஊருக்குள் திரியும் போது அவர்கள் மீது உங்கள் சட்டம் பாயவில்லை. அவர்களைக் கல்லெறிந்து கொல்லுவது யார்? நீங்களே அவர்களாக இருக்கும் போது உங்களுக்கு யார் இங்கு தீர்ப்பு வழங்க முடியும்? எனக் கேட்டார்.

அவர் மறைமுகமாகவும் நேரிடையாகவும் தாம் சார்ந்தோரைப் பற்றி கேள்வி எழுப்புவது அவர்களுக்குப் புரிந்தது. இருந்தாலும் தன் முயற்சியில் சற்றும் மனந்தளராத விக்கிரமாதித்தனைப் போல் அவர்கள் மீண்டும் மீண்டும் அந்த விபச்சாரப் பெண்ணின் மீது கல்லெறிவது தொடர்பாகவே அவருடன் வாதிட்டனர். அவர் மௌனமாக அந்த மணல்வெளியில் மணலைத் துளாவி அதில் தனது விரலால் சில எழுத்துக்களை எழுதினார். எபிரேய மொழியில் அதில் ‘சிகப்பு நிற அங்கி அணிந்த நீ நேற்று இவளுடன் விபச்சாரம் செய்யவில்லையா…?’ என்ற வினா வடிவம் கொண்டிருந்தது. அதனைப் பார்த்த ஒருசில தலைமைக் குருக்கள் அவ்விடத்தை விட்டகல பரிசேயர்களும் மறைநூல் அறிஞர்களும் மீண்டும் மீண்டும் அவரை ஓயாது கேள்வி கேட்டுக் கொண்டிருந்தனர்.

இயேசு நிமிர்ந்து பார்த்து அவர்களை நோக்கி “உங்களில் பாவம் செய்யாதவன் இவள் மேல் முதல் கல்லை எறிந்து தீர்ப்பிடட்டும். அதே வேளை இவளுடன் விபச்சாரத்தில் ஈடுபட்டவளையும் கையும் களவுமாகப் பிடித்த நீங்கள் அவனையும் அழைத்து வாருங்கள். இருவருக்கும் தண்டனைகள் சமமாக இருக்கட்டும்” எனக் கூறிவிட்டு மீண்டும் மண்ணில் எதையோ எழுதத் தொடங்கினார். மறைநூல் அறிஞர்களும் பரிசேயர்களும் தலைமைக் குருக்களும் மெல்ல மெல்ல அவ்விடத்தை விட்டு அகலத் தொடங்கினர்.

‘அம்மா’ என்ற வீறிட்ட அலறல்!

அந்தப் பெண்ணின் நெற்றிப் பொட்டில் ஒரு கல் எறியப்பட்டு இரத்தம் வடிந்து கொண்டிருந்தது. இயேசு கிறிஸ்து திகைத்து நிற்க அடுத்த கல் அவரை நோக்கி வந்து அவரது கபாலத்தை தாக்கியது. தேவமகன் பட வேண்டிய பாடுகளின் காலம் வரும்வரை பல நேரங்களில் மாயமாய் மறைந்து அவர்களுக்கு போக்கு காட்டிய இயேசு தான் பாடுகள் பட வேண்டிய காலம் நெருங்கி வருவதை அறிந்தவராக அந்தக் கல்லெறிகளைத் தாங்கிக் கொண்டார். அவரது கபாலம் பிளந்து இரத்தம் வழிந்தது.அவர் அவர்களை நிமிர்ந்து பார்த்தார்.மேலும் கற்களை எறிந்து தீர்ப்பிட தயாராகிக் கொண்டிருந்தவர்கள் யாரென்றால் - கல் தோன்றி மண் தோன்றாக் காலத்தே முன் தோன்றிய மூத்த குடிகளில் ஒருசிலர்.

● ● ●



# ராகவனின் மௌனமே வாழ்க்கையாக.....

## உலகச் சிற்றிதழ்களில் இதுவரை வெளிவராத மிக நீண்ட நேர்காணலின் இரண்டாம் பகுதி

ச.இராகவன்: ஈழத்தின் வடபுல யாழ்ப்பாணத்தின் கரவெட்டியில் 11.08.1976 இல் பிறந்தவர். கரவெட்டியிலேயே வாழ்ந்து வருகிறார். ஈழத்தின் இன்றைய இளைய தலைமுறை எழுத்தாளர்களில் குறிப்பிடத் தகுந்தவர். 30 இற்கும் மேற்பட்ட சிறுகதைகளை எழுதியுள்ள இவரது 'கலாவல்லி முதலான கதைகள்', 'விட்டில் ஒரு சமகால அரசியல் பகுப்பாய்வு' ஆகிய சிறுகதைத் தொகுப்புக்கள் அண்மையில் வெளிவந்துள்ளன. இலங்கையின் இனச்சிக்கலுக்குக் காரணமான சிங்கள அரச வன்முறையின் பரிமாணங்களை அதன் தத்துவார்த்த அரசியற் பின்னணியை தனது கதைகளில் பல்வேறு வடிவங்களில் பதிவு செய்துள்ளார். 'மூக்குப்பேணி' என்ற குறும்பட இயக்குநர் , சித்திரக் கலைஞர், கவிஞர், திரைப்பட விமர்சகர் முதலான பரிமாணங்களையுடைய இராகவன் தன் படைப்புக்கள் மீதான விமர்சனங்களுக்கு மௌனத்தையே பதிலாகத் தருபவர். முழுமையான ஒரு நேர்காணலுக்காக இராகவனை அணுகியபோது மறுக்காது சம்மதித்தார். 2010 - 2011 ஏறத்தாழ ஒரு வருட காலப்பகுதியில் எழுதிப் பெறப்பட்ட இந் நேர்காணல் ஒரு காலப்பதிவாக அமைந்துள்ளது. ஒவ்வொரு தடவை படிக்கிறபோதும் ஒரு புதினத்தை வாசிப்பது போன்று இருக்கிறது. இராகவன் தனது பாடசாலை நாட்களை, ஆசிரியர்களை, சந்தித்த மனிதர்களை, காதல் முதலானவற்றை நினைவு கூர்வதும் 1980 களின் பிற்கூறில் யாழ்ப்பாணம் - வடமராட்சி, இராகவன் என்ற மனிதனது வாழ்வு, நாம் அறியாத மனிதர்கள் - சம்பவங்கள், பல்கலைக்கழகக் காலம், நவீன தமிழ் இலக்கியம், இலக்கிய இதழ்கள் என்று நினைவிலிருந்து எழுதிச் செல்லும் ஒவ்வொரு பகுதியுமே வரலாற்று நாவலுக்குரிய தன்மையைக் கொண்டுள்ளது.

தேர்ந்த வாசகனான இராகவன், புத்தகங்களே தன் வாழ்வை மாற்றியதாவும் வாழ்வின் இறுதிவரை வாசிப்பதும் எழுதுவதுமே வாழ்விற்கு அர்த்தம் தருவதாவும் குறிப்பிடுகிறார். இராகவன்: மனிதர்கள் மற்றும் சமூகத்தின் மீதான நுண்மையான கூர்ந்த அவதானிப்புடன் கூடிய விமர்சனத்தை கலாபூர்வமாகத் தேர்ந்தெடுத்த சொற்களால் சொல்லோவியமாக வரையும் நம் காலத்தின் கலைஞன். யாழ் பல்கலைக்கழக முகாமைத்துவ பீட பட்டதாரியான இவர் சமுர்த்திவங்கி முகாமையாளராகப் பணிபுரிகிறார்.

பா.துவாரகன்



**முப்பதிற்கும் மேற்பட்ட சிறுகதைகள் எழுதியிருக்கிறீர்கள். உங்களது ஆரம்ப கால சிறுகதைகள் வழமையான சிறு கதையின் பண்பைக் கொண்டிருந்தன. பின்னர் வெவ்வேறு வடிவங்களில் எழுத ஆரம்பித்து நுட்பமான வடிவத்தையும் உத்திகளையும் கையாள்கிறீர்கள். இந்த மாற்றம் - சிறுகதைக்கான உங்கள் வடிவத்தை படைப்பு மனநிலையில் எப்படித் தேர்ந்தெடுக்கிறீர்கள்?**

படைப்பு மனநிலையைக் காலந்தான் தோற்றுவிக்கிறது. மிக நெருக்கடியான காலத்தில் தோன்றும் படைப்பு-மனநிலையில் நான் தேர்ந்தெடுக்கும் வடிவம் நெருக்கடியைத் தருவோரின் கவனத்தையீர்க்காத வகையிலமைய வேண்டுமென்பதை எப்போதும் கருத்திற் கொள்கிறேன். எப்போதும் மாற்றுக் கருத்தை தேசத்துரோகமாகவே கருதி வரும் சூழலிலல்லவா வாழ்ந்து முடிக்க வேண்டியுள்ளது.

**கடந்த சில ஆண்டுகளாக எழுதி வரும் சிறுகதைகளில் கோட்பாடு சார்ந்து கருதுகோள்களை முன் வைக்கின்றீர்கள். குறிப்பாகத் தேவேந்திரனுடனான உரையாடலில் சொற்கள் அர்த்தம் இழந்து போதல் பற்றி பேசுகிறீர்கள். இலங்கையில் தமிழர்களது வாழ்வும், வாழ்வு குறித்த சொற்களும் அர்த்தமிழந்து நிற்கிறது. அர்த்தம் - அர்த்தமின்மை பற்றி நீங்கள் என்ன கருதுகிறீர்கள்?**

ஒரு நாள் இராமரூபனுடன் உரையாடிக் கொண்டிருந்த போது 'அர்த்தம் என்று ஒன்றுள்ளதா?' எனக் கேட்டார். ஒரு சொல்லின் அர்த்தம் அர்த்தமின்மையைத் தீர்மானிப்பது அச்சொல்லின் எல்லைப் பயன்தான். இவ்வெல்லைப் பயனை அடையும் வரை குறிப்பிட்ட சொல் அர்த்தமுள்ளதாக இருக்கும். அதன் பின்னர் தன்னியல்பாகவே குறிப்பிட்ட சொல் அர்த்தமிழக்கத் தொடங்கி விடும். இதற்கோர் எளிய பரிசோதனையை மேற்கொள்ளலாம். உங்களது பெயரைத் திரும்பத் திரும்பச் சொல்லி பாருங்கள். உங்களது பெயர் எல்லைப் பயனை அடைந்ததும் உங்கள் பெயர் அர்த்தமிழப்பதை தெளிவாக உணர்ந்து கொள்வீர்கள்.

**'தேவேந்திரனுடனான உரையாடல்' என்ற புனை கதை முதலில் புதுப்புனல் வழங்கும் பன்முகம் இதழில் வெளியானது. பின்னர் கனடாவில் இருந்து வெளிவந்த வைகறை என்ற வாரப் பத்திரிகையில் பிரசுரமானது. ஒரு தசாப்த கால அரசியலை அப்புனைவினூடாக நினைவுபடுத்துகிறீர்கள்?**

'தேவேந்திரனுடனான உரையாடல்' நான் யாழ் பல்கலைக்கழகத்தில் பயின்ற காலத்தில் நிகழ்ந்தவை பற்றியதாக மட்டுமே அமைந்தது. அப்புனைகதைக்கெனத் தேர்ந்தெடுக்கப்பட்ட வடிவத்தில் உள்ளடக்க இயலுமானவற்றைப் பதிவு செய்தேன். குறிப்பிடத் தகுந்த அநேகமான நிகழ்வுகளைப் பதிவு செய்யக் கூடிய வடிவம் இதுவரை சாத்தியமாகவில்லை. 1995 காலப் பகுதிக்கு முன்பிருந்த யாழ்ப்பாணம் குறித்து முழுமையான பதிவு இடம் பெறவில்லை. நெல்லியடியிலிருந்தோ பருத்தித் துறையிலிருந்தோ சைக்கிளில்தான் யாழ்ப்பாணம் போய் வர முடியும். வாகன வசதிகள் இல்லை. அன்றைய பல்கலைக் கழகத் துணைவேந்தர் பேராசிரியர் துரைராஜா வடமராட்சியிலிருந்து பல்கலைக் கழகத்திற்குச் சைக்கிளிலேயே சென்று வந்தார். வல்லை வெளியினைக் கடக்கும் போது சிலவேளை பலாலி இராணுவ முகாமிலிருந்து ஹெலிகொப்ரர்வந்து தாக்குதல் நிகழ்த்தும். இவ்வாறான தாக்குதலின் போது சிலர் இறந்திருக்கிறார்கள். 1995 காலப்பகுதிக்குப் பின்னர் யாழ்ப்பாணம் அரச படையினரின் கட்டுப்பாட்டுக்குள் வந்த பின்னர் நிலைமை மாறுகிறது. யாழ்ப்பாணம் செல்லும் போக்குவரத்திற்காக அரச, தனியார் பேருந்துகள் அனுமதிக்கப்படுகின்றன.

பருத்தித்துறையிலிருந்து யாழ்ப்பாணம் செல்வதற்கு 20 சோதனைச் சாவடிகளைக் கடந்து செல்ல வேண்டிய நிலை அக்காலத்திலிருந்தது. இதனால் சாதாரணமாக ஒரு மணி நேரத்தில் சென்றடையக் கூடிய நிலை மாறி மூன்று மணித்தியாலங்களுக்கு மேல் செல்லும் பயணமாக யாழ்ப்பாணத்திற்கும் பருத்தித்துறைக்குமான போக்குவரத்து அமைந்தது. சஞ்சீவி வார இதழில் நண்பன் ஸ்ரீக்குமரன் (இயல்வாணன்) எழுதி வெளியான 'முடவன் நடை' என்ற சிறுகதையில் இந்நெருக்கடி நேர்த்தியுடன் பதிவாகியுள்ளது. இது தவிர 1989 காலப் பகுதியிலிருந்த யாழ்ப்பாணம் 'முறிந்த பனை' யில் நன்கு பதிவாகியுள்ளது. எனினும் பதிவு செய்வதற்கு அநேக காலப் பகுதிகள் தேங்கியுள்ளன. இதெல்லாம் அறிக்கையிடலாகவன்றி நேர்த்தியாகப் பதிவு செய்தவதற்கான வடிவத்தை கட்டமைக்க எத்தனித்துக் கொண்டிருக்கிறேன். அவதானிப்பின் ஒரு பகுதியாகவும் தேவேந்திரனின் உரையாடலைக் கருதலாம்.

**சரிநிகரில் வெளிவந்த "சாக்கோவின் சிந்தனைகள்" என்ற சிறுகதை பலரது கவனிப்பையும் பெற்றது. முற்று முழுதாக இலங்கை அரசியலையும் பௌத்த சிங்கள சித்தாந்தத்தையம் தமிழ் மக்கள் மீதான அடக்கு முறையையும் கலாபூர்வமாக மறைபொருளில் பேசியது. மிகவும் ஒரு அரசியல் படைப்பாகக் கருதத் தக்க இச்சிறுகதை க.பொ.த (உயர்தர) அரசியல் விஞ்ஞான வினாத்தாள் வடிவில் அமைந்திருந்தது. பகுதி 1, பல்தேர்வு வினாக்கள், அதன் கீழ் அமைந்த விடைகள் நுட்பமான அரசியலைக் கொண்டிருந்தன. ரஞ்சகுமார் இக்கதை வெளிவந்த போது தனது வாழ்த்துக்களைத் தங்கட்டுத் தெரிவிக்குமாறு என்னிடம் கொழும்பிலே கூறியிருந்தார். சிங்களத் திரைப்பட நெறியாளரான தர்மசிறி பண்டாரநாயக்க இச்சிறுகதையின் அமைப்பைக் கண்டு வியந்து சிங்களத்தில் இத்தகைய படைப்புக்களை காண முடிவதில்லை என்று குறிப்பிட்டிருக்கிறார்.**

'சாக்கோவின் சிந்தனை'யை தர்மசிறி பண்டார நாயக்காவிற்கு சரிநிகர் ஆசிரியர் சிவகுமார் தான் அறிமுகம் செய்தார். சிங்களத்தில் ஏன் இவ்வாறான படைப்புக்கள் சாத்தியமாவதில்லை எனத் தர்மசிறி சிவகுமாரை அப்போது கேட்டதாக ஒரு தொலைபேசி உரையாடலின் போது எனக்குச் சிவகுமார் சொன்னார். ஆக்கிரமிக்கப்படும் இனமொன்றின் மத்தியிலிருந்து தான் இதைப் போன்ற புனைகதைகள் மேற்கிளம்பும். சுவையான சங்கதிகளுமிருக்கின்றன. 'சாக்கோவின் சிந்தனை' எனது சொந்தப் பெயரில் வெளிவரவில்லை. இதனால் கதையை வாசித்த சிலர் பேராசிரியர் சி. சிவசேகரம் தான் இதை எழுதியதாகக் கருதி அவரைப் பாராட்ட அவர் நேர்மையுடன் மறுத்து விட்டதாகவும் அதோடு ரஞ்சகுமார் இக்கதையைப் பாராட்டிய போது அ. ஜேசுராசா இதையொரு கட்டுரையாக எழுதியிருக்கலாமே? புனை கதையாக்க வேண்டியதின் அவசியமென்ன? வென்று கேட்டதாக ரஞ்சகுமாரே என்னுடனான நேரடிக் கலந்துரையாடலில் குறிப்பிட்டார். ஈழத்தமிழ் இலக்கிய உலகம் இந்நிலையில் இருக்கிறது என்பதையும் நீங்கள் கவனத்தில் கொள்ள வேண்டும்.

**உங்களது அநேகமான புனைவுகள்- இலங்கை சிங்கள பௌத்தத்திற்கு உரிய பூமி என்ற மாயை மீது கேள்வி எழுப்புவதாயும் தமிழ் மக்கள் மீதான சிங்கள அரச பயங்கவாத நடவடிக்கைகளைக் கேள்விக்கு உட்படுத்துவனவாகவும் அமைந்திருக்கின்றன.**

இது தவிர்க்க முடியாதது. மூன்று தசாப்த காலமாக நிகழ்ந்துள்ள அசம்பாவிதங்களில் வகை மாதிரியாகச் சிலவற்றைப் புனை கதை வடிவத்தினுள் கொண்டு வந்திருப்பதில் மனநிறைவடைகிறேன். எனினும் இந்தளவும் போதுமானதல்ல. முக்கியமான சில நிகழ்வுகள் வடிவச் சாத்தியப்பாட்டுக்காகத் தயார் நிலையிலுள்ளன. 2009 மே மாதத்தின் பின்பான நிகழ்வுகள் இன்னொரு மாபெரும் புனைகதையாக நீள்வது ஒரு புறம் சுவை மிகுந்ததாகவும் மறுபுறம் பீதியைக் கிளப்புவதாகவும் அமைந்துள்ளன. இம்முரண் நிலைகளுடனான புனை கதைகளும் சாத்தியமாகலாம். தமிழினத்தின் மீதான சிங்களவரின் பயங்கரவாத நடவடிக்கைகளை மாத்திரம் கேள்விக் குட்படுத்துவதாக எனது புனைகதைகள் எதிர்காலத்தில் அமைந்து விடக் கூடாதென்பதிலும் கவனமாயுள்ளேன்.

**ஒரு வருடத்தில் எத்தனை சிறுகதைகள் எழுதுகிறீர்கள்? வருடத்தில் 2 புனைவுகளுக்கு மேல் எழுத முடியாது என்ற கருத்தை முன் வைக்கிறீர்கள்?**

எனது புனைகதை அனுபவத்தில் ஒரு வருடத்தில் இரண்டு பிரதிகள் என்பது சாதனை தான். தேர்ந்த கதை சொல்லிகளுக்கு ஒரு மாதத்திலேயே இரண்டு பிரதிகள் சாத்தியமாகலாம். மனுபுத்திரனின் எழுத்துலகத்தைப் புனைய ஒரு வருடமெடுத்தது. இந்த ஒரு வருட காலம் என்பது வடிவத் தேர்ந்தெடுப்பிற்கானது. இத்தருணம் எனது புனைகதை அனுபவத்தில் ஒன்றைக் கண்டுபிடித்தேன். அதாவது ஒவ்வொரு புனைகதைக்கும் ஒவ்வொரு வடிவ வெளிப்பாடு உள்ளது. இலகுவாக விளங்குவதற்கு ஒரு வகை குறிப்பைச் செய்கிறேன். ‘ஓ’ எனுமொரு புனைகதைக்கும் ‘லு’ என்ற வடிவமே பொருத்தமானது எனும் நிலையில் ‘ணு’ என்ற வடிவத்தைத் தேர்ந்தெடுத்தால் அது முறையாக வெளிப்படாது. எனவே லு என்ற வடிவத்தை அணுகும் வரை முயன்று கொண்டேயிருக்க வேண்டும். பொருத்தமான வடிவத்தைத் தேர்தெடுத்து விட்டால் ஆதிமுதல் அந்தம் வரை எவ்வித தடங்கலுமின்றி புனைகதை பயணிக்கும். இந்த அனுபவம் பரவசமளிக்கக் கூடியது. பொருத்தமான வடிவத்தினூடாக வெளிவரும் எவரது புனைகதையும் பரவலான கவனிப்பைப் பெறத் தவறியதில்லை.

**தங்களது மனுபுத்திரனின் எழுத்துலகத்துக்குக் கிடைத்த எதிர் வினைகள்?**

நீங்கள் உயிர்நிழலில் ஆற்றியிருந்த எதிர்வினையொன்றைத் தவிர ஏனையவை எல்லாம் செவிவழியானவை மட்டுமே. நீங்கள் வாசிப்பில் பராயமடைந்தவரென்பதை இவ் வெதிர் வினையை வாசித்த போது உணர்ந்து கொண்டேன். மேலும் உங்கள் மூலமாக மனுபுத்திரனின் எழுத்துலகத்தை வாசித்து விட்டு தொலைபேசி மூலமாக மு.பொ. சிலாகித்துப் பேசினார். செல் சுதர்சன் உயிர்நிழலை வாசித்து விட்டு எனது அலுவலக எண்ணில் தொடர்பு கொண்டு நிறையவே கதைத்தார். தன்னிடமும் சில தகவல்கள் உள்ளதாகவும் மனுபுத்திரனின் இரண்டாம் பாகத்தை அத்தகவல்களை உள்ளடக்கி எழுதும் படியும் கேட்டுக் கொண்டார். உங்களது எதிர்வினையை வாசித்து விட்டு எனது செல்பேசிக்குத் தொடர்பு கொண்டு உமாவரதராஜன் கதைத்தார். இதை என்னால் மறக்க முடியாது. எனது கதாநாயகர்களில் உமாவரதராஜனுக்கு தவிர்க்க முடியாத இடமிருந்தது. அவருடன் உரையாடுவதென்பது எனது கனவாகவேயிருந்தது. அதை நனவாக்கியமைக்காக உங்களுக்கு எனது மனமார்ந்த நன்றி உரித்தாகட்டும். இத்தருணம் முக்கியமானதொன்றையும் குறிப்பிட எண்ணுகிறேன். எனது மனைவியின் வதிவிட முகவரிக்கு அநாமதேயக் கடிதமொன்று வந்திருந்தது. சேர்வுப் பகுதியில் எனது பெயர் எழுதப்பட்டு அடைப்புக்குறிக்குள் ‘செக்ஸ் கதை மன்னன்’ எனக் குறிப்பிடப்பட்டிருந்தது. உள்ளே இரண்டு சுட்டுவிரல் நீளமும் ஒரு சுட்டுவிரல் அகலமும் கொண்ட தாளில் உனது மனைவியின் ...........யையும் ..............யையும் ..................யையும் பற்றி எழுது வாசிக்க ஆவலாக உள்ளேன். இப்படிக்கு உனது தீவிர ரசிகன் எனக் கணணியில் தட்டச்சு செய்யப்பட்டிருந்தது. அக்கடிதத்தை அனுப்பியவரை ஒரு வாரத்தினுள் அடையாளம் கண்டு விட்டேன். அவரைப் பற்றிய ஒரு புனைகதை ஆய்வை மேற்கொள்ளும் எண்ணமும் உள்ளது. அவர் ஒரு தீவிர மனநோயாளி என்பதால் அப்புனைகதை ஆய்வை நிதானமாகவே மேற்கொள்ள வேண்டியுள்ளது.

**சிங்கள “ஸ்ரீ” விவகாரம் தலையெடுத்த போது என்ன நடந்தது? தமிழிச்சிகளின் முலைகளில் தாரினால் “ஸ்ரீ” எழுதினார்கள். மணலாறு யுத்தத்தில் சிங்கள இராணுவம் கைப்பற்றிய பெண் புலிப் போராளிகளின் சடலங்களை அவர்கள் நிர்வாணப்படுத்தி பாலுறுப்புகளுக்குள் பொல்லுகளை இறுக்கி அரசமரியாதை செலுத்தியதையும் நன்கறிவேன். புத்தன் பரிநிர்வாணமடைந்து ஞானம் மிளிர்ந்ததாம். இலங்கையிலுள்ள பௌத்தர்கள் புத்தனின் பரிநிர்வாணத்திற்கு பிறிதொரு பரிமாணம் உண்டென்பதை உலகிற்கு காட்டிய பெருமைக்குரியவர்கள். இலங்கையின் கொலைக் களத்தில் வரும் காட்சிகளனைத்துமே அதை எடுத்துக் காட்டுகின்றன.**

***சிலவருடங்களுக்கு முன்னர் நடந்தது. ‘மனுபுத்திரனின் எழுத்துலகத்தைப் படித்து விட்டு, ஒருநாள் இரவு சசீவன் 11.00 மணி அளவில் தொலைபேசியில் தொடர்பு கொண்டு “..... ஆண்டி” இராகவன் என்ன எழுதுகிறான். ‘Post modernism’ என்று சொல்லி ‘ ..... ஆண்டி’ இராகவன் எழுதுகிறான்’ என்றார். “என்ன போலித்தனமாக எழுதுகிறான்” என்றார். இராகவனைப் பற்றிச் சொல்வது என்றால் இராகவனது ‘போன் நம்பர்’ தருகிறேன் எடுத்துக் கதையுங்கள் என்றேன். “எத்தனை நாளைக்கு அறிக்கை விடப் போகின்றீர்கள்” என்றார் சசீவன். உங்களுடைய கருத்தை எழுதித் தாருங்கள் அக்கதை தொகுப்பாக வரும் போது அதிலே பிரசுரிப்பான் என்றேன். மனுபுத்திரனின் எழுத்துலகம் அவர்களுக்குப் பிரச்சினையாக இருந்தது? சசீவன் உங்களுடன் எப்போதாவது தொடர்பு கொண்டு தனது கருத்தைத் தெரிவித்தாரா? நேரிலோ, கடிதம் மூலமோ தங்கள் கருத்தை தெரிவிக்க வல்லமையில்லாத பின்னவீனத்துவப் பிரதிநிதி எதற்காக “ .... ஆண்டி இராகவன்” என்று இராகவன் கதை பற்றிய விமர்சனத்தை எனக்குத் தெரிவிக்க வேண்டும். சம்பவம் நடந்த சில மாதத்துக்குப் பின்னர் பேரா. தயாசோமசுந்தரம் அவர்களுடன் யான் செய்த நேர்காணலை தன்னாற் செய்யப்பட்டது என்று தனது வலைத்தளத்தில் பிரசுரித்திருந்ததைக் கண்டு அதிர்ச்சியடைந்து ஒரு கடிதம் அனுப்பினேன். நேர்காணல் ஒலிப்பதிவு செய்யப்பட்ட இறுவட்டு என்னிடம் உள்ளது. நட்புக் கருதி வக்கீல் நோட்டீஸ் அனுப்பவில்லை.***

எனக்கு பின்நவீனத்துவத்தில் பரிச்சயமில்லை. காலம் - சுந்தரராமசாமி சிறப்பிதழில் வெங்கட்ரமணன் எழுதிய

பின்நவீனத்துவத்தில் நல்ல பரிச்சயமுண்டு. அதைக் கொண்டுதான் மனுபுத்திரனின் படைப்புலகத்தை எழுதினேன். சசீவன் தவறாக விளங்கிக் கொண்டதற்கு நான் பொறுப்பாளியல்ல. ஒரு தடவை சசீவனுடன் எதிர்பாராமல் தொலைபேசியில் உரையாடச் சந்தர்ப்பம் கிடைத்தது. இரவுக்கு விபரமாகக் கதைக்கிறேன் எனக் கூறித் தொடர்பைத் துண்டித்து விட்டார். அதன்பின் எத்தனையோ இரவுகள் கடந்து விட்டன. அவர் சிலவேளை எனது தொடர்பு இலக்கத்தைத் தவற விட்டிருப்பார். அல்லது எனது தொடர்பு முகவரி அவருக்குத் தெரியாமலிருக்கும் எனக்காகத் தயவு செய்து அவற்றினை சசீவனுக்கு SMS பண்ணி விடுங்கள். பேரா. தயாசோமசுந்தரம் அவர்களுடன் நீங்கள் செய்த நேர்காணலை தன்னாற் செய்யப்பட்டது என்று அறிமுகம் எழுதி தனது வலைத் தளத்தில் பிரசுரிக்கும் அளவுக்கு வறுமை. கேவலம். 'இமேஜ்' தேடும் இழிநிலை. படைப்பைத் திருடுவது பற்றித்தான் கேள்விப்பட்டிருந்தேன். இது?

இத்தருணம் மனுபுத்திரனின் படைப்புலகம் குறித்து சில விடயங்களைப் பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன். இப்பிரதியை எழுதிமுடிக்க 6 மாத காலமெடுத்தது. எழுதி முடித்ததும் பெரு வெளிக்கு அனுப்பினேன். புனைகதை கிடைத்ததும் பர்ஸான், அப்துல்ரசாக், மிர்ஹாத் மூவரும் ஒன்று கூடி அது பற்றி விவாதித்துக் கொண்டே எனது இலக்கத்துடன் தொடர்பு கொண்டு சுமார் 45 நிமிடம் மூவரும் மனுபுத்திரனின் படைப்புலகத்தை நிலைக்குத்தாகவும் கிடையாகவும் என்னுடன் பகுப்பாய்வு செய்தனர். இது ஒரு முக்கியமான இன்பப் பிரதியென்று அப்போது மூவரும் சொன்னார்கள். தவிர்க்க முடியாத சில காரணங்களால் பெருவெளியில் இதைப் பிரசுரிக்க முடியாதென்பதையும் தெரிவித்தார்கள். பின்னர் பர்ஸான் கணிணியில் தட்டச்சு செய்து உயிர் நிழலுக்கு அனுப்பி வைத்தார். அதைப் பிரதீபன் முழு ஈடுபாட்டுடன் வடிவமைக்க லஷ்மி பிரசுரித்து விட்டார். பிறிதொரு தருணம் என்னிடம் தொலைபேசியில் தொடர்புகொண்டு கதைத்த பிரதீபன் யாழ்ப்பாணத்திலிருந்து இத்தகையதொரு புனைவு உருவானது என்னை அதிர்ச்சிக்குள்ளாக்கியது. இதை நானொரு திரைப்படமாக்குவதற்கு உங்களது அனுமதி தேவை எனக் கேட்டார். நானும் சம்மதித்து விட்டேன். லஷ்மி அக்கா நான்கு பக்கங்களில் மனுபுத்திரனின் படைப்புலகம் குறித்து எனக்குக் கடிதம் எழுதியிருந்தார். சசீவனின் பார்வையில் இவர்கள் எல்லாம் முட்டாள்கள். இவர் ஒருத்தர் மட்டும் தான் எலலாம் தெரிந்த ஏகாம்பரம். எனது நோக்கில் ஈழத்தில் பின்நவீனத்துவம் குறித்து உரையாடக் கூடிய தகுதி பெருவெளிக் குழுமத்திற்கும் றியாஸ் குரானாவுக்குமேயிருக்கிறது. வேறெந்தக் கொம்பனுக்கும் அந்தத் தகுதியில்லை.

**உங்களது மனுபுத்திரனின் எழுத்துலகத்தில் 'யுத்த வலயங்களில் நிகழும் பாலியல் வல்லுறவுக்கு பெண்ணானவள் 70 வீதம் அளவுக்கு குறையாமல் காரணமாகின்றாள்' என்ற கருத்தை முன் வைத்து உங்கள் புனைவை நகர்த்துகிற போது இரவுகளில் பெண்கள் தனியே வசிப்பதும், ஆள் நடமாட்டமற்ற பகுதியினால் பயணிப்பதும் சோதனைச் சாவடியில் இராணுவத்தினர் கேட்கும் அவசியமற்ற கேள்விக்குப் பதிலளிப்பதும் ஒரு பெண்ணினால் பாலியல் வல்லுறவு ஊக்குவிக்கப்படுவதற்கு ஏதுவான காரணங்கள் என மனுபுத்திரன் எடுத்துக் காட்டுவதாக குறிப்பிடுவது ஆணாதிக்க பாலியல் வல்லுறவுக்குள்ளான பெண்ணைத் தண்டிக்க முனையும் உலகளாவிய சிந்தனையின் தொடர்ச்சியே. உங்களது மேற்கூறிய கணிப்பீடு அரசசார்பற்ற நிறுவனம் ஒன்று வெளியிட்ட அறிக்கை போல உள்ளமையைக் குறிப்பிட்டு மேற்படி கருத்துக்கு வன்மையான எதிர்வினை முன்வைக்கப்பட்டதல்லவா? இக்கருத்து தவறானது என்பதை ஏற்றுக் கொள்கிறீர்கள் அல்லவா?**

இது நிதானமாகக் கையாளப்பட வேண்டிய விடயம். போர் நடக்கும் பிரதேசங்களிலும் போர் நடந்து முடிந்து மீள குடியமர்த்தப்படும் பிரதேசங்களிலும் வசிக்கும் பெண்களுக்குப் பாதுகாப்பு என்பது ஏதுமில்லை யென்பதையும் அப்பெண்களுக்கு ஏற்படும் அசம்பா விதங்களுக்கு இப்பிரதேசத்தில் செறிந்திருக்கும் ஆக்கிரமிப்பாளர்களே முழுப் பொறுப்புடையவர்கள் என்பதையும் மறுபேச்சிற்கிடமளிக்காமல் ஏற்றுக் கொள்ளத்தான் வேண்டும். ஆனால் இப்பிரதேசங்களில் வாழும் பெண்களும் தமது புத்திசாதுரியத்தால் தமக்கு நேரவுள்ள அசம்பாவிதத்தை முன்னுணர்ந்து தப்பித்துக் கொள்வதுமுண்டு. ஆனால் போரின் நேரடித் தாக்கத்திற்குள்ளாகாத பிரதேசங்களில் வாழும் பெண்களுக்கு ஒப்பீட்டளவில் பாதுகாப்பு ஏற்பாடுகள் அதிகம். அத்தோடு அசம்பாவிதங்களிலிருந்து தப்பித்துக் கொள்வதற்கான மாற்று வழிகளும் அதிகமாகவேயுள்ளன. இந்நிலையில் அசம்பாவிதம் நேரக் கூடும் என நம்பப்படுகின்ற பிரதேசங்களுக்குகூடாக நடமாடுவதைத் தவிர்த்துக் கொள்வதற்கு இப்பிரதேசத்தில் வாழும் பெண்களுக்கு இயலுமானதாயிருக்கும். நிலைமை இவ்வாறிருக்கையில் இப்பகுதியில் வாழும் பெண்களுக்கு ஏதாவது அசம்பாவிம் நேருமிடத்து அப்பெண்களே இதற்கு முழுப் பொறுப்பையும் ஏற்றுக் கொள்ள வேண்டியிருக்கும். உங்களுக்கு ஓர் எடுத்துக் காட்டினைத் தருகிறேன். அண்மையில் நான் பணி முடித்து வீடு திரும்பிக் கொண்டிருந்தேன். எனக்கு முன்பாக ஆறேழு படையினர் உழவு இயந்திரத்தில் போய்க் கொண்டிருந்தனர். அவர்களது நடவடிக்கைகள் வித்தியாசமாக இருந்தது. செக்ஸ்மேனியா உள்ளவர்கள் சிரிப்பதைப் போல் சிரித்துக் கொண்டு இருந்தனர். நிச்சயமாக என்னைப் பார்த்து அவ்விதம் சிரிக்க முடியாதென்பதையுணர்ந்து திரும்பிப் பார்த்தேன். இரு பெண் பிள்ளைகள் என் பின்னே சைக்கிள்களில் வந்து கொண்டிருந்தனர். அப்பிள்ளைகளின் கவனத்தைத் திசை திருப்பி தம்மீது குவிப்பதற்கு உழவு இயந்திரத்தில் சென்று கொண்டிருந்த படையினர் தம்மாலான முயற்சிகளை மேற்கொண்ட வண்ணமிருந்தனர். ஆனால் அப்பிள்ளைகள் அதை சற்றும் பொருட்படுத்தாமல் என்னையும் கடந்து இன்னொரு குறுக்கு வீதியில் திரும்பி விட்டனர். நான் படையினரின் உழவு இயந்திரத்தின் பின்னே சென்று கொண்டிருந்தேன். அவ்வுழவு இயந்திரம் கிராமக் கோட்டுச் சந்தியால் திரும்பிச் சென்று விட்டது. நான் தொடர்ந்து நேர்ப்பாதையில் சென்று கொண்டிருந்த போது அப்பெண்பிள்ளைகள் எனக்கு முன்பாகத் தென்பட்ட இன்னொரு குறுக்கு வீதியில் மிதந்து திரும்பவும் நேர்ப்பாதையில் தமது பயணத்தைத் தொடர்ந்தனர். இதுதான் அசம்பாவித்தைத் தவிர்த்துக் கொள்வதென்பது.

உண்மையில் அப்பிள்ளைகளை நான் மானசீகமாக மெச்சினேன்.
இன்றைக்கு யாழ் குடாநாட்டில் நிகழ்ந்து வரும் பெண்கள் தொடர்பிலான அசம்பாவிதங்களின் பின்னணியினை நுணுக்கமாக ஆராய்ந்தால் தொடர்புடைய பெண்களின் கவனயீனமே அடிப்படைக்காரணமாக இருக்கக் காணலாம். எனவே அசம்பாவிதங்களைத் தவிர்ப்பதற்குப் போதுமான மாற்றுவழிகள் இருந்தும் அவற்றைக் கருத்தில் கொள்ளாமல் செயற்படும் பெண்கள் தமக்கு நிகழும் அசம்பாவிதங்களுக்கு எதிர்த்தரப்பினரை முழுப்பொறுப்பாக்கி விட முடியாது என்பதை எவரும் உணர்ந்து கொள்ள வேண்டும்.

**பாலியல் வன்புணர்வுக்கு பெண்ணானவள் 75 சதவீதம் காரணமாக இருக்கிறாள் என்ற உங்களது எடுத்துக்காட்டுடன் என்னால் உடன்பட முடியாது. நீங்கள் தருகின்ற விளக்கம் ஆண்மைய சிந்தனையின் அடிப்படையில் உள்ளது. மேலும் நீங்கள் தவறான எடுகோளை உங்களது படைப்பில் முன்னெடுத்துள்ளீர்கள்.**

நான் ஏற்கெனவே இக்கேள்விக்குத் தெளிவாகப் பதிலளித்துள்ளேன். எனினும் அண்மைக்கால நிகழ்வுகள் சிலவற்றையொட்டி உங்களது கவனத்திற்குச் சில விடயங்களைக் கொண்டுவர விரும்புகிறேன். உங்களது கேள்வியில் முழுமையில்லையென்பதை நீங்கள் ஏற்றுக்கொள்ள வேண்டும். பாலியல் வன்புணர்வுக்கு பெண்ணானவள் 75 சதவீதம் காரணமாக இருக்கிறாள் என நான் மேலெழுந்தவாரியாகக் குறிப்பிட்டிருப்பதைப் போன்ற தோற்றப்பாட்டினை உங்களது கேள்வி ஏற்படுத்துகிறது. ஆக்கிரமிப்பாளர்களுடன் ஊடாடுவதை முழுமையாகத் தவிர்த்து விடக்கூடிய சாத்தியமுள்ள நிலையில் நிகழக்கூடிய பாலியல் வன்புணர்வுக்கு பெண்ணானவள் 75 சதவீதம் காரணமாக அமையும் விதம் என்பதே எனது வாதமாகும். சனல் - 4 வெளியிட்ட இலங்கையின் கொலைக்களம் ஒளி நாடாவில் வன்புணர்வுக்குள்ளாக்கப்பட்டுக் கொல்லப்பட்டதாகக் கருதப்படும் பெண் போராளிகள் தொடர்பில் அரச படையினர் கையகப்படுத்தும் நிலப்பகுதியிலுள்ள பெண்களை பாலியல் வல்லுறவுக்குட்படுத்திக் கொன்றுவிடுவார்கள். எனவே நமது தாயகவிடுதலைப் போரில் இணைந்து போராடி உயிர்நீப்பது கௌரவத்திற்குரியதாகும் எனப் பிரச்சாரம் செய்து ஆள்சேர்ப்பில் ஈடுபட்ட புலிகள் இயக்கத்தின் பெண்போராளிகளின் நிலையென்ன? எந்த அடிப்படையில் அரசபடையினரிடம் சரணடையத் துணிந்தார்கள். படையினரிடம் சரணடைந்தால் யாதுநிகழுமெனத் தெளிவாக அறிந்திருந்தும் சரணடைந்த பின் நிகழ்ந்தவற்றிற்கு நீங்கள் யாரைப் பொறுப்பாளியாகச் சொல்லப் போகிறீர்கள்? இவ்வாறு மிகக் கேவலமான முறையில் மரணமடைந்ததற்குப் பதிலாகத் தமிழினி உட்பட அனைத்துப் பெண் போராளிகளும் உடல்களில் குண்டுகளைப் பொருத்திக்கொண்டு வெடிக்க வைத்திருந்தால் அந்த மரணங்கள் கௌரவத்திற்குரியதாக இருந்திருக்குமென்பதோடு அரசபடையினரின் வேகத்தைச் சிதைத்து அவர்களை உளவியல் ரீதியாகப் பலவீனப்படுத்தி கள நிலைவரத்தைத் திசை திருப்பியிருக்க முடியுமென்பதை உங்களால் மறுத்துவிடமுடியுமா? இதன்மூலம் அப்பாவிப் பொதுமக்களைக் கேடயமாகப் பயன்படுத்த வேண்டிய தேவைப்பாடும் தோன்றியிருக்காதல்லவா? இதைவிடுத்து இதுவரை காலமும் விடாப்பிடியாகப் பின்பற்றி வந்த கொள்கையையும் இலட்சியத்தையும் தூக்கியெறிந்துவிட்டு மக்களோடு மக்களாக தம்முயிரைக் காப்பாற்றிக் கொள்ளும் நோக்கில் படையினரிடம் வந்து சேர்ந்து முகாம்களில் திருடர்களைப் போல ஒளித்திருந்து பின்னர் அவர்களிடம் அகப்பட்டு மற்றவர்களையும் காட்டிக்கொடுத்து இப்போது சித்திரவதை முகாம்களில் பாடுகளை அனுபவிப்பதற்கு நீங்கள் அரசபடையினர் தான் முழுக்காரணமென எடுத்துக்காட்டப் போகிறீர்களா?

**உங்களது முதலாவது சிறுகதைத் தொகுப்பு 'கலாவல்லி முதலான கதைகள்' புது எழுத்து இனால் வெளியிடப் பட்டுள்ளது. தற்போது 2வது தொகுப்பு 'விட்டில் ஒரு சமகால அரசியல் பகுப்பாய்வு' காலச்சுவடு வெளியீடாக வந்துள்ளது. இத்தொகுப்பு குறித்து உங்களது கருத்து என்ன? இப்பெயரைத் தெரிவு செய்யக் காரணம் யாது?**

'விட்டில் ஒரு சமகால அரசியல் பகுப்பாய்வு' சிறுகதைத் தொகுப்பை இயன்றளவுக்கு அக்கறை காட்டி காலச்சுவடு பதிப்பகம் அச்சிட்டுள்ளது. முதலாவது செம்மைப் படுத்தலுக்காக மின்னஞ்சலில் விட்டிலின் அச்சுவடிவம் எனக்கு அனுப்பப்பட்டிருந்தது. உள்ளது உள்ள படியே அச்சிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. நான் அனுப்பியிருந்த பிரதிகளில் காணப்பட்ட வழுக்களைத் தவிர்த்து விட்டுப் பார்த்தால் காலச்சுவடு பதிப்பகம் அச்சிட்டதில் எவ்வித வழுவும் இல்லை என்பது கவனிக்கத்தக்கது. ஒவ்வொரு அம்சத்தையும் மிக நேர்த்தியாகக் கையாள்கிறார்கள். முதலாவது செம்மையாக்கலில் நான் குறிப்பிட்ட வழுக்கள் அனைத்தையும் திருத்தி எனக்கு மீளவும் அனுப்பியிருந்தனர். எல்லாம் நுணுக்கமாக ஆராய்ந்து செம்மையாக்கப் பட்டுள்ளது. நூலின் சமர்ப்பணம் தொடர்பாக நான் அனுப்பிய குறிப்பை அச்சிட முடியாதெனக் கூறினார்கள். கண்ணனிடம் தொடர்பு கொண்டு கேட்ட போது அவர் தந்த பதில் ஏற்புடையதாக அமைந்ததால் இப்போது சமர்ப்பணத்தில் சிறிய மாற்றம் செய்யப்பட்டுள்ளது. கலாவல்லி முதலான கதைகள் அச்சாக்கத்தில் மோசமான ஒரு நூலாக அமைந்து விட்டது. 'விட்டில்' என்பது தொகுப்பில் உள்ளடங்கும் கதையொன்றின் தலைப்பாகும். மேலும் ஈழத்தமிழரின் வாழ்க்கையைப் பற்றிய ஒரு படிமமாகவும் விட்டில் என்பதைக் கருத முடியும்.

**உங்களது இரு கதைகள் சௌந்தர சுகனில் வெளிவந்திருக்கின்றன. பாலியல் சார்ந்த தங்கள் புனைவுகளுக்கான முயற்சி, எதற்காக இவற்றை எழுதுகிறீர்கள்? இவை பற்றிய எதிர்வினைகள், எதற்காக எழுதுகிறீர்கள் என்று கேட்பது சரியல்ல. இப்படைப்புகளுக்கு ஊடாக நீங்கள் முன் வைப்பது?**
தனியே பாலியல் சார்ந்த புனைவுகள் என்ற முற்சார்புடன் இக்கதைகளை அணுகுவது சரியான வழிமுறையல்ல. நேரடியாக எடுத்துக் காட்டுவதற்கு அச்சுறுத்தலாகவுள்ளவற்றை முழுமையாகப் பதிவு செய்ய வேண்டுமென்ற அந்தரிப்பில் நான் தேர்ந்தெடுக்கும் வடிவம் பாலியல்

சார்ந்ததாக அமைகிறதென்பதே உண்மை.ஆனால் இப் புனை கதைகளின் உள்ளடக்கம் என்பது சமகால அரசியலுடன் தொடர்பு பட்டது. எந்தவொரு மோசமான அரசியலையும் எடுத்துக் காட்டு வதற்கு பாலியல் சார்ந்த புனைவு வடிவமே மிகப் பொருத்தமானதென எனக்குத் தோன்றுவதால் இவ்வணுகு முறையைத் தொடர்ந்து பின்பற்று கிறேன். அவ்வளவு தான் தவிரவும் மனக் கிளர்ச்சிக்காகப் பாலியல் சார்ந்து எழுதக் கூடிய சூழ்நிலை இங்கில்லை.

**'நயனியின் கண்ணாடிக் கனவுகள்', 'நீங்கள் தற்செயலாக கருணாகரனைச் சந்தித்தால்' இவை பாலியலைக் கடந்து செல்லும் புனைவுகள் முன்னயது பெண்களினதும் பின்னையது ஆண்களினதும் மன எழுச்சிகள்?**

இவ்விருபுனைவுகளும் ஒற்றையர்த்தத்தைப் பிரதிபலிக்கும் வகையில் எழுதப்படவில்லையென்பதால் உங்களது இக்கருத்தை நான் மறுத்துரைக்கப் போவதில்லை. இன்னொருவருக்கு இப்புனைவுகள் இரண்டுமே சுற்றுச்சூழற் பிரச்சினையை முன்வைப்பதாகத் தோன்றலாம். அதையும் என்னால் மறுத்துக் கூற இயலாது. ஏனெனில் மறுத்துக் கூறுவதானது பிரதியின் மீதான பன்முகநோக்கை வரையறைக்குட்படுத்தி விடும். அது நிகழ்ந்தால் பிரதியின் மீதான இன்ப நிலை சாத்தியமற்றுப் போய்விடும். எழுதத் தொடங்கும் போதே இதைக் கவனத்தில் கொள்வேன் என்பதால் எவ்விதத்திலும் புனைவைத் திட்டமிடுவதில்லை. அப்போதுதான் புனைவு என்னை இழுத்துச் செல்லும் செயற்பாடும் நிகழும். அந்த அனுபவம் தற்புதுமையானது.

**சமூகத்தில் நிகழ்ந்த ஒரு சம்பவத்தை ஒரு புனைகதையில் எழுதுகின்ற போது தனிநபர்களின் உண்மைப் பெயரை மறைத்து வேறுபெயரில் எழுதுவார்கள். சிலர் குறியீட்டுப் பாங்கில் பாத்திரங்களின் உண்மைப் பெயரை மறைத்து எழுதுவார்கள். சௌந்தரசுகன் அக்டோபர்2010 இல் வெளிவந்த “நீங்கள் தற்செயலாக கருணாகரனைச் சந்தித்தால்” என்ற சிறுகதையில் இருநபர்களின் பெயர்கள் நேரிடையாக வருகி ன்றன. கருணாகரனின் நாட் குறிப்பு வடிவில் அமைந்துள்ள இக்கதை பெண்ணின் நிர்வாண உடலும் பாலியல் தூண்டலும் என வெளிப் படையாகத் தெரி கிறது. பெண்களது பிறந்த நாளில் பெண்கள் கருணாகரனுக்கு நிர்வாணமாகத் தெரிகி றார்கள். *12.08.2006* கருணாகரனது தாயாரின் பிறந்த தினம் அன்று என்ன நடந்தது என்று கருணாகரனிடம் எவரும் கேட்டுவிடா தீர்கள் என்று கதை நிறைவுறுகிறது. கருணாகரனின் தாய் என்பது தமிழர் தாயகம் - தமிழ்தேசியம் கருணாகரன் அதைப் பார்க்க மாட்டார்.**

**பரணிதரன் இன்னொருவர் அவருக்கு அரவது மனைவி நிர்வாணமாக இருப்பது தெரி யாது. அதாவது மனைவி சந்திரா வின் அழகு தெரியாது. இங்கு சந்திரா என்பது பரணிதரன் ஆசிரியராக இருந்து வெளிக் கொண்டுவரும் ஜீவநதி என்ற சஞ்சிகை. பரணிதரனுக்கு இலக்கியம் - அதன் செழுமை தெரியாது என்பதை இக்கதையூடாக முன் வைக்கிறீர்களா அதேவேளை கருணாகரனுக்கு தாயகம் பற்றிய எந்தக் கருத்தும் இல்லை என்ற கருத்தையும் முன்வைக்கிறீர்களா?**

**சுகனில் இக்கதை வெளிவந்த பின்பு இக்கதை பற்றி நண்பர் ரமேஷுடன் உரையாடினேன். அப்போது ரமேஷ் சொன்னவை எனக்கு உடன்பாடானதாய் இருந்தது. 'கருணாகரன் காண்பதெல்லாவற்றையும் பதிவு செய்வார். ஆனால் அவருக்கு தாயகம் பற்றி, தான் யார்என்பது பற்றி எந்தக் கருத்தும் இல்லை அதுதான் அவர் தாயை நிர்வாணமாகப் பார்த்ததைப் பற்றி எழுதவில்லை. அதுபோல பரணிதரனுக்கு இலக்கியமே தெரியாது என்பதற்கு தன் மனைவி நிர்வாணமாய் இருப்பது தெரியாது என்பதாக அதாவது மனைவியின் அழகு சதுரங்கம் ஆடவந்த கருணாகரனுக்கு தெரிகிறது. பரணிக்குத் தெரிய வில்லை. அதாவது ஜீவநதியின் அழகு பரணிக்குத் தெரியாது. இராகவன் புனைகதையை நன்கு திட்டமிட்டு எழுதியுள்ளார்.' இது ரமேஷினது கருத்து. எனக்கும் இது சரியென்றே படுகிறது. நீங்கள் நன்கு திட்டமிட்டு உருவாக்கிய புனைவல்லா இது திட்டமிடாமல் புனைகதையை எழுத முடியாதல்லவா?**

“நீங்கள் தற்செயலாகக் கருணாகரனைச் சந்தித்தால்.....” நன்கு திட்டமிட்டு உருவாக்கிய புனைகதைதான். மேலும் நீங்கள் குறிப்பிடுவதைப் போல் திட்டமிடாமல் புனைகதையை எழுதமுடியாது என்பதும் உண்மைதான். தவிரவும் நீங்களோ ரமேஷோ கருதும் நபர்களை மனதில் வைத்து நானிதை எழுதவில்லை. இப் புனைகதை உளவியல் நோக்கில் எழுதப்பட்டதாகும். எனினும் எனது மூளையினூடாக வாசகன் சிந்திக்க வேண்டுமென நான் ஒரு போதும் எதிர்பார்க்கவில்லை. வாசகனுக்குச் சிந்திக்கும்,

**நீங்கள் குறிப்பிடும் அர்த்தமற்ற, பொருளற்ற எனும் பெயரெச்சங்களின் அர்த்தம் தானென்ன? அதை உருவாக்குவது வாசகர்கள் தான் என்பதை உங்களால் மறுத்துவிட முடியுமா? நான் பராயமடைந்த அதாவது வயது வந்த வாசகர்களுக்காகத்தான் எழுதுகிறேன். அவர்களால் எனது பிரதிகளை அர்த்தப்படுத்தி வாசிக்க முடியுமென்ற நம்பிக்கை எனக்கிருப்பதாலேயே தொடர்ந்தும் எழுதுகிறேன். நே – 1 தொடர்பாக எஸ்.கே.விக்கினேஸ்வரன் (சரிநிகர்) என்னுடன் கதைத்த போது – “நே – 1 எனக்கு விளங்கவில்லை. அதற்காக நான் அதை நிராகரிக்கமாட்டேன்” என்று சொன்னார். தேவேந்திரனுடன் ஓர் உரையாடலை வாசித்துவிட்டு ஆதவன் தீட்சண்யா “இதையெல்லாம் விளங்கிக்கொள்ள ஒரு மனநிலை வேண்டும்” என்று சொன்னார்.**

கருத்தினை முன்வைக்கும் சுதந்திரமுள்ளதென நம்புகிறேன். இதனால் எனது புனைகதை தொடர்பாக வாசகன் முன்வைக்கும் எதிர்மறையான கருத்திற்கு நான் பதிலளிப்பதில்லை. ஏனெனில் அது அவனது கருத்துச் சுதந்திரத்தைத் தடைசெய்வதற்கு ஒப்பானதென நான் கருதுகிறேன். நீங்களும் ரமேக்ஷும் சொன்னதைத்தான் உமாவரதராஜனும் சொன்னார். எனினும் கதா பாத்திரங்களின் பெயர்களை வைத்துப் புனைகதைக்கு நேரடி அர்த்தங்கொள்ள முயல்வது ஒருவகையில் அபாயகரமான தென்பதையும் இவ்விடத்தில் குறிப்பிட விரும்புகிறேன். நீங்கள் குறிப்பிடும் நபர்களது பெயர்களுக்குப் பதிலாக நான் "நீங்கள் தற்செயலாகத் துவாரகனைச் சந்தித்தால்...." என தலைப்பிட்டு இதில் ரமேசையும் இன்னொரு கதாபாத்திரமாக்கி இப்புனை கதையை எழுதியிருந்தால் நீங்களிருவரும் இக்கதையை எந்த வகையில் அர்த்தப்படுத்தியிருப்பீர்கள்? நீங்கள் குறிப்பிடும் இவ்விரு நபர்களையும் கதைப்போக்கின் அடிப்படையாகக் கொண்டு தெளிவாக அடையாளங் கண்டிருக்கமுடியுமா? என்பது தான் நான் எழுப்பும் கேள்வி. இதைத்தான் நான் கதாபாத்திரங்களின் பெயர்களை வைத்து நேரடி அர்த்தங்கொள்ள முயல்வது ஒருவகையில் அபாயகர மானதெனக் குறிப்பிட்டேன். இது தான் பொதுவான நிலைப்பாடு.

**உங்களது படைப்புக்கள் காலப்பதிவுகளாகவுள்ளன. நெருக்கடியான சூழலின் பல்வேறு தளங்களைப் பூடகமாகவும் அசாத்தியமான வடிவங்களிலும் கொண்டு வந்திருக்கிறீர்கள். சூழலைக் கடந்தேகும் நதியாகவும் விளங்குகின்றன. பெரும்பான்மை இன சிங்கள அரச ஒடுக்குமுறைகளை மட்டுமன்றித் தமிழ்ச் சமூக உள் முரண்பாடுகளையும் பதிவு செய்துள்ளீர்கள்(உ-ம் மனுபுத்திரனின் எழுத்துலகம்). எனினும் பல்கலைக்கழகச் சூழலில் வன்முறைக் குணாம்சத்தை வெளிப்படுத்தும் 'பகிடிவதை'யைப் (ராக்கிங்) படைப்பாக்க முயலவில்லையா? 2010 கார்த்திகையில் 1ம் அரையாண்டுப் பரீட்சைக்கு வந்த மாணவர் 3ம் வருட கலைப்பீட மாணவர்களால் தாக்கப்பட்டு சித்திரவதைக்குள்ளான நிலையில் 22 பனடோல் மருந்து வில்லைகளை விழுங்கிய நிலையில் யாழ் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்டிருந்தார்.**

**வடமராட்சி மாணவர்களுக்கு 2010 வரை? ராகிங் நிறைவு வல்லிபுரப் பொங்கலுடன் நிறைவடைவது இருந்து வருகிறது. சிரேஷ்ட்ட மாணவர்களால் பொங்கிப் படைக்குமாறு புதுமுக மாணவர்கள் நிர்ப்பந்திக்கப்பட்டு வரும் சடங்கு வருடாவருடம் அரங்கேறி வருகிறது. விடுதியில் தங்கி இருக்கும் வெளிமாவட்ட 1ம் வருட மாணவர்கள் தைப் பொங்கல், வருடப்பிறப்பு கொண்டாட்டம் கழிப்ப றையிலே இருந்து வருகிறது. இத்தினங்களில் கழிப்பறைக்குள் 1ம் வருட மாணவர்களைப் பூட்டி வைத்துவிட்டு அவ்வப் போது சிரேஷ்ட்ட மாணவர்கள் வந்து தாக்குவார்கள். பாராளுமன்றில் சட்டங்கள் நிறைவேறியும் பல மாணவர்கள் பலியாகிய பின்னரும் 'ராகிங்' கொடுமை நிற்கவேயில்லை.**

**மேலே குறிப்பிட்ட மாணவன் கிளிநொச்சியில் இருந்து இடம் பெயர்ந்து இராணுவத் தடுப்பு முகாமில் இருந்து விடுவிக்கப்பட்டிருந்தார் இம்மாணவனை தனிப்பட்ட முறையில் சந்தித்து உரையாடிய போது சிரேஷ்ட்ட மாணவர்களால் இழைக்கப்பட்ட கொடுமையைத் தான் இராணுவத்தினரால் தடுத்து வைக்கப்பட்டிருந்த போது கூட அனுபவித்ததில்லை என்று குறிப்பிட்டார். (இதனை நற்சான்றிதழாகக் கருத வேண்டாம்.) இச்சூழல் குறித்த உங்கள் கருத்து நிலை என்ன? நீங்கள் புதுமுக மாணவனாக இருந்த போது எதிர் கொண்டதை மீட்டுப் பார்ப்பீர்களா?**

இதுவரை நான் பகிடிவதை குறித்து எதுவும் எழுதவில்லை. அண்மையில் அப்துல்றசாக்கின் 'வாக்குமூலம்' என்ற புதினத்தை வாசித்த போது பல்கலைக்கழக வாழ்க்கை பற்றிய பதிவொன்றினைச் செய்யலாம் எனத் தோன்றியது. அதனுள் முக்கிய அம்சமாகப் பகிடிவதைக் காலத்தை உள்ளடக்கலாமெனவும் தோன்றியது. நீங்கள் குறிப்பிட்ட மாணவன் சொன்ன கருத்துடன் நான் முழுமையாக உடன்படுகிறேன். நான் 1997 காலப்பகுதியில் பல்கலைக்கழகத்தினுள் புதுமுக மாணவனாக நுழைந்தேன். பல்கலைக்கழகத்திற்குள் நுழைவதற்கு முன்பாகவே பகிடிவதை நெருக்கடியை நான் எதிர்நோக்கினேன். எமது பிரதேசத்திலுள்ள ஒவ்வொரு சிரேஷ்ட்ட மாணவனையும் பல்கலைக்கழகத்திற்குச் செல்வதற்கு முன்பாகவே தேடிப் போய்ச் சந்திக்க வேண்டுமென்பது எழுதப்படாத விதி. அப்போது ஹாட்லிக் கல்லூரியில் பல்கலைக்கழகப் புதுமுக மாணவர்களுக்கான ஆங்கிலப் பயிற்சி வகுப்பு (Gelt) நடைபெற்று வந்தது. கல்லூரிக்குள் நுழைவதற்கு முன்பாக அங்குள்ள படையினரின் காவலரணில் அடையாள அட்டைகளைக் கையளித்து விட வேண்டும். வகுப்பு முடிந்து திரும்பும் போது தான் அடையாள அட்டைகளை மீளப் பெறலாம். வகுப்பு முடிந்து வரும் போது ஒவ்வொரு சந்தியிலும் சிரேஷ்ட்ட மாணவர்கள் எங்களை எதிர்பார்த்து நின்று கொண்டிருப்பார்கள். அவர்கள் எங்களைத் தமக்கிசைவான ஓரிடத்துக்கு அழைத்துச் சென்று பகிடிவதைக்கு உட்படுத்துவதற்காவே அவ்விதம் காத்திருப்பார்கள். அவர்களிடம் ஒருபோதும் நான் வசமாகச் சிக்கியதில்லை. எனது பிரதேசத்திலிருந்த எந்தவொரு சிரேஷ்ட்ட மாணவனையும் நான் தேடிப் போய்ச் சந்தித்ததுமில்லை. சிலர் தம்மை வந்து சந்திக்கும் படி தகவல் சொல்லி அனுப்புவார்கள். அதை நான் பொருட் படுத்தியதுமில்லை. இப்படி ஒரு முறை எழுத்தாளரும் விரிவுரையாளருமென இப்போது அறியப்படும் இராஜேஸ்கண்ணன் தன்னை வந்த சந்திக்கும்படி எனக்குத் தகவல் அனுப்பினார். நான் போகவில்லை. தவிரவும் பாடசாலை நாள்களில் இராஜேஸ்கண்ணனுடன் எனக்கு நட்பு இருந்தது. ஒரு சில பட்டிமன்றங்களில் ஒன்றாக நின்று பேசியிருக்கிறோம். இதைவிட அவர் மீது நான் மதிப்பும் வைத்திருந்தேன். பல்கலைக்கழக நுழைவுக்கு முன்பாக நடைபெற்ற பெயர்ப்பதிவுக்காகப் பல்கலைக்கழகம் சென்று திரும்பிய போது இராஜேஸ்கண்ணன் என்னை எதிர்பார்த்து வாசலில் காத்திருந்தார். அவருடன் கதைக்கலாமென நெருங்கிய போது எனது தலைமுடியை கொத்தாகப் பிடித்து 'நீயென்ன பெரிய மனிசனோ? ஏனடா என்னை வந்து சந்திக்கேல்லை? எனக் கேட்டார். நான் அதிர்ந்து போனேன். பின்நாள்களில் அவருடனான நெருக்கத்தைத் தவிர்த்துக் கொண்டேன். பல்கலைக்கழக நுழைவுக்கான நாள்

நெருங்கிய போது சிரேஷ்ட்ட மாணவர்களைச் சந்திக்காதிருப்பது தண்டனைக்குரிய குற்றமெனச் சில புதுமுக மாணவர்கள் வந்து பயமுறுத்தியதால் அல்வாயைச் சேர்ந்த சுபச்செல்வன் எனும் சிரேஷ்ட்ட மாணவனைச் சந்திக்கும் முகமாக நானும் நந்தகுமார் என்ற நண்பனும் ஒருநாள் அவனது வீட்டிற்குச் சென்றோம். அப்போது வீடு மேய்வதற்காக அவன் தனது வீட்டுக் கூரை மேலேறி வருமாறு பணித்தான். தவிர்க்க முடியாமல் கூரை மீதேறியதும் எங்களைத் தகாத வார்த்தைகளால் ஏசிவிட்டு கூரையை விரைவாகப் பிடுங்குமாறு கூறினான். வேறு வழியின்றிக் கூரையைப் பிடுங்கி முடித்தோம். பிடுங்கி முடித்ததும் எங்களைத் தன்னுடன் வருமாறு கூறி முன்னால் சென்றான். நாங்கள் அவனைப் பின்தொடர்ந்தோம். அவனொரு வீட்டினுள் நுழைந்தான். நாங்கள் வீட்டின் வாசலில் தயங்கி நின்ற போது உள்ளே வரும்படி சைகை காட்டினான். உள்ளே சென்றதும் நான் அதிர்ந்து விட்டேன். அந்த வீட்டின் முன்கூடத்தில் புதுமுக மாணவிகளோடு சிரேஷ்ட்ட மாணவர் சிலர் அளவளாவிக் கொண்டிருக்கப் பின்கூடத்தில் புதுமுக மாணவர்கள் சிரேஷ்ட்ட மாணவர் சிலரால் மோசமான பகிடிவதைக்குள்ளாக்கப்பட்டுக் கொண்டிருந்தனர். அப்போது ஒரு சித்திரவதை முகாமினுள் நுழைந்து விட்ட உணர்வே ஏற்பட்டது. எல்லா மாணவர்களும் நிர்வாணமாக்கப்பட்டு வரிசையாக ஓரறைக்குள் ஒருவர் மற்றவரது குறியை விறைப்படையச் செய்து பின்வளமாகப் பிடித்துக் கொண்டு புகைவண்டித் தொடர்போலச் சுற்றிக் கொண்டு 'சிக்குபுக்கு சிக்குபுக்கு கூ கூ' வெனச் சத்தமெழுப்பிக் கொண்டிருந்தனர். என்னைக் கூட்டிச் சென்று உடுப்புக்களைக் கழற்றச் சொன்னார்கள். நான் தயங்கினேன். என்னைத் தாக்க எத்தனித்தார்கள். உடுப்புக்களைக் கழற்றி விட்டு நிர்வாணமாகக் கூனிக் குறுகி நின்றேன். அவர்கள் கெக்கலித்துச் சிரித்தார்கள். பிறகு சுருட்டொன்றைத் தந்து பற்றச் சொன்னார்கள். அந்தச்சுருட்டை ஒரே தடவையில் பற்ற வைக்க வேண்டுமென்றும் புகையை வெளியே விடக் கூடாதென்றும் சுருட்டு அணைந்தால் அதைமென்று விழுங்க வேண்டுமென்றும் நிபந்தனை விதித்தார்கள். ஒருவன் தீக்குச்சியைப் பற்ற வைத்து சுருட்டுக்குக்கிட்டவாகப் பிடிக்க ஏனைய நால்வர் தீக்குச்சியை அணைக்கும் நோக்குடன் வாயால் ஊதிக் கொண்டிருந்தார்கள். இருந்தும் நான் சுருட்டைப் பற்றி விட்டேன்.

புகையை வெளியே விடக் கூடாதெனப் பயங்காட்டினர். புகையை அடக்கி வைத்திருந்தேன். ஓர் எல்லைக்கப்பால் அடக்க முடியாத நிலையில் புரைக்கேறி இருமினேன். சுருட்டு பறந்து போய் விழுந்தது. நான் தலைச்சுற்றி மயங்கி விட்டேன். எனக்கு ஆடையணிவித்து கட்டிலில் கொண்டு போய்க்கிடத்தி முதலுதவியளித்து இன்னொரு மாணவனின் சைக்கிளில் ஏற்றியனுப்பி விட்டனர். மறுநாள் அந்த வீட்டிலிருந்த எனது சைக்கிளை எடுக்க போனேன். அங்கே சுபச்செல்வன் இருந்தான். என்னைக் கண்டதும் முழந்தாளிட்டு நடக்க வைத்தான். இதெல்லாம் மறக்க முடியாத சம்பவங்கள். வடமராட்சியில் அருந்தவக்குமார் என்றொருவனிருந்தான். அவனைச் சந்திக்காதவர்கள் பல்கலைக்கழக நுழைவின் போது கடும் நெருக்கடிகளை எதிர்நோக்குவேண்டியிருக்குமெனப் பரவலாகப் பேசப் பட்டது. நான் அவனைப் போய்ச் சந்திக்கவில்லை. ஒரு நாள் எதிர்பாராத விதமாகப் பருத்தித்துறையில் அவனைச் சந்தித்தேன். 'அருந்தவம் வருகிறான்' என்று சொல்லி என்னுடன் வந்த மாணவர்கள் ஓடி விட்டனர். அவன் என்னை நெருங்கி வர நிமிர்ந்து பார்த்தேன். அப்போதுதான் தனியார் கல்வி நிறுவனமொன்றில் அவனிடம் வர்த்தகமும் நிதியும் என்ற பாடத்தைச் சில நாள்கள் படித்தது நினைவிற்கு வந்தது. டேய்! என்னைத் தெரியுமோ? எனக் கேட்டான். ஓம் ஸேர் நான் உங்களிட்ட கொமேர்ஸ் படிச்சனான் என்று சொன்னேன். அவனுக்குக் கன்னத்தில் அறைந்தது போல் என்பதில் இருந்தது. அவன் மேற்கொண்டு எதுவும் கேட்காமல் போய்விட்டான். அதன் பின்னர் ஒரு போதும் அருந்தவகுமார் என் கண்ணில் பட்டதேயில்லை. பல்கலைக்கழகத்தில் நுழைந்த காலத்தில் படையினரின் கெடுபிடிகள் மிகுந்திருந்தது. எனினும் பகிடிவதை மன்னர்கள் அதையெல்லாம் பொருட்படுத்தாமல் எங்களை கைதிகளைப் போல் பிடித்துச் சென்று தமது அறைகளுக்குள் வைத்து நிர்வாணமாக்கி பாலுறுப்புப் பிரதேசம் நன்றாகச் சவரஞ் செய்யப்பட்டுள்ளதா எனப் பரிசோதிக்கத் தவறுவதில்லை. இவ்வாறு ஒருவர் ஒரு முறை என்னுடன் சிலரைப் பகிடிவதைக்கு கந்தர்மடத்திலுள்ள தனது வசிப்பிடத்திற்கு சிரமதானம் செய்யவென அழைத்துச் சென்றார். நாங்கள் அவருடன் அவ்வீட்டினுள் நுழைந்தபோது அவர் உள்ளே சிரமதானம் நடப்பதாகவும் எங்களை உள்ளே சென்று அதில் கலந்து கொள்ளுமாறும் சொன்னார். நாங்களும் உள்ளே சென்றோம். அங்கே இன்னும் சிலர் நின்று கொண்டிருந்தனர். அவர்களை ஒருவர் சோடியாக்கி விட்டு ஒரு நெருப்புக் குச்சியைத் தந்து சிரமதானத்தை ஆரம்பித்து வைத்தார். அந்த நெருப்பு குச்சியால் ஏற்கனவே சோடியாக்கப்பட்டவர்களில் ஒருவர் மற்றவர் பாலுறுப்பை அளவீடு செய்து அங்குள்ள மேசையில் வைக்கப்பட்டிருந்த பதிவேட்டில் தனது அளவீட்டைப் பதிவு செய்து வெளியேறுவது தான் அந்தச் சிரமதானம். பதிவேடென்பது ஓர் அட்டவணை வடிவில் இருந்தது. அதில் பெயர், குறியின் அளவு, நிறம், வடிவம், தாக்குதிறன் போன்ற அம்சங்கள் உள்ளடக்கப்பட்டிருந்தன. இந்தச் சிரமதானத்தை மேற்கொள்வதைத் தவிர எங்களுக்கு அப்போது வேறு வழியில்லை. நான் பல்கலைக்கழகத்தில் மூன்றாவது வருடத்தில் கற்க ஆரம்பித்த போது முகாமைத்துவப்பிரிவு நிதி முகாமைத்துவம், மனிதவள முகாமைத்துவம் என இரு பிரிவாக்கப்பட்டது. அப்போது 12மாணவர் மாத்திரமே மனித வள முகாமைத்துவத்தை தெரிவு செய்தனர். அவர்களில் நானும் ஒருவன். பெண்கள் எவரும் இப்பிரிவைத் தேர்ந்தெடுக்கவில்லை. அப்போது எங்களது பிரிவுக்கு மனிதவள முகாமைத்துவம் என்ற பாட அலகை விரிவுரை செய்ய உதவி விரிவுரையாளரொருவர் வந்தார். அவரைப் பாரத்ததும் நான் அதிர்ந்து போனேன். அவர்தான் என்னை அழைத்துச் சென்று சிரமதானம் செய்வித்தவர். என்னைத்தவிர அவ்விரிவுரை வகுப்பிலிருந்த 11 பேரும் அவருக்கு நன்கறிமுகமானவர்கள் என்பதால் அவர் என்னைப் பார்த்து 'தம்பி!' உம்மை எனக்கு அறிமுகமில்லை. உமக்கு என்னைத் தெரியுமா? எனக் கேட்டார். உங்களை என்னால் மறக்க முடியாது என்றேன். அவர் எனக்கொன்றும் விளங்கவில்லை தெளிவாகச் சொல்லும் என்றார். நீங்கள் தான் ரேக்கிங் பீரியட்டில் என்னைக் கொண்டு சிரமதானம்

செய்வித்தவர் என்றேன். இந்தப்பதிலை அவர் சற்றேனும் எதிர்பார்த்திருக்கவில்லை. பேயறைந்தவர் போலாகி விட்டார். பின்னர் சிரித்து மழுப்பிச் சமாளித்து விட்டார்.
இதைப்போல இன்னொரு சம்பவம். நேமிநாதன் என்ற சிரேஷ்ட்ட மாணவன் பகிடிவதைக் காலத்தில் ஒரு நாள் என்னை எதிர்கொண்ட போது எனக்கொரு பாட்டைப் பெம்பிளைக்குரலில் சொல்லித்தந்தார். பு..யில் புல்லுப்புடுங்கி பிடிப்பிடியாகக் கட்டி ஏத்தி.. என அப்பாடல் தொடங்கும் பின்னாளில் அவர் பொருளியல் துறையில் உதவி விரிவுரையாளராக நியமனம் பெற்றார். அப்போது ஒரு நாள் நான் பல்கலைக்கழகம் சென்று கொண்டிருந்த போது அவர் நடந்து போய்க் கொண்டிருந்தார். நான் சைக்கிளை மறித்து அவரை ஏற்றிச் சென்றேன். அவர் என்னைப் பற்றி விசாரித்து விட்டுத் தன்மை எப்படி எனக்குத் தெரியுமென்று கேட்டார். நான் அவர் எனக்கு முன்னர் சொல்லித் தந்த பாடலைப் பெம்பிளைக்குரலில் பாடிக் காட்டினேன். அவர் திகைத்துப் போய் இதை ஒருவருக்கும் வெளியில் சொல்லிவிடாதே என மன்றாட்டமாகக் கேட்டுக் கொண்டார். மேலும் எனது பகிடிவதைக் காலத்தில் தான் ஒரு புரட்சி நிகழ்ந்து. விக்னேஸ்வரக் கல்லூரியில் என்னுடன் கற்ற பாலகுமார் என்ற மாணவனும் பல்கலைக்கழகத்திற்குத் தெரிவாகி யிருந்தான். அவன் வடமராட்சியை இராணுவம் கைப்பற்றுவதற்கு முன்பாக வன்னிக்குச் சென்று விட்டான். பின்னர் நிலைமை ஓரளவு சுமுகமானதும் திரும்பி வந்தான். அவன் இயல்பாகவே நரம்புத் தளர்ச்சிக்குள்ளானவன். அதற்காக மாத்திரைகளும் பாவிக்கும் வழக்கமுடையவன். அவன் மீது எவராவது அத்துமீறித் தொட்டுவிட்டால் கடுங்கோபத்திற்குள்ளாகித் தொட்டவரைத் தாக்கும் இயல்பையும் கொண்டிருந்தான். அப்போது எங்களுக்கு பல்கலைக்கழக விரிவுரைகள் ஆரம்பித்து ஒரு சில நாட்களே கடந்திருந்தன. அக்காலத்தில் எங்களுக்கு நேரடியாகச் சிரேஷ்ட்ட மாணவனான ஜெயரூபன் பகிடிவதையில் அழியாப்புகழ் பெற்று முன்னணி வகித்து வந்தான். வடமராட்சியிருந்து பல்கலைக்கழகம் செல்லும் புதுமுக மாணவரை எதிர்கொள்ளும் சிரேஷ்ட்ட மாணவர்கள் அப்போது முக்கியமாக இரு கேள்விகளைக் கேட்பார்கள். முதலாவது கேள்வி அருந்தவக்குமாரைச் சந்தித்தாயா? இரண்டாவது கேள்வி ஜெயரூபனைச் சந்தித்தாயா? இவ்விரு கேள்விகளுக்கும் உடன்பாடாகப் பதிலளிக்காதவர்களை அவர்கள் விசேட கவனிப்பிற்குள்ளாக்குவது வழமை. உடன்பாடாகப் பதிலளிப்பவர்களுக்கு எவ்வித நெருக்கடியும் ஏற்படுவதில்லை. வடமராட்சியிலிருந்து பல்கலைக்கழகம் சென்ற புதுமுக மாணவர்களில் நானும், வைகுந்தவாசன் மற்றும் பாலகுமார் ஆகிய மூவரும் ஜெயரூபனை ஒரு தடவையேனும் சந்தித்திருக்கவில்லை. தன்னைச் சந்திக்கச் செல்லும் மாணவர்களை ஓரினச் சேர்க்கையிலீடுபடுத்துவதும் அவனைச் சந்திக்காமல் தவிர்க்கக் காரணமாயிருந்தது. ஒரு நாள் நானும் பாலகுமார், வைகுந்தவாசன் ஆகியோரும் நெல்லியடிச் சந்தியிலிருந்து கொடிகாமம் வீதியூடாகச் சைக்கிளில் வந்து கொண்டிருந்தோம். அத்தருணம் எங்களைப் பின் தொடர்ந்து வந்த ஜெயரூபன் பாலகுமாரின் காதைப் பிடித்து முறுக்கி டேய்! நீயென்ன கொம்போ? ஏனடா என்னை வந்து சந்திக்கேல்லை? எனப் பல்லை நெறுகியபடியே கேட்கத் தன் மீதான அத்துமீறிய தொடுகையால் கடுஞ்சினத்திற்குள்ளான பாலகுமார் ஜெயரூபனுக்கு கன்னத்தில் அறைந்து விட்டான். அதை சற்றேனும் எதிர்பார்த்திராத ஜெயரூபன் செய்வதறியாது திகைத்து நிற்க நாங்கள் திரும்பி வந்து விட்டோம். திரும்பிவரும் போது – அன்று வல்லிபுர ஆழ்வார் கோவில் சமுத்திர தீர்த்தம் என்பதால் பாலகுமார் ஜெயரூபனைப் பார்த்து டேய் பின்நேரம் கடலுக்கு வருவன். நீ உண்மையான ஆம்பிளையெண்டால் அங்கை வா சந்திப்பம். நான் தனியத்தான் வருவன். நீயோ நானோ பாப்பம்' என்று சொல்லிவிட்டே வந்தான். சொன்ன படியே தனியாளாகச் சமுத்திர தீர்த்தத்திற்குப் போனான். அங்கே ஜெயரூபன் தனது படையணியோடு வந்ததாகவும் பாலகுமார் இடுப்பினுள் சொருகி வைத்திருந்த கத்தியை வெளியே எடுத்துக் கொண்டு அவர்களை நோக்கிச் செல்ல அவர்கள் பின்வாங்கிச் சென்று விட்டதாகவும் சொன்னான். இச்சம்பவத்தைத் தொடர்ந்து பாலகுமார் பல்கலைக்கழக ஒழுக்காற்று உத்தியோகத்தரிடம் (மார்சல்) சென்று எங்களைப் பகிடிவதைக்குள்ளாக்கியவர்களினது பெயர் விபரங்களைக் கையளித்து விட்டான். பகிடிவதை க்குள்ளானவர்களாக அவன் தன்னையும் என்னையும் இன்னும் சில புதுமுக மாணவிகளின் பெயர்களையும் கொடுத்திருந்தான்.
இதனடிப்படையில் ஒழுக்காற்று உத்தியோகத்தர் என்னையும் அம்மாணவியரையும் ஒருங்கே விசாரணைக்கு அழைத்திருந்தார். என்னை விசாரணை செய்யும் நோக்கில் சிரேஷ்ட்ட மாணவர்களின் ஒளிப்படங்களுடன் கூடிய பதிவேட்டை திறந்து வைத்து விட்டு 'இதிலுள்ளவர்களில் யார் உன்னைப் பகிடிவதைக்குள்ளாக்கியவர்?' எனக் கேட்டார். அதில் முதலாவது ஆளாக சுபச்செல்வனின் படம் இருந்தது. நான் அடையாளங் காட்ட எத்தனிக்கும்போது என்னுடன் விசாரணைக்கழைக்கப்பட்ட புதுமுக மாணவிகளும் வந்து சேர்ந்து விட்டனர். அப்போது ஒழுக்காற்று உத்தியோகத்தர் என்னை வெளியே சென்று காத்திருக்கும் படியும் மாணவியரை விசாரித்து முடித்ததும் என்னை அழைப்பதாகவும் சொல்ல நான் வெளியே வந்து விட்டேன். அப்போது கந்தசட்டி விரத காலம். நான் நோன்பில் இருந்ததால் காத்திருக்காமல் வீட்டிற்கு வந்து சேர்ந்து விட்டேன்.
இந்தத் தகவலெல்லாம் சிரேஷ்ட்ட மாணவருக்கு உடனடியாகத் தெரிந்து விட்டது அன்றைய தினம் மாலை வேளையில் சுபச்செல்வனும் ஜெயதாஸ் என்ற இன்னொரு சிரேஷ்ட்ட மாணவனும் எனது வீட்டிற்கு வந்தனர். சுபச்செல்வன் எதுவும் பேசாமல் மௌனமாகக் கைகட்டித் தலைகவிழ்ந்து நிற்க ஜெயதாஸ் என்னோடு பேசினார். 'மச்சான்! நடந்ததெல்லாம் கேள்விப்பட்டேன். எதையும் நீ சீரியசாய் எடுக்காதை. உனக்குத் தெரியும் கம்பசுக்கு என்ரர் பண்ணுறதுக்கு எவ்வளவு கஷ்டப்படவேணுமென்று. சுபச்செல்வனை நீ காட்டிக் கொடுத்தால் அஞ்சுவரியம் அவன் படிக்கேலாது. அவனின்ர எதிர்காலத்தையும் கொஞ்சம் யோசிச்சுப்பார்! இது நீ எங்களுக்கு செய்யிற பெரிய உதவி.' எனக்கு அவர்களைப் பார்க்கப் பாவமாக இருந்தது. அதன் பின்னர் மார்சல் 3 தடவைகள் அறிவித்தல் பலகையில் தன்னை வந்து சந்திக்கும் படி அழைப்பு விடுத்திருந்தார் நான் போகவில்லை. பின்னர் அவர் நடவடிக்கையேதும் எடுக்கவில்லை ஆனால் பாலகுமாரின் நடவடிக்கை தொடரத்தான் செய்தது. பகிடிவதைக் காலம்

முடிவுக்கு வராத நிலையில் புதுமுக மாணவர் எவரும் மாணவர் பொது அறைக்குச் செல்ல முடியாது என்பது எழுதப்படாத விதி. இந்நிலையில் பாலகுமார் பகிடிவதைக் காலத்தில் மாணவர் பொது அறைக்குச் சென்றான். அங்கே சிரேஷ்ட்ட மாணவர்கள் அவனை சூழ்ந்து நின்று தாக்க முற்பட்டனர். அவன் புத்தி சாதுரியமாகத் தப்பித்துச் சென்று தனக்கு நடந்ததை உதயன் நாளிதழுக்கு எழுதிக் கொடுக்க அடுத்த நாள் அச்சம்பவத்திற்கு முக்கியமளித்து உதயன் நாளிதழ் அச்செய்தியை வெளியிட்டது. அச்செய்திக்கு சிரேஷ்ட்ட மாணவ ஆலோசகர் அடுத்த நாள் மறுப்பறிக்கை விடுத்தார்.

அவ்வறிக்கையையும் பிரசுரித்து நையாண்டித்தனத்துடன் உதயன் ஆசிரிய பீடம் சில கேள்விகளையும் எழுப்பியிருந்தது. இதனைத் தொடர்ந்து உதயன் நாளிதழ் உண்மைக்குப் புறம்பாகச் செய்தி வெளியிடுவதாகக் கூறிப் பல்கலைக்கழக மாணவர்கள் கண்டனப் பேரணி நடாத்தி உதயன் பணிமனை மீது கல் வீச்சும் நிகழ்த்தினர். இவ்வாறான எங்களது பகிடிவதைக் காலத்தின் நாள்கள் கழிந்து விட்டன. இக்காலப் பகுதியில் நடைபெற்ற மேலும் இரு நிகழ்வுகள் மறக்க முடியாதவை. எனது அயல் கிராமத்தைச் சேர்ந்த பகீரதன் எனும் மாணவன் எனக்கு முதல் வருடம் எதிர்பாராத விதமாக விஞ்ஞான பீடத்திற்கு தெரிவானான். என் மீது அவனுக்கு என்ன கோபமோ தெரியாது. என்னைக் கொல்லும் வெறியுடன் அலைந்தான். ஊரில் வைத்து என்னை அவனால் பகிடிவதைக்குள்ளாக்க முடியவில்லை. நான் பல்கலைக்கழகம் சென்ற முதலாவது நாள் என்னைத் தேடி வந்து அபிராமி உணவகத்தினுள் கூட்டிச் சென்றான். அங்கே யாரோ அருந்தி விட்டு சென்ற தேநீர்க் கோப்பை இருந்தது. அதை எடுத்து என்னிடம் தந்து மண்டியை மூக்கால் அருந்துமாறு பணித்தான், வேறு வழியின்றி நானும் அருந்தி உபாதையை அனுபவித்தேன். மேலும் இன்னொரு சிரேஷ்ட்ட மாணவன் என்னையழைத்து நடிகை குஸ்புவின் யோனியைச் சுவைத்தால் எப்படியிருக்கும் என்பதை ஒரு சிறு குறிப்பாக எழுதி வரச் சொன்னான். அதன் பின்னர் அவனை நான் சந்திக்கவில்லை. அதனால் சிறுகுறிப்பொன்றை வரைய வேண்டியயேற்படவில்லை. பிறிதொரு தருணம் அம்மாணவன் வெளிநாடு சென்று விட்டதாக அறிந்தேன். இவ்வாறான சம்பவங்களையெல்லாம் தொகுத்துப் பார்க்கும் போது உண்மையில் சிரேஷ்ட்ட மாணவர் அனைவருமே தீவிர உளச் சிகிச்சைக்குட்படுத்தப்பட வேண்டியவர்களாகவே தோற்றமளிக்கின்றனர். இவர்கள் மீது பல்கலைக்கழக நிர்வாகம் துணிந்து எந்தவொரு நடவடிக்கையும் எடுப்பதில்லை. இதற்கு முக்கிய காரணம் இம்மாணவர்களினது அரசியற் பின்புலத்தைத் தெளிவாக அறிந்து கொள்ள முடியாமலிருப்பதுதான். நான் பல்கலைக்கழகத்தில் கற்கை நெறியினைப் பின் தொடர்ந்த காலத்தில் வெளிவந்து கொண்டிருந்த 'அமுது' சஞ்சிகையில் 'யாழ் பல்கலைக்கழகத்தினுள் புலிகள் ஊடுருவியுள்ளனர்' என்ற தகவலை வாசித்தேன். அப்போது அது வெறும் பரபரப்பிற்காக எழுதப்பட்டதாகத் தோன்றியது. காலப்போக்கில் 'அமுது' சஞ்சிகை வெளியிட்ட தகவல் உண்மையானதென அனுபவ பூர்வமாக உணர்ந்து கொண்டேன். உண்மையில் யாழ் பல்கலைக்கழகத்தை அடிப்படையாக வைத்து நோக்கும் போது பகிடிவதையென்பது தமிழினமே தமிழினத்தின் மீது கட்டவிழ்த்து விடும் வன்முறையாகவே எனக்குத் தோன்றுகிறது. பெரும்பான்மையினம் கட்டவிழ்க்கும் வன்முறையை விமர்ச்சிக்கும் முன்னர் நாங்கள் எங்களை ஒரு தடவை சுயவிமர்சனம் செய்து கொள்ள வேண்டும். எனது பல்கலைக்கழக வாழ்வில் நான் எவரையும் பகிடிவதைக்குள்ளாக்கியதில்லை என்பதையும் பதிவு செய்ய விரும்புகிறேன்.

**இந்தியா ருடே இலக்கியமலரில் (1994 – 95) வெளிவந்த உமாவரதராஜனின் அரசனின் வருகையை இன்று படிக்கிற போது முள்ளிவாய்க்கால் - கரையான் முள்ளிவாய்க்கால் நினைவுக்கு வருகிறது. "ரத்த ஆற்றின் கரையில் அந்நகரம் இருந்தது. சிறுகாற்றுக்கு உரசி தீப்பற்றி எங்கும் மூழும் மூங்கில்கள் நிறைந்த நகரம் அது. கடைசி யுத்தம் மூன்று வருடங்களின் முன்னால் நிகழ்ந்தது" என்று அரசன் வருகை தர இருக்கிற நகரைப் பற்றிய நீண்ட வருணணை வருகிறது. இக்கதை குறிப்பிடும் காலம் 1990 கள்,**

**"மழை பொழிந்து கொண்டிருந்தது. அரசன் மக்கள் முன் பேசிக் கொண்டிருந்தான். அரசன் தன் வாக்கியத்தை முடிப்பதற்குள் ஒரு பெரிய மின்னல், வானத்துக்கும் பூமிக்குமாகக் கோடிழுத்த ஒரு நீண்ட மின்னல் ஒரு கணம் கண்ணொளி மங்க அதிர்ந்து போனான் ஊமையன். பேசிக் கொண்டிருந்த அரசன் மாயமாய் மறைந்து போயிருந்தான்"**

**இவ் அரசனின் வருகை ஆங்கிலத்தில் மொழி பெயர்க்கப்பட்டு டெல்கியில் இருந்து வெளிவரும் Little Magazine இல் சில வருடங்களுக்கு முன் பிரசுரமாகியிருந்து. கதையின் கீழே ஒரு அடிக்குறிப்பு இலங்கையின் முன்னாள் சனாதிபதி ரணசிங்க பிரேமதாஸா எல்.ரி.ரி.ஈ. தற்கொலைக் குண்டுதாரி ஒருவரால் சொல்லப்பட்டிருந்தார் என்றிருந்தது. ஆனால் தமிழ் மூலத்தில் எந்த அடிக்குறிப்பும் இடப்பட்டிருக்கவில்லை!**

**ஊமையன் - அவன் எப்படி ஊமையாக்கப்பட்டான் என்பதிலிருந்து அரசன் மாயமாய் மறைந்து போவது வரையுள்ள சம்பவக் கோர்வைகளை இயல்பான சிறுகதை அமைப்பிற்குள் பூடமான மொழியில் உமாவரதராஜன் நகர்த்துகிறார். உமாவினது கதை வெளிவந்து பத்து ஆண்டுகளுக்குப் பிறகு காலச்சுவடு இதழ் 52 இல் (2004 மார்ச் - ஏப்பிரல்) உங்களது 'கோட்பாடுகளின் மரணம்' பிரசுரமாகிறது.**

**இவ்விரு கதைகளையும் பற்றி யேசுராசா முன்வைத்த கருத்தை ஆதரித்து. நண்பர் ஒருவர் தமது கருத்தினை வெளிப்படுத்தினார்.**

**"அரசனின் வருகையின் அருட்டுணர்வால் எழுதப் பட்ட கதையே இராகவனது கோட்பாடுகளின் மரணம்" என்ற நண்பரது கருத்து யேசுராசாவினது கருத்தினை ஒத்திருந்தது.**

**எனது கருத்து: அரசனின் வருகை, கோட்பாடுகளின் மரணம் இரண்டுமே ஒப்பிடத்தக்கன அல்ல. உமாவினது கதை ஊமையன் - அரசன் இருவரதும் பற்றியது. உமையன் ஊமை யாக்கப்பட்டது - தமிழன் - ஊமையக்கப்பட்டமை. அரசனது மரணத்திற்கு ஒரு நியாயத்தை வழங்கு கிறது. இராகவனது கதை**

**மையமழிந்த கோட்பாடு களை முன்வைத்துச் செல்கிறது.**

**யேசுராசாவின் கருத்து எனக்கு ஆச்சிரியத்தைத் தரவில்லை. ஏனெனில் கலைமுகம் 50வது இதழில் வெளிவந்த அங்குமிங்கு மாய்ச் சில கதைகள் என்ற இலக்கியப் போலி எழுதிய விமரிசகரிடம் உள்ள மனநிலை எப்படியிரு க்கும். தனிமனிதனது ஆளுமை, சமூக, கலை உலக மதிப்பைக் கண்டு உளம் வெதும்பும் ஒருவர் கொண்டிருக்கும் காழ்ப் புணர்வினால் எழுதப்பட்ட கட்டுரையைக் கொண்டு யேசுராசாவின் "விமர்சன வளர்ச்சியை" மட்டிடலாம். தமிழில் ஒரு பழமொழி "முழங்காலுக்கும் மொட்டந் தலைக்கும் முடிச்சுப் போடுதல்" என்று இது தான் யேசுராசாவின் ஒப்பீடு. விஞ்ஞானத்தை ஆக்கத்திற்கும் பயன் படுத்தலாம். மனிதர்களை அழிக்கும் அணுகுண்டு தயாரிக்கவும் பயன்படுத்தலாம். யேசுராசாவினது ஆற்றல்?**

அருட்டுணர்வில் எழுதுவதென்றால் முதலில் அருட்டும் படைப்பெதுவோ அதை வாசித்திருக்க வேண்டும். கோட்பாடுகளின் மரணம் எழுதப்பட்ட போது நான் அரசனின் வருகையை வாசித்திருக்கவில்லை. உண்மையைச் சொன்னால் "மாறிப்போன அடையாளம்" என்றொரு கதையை நான் கோட்பாடுகளின் மரணம்" எழுதுவதற்கு முன்பாக எழுதியிருந்தேன். அது "ஆதவனில்" வெளிவந்து பின்னர் சிங்களத்தில் மொழிபெயர்க்கப்பட்டதாகவும் தகவல் கிடைத்தது. அதை நான் பார்க்கவில்லை. பின்னர் அக்கதை "இங்கிருந்து பன்னிரண்டு சிறுகதைகளை" தொகுப்பில் இடம்பெற்றது. அக்கதையை விரித்தே நான் கோட்பாடுகளின் மரணத்தை எழுதினேன். உங்களது மதிப்பீடும் சரியானதுதான். இதைத்தவிர அரசனின் வருகையின் அருட்டுணர்வினாலோ, தாக்கத்தினாலோ "கோட்பாடுகளின் மரணம்" எழுதப்பட்டதெனச் சொல்லப்படுவது என்னைத் தனித்துவமற்றவன் என நிறுவும் முனைப்பே தவிர வேறொன்றிமில்லை.

**உங்களது கோட்பாடுகளின் மரணத்தில் விவிலிய நூலில் உள்ள திருவசனங்களை ஒத்த பிரயோகங் களைக் கையாள்கிறீர்கள்? முன்பொரு தடவை கனடாவில் இருந்து வெளிவந்த வார இதழ் ஒன்றிற்கு அளித்த செவ்வியில் தினமும் பைபிளில் ஒரு பக்கம் படித்து விட்டு படுக்கைக்குச் செவ்வதாகக் குறிப்பிட்டி ருந்தீர்கள்.**

**"சாந்தியளிக்கும் தகைமை பெறுவோர் பாக்கிய வான்கள், உள்ளத்தில் தூய்மையுடையோர் பாக்கிய வான்கள்"**

**"அன்புதான் இன்ப ஜோதி அன்புதான் இன்ப ஊற்று, அன்புதான் உலகமகா சக்தி"**

**இவை சில எடுத்துக் காட்டு க்கள்.**

நீங்கள் சொல்லும் இதே கருத்தை காலச்சுவடு இதழில் (இதழ் 53) கடிதங்கள் பகுதியில் ரமேஷ் என்றொரு வாசகரும் "கோட்பாடுகளின் மரணம்" குறித்து எழுதியிரு ந்தார். திருவிவிலியம் என்பது ஓர் அற்புதமான புத்தகம். வாசிப்பில் இன்பம் தருவதில் இது முதன்மையானதென நான் இன்றுவரை கருது கிறேன். கிறிஸ்துவைக் காட்டிக் கொடுப்பதற்கு முன்பான இராப்பொழுதில் தனது சீடர்களெல்லோருடனும் "இன்று சேவல் கூவுவதற்கு முன்பாக நீ என்னை மும்முறை மறுதலிப்பாய்" எனக் கிறிஸ்து சொல்வார் அவர்சொல்லும் போது அச்சீடர் திகைப்பார். ஆனால் தன்னியல்பாகவே சந்தர்ப்பம் சூழ்நிலை யாவும் கூடிவர கிறிஸ்து சொன்னபடியே நடக்கும். இது திருவிவிலியத்திலிருந்து எக்காலத்திற்கும் பொருந்தி வரக்கூடியதாக நான் முன்வைக்கும் எடுத்துக்காட்டு. 2009 மே மாதத்தின் பின்பான நிகழ்வுகளோடு இவ்வெடுத்துக் காட்டைப் பொருத்திப்பார்த்தால் நீங்கள் திகைப்பிற் குள்ளாவீர்கள். திருவிவிலியம் ஒரு காகிதக்கடல் அதில் மூழ்கிவிட்டால் முத்துக்குளிப்பதைப் போன்று எத்தனையோ திகைப்பில் ஆழ்த்தும் பகுதிகள் கிடைக்கும். வாசிப்பினை முழுமைப்படுத்தும் புத்தகங்களில் திருவிவிலியம் முதன்மையானது. திரிபிடகம், குர்ரான், மகாபாரதம், இராமாயணம் இவையெல்லாம் திருவிவிலியத்திற்கு அடுத்தவைதான். நீங்களும் வாசிக்கத்தொடங்கினால் நான் சொன்னதெல்லாம் வெறும் புளுகு அல்லவென்பதை பக்கம் பக்கமாக உணர்ந்து கொள்வீர்கள் என நம்புகிறேன். எனது கதைகளில் ஒருபோதும் திருவிவிலிய வசனங்களை நான் வலிந்து திணிப்பதில்லை. ஒவ்வொரு கதையும் கொண்டியங்கும் அரசியலுக்கேற்ப பொருத்தமாக அமையுமெனக் கருதினால் மட்டுமே திருவிவிலிய வசனங்களைத் தழுவிச் சேர்த்துக்கொள்வேன். கோட்பாடுகளின் மரணம் எழுதிய போது அக்கதையின் பின்னணிக்கு பொருத்தமாக அமைந்ததால் திருவிலிய வசனங்கள் சிவலவற்றைத் தழுவி எழுதநேர்ந்தது. நீங்கள் எடுத்துக் காட்டிய வசனங்கள் யாவும் அத்தகையவைதான். அவை வலிந்து திணித்திருந்தால் தமக்குரிய வீச்சை இழந்து போயிருக்கும்.

இப்போது திருவிலியத்தை முழுமையாக வாசித்து முடித்துவிட்டேன். இது எனது வாழ்நாளில் அளப்பெரும் சாதனை. எப்போதும் திருவிலிய வசனங்களோடு பரிச்சயமிருக்க வேண்டுமென்பதற்காக நாளொன்றுக்கு நான்கு பக்கங்கள் வீதம் வாசித்துக்கொண்டிருக்கிறேன்.

**'கோட்பாடுகளின் மரணம்' காலக்கழிவில் இலங்கையில் பௌத்தம் நீர்த்துப் போவதை உணர்த்தி நிற்கிறதா? எதிர்வு கூறியதா? இறுதியுத்தம் நடந்த காலப்பகுதி, 2009 மே 17 இற்குப் பின்னர் நிகழ்கின்றவை மற்றும் "இலங்கையின் கொலைக் களங்கள்" வீடியோ முதலானவை துட்டகைமுனு க்களின் மறு அவதாரங்கள் நடந்து கொண்ட, நடந்து கொள்கிற விதம் பௌத்தம் இலங்கையில் நீர்த்துப் போய்க்கொண்டிருப்பதை கண்முன்னே காட்டு கின்றது.**

சிங்களவர் இலங்கையின் அரசியல் வரலாற்றில் என்றைக்காவது நல்ல பௌத்தர்களாக இருந்திருக் கிறார்களா? நீங்களே செல்லுங்கள் மகாவம்சம் அவர்களைச் சிங்கபாகுவின் புதல்வர்கள் என்றுரைக்கிறது. சிங்கம் என்றால் மாமிசம் தானே உண்ணும். அதைத் தாவரயுண்ணியாக எதிர்பார்ப்பது நமது அறியாமையின் விளைவுதான். சிங்கள "ஸ்ரீ" விவகாரம் தலையெடுத்த போது என்ன நடந்தது? தமிழிச்சிகளின் முலைகளில் தாரினால் "ஸ்ரீ" எழுதினார்கள். மணலாறு யுத்தத்தில் சிங்கள இராணுவம் கைப்பற்றிய பெண் புலிப்போராளிகளின் சடலங்களை அவர்கள் நிர்வாணப் படுத்தி பாலுறுப்புகளுக்குள் பொல்லுகளை இறுக்கி

அரசமரியாதை செலுத்தியதையும் நன்கறிவேன். புத்தன் பரிநிர்வாணமடைந்து ஞானம் மிளிர்ந்ததாம். இலங்கையிலுள்ள பௌத்தர்கள் புத்தனின் பரிநிர்வாணத்திற்கு பிறிதொருபரிமாணம் உண்டென்பதை உலகிற்கு காட்டிய பெருமைக்குரியவர்கள். இலங்கையின் கொலைக்களத்தில் வரும் காட்சிகளனைத்துமே அதை எடுத்துக் காட்டுகின்றன. "கோட்பாடுகளின் மரணம்" இலங்கையில் பௌத்தம் நீர்த்துப்போவதை எதிர்வு கூறவில்லை. ஏனெனில் சிறுபான்மையினமாகக் கருதித் தமிழன் மீது முதற்தாக்குதலைச் சிங்கள இனம் ஆரம்பித்த போது பௌத்தம் நீர்த்துப்போய் விட்டது. குறித்த காலப்பகுதியில் என்ன நடந்தது என்பதைக் குறிப்பிடுவதற்கான பிரதியாகவே கோட்பாடுகளின் மரணம் எழுதப்பட்டது. இதனது நீட்சியாக எழுதப்படவேண்டிய பிரதிகள் பலவும் காத்துக்கிடக்கின்றன. நினைத்தவுடன் எழுதிவிடவும் முடியாது. எழுதி எழுதித் தீராத பிரதிகள் பல எப்போதும் இருந்து கொண்டேயிருக்கும். "முறிந்த பனைக்கு பின் நடைபெற்ற அசம்பாவிதங்கள் எவையும் முழுமையாகக் பதிவு செய்யப்படவில்லை. அண்மையில் ஒரு குடம் கண்ணீர்வாசித்தேன். ஒரு விபத்தினைப்போல என்னைப் பாதித்த புத்தகமது. ஓர் ஈராக்கிய இளம்பெண் பாலியல் துன்புறுத்தலுக்குள்ளாக்கப்படும் படங்கள் இரண்டு அதில் சேர்க்கப்பட்டுள்ளது. உலகத்துக்கே சட்டாம் பிள்ளையாகத் தன்னைப் பிரகடனப்படுத்திக் கொள்ளும் அமெரிக்காவின் இராணுவம் எந்தளவிற்கு அநாகரிகமாக நடந்து கொள்கிறது என்பதை எடுத்துக்காட்ட இவ்விருபடங்களுமே போதுமானவை. சதாம் ஹுசைன் என்ற புத்தி சாதுரியமற்ற தலைவனின் செயற்பாடுகள் தான் அந்நாட்டு மக்களின் துயரத்திற்கும் வேதனைக்கும் காரணமாயிற்று. இதே போன்றுதான் தூரநோக்கேதுமற்ற பிரபாகரன் என்ற மோசமான தலைவனின் செயற்பாடுகள் ஈழத்தமிழர் இன்றனுபவிக்கும் துயரங்களுக்கும் வேதனைகளுக்கும் ஏதுவாயிற்று. உங்களுக்கு நான் சொல்லப் போகும் சிறுவர்கதை தெரிந்திருக்கலாம். இருந்தாலும் அதைச் சொல்லவிரும்புகிறேன்.

ஒரு சிறுவன் கடற்கரையோரமாகச் சென்று கொண்டிருந்த போது மூடப்பட்ட சாடியொன்றைக் கண்டெடுத்துத் திறந்து பார்க்க அதற்குள்ளிருந்து ஒரு பூதம் வெளிப்பட்டுச் சிறுவனை நான்உன்னை விழுங்கப்போகிறேன் என்கிறது. நீ என்னை விழுங்குவதற்குத் தடையில்லை ஆனால் இந்தச் சிறிய சாடிக்குள் நீ எப்படியிருந்தாய் என்பதை எனக்கு ஒரு தடவை செய்து காட்டு எனக் கேட்கிறான் சிறுவன். பூதமும் சாடிக்குள் நுழைகிறது. உடனே சாடியை இறுக மூடிக் கடலினுள் எறிந்துவிடுகின்றான். பிரபாகரனும் இப்படியொரு சிறுவன். இச்சிறுவனும் இரத்தக்காட்டேரி ஒழிந்திருந்த சாடியைக் கண்டெடுத்துத் திறந்து விட்டு இரத்தக் காட்டேரி வெளியே வந்து உன்னை விழுங்கப்போகிறேன் என்றதும் தலைதெறிக்க ஓடிச் சனங்களுக்கு மத்தியில் ஒழிந்து கொண்டான். சனங்களை விழுங்கிவிட்டு இரத்தக்காட்டேரி அவனை விழுங்கிய பின்னரும் பசியடங்காது என்பதை அவன் உணரவில்லை. அது இப்போதும் சனங்களை விழுங்கிக் கொண்டேயிருக்கிறது.

***நீங்கள் புனைவுகளை புதிய புதிய வடிவங்களில் வெளிப்படுத்தி வருகிறீர்கள். வினாத்தாள், படிவம், அறிக்கை, துண்டுப்பிரசுரம், விளம்பரம், அட்டவணை மற்றும் நீங்கள் பல்கலைக்கழகத்தில், உயர்தரத்தில் படித்த அளவையியல் குறியீடுகளைக் கொண்டும் வெவ்வேறு வடிவங்களுக்குள் புனைவுகளைத் தற்போது உருவாக்குகிறீர்கள். இப்படி குறிப்பிட்ட வடிவங்களுக்குள் புனைவை அமைக்க புத்தியைத்தான் (மூளை) அதிகம் பயன்படுத்த வேண்டும். செய்தியறிக்கைகளைத் தொகுத்து புனைவை உருவாக்கவும் ஒரு வினாத்தாளைத் தயாரிக்கவும் படைப்பாற்றலோ, கற்பனை ஆற்றலோ தேவையில்லை. உங்களது புனைவுகள் படைப்பாற்றலின்மையை, கற்பனையின் வறுமையைக் காட்டுவதாகவும் நீங்கள் புத்திபூர்வமாக மூளையைக் கொண்டு புனைவை உருவாக்குகிறீர்கள் என்றும் ஒரு தேர்ந்த வாசகன் குறிப்பிடுவதில் நியாயம் இருப்ப தாகக் கருத இடமுண்டல்லவா? உங்களது புனைவு வடிவங்கள் நிலைத்திருக்கும் என்று கருதுகிறீர்களா? வாசிப்புத் தான் உங்களது உலகம். எம்.ஜி. சுரேஷ், பிரேம் - ரமேஸ், ஜெய மோகன், எஸ்.ராமகிருஷ்ணன், பா.வெங்கடேசன், சுந்தரராம சாமி, ஜோடிகுரூஷ் முதலான பலரது நாவல்கள் உங்களைக் கவர்ந்ததாகக் குறிப்பிட்டிருக் கிறீர்கள். உங்களது புனைவு கள் எவையுமே இவர்களது போல இல்லையே?***

ஒரு தேர்ந்தவாசகன் வடிவமாறுதலை விளங்கிக் கொண்டு வரவேற்புடன் உள்வாங்கிக் கொள்ளக்கூடிய முதிர்ச்சியை அடைந்திருப்பான். இல்லாவிட்டால் அவனை ஒரு தேர்ந்த வாசகனெனச் சொல்ல முடியாது. எனது படைப்பை மாத்திர மல்ல அதே போன்று வெளியாகும் எந்தவொரு படைப்பையும் உருவாக் குவதற்கு படைப்பாற்றலோ, கற்பனை யாற்றலோ தேவையில்லை. இப்படியான புனைகதைகள் படைப்பாற்றலின்மையை, கற்ப னையின் வறுமையைக் காட்டுவ தாகவும் புத்திபூர்வமாக மூளையைக் கொண்டு உருவாக்குவதாகவும் ஒரு தேர்ந்த வாசகனாயிருப்பவன் எப்போதுமே கருதமாட்டான். அவ்வாறு கருதினால் அது அறியாமையின் வெளிப்பாடுதான். ஆதிமூலம், மருது போன்றோரது அரூப ஓவியங்களைப் பார்க்கு மொருவனுக்கு அவற்றைத் தன்னாலும் எளிதாக வரைந்து விடமுடியுமெனத் தோன்றினால் அவனுக்கு ஓவியம் பற்றி எதுவுமே தெரியாது என்று தான்சொல்ல வேண்டும். புத்தி அல்லது முளையை பாவித்து உருவாக்கும் படைப்பு என்று சொல்கிறீர்கள். நான் கேட்கிறேன் புத்தி அல்லது மூளையைப் பிரயோகிக்காமல் எந்தவொரு படைப்பையும் எழுதிவிடமுடியுமா? அவ்வாறு எழுதப்பட்டு வெளிவந்த எதாவது படைப்பினை நீங்கள் வாசித்திருந்தால் எனக்கு அறியத்தாருங்கள் நானுமதை அவசியம் வாசிக்கவேண்டும். ஏனெனில் இனிவரும் காலங்களில் நான் மூளையைப் பிரயோகிக்காமல் எழுத அது மிக உதவியாக இருக்குமல்லவா?

எனது புனைகதைகள் காலத்தால் அழியாமல் நிலைத்திருக்க வேண்டும் என்ற நோக்கோடு நான் ஒரு போதும் எழுதியதில்லை. அதனால் அவை நிலைத்திருக்குமென நான் கருதவுமில்லை. எனது மனநிறைவுக்காகவே எழுதுகிறேன். உலகப்புகழ் பெற ஒரு படைப்பை உருவாக்குதைவிட எனக்கு மனநிறைவு தான் முக்கியமாகப்படுகிறது. நீங்கள்

குறிப்பிட்டவர்களது படைப்புக்களையும் மனநிறைவுக்காகவே வாசிக்கிறேன். அவற்றைப் போன்று எனது படைப்புக்களையும் உருவாக்கினால் எனது படைப்புக்களை யார் உருவாக்குவது. இன்னுமொன்றை நீங்கள் தெளிவாக விளங்கிக்கொள்ள வேண்டும். அவர்கள் தமக்குச் சாத்தியமான வடிவங்களிலும் நான் எனக்குச் சாத்தியமான வடிவங்களிலும் தான் படைப்புக்களை உருவாக்க முடியும். அவர்களது மூளையால் நான் சிந்தித்துக் கொண்டிருக்க முடியாது. ஒவ்வொருவருடைய புனைகதைகளும் ஒவ்வொரு வடிவமுடையன. ஒருவர் சதுரமாகவும் இன்னொருவர் செவ்வகமாகவும், மற்றவர் முக்கோணமாகவும் எழுத்தை வெளிப்படுத்தலாம். ஒவ்வொன்றும் தனித்தனியானவை. ஒன்றுடன் மற்றொன்றொன்றை ஒப்பிட்டுக் குழம்பி விடக்கூடாது. அவ்விதம் குழம்பினால் அதைக் குணப்படுத்த மருந்தொன்றுமில்லை. அக் குழப்பத்திலிருந்து மீளமுடியாது கடைசி வரை குழம்பிக் கொண்டேயிருக்க வேண்டியது தான். மேலும் முக்கியமாக இன்னொரு விடயத்தைக் குறிப்பிடவும் விரும்புகிறேன். இலக்கியமற்றது அல்லது கலைத்துவமற்றது அல்லது புனைக்கதைக் கொவ்வாதது என ஒதுக்கப்பட்டவற்றை புனைக்கதையாக்கும் எத்தனிப்பில் நான் தொடர்ந்தும் ஆர்வங் காட்டி வருகிறேன். நீங்கள் குறிப்பிடும் வினாத்தாள், படிவம், அறிக்கை, துண்டுப்பிரசுரம், விளம்பரம், அட்டவணை, குறியீட்டு அளவையியல் என்பதெல்லாம் அவ்வெத்தனிப்பின் ஒரு பகுதியாகுமென்பதையும் எடுத்துக்காட்ட விரும்புகிறேன்.

**புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் அவர்களின் அனுமதியின்றிக் காற்றுக் கூட உள்நுழைய முடியாதிருந்தது. ஆனால் அரசாங்கமானது தனது பிரித்தாளும் தந்திரோபாயத்தால் இந் நிலைப்பாட்டைத் தலைகீழாக மாற்றியமைத்தது. ஓர் அசம்பாவிதம் நிகழ்ந்தால் எதிர் காலத்தில் அதுபோல நேராமலிருப்பதற்கு வலுவான மாற்று வழிகளைக் கொண்டிருக்க வேண்டுமென்பது தந்திரோபாயத்திட்டமிடலில் ஒரு முக்கியமான அம்சம். ஆனால் புலிகளிடமிருந்ததோ 'போர்' என்ற ஒரேயொரு மாற்று வழிதான். அதுகூட காலப் போக்கில் மிகப் பலவீனமான மாற்று வழியாகி விட்டது. இதுவே புலிகள் இயக்கத்தை தோல்விக்கு இட்டுச் சென்றது.**

**பின்நவீனத்துவ ஈழத்து எழுத்தாளர்கள் பலரும் மொழியைச் சிதைக்கிறார்கள். பொருளற்ற, அர்த்தமற்ற, எந்த வித இலக்கணத்தையம் பின்பற்றாமல் அர்த்தமற்ற வகையில் புதிதாகச் சொற்கள், வசனத்தை உருவாக்குவது மொழியை அழிக்கும் செயல்? 'நே – 1' இலும் 'தேவேந்திரனுடன் ஓர் உரையாடலிலும் மொழியைச் சிதைக்கிறீர்கள் ஒரு மொழியைச் சிதைத்துப் படைப்பாளியாக அங்கீகாரம் பெற வேண்டுமா? '1000 வருடங்களுக்குப் பிறகுதான் ஒரு நல்ல கவிஞன் தோன்றுவான். அவனது மொழியை நான் சிதைக்கக்கூடாது' என்ற கருத்துப்பட புதுமைப்பித்தன் ஒரிடத்தில் குறிப்பிட்டுள்ளார்.**

**ரஞ்சகுமாரால் பாராட்டப்பட்டிருக்கிறீர்கள். அதே ரஞ்சகுமார் 'நே – 1' ஐப் படித்து விட்டு இப்படி எழுதுவதாக இருந்தால் இராகனுடன் கதைப்பதையே நிறுத்திவிடுவேன் என்று என்னிடம் நேரிலே கூறியிருக்கிறார்.**

என்னை ஒருபோதும் பின்-நவீனத்துவப்படைப்பாளியாக நான் பிரகடனப்படுத்தியதில்லை. நே – 1 இலும் தேவேந்திரனுடன் ஓர் உரையாடலிலும் நான் மொழியைச் சிதைத்திருப்பதாகக் கருதவில்லை. இவ்விரு பிரதிகளுமே அபத்தம் மிகுந்த சமகால அரசியலை வெளிப்படுத்துகின்றன. தவிரவும் நீங்கள் குறிப்பிடும் அர்த்தமற்ற, பொருளற்ற எனும் பெயரெச்சங்களின் அர்த்தம் தானென்ன? அதை உருவாக்குவது வாசகர்கள் தான் என்பதை உங்களால் மறுத்துவிட முடியுமா? நான் பராயமடைந்த அதாவது வயது வந்த வாசகர்களுக்காகத்தான் எழுதுகிறேன். அவர்களால் எனது பிரதிகளை அர்த்தப்படுத்தி வாசிக்கமுடியுமென்ற நம்பிக்கை எனக்கிருப்பதாலேயே தொடர்ந்தும் எழுதுகிறேன். நே – 1 தொடர்பாக எஸ்.கே.விக்கினேஸ்வரன் (சரிநிகர்) என்னுடன் கதைத்த போது – "நே – 1 எனக்கு விளங்கவில்லை. அதற்காக நான் அதை நிராகரிக்க மாட்டேன்" என்று சொன்னார். தேவேந்திரனுடன் ஓர் உரையாடலை வாசித்து விட்டு ஆதவன் தீட்சண்யா "இதையெல்லாம் விளங்கிக்கொள்ள ஒரு மனநிலை வேண்டும்" என்று சொன்னார். மேலும் 'நே – 1' வாசித்த பின் காலஞ்சென்ற எம்.ஐ.எம்.றஊப் என்னுடன் தொடர்பு கொண்டு "சமகால அரசியல் பற்றிய மிக முக்கியமான பிரதி" என்று சொன்னார். 'நே – 1' வெளியாகி ஏறத்தாழ ஒரு வருடமான பின்னர் நான் ரஞ்சகுமாரை நேரில் சந்தித்த போது என் தோளில் கைபோட்டு ஈழத்தின் முக்கியமான இளம் எழுத்தாளன் என அருகில் நின்ற தனது நண்பருக்கு என்னை அறிமுகப்படுத்தினார். 'நே – 1' பற்றிப் பேச்செழுந்த போது பிரதிக்குள் தன்னால் நுழைய முடியவில்லை என்று மட்டுந்தான் சொன்னார். உங்களிடம் சொன்ன விடயத்தை நேரிடையாக என்னிடம் சொல்லியிருந்தால் மிக மகிழ்ந்திருப்பேன். மேலும் நீங்கள் குறிப்பிடுவது போல் நான் மொழியைச் சிதைத்திருந்தால் பிழைதிருத்தம் இணைக்க வேண்டியிருந்திருக்கும். அதுவும்கூட ஒரு வெளிப்பாட்டு வடிவம் தான். கிரணம் இதழில் பிரேம் - ரமேஷ் அதைச் சாத்தியமாக்கியிருப்பதை எடுத்துக்காட்ட விரும்புகிறேன். இதற்கப்பாலும் நான் மொழியைச் சிதைத்திருப்பதாக நீங்கள் கருதினால் அது ஒப்புநோக்குநரின் (Proof – Reader) கவனக்குறைவாக இருக்கலாம். தவிரவும் நான் மொழியின் பல்வேறு சாத்தியப்பாடுகளையும் முயன்று பார்த்து வருகிறேன். அதை நீங்கள் மொழிச்சிதைப்பெனக் கருதினால் நான் அதற்குப் பொறுப்பாளியல்ல. மேலும் நான் ஒரு போதும் அங்கீகாரத்தை எதிர்பார்த்து எழுதவில்லை. அப்படி எழுதியிருந்தால் நான் ஆனந்தவிகடன், குமுதம், குங்குமம், கல்கி போன்றவற்றில் தான் எழுதியிருக்க வேண்டும். அதன்

வழியே நான் ஒரு நட்சத்திர அந்தஸ்து பெற்ற எழுத்தாளனாகவும் வெளிக்கிளம்பியிருக்க முடியும். ஆனால் நான் எப்போதுமே நட்சத்திர அந்தஸ்துப் பெறாத எழுத்தாளனாகவே வாழ்ந்து முடிக்க விரும்புகிறேன்.

**யாழ்ப்பாணத்தில் நிலவும் இலக்கியச் சூழல், படைப்பு முயற்சிகள், யாழில் இருந்து எழுதும் இளைய தலைமுறை பற்றி உங்கள் கருத்துநிலை. 30 ஆண்டுகட்கு மேலாக எந்தவொரு இடப்பெயர்வையும் சந்திக்காது தொடர்ச்சியாக ஒரு பிரதேசத்தில் வசித்து வரும் உங்கள் அனுபவத்தில் யாழ்ப்பாணத்தில் குறிப்பாக வடமராட்சிப் பகுதியில் உள்ள மக்களது விழுமியங்களில் உள்ள மாற்றம்?**

யாழ்ப்பாணத்தில் இன்று நிலவும் இலக்கியச்சூழல் முனைப்புடன் எழுதுவோருக்கு வசதியளிப்பதாக இல்லை. 1990 களின் பிற்பகுதியிலிருந்து 2000 வரை யாழ்ப்பாணத்தில் நிலவிய இலக்கியச் சூழல் முனைப்புடன் எழுதுவோருக்கு வாய்ப்பாக இருந்தது. அப்போது வெளிவந்து கொண்டிருந்த சஞ்சீவி வார இதழ் இதில் முக்கிய பங்கு வகித்தது. அப்போது வெளிவந்த உடுவில் அரவிந்தன், இயல்வாணன், கதிர்காமநாதன், தாட்சாயணி, சாரங்கா, குமுதினி, கோகுலராகவன் போன்றோரது சிறுகதைகளில் இலக்கிய நயம் மிகுந்திருந்தது. அன்று நிலவிய நெருக்கடியும் இதற்கொரு காரணமாக அமைந்தது. தமிழ் எழுத்தாளர் ஒன்றியத்தின் செயலாளராக இருந்த உடுவில் அரவிந்தன் கால ஒழுங்கில் பல்வேறு விதமான ஒன்று கூடல் நிகழ்வுகளை ஒருங்கிணைத்து நடத்தினார். தொழில் நிமித்தம் அவர் யாழ்ப்பாணத்தை விட்டகன்றதும் இச்செயற்பாடுகள் முடங்கிப் போயின. இப்போது திருவாளர் குலசிங்கம் ஒருங்கிணைத்து ஒவ்வொரு மாதத்தின் முதல் ஞாயிறும் நடத்தி வரும் அறிவோர் ஒன்று கூடல் மட்டுமே இலக்கிய ஆர்வலர்களுக்கான நம்பிக்கை தரும் போக்கிடமாக உள்ளது. கலைமுகம், மறு பாதி, தவிர என மூன்றே மூன்று சஞ்சிகைகள் தான் யாழ்ப்பாணத்தில் மாற்றுச் சிந்தனைக்கான களமாக ஒழுங்கற்ற கால இடை வெளியில் இயங்கி வருகின்றன. காலந் தவறாமல் வெளிவருவது மட்டும் தான் குறிப்பிட்டுச் சொல்லக் கூடிய ஒரேயொரு அம்ச மாகவுள்ள இதழ் களும் வெளிவருகின்றன. அவை ஏற்படுத்தப்போகும் அதிர்வென்று ஏதுமில்லையென்பதால் இதைக் கவனத்தில் கொள்ள வேண்டியதில்லை. குடும்ப இலக்கியத்தின் மூலமான அரசியலும் முளைவிட ஆரம்பிக்கின்றது. இதெல்லாம் காலப்போக்கில் அகன்று போய்விடு மென்பதேயுண்மை. தவிரவும் யாழ்ப்பாணத்தில் இருந்து வெளிவரும் வார இதழ்களில் வெளியாகும் சிறுகதைகள் தட்டையானவை என்று சொல்வது கூட ஒரு மிகையான மதிப்பீடு தான். இப்போது யாழ்ப்பாணத்தில் நிலவுவது இன்னொரு வகையான நெருக்கடி. ஆனால் அந் நெருக்கடியின் சுவடேதும் இப்படைப்புக்களில் தென் படாதது தான் புதிராக உள்ளது. சாதாரண நிகழ்வுகளைக் கூட நுட்பமாகப் பதிவு செய்ய முடியாத நிலையில் தான் இன்றைய யாழ்ப்பாணத்தின் இளைய தலைமுறை யிருக்கின்றது. பதிவு செய்ய வேண்டிய அம்சங்கள் கண் முன்னே குவிந்து கிடக்க அதைவிட்டு வெகுதூரம் விலகிப் போய்க் கொண்டிருக்கிறது நமது இளையதலைமுறை. வேறென்ன சொல்வது.

வடமராட்சிப் பகுதியிலுள்ள மக்களும் செம்மறியாடுகளைப் போல் செல்லத் தொடங்கி விட்டனர். தமது பிள்ளைகளை இங்கிலீஸ் மீடியம் வகுப்புகளுக்கு அனுப்பி விட்டு சந்திர மண்டலத்திற்கு றொக்கற் அனுப்பிய வானியலாளர்களின் பெருமிதத்தோடு காத்திருக்கின்றனர். ஒரு குடும்பத்தின் அங்கத்தவர் சகலரிடமும் கைத்தொலைபேசி இருக்கிறது. மொஸ்கிற்றோ நெற்றைப்போல் இன்ரநெற்றைப் பாவிக்கத் தொடங்கி விட்டனர். வீட்டில் கொம்யூட்டர் இல்லாவிட்டால் கௌரவக்குறைவு என நினைக்கின்றனர். கேபிள் ரீவி இல்லாவிட்டால் சங்கையீனமென எண்ணத் தலைப்படுகின்றனர். ஸ்கைப்பில் கதைப்பதற்கு நடுச்சாமத்தில் எழுந்து நீராடி புத்தாடையணிந்து அலங்கரித்துக் கொள்கின்றனர். இதெல்லாவற்றையும் மூச்சுப் பேச்சில்லாமல் பார்த்துக் கொண்டிருக்கிறேன். ஒரு முற்போக்குவாதியைப் போல் நான் ஏதும் சொல்லப்போய் அவர்கள் என்னை மூளைப் பிசகானவன் எனக் கதை பரப்பி விடுவார்களோ என்ற பயம் தான் மூல காரணம்.

**யாழ்ப்பாணத்தில் வசித்து வரும் மூத்த படைப் பாளிகள், விமர்சகர்கள் பற்றி உங்கள் கருத்து நிலை?**

யாழ்ப்பாணத்தில் வசித்து வரும் மூத்த படைப்பாளிகளோ விமர்சகர்களோ மாற்றுக் கருத்துக்களுக்கு செவிமடுக்கும் நிலையில் இல்லை. தம்மைச் சுற்றி ஒளிவட்டம் சுழல வலம் வருகின்றனர். தமது சுய நலத்திற்காக மட்டுமே தமிழ்த்தேசியம் பேசுகின்றனர். தமது மூளையால் மற்றவர்



சிந்திக்க வேண்டுமென எதிர்பார்க்கின்றனர். தமது கருத்தை மற்றவர் மீது திணிப்பதில் முனைப்புக்கொண்டுள்ளனர். தமக்கு மட்டுமே கருத்துச் சுதந்திரமுள்ளதாகக் கருதிக் கொண்டிருக்கின்றனர். இவர்களது நடவடிக்கை ஒவ்வொன்றுமே முழு அபத்தமாகவும் கோமாளித்தனமாகவுமிருக்கின்றது. எதிலும் பக்கச் சார்பான நிலைப்பாட்டையே வெளிப்படுத்துவதோடு அதுவே ஒரு நடுவுநிலைமை சார் நிலைப்பாடென வலியுறுத்தவும் இவர்கள் தயங்குவதில்லை. நமது இலக்கியச் செயற்பாடுகள் தேக்கமடைவதற்குப் பிரதான காரணம் இவர்கள்தான்.

இவர்களுக்கு நட்சத்திர அந்தஸ்துக் கொடுத்தவர்கள் தான் இவர்களைத் தூக்கிக் கொண்டாடுகின்றனர். இவர்கள் தும்முவதையும் இருமுவதையும் தத்துவமாக்கிப் பொழிப்புரை செய்யும் மிக மோசமான நிலைப்பாடும் தோன்றியிருக்கிறது. நாங்கள் இவர்களைப் பொருட்படுத்த வேண்டியதில்லை. இருந்தும் இவர்களுடன் தொடர்புடைய சில சம்பவங்களை எடுத்துக் காட்ட விரும்புகிறேன்.

அவர் ஒரு நட்சத்திர அந்தஸ்துப் பெற்ற மூத்த படைப்பாளி நடுநிலை விமர்சகர் - உலகளாவிய ரீதியல் இலக்கியப் பயணங்களை மேற்கொண்ட பெருமைக்குரியவர். 2002 காலப்பகுதியில் இவருக்கு வெளிநாட்டிலிருந்து ஓர் இலத்திரனியல் சாதனத்தை அன்பர் ஒருவர் இவருக்கு அன்பளிப்பாகக் கொண்டு வந்தார். புளியங்குளத்தில் வைத்து புலிகள் இயக்கம் இச்சாதனத்திற்கு வரிவிதித்தது. (இவ் வரிவிதிப்பிற்கு பின்னர்) புலிகளின் தீவிர ஆதரவாளரான குறித்த இலக்கிய வாதி புலிகளை மிக மோசமாக விமர்சித்துத் திரிந்தார். இவரிடம் உலகளாவிய ரீதியில் பேசப்படும் திரைப்படங்களின் பிரதிகள் அனைத்தும் இருந்தன. இதை நன்கு தெரிந்த இவரது நெருங்கிய சகாவான விடுதலைப் புலிகளின் கலை பண்பாட்டுக்கழக உறுப்பினரொருவர் இவரிடம் சென்று மாற்று சினிமாவைப் பரவலாக்கும் நிகழ்வொன்றுக்காகச் சில திரைப்படப் பிரதிகள் இரவல் தரும்படி கேட்டபோது தனக்கு அன்பளிப்பாகக் கிடைத்த இலத்திரனியல் சாதனத்திற்கு விடுதலைப் புலிகள் வரிவிதித்தமையால் தன்னால் திரைப்படப் பிரதிகளை ஒருபோதும் இரவல் தர முடியாதெனக் கூறி விட்டார். புலிகள் இயக்கம் வரிவிதிக்காமலிருந்தால் இவர் திரைப்படப் பிரதிகளை இரவல் கொடுத்திருப்பார். தொடர்ந்து புலிகளை ஏத்திப் புகழ்ந்திருப்பார். அண்மைக் காலங்களில் இம்மூத்த படைப்பாளி விருது பெறும் எழுத்தாளர்களை மிக மோசமாக விமர்சித்து வரும் நிலையில் இவருக்கு நெருக்கமான ஒருவருக்கு அவர் எழுதி வெளியிட்ட புனைகதை சாராத இலக்கிய நூலொன்றிற்கு அரச அமைப்பொன்றினால் விருது வழங்கப்பட்ட போது அவ்விருது புத்தகத்திற்கே வழங்கப்பட்டுள்ளதால் அவ்விருதைப் பெற்றுக் கொள்ளுமாறு விதந்துரைத்திருந்தார். அவ்வாறெனில் பிறருக்கு வழங்கப்படும் விருதுகள் புத்தகங்களுக்காகவன்றி முக அழகுக்காகவா வழங்கப்படுகிறது? இதைப் போன்ற முழு அபத்த நிலைப்பாட்டை யாழ்ப்பாணத்தில் மட்டுமே காண முடியும். மேலும் சிலர் பிரபாகரன் தமிழீழத்தைக் கைவிட்டாலும் நாங்கள் கைவிடப் போவதில்லையென்பதாகத் தமிழத் தேசியம் பேசித்திரிகின்றனர். யாழ்ப்பாணத்தில் நாங்கள் மட்டுமே இருக்கிறோம் என மனநோயாளிகள் போன்று அறிக்கையும் விடுகின்றனர். முள்ளிவாய்க்காலில் நின்று ஆயுதமேந்திப் போராடியவர்கள் போல் நடந்து கொள்கின்றனர். இவர்கள் திருந்துவதற்கு இடமில்லை என்றே சொல்வேன்.

**பிறருடைய படைப்புக்களைக் குறித்து, சஞ்சிகைகள் குறித்து விமர்சனம் எழுதுகின்ற போது 'பாராட்டு' என்ற வகையிலேயே உங்களது விமர்சனப் பார்வை எப்போதும் இருந்து வந்துள்ளது. கருத்துநிலை சார்ந்து சீர்தூக்கிப் பார்த்து தர்க்கரீதியானதாக ஆழமான விமர்சனம் உங்களிடம் இல்லை என்ற கருத்து பலராலும் முன்வைக்கப்படுகிறது. செங்கையாழியான் குறித்து தெரிதலில் எழுதிய கட்டுரைத் தொடரும் 'ஜனரஞ்சகப் போலிகள்' என்ற வகையில் செங்கையாழியானை முற்றாக நிராகரிப்பதாகவே உங்கள் விமர்சனம் அமைந்திருந்தது. செங்கை ஆழியான் நல்ல நாவல் எழுதியிருக்கிறார். நல்ல சிறுகதைகளும் எழுதியிருக்கிறார். இதை அ. யேசுராசா கூட ஏற்றுக் கொண்டிருக்கிறார். உங்களது அநேக விமர்சனங்கள் அல்லது சஞ்சிகைகளுக்கான கடிதங்கள் வெறும் பாராட்டுக்களாக இருக்கின்ற அதேவேளை ஒரு சில நிராகரிப்புக்களாக இருக்கின்றன?**

செங்கையாழியான் எழுதியவற்றில் என்னைக் கவர்ந்தவை 'கொத்தியின் காதல்', 'இரவு நேரப்பயணிகள்' மற்றும் 'ஆச்சி பயணம் போகிறாள்' என்பவை மட்டுமே. ஒரு வசதிக்காக செங்கையாழியான் 300 படைப்புக்கள் எழுதியுள்ளதாகக் கருதுவோம். அதில் 3 படைப்புக்கள் தான் தேறக் கூடியவையென வரும் போது பொதுவாக அவரது படைப்பாற்றல் குறித்து நீங்கள் சொல்லக் கூடியதென்ன? நான் அவரது 297 படைப்புகளிலேயே கவனம் செலுத்தியதால் நீங்கள் குறிப்பிட்டது நடந்துவிட்டது. மேலும் இதுவரை நான் விமர்சனமோ மதிப்பரையோ பெரும்பாலும் எழுதியதில்லை. கடிதங்கள் என வரும் போது தொடர்புடையவரை உற்சாகப்படுத்தித் தூண்டும் நோக்கில் பாராட்டி எழுதுகிறேன். வெளிப்படையாக நிராகரிக்க வேண்டியவற்றை நிராகரிக்கிறேன். எனினும் எனது புனைகதை சாராத குறிப்புக்களை வாசித்த சிலர் நான் எதிர்பார்த்திராத வகையில் சில ஆழமான விடயங்கள் சாதாரணமான முறையில் எழுதப்பட்டிருப்பதைச் சுட்டிக் காட்டியுமிருக்கிறார்கள். குறிப்பாக நீங்கள் வெறும் பாராட்டு எனக் குறிப்பிடுவதை இன்னும் சிலர் வஞ்சப்புகழ்ச்சி என்கிறார்கள். நான் மாற்றுக் கருத்தைச் செவிமடுப்பவன். யார் எது சொன்னாலும் கேட்டுக் கொள்வேன். எனக்குத் தோன்றுவதை எழுதுவேன் அவ்வளவுதான். மேலும் நான் அடிப்படையில் எப்போதும் ஒரு விமர்சகனல்ல.

**காலம் 35வது இதழில் அ. யேசுராசாவின் முகம் பற்றிய மூன்று கவிதைகளில் இலக்கிச் சூழலை 'வேசையர் குழாம்' என்று குறிப்பிடுகிறார். தன்னையும் அதில் ஒருவராகக் குறிப்பிடுவது அவரது தெளிவான சிந்தனை மாற்றமா? மேலும் அக்கவிதையிலே இரட்டை முகக் குஞ்சுகள் என்று அவர் குறிப்பிடுவது ஹரிகரசர்மா, இராகவன், பா. துவாரகன் ஆகிய மூவரையும். 'இருந்தேன் இல்லையானேன்' என்று ஆரம்பிக்கும் யேசுராசாவின் கவிதை யான் அவருக்கு எழுதிய நீண்ட கடிதத்தின் பாதிப்பு. இரட்டை முகம் யேசுராசாவுக்கா அல்லது அவர் குறிப்பிடும் துவராகனுக்கா? என்னிடம் இரட்டை முகம்**

**இருந்திருப்பின் யேசு மற்றவர்கள் மீது வைக்கும் கருத்து நிலைகளை அப்படியே 'ஆம்' என்று கேட்டுக் கொண்டு நட்பைத் தொடர்ந்திருப்பேன். யேசுராசாவின் மற்றவர்களது கருத்துச் சுதந்திரத்தை மறுதலிக்கும் கருத்துக்கள் மீது எனது எதிர்ப்பைக் கடிதமாக எழுதி அவரிடம் சென்று கொடுத்ததை இரட்டை முகம் என்கிறாரா? யேசுராசாவின் இரட்டைமுகங்கள், நண்பர்கள் மீதான காழ்ப் புணர்வுகள் பற்றி அவரது நண்பர்களே கூறி உள்ளம் வருந்துவர். அரச விருதுகள் மற்றவர்களுக்கு கிடைத்து அதை அவர்கள் ஏற்றுக் கொண்டால் தனது தமிழ்த்தேசியக் கருத்துநிலை சார்ந்து தனது அரச விசுவாசத்தை மறந்து கண்டிப்பார். ஆனால் தான் போய் தனது அடையாளத்துக்காக வாங்கி விட்டு போலியான நியாயங்களை முன் வைப்பார். சுற்றுச் சூழல் பற்றிய நூல் ஒன்றுக்கு - 'ஏழாவது ஊழி' ஐங்கரநேசனுக்கு விருது கிடைத்த போது புத்தகத்துக்காக விருது தந்திருக்கிறார்கள் போய் வாங்குமாறு ஐங்கரநேசனைக் கேட்டுக் கொண்டவர். மு.பொ.வினது கவிதைக்கு அரச விருது கிடைத்த போது நீங்கள் எப்படி விருதினை ஏற்றுக் கொள்ளலாம் என்றும் மு.பொ. சனாதிபதியிடம் பரிசு வாங்கியதாக நண்பர்களிடம் பொய்யான பரப்புரை வேறு செய்து வருகிறார். யாருக்கு இரட்டை முகம்?**

இதில் குறிப்பிட்டுச் சொல்வதற்குப் பெரிதாக ஒன்றுமில்லை. ஆனால் இது ஒரு நகைச்சுவையான சங்கதி என்பதை மட்டும் நான் உறுதிபடக் கூறுவேன். நம்பத்தகுந்த வட்டாரங் களிலிருந்து எனக்குக் கிடைத்த தகவல்களின் படி அவர் காலத்திற்கு கவிதை அனுப்பிய திகதியிலிருந்து காலத்தில் எனது மூன்று கவிதைகள் வெளிவரவுள்ளன. படித்துப் பாருங்கள் என புதிய திரைப்படத்திற்கான அறிவிப்புப் போல விளம்பரப்படுத்தத் தொடங்கி விட்டார். காலம் வந்தது. அதுவும் யாழ்ப்பாணத்திலேயே அவர் ஒருவருக்குத்தான் வந்தது. எத்தனை பிரதிகள் என்பதை நானறியேன். முகம் பற்றி மூன்று கவிதைகள் அ. யேசுராசா என்ற பெருந்தலைப்புடனும் கடலோடி என்ற உபதலைப்புடனும் ஏராளமான பிழைகளுடன் காலத்தில் கவிதைகளும் வந்தன. அவர் பரந்த மனதோடு யாழ் நூலகத்திற்கும் ஒரு பிரதியை தனது கவிதைகளிலுள்ள பிழைகளைத் திருத்தி விட்டு அன்பளிப்புச் செய்திருந்தார். அவரது முகம் பற்றிய மூன்று கவிதைகளை ஆவலுடன் எதிர்பார்த்திருந்தவர்கள் அவை முகம் பற்றிய மூன்று கவிதைகளா? அல்லது கடலோடி பற்றிய மூன்று கவிதைகளா? எனக் குழம்பிப் போயினர். நாளடைவில் யாழ்ப்பாணத்திற்கு காலம் (35) அளவு கணக்கில்லாமல் விற்பனைக்கு வந்து விட்டது. இதை யேசுராசா எதிர்பார்க்கவில்லை. இருந்தும் ஏற்கனவே பென்சிலால் எழுதுவதில் அனுபவம் பெற்றிருந்த அவர் ஒரு பென்சிலுடன் விற்பனை நிலையங்களுக்கு தனது கவிதைகளை திருத்த விரைந்து சென்ற போது காலம் பிரதிகள் விற்றுத் தீர்ந்து விட்டன. எனினும் தன்முயற்சியில் சற்றும் மனந்தளராத யேசுராசா தனது கவிதையிலுள்ள பிழைகளைச் சுட்டிக் காட்டித்திருத்தி வாசிக்கவுமென ஒரு விளம்பரத்தை யாழ் குடாநாட்டுப் பத்திரிகைகளில் பிரசுரிக்க எடுத்த முயற்சி கைகூடவில்லை யென்பதால் தனது கவிதைகளை வாசிக்கும் வாசகர்கள் அசாதாரணமானவர்கள் என்பதால் அவர்கள் தன்னியல்பாகவே பிழைகளைத் திருத்தி வாசித்துக் கொள்வர் என்ற முடிவுக்குவந்தார். இதுதான் முகம் பற்றிய மூன்று கவிதைகளின் முன்கதைச் சுருக்கம்.

இரட்டைமுகம் குறித்து இங்கே யாரும் குழப்பமடைய வேண்டாம். முகம் பற்றிய மூன்று கவிதைகளுக்கு ஒரு பொழிப்புரை எழுதினால் குஞ்சுகள் என்பதைக் குழவி அல்லது சிறுபிள்ளைகள் எனப் பொருள் கொள்ளலாம். அவர் சொல்வது மிகச் சரியானது. உங்களுக்கு அம்மணராசாவின் கதை தெரியுமல்லவா? யேசுராசாவும் ஓர் அம்மணராசா தான் என்பதை அடையாளங் காட்டியவர்கள் நாங்கள். நாங்கள் குஞ்சுகள் அல்லது குழவிகள் அல்லது சிறுபிள்ளைகளாக இருந்ததால் தானே அவரை அம்மணராசா என அடையாளங் காண முடிந்தது. திருமண வீட்டில் மாப்பிள்ளையாகவும் மரண வீட்டில் பிணமாகவும் இருக்க ஆசைப்படுபவர் யேசுராசா. நீங்களாவது கடிதத்துடன் ஓய்ந்து விட்டீர்கள். நானோ காவியம் எழுதக் காத்திருக்கிறேன். தவிரவும் **அவோர்ட்மேனியா** எனும் வியாதியால் மிக மோசமாகப் பாதிக்கப்பட்டவர் **அ.யேசுராசா. இவர் மட்டுமல்ல எஸ்.பொ, அராலியூர் ந.சுந்தரம்பிள்ளை, த. மலர்ச்செல்வன்** போன்றோரையும் இந்நோய் மோசமாகத் தாக்கியுள்ளதை இவ்விடத்தில் குறிப்பிட விரும்புகிறேன்.

'தனக்குத் தனக்கென்றால் சுளகு படக்குப்படக்கென்று அடிக்குமாம்' என்றொரு பழமொழியுண்டு. அது யேசுராசாவுக்கு முற்றாகப் பொருந்தும். என்னவிருது வழங்கினாலும் அதை முதலில் யேசுராசாவுக்குத் தான் வழங்க வேண்டும். அப்போதுதான் அவரது நோயின் தாக்கத்தைக் குறைக்கலாம். 'தொலைவும் இருப்பும் ஏனைய கதைகளும்' என்ற நூலில் இலங்கையரசின் சாகித்திய மண்டலப் பரிசு பெற்ற நூல் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. யேசுராசாவின் இந்நூலுக்கு சாகித்திய மண்டலப் பரிசு வழங்கப்பட்ட எண்பதுகளில் சிங்களப் பேரினவாத அரசு தமிழினத்தை கட்டியணைத்து முத்தமிட்டுக் கொஞ்சிக் குலவிக் கொண்டா இருந்தது? அல்லது 2003 காலப்பகுதியில் யேசுராசாவின் 'பனிமழை' க்கு வடக்கு கிழக்கு மாகாண இலக்கிய விருது கிடைத்த போது தமிழீழம் மலர்ந்து மணம் வீசியதா? எந்த முகத்தோடு இவ்விருதுகளையெல்லாம் திருவாளர் யேசுராசா பெற்றுக் கொண்டார்? மற்றவர்களையெல்லாம் விமர்சிப்பதற்கு ஓர் அடிப்படைத் தகுதியிருக்க வேண்டும். அது யேசுராசாவிடம் அணுவளவும் இல்லை. நட்சத்திர அந்தஸ்து பெற்ற கலைஞர்களோடு தனக்கு நெருங்கிய தொடர்பிருக்கிறது எனக் காட்டிக் கொள்வதில் தற்பெருமையடையும் வியாதியும் யேசுராசாவுக்கு இருக்கிறது. அவர்களுக்கு ஆலோசனை வழங்குவதில் அவர் சமர்த்தர். சுந்தரராமசாமி தனக்கு அடிக்கடி கடிதம் எழுதுவதாகவும் அவரது குழந்தைகள் பெண்கள் ஆண்கள் நாவலை தான் பிழை திருத்தியதாகவும் கதை விட்டவர் யேசுராசா.

பொ.ஐங்கரநேசனும் இப்போது நட்சத்திர அந்தஸ்துபெற்ற எழுத்தாளராகிவிட்டார். அதனால் யேசுராசா, ஐங்கரநேசன் விருது பெறுவது குறித்து ஆலோசனை வழங்கியுள்ளார். ஆனால் நாங்கள் உறுதிசெய்து கொள்ள வேண்டியது என்னவென்றால் அரசாங்கம் விருது வழங்கும்

நடைமுறையில் ஏதாவது மாற்றங்களைக் கொண்டு வந்துள்ளதா? என்பதைத்தான் சில வேளை ஒரு எழுத்தாளருக்கு விருது வழங்கும் போது புத்தகத்திற்கு குறிப்பிட்ட புள்ளிகளும் அவரது முகஅழகுக்கு குறிப்பிட்ட புள்ளிகளும் வழங்கும் நடைமுறை ஏதேனும் முன்னர் இருந்து புத்தகத்திற்கு மட்டுமே முழுப்புள்ளிகளும் தற்போது வழங்குவதென தீர்மானித்திருக்கலாம். இதுபற்றி சரியான தகவலை அறிந்துகொள்ளாமல் ஐங்கரநேசனுக்கு யேசுராசா சொன்ன ஆலோசனை குறித்துப் பதிலளிக்க முடியாமைக்கு வருந்துகிறேன்.

யேசுராசாவுக்கு இரட்டைமுகம் அல்ல பலமுகங்கள் இருக்கின்றன. அதை நான் பகுப்பாய்வு செய்யப்போகிறேன். முன்பிருந்ததைப்போல் ஒருவரை வழிபாடு செய்து அவர் எதை எழுதினாலும் கலைப்படைப்பெனப் பிரசுரிக்கும் நிலை இன்றில்லை. இப்போது யாழ்ப்பாணத்தில் ஒரு வித்தியாசத்தைக் காட்டும் இளையதலைமுறை உருவாகிவருகிறது. அத்தலைமுறையைச் சேர்ந்த சிலர் தாம் வெளியிட்டுவரும் இலக்கிய இதழுக்காக யேசுராசாவையும் மதித்து ஒரு கவிதை எழுதித்தருமாறு கேட்டதாகவும் அப்போதுதான் "முகம் பற்றிய மூன்று கவிதைகள்" எழுதிக் கொடுக்கப்பட்டதாகவும் அக்கவிதையை வாசித்த அவ்விளந் தலைமுறையினர் இது சிறுபிள்ளை எழுதியதைப் போலிருப்பதாக நிராகரித்து விட்டதாகவும் ஒரு தகவல் கிடைத்தது. இத்தகவலின் உண்மை பொய்க்கப்பால் தனிநபர் வழிபாட்டு மரபு தகர்ந்து வருவதாக வெளிப்படும் சங்கதிதான் எங்களுக்கு முக்கியமானது. மேலும்



யேசுராசாவின் புகழ் பெற்ற கவிதை யெனக்கருதப்பட்டு வரும் "அறியப்படாதவர் நினைவாக" என்பது கூட ஓர் ஆங்கிலக்கவிதையின் அப்பட்டமான தழுவல் என்று சொல்வோரும் உள்ளனர். தவிரவும் யேசுராசா கவிதை என்ற பெயரில் எழுதிவரும் யாவற்றிலுமே தன்முனைப்புத்தான் மிஞ்சுகிறது. இதற்கு மிக நல்ல உதாரணம் அவரது "சங்கம் புழைக்கும் மாயா கோவ்ஸ்க்கிக்கும்" என்ற கவிதை. இதைப் போற்றிப் புகழ்வோரும் நம்மிடையே உள்ளனர். இதெல்லாம் எவ்வளவு அபத்தமானது என்பதை நமது கவிஞர் குழாம் இன்னும் உணர்ந்து கொள்ளவில்லை. நட்சத்திரன் செவ்விந்தியன் பின்தள்ளப்பட்டதற்கும் தீபச்செல்வன் நட்சத்திர அந்தஸ்து பெற்றதற்கும் கூட இது தான் காரணம். படைப்பாளியின் சொல்லும் செயலும் ஒன்றாக இருக்கவேண்டும் எனக்கூறப்படுவதின் அர்த்தம் தான் என்ன? ஒரு படைப்பாளி தனது செயலைத்தான் படைப்பாக்க வேண்டும். அப்பொழுது தான் அந்தப்படைப்பு நேர்மையானதாக இருக்கும். ஒருவன் திருடனாக இருந்தால் அதைப் படைப்பாக்கும் போது அந்தப்படைப்புக்கு ஒரு பெறுமதி உண்டு. இன்னொருவன் பெண்பித்தனாக இருக்கலாம். ஆனால் அவன் தனது படைப்பில் ஏகபத்தினி விரதம் காப்பதாகக் கதை விடும் போது அந்தப்படைப்பு சில வேளைகளில் வாசிக்க இதமானதாக இருக்கும். ஆனால் அப்படைப்புக்கு பெறுமதியேதுமில்லை. இந்தவகையில் உமாவரதராஜனின் 'மூன்றாம் சிலுவை' நேர்மையான படைப்பு. ஆனால் செங்கையாழியான், செ. யோகநாதன் போன்றோரது படைப்புக்களில் இந்த நேர்மையை நாங்கள் அணுவளவும் காண இயலாது. சொல்லும் செயலும் வேறுபடும் ஒருவரது படைப்பானது தன்னியல்பாகவே வெற்றுவெறிதாகி விடுவது பொதுநியதி. இது யேசுராசாவுக்கும் பொருந்தக்கூடிய தாகும். யேசுராசாவிடம் சிலசந்தர்ப்பங்களில் அடிப்படை நாகரீகம் கூட இல்லாமல் போய் விடுகிறது. இதற்கோர் எடுத்துக் காட்டைத் தரவிரும்புகிறேன். செம்பியன் செல்வன் காலமான அன்று சட்டநாதன் மரண வீட்டிற்குச் சென்றிருக்கிறார். அப்போது அங்கே யேசுராசாவும் இருந்திருக்கிறார். சட்டநாதரைக் கண்ட யேசுராசா அவரிடம் 'அடுத்த செத்த வீடு உம்முடையது தானே?' எனக் கேட்டிருக்கிறார். இவ்விதம் கேள்வியெழுப்பக் கூடிய ஒருவரை உலகில் எங்காவது நாம் காண முடியுமா? இதையெல்லாம் எவ்வாறு வகைப்படுத்திக் கொள்வது? நீங்களே சொல்லுங்கள். இன்னுமொரு சந்தர்ப்பத்தில் சட்டநாதனின் சில கவிதைகள் மல்லிகையில் பிரசுரமாகியிருந்த வேளை ஓர் அந்தியேட்டிக்கு சட்டநாதன் போன போது அங்கிருந்த யேசுராசா சட்டநாதனை இன்னொருவருக்குக் காட்டி 'இவர்தான் கவிஞர் சட்டநாதன்' எனக் கூறிச் சிரித்திருக்கிறார். இதேபோல் கவிஞர் முருகையன் தாயகம் இதழில் சிறுவர் கையில் ஆயுதம் இருந்தால் அவர்கள் என்ன செய்வார்கள் என்பதை ஒரு கவிதையாக எழுதியிருந்தார். பின்நாளில் புலிகளினால் ஒழுங்கு செய்திருந்த இலக்கியக் கூட்டமொன்றில் முக்கிய பிரமுகராகக் கலந்து கொண்ட யேசுராசா இக்கூட்டத்திற்கு வந்திருந்த முருகையனை அங்கிருந்த புலி உறுப்பினர் களுக்குச் சுட்டிக் காட்டி இவர்தான் உங்களை விமர்சித்துக் கவிதை எழுதிய முருகையன் என்று சொன்னாராம். இதை எனக்குச் சொன்னவர் தாயகம் ஆசிரியர் தணிகாசலம். அவர்

பொய்யுரைக்க மாட்டார். மேலும் நானே நேரடியாகக் கண்ட ஒரு சம்பவத்தையும் இங்கே கூற விரும்புகிறேன். யாழ் பல்கலைக்கழகத்தில் நல்ல திரைப்படங்கள் காண்பிக்கப்பட்டு வந்த காலப் பகுதியில் ஒருநாள் நானும் குப்பிழான் ஐ. சண்முகனும் பல்கலைக்கழத்திற்கு படம் பார்க்கப் போயிருந்தோம். அன்றைய தினம் சத்திய ஜித்ரேயின் இயக்கத்தில் உருவான 'அகந்துக்' என்ற திரைப்படம் காண்பிக்கப்பட்டது. உண்மையில் அந்தப் படத்தை சத்தியஜித்ரே இயக்கிய படம் என்று சொன்னால் நம்புவதற்குக் கடினமாக இருக்கும். வசனச் செறிவும் ஒரே இடத்தில் கமராவை வைத்துப் படம் பிடிக்கப்பட்ட தன்மையும் அப்படத்தை பலவீனமானதாகத் தீர்மானிக்கப் போதுமானதாகவிருந்தது. திரைப்படம் முடிந்ததும் கலந்துரையாடல் ஆரம்பமாயிற்று. யேசுராசா தான் கலந்துரையாடலை ஆரம்பித்து வழி நடத்தினார். அப்போது சண்முகனைப் பார்த்து "நீர் உமது கருத்தைச் சொல்லும்" என யேசுராசா கேட்டார். இத்திரைப் படத்தை சத்யஜித்ரே இயக்கியுள்ளார் என்பதை நம்பமுடியவில்லை. நல்ல திரைப்படத்திற்கான பண்புகள் என்றெதையும் அடையாளங்காண முடியவில்லை. ஒரு நாடகத்தைப் பார்த்த உணர்வே மேலோங்குகிறது. தொடர்ந்து ஓரிடத்திலேயே காட்சிகள் தேங்கிப் போகின்றன. இது பார்வையாளனை மிகுந்த சலிப்பிற்குள்ளாக்குவதாக அமைகிறது என்பதாக சண்முகன் தனது கருத்தினைத் தெரிவித்தார். யேசுராசா "அகந்துக்" திரைப்படத்தின் மீது மிகுந்த மதிப்பினைக் கொண்டிருந்தார். அதனால் சண்முகன் சொன்னது அவருக்கு ஏற்புடையதாக அமையவில்லை. சண்முகன் தெரிவித்த கருத்தினை முற்றிலும் மறுத்து அகந்துக் ஓர் உலகத்தரமான திரைப்படம் என்ற கருத்தை வலியுறுத்தினார். படம் முடிந்து வெளியே வரும் போது நானும் சண்முகனும் முன்னே நடக்க பின்னே யேசுராசா சைக்கிளை உருட்டிக் கொண்டு வந்தார். அவருடன் இணைந்து யேசுராவை வாய்பார்ப்பவர் என்ற பெருமைக்குரிய றெஜினோல்ட் என்பவரும் வந்து கொண்டிருந்தார். (இவர் கேசவராஜனின் திரைப்படங்களில் இணை இயக்குனராக இருந்தவர். ஓரிரு திரைப்படங்களில் நடித்துமிருக்கிறார்.) அப்போ யேசுராசா ரயில் பயணங்களில் என்ற சண்முகனின் சிறுகதையை முன் வைத்து "சண்முகன் நீ ரயில்லை •வாற பெம்பிளையும் ஆம்பிளையும் கட்டிப்பிடிக்கிறதாகக் கதை எழுதுகிற ஆள் எல்லே" என்று நக்கலடிக்கத் தொடங்கினார். பக்கத்தில் வந்து கொண்டிருந்த றெஜினோல்ட் யேசுராசாவின் மூன்றாந் தர நக்கலுக்கு பக்கவாத்தியம் வாசிப்பது போல் நரி ஊளையிடும் ஒலியில் சிரித்துக் கொண்டு வந்தார். சண்முகன் மௌனியாக நடந்து வந்தார். நாங்கள் பேருந்துத் தரிப்பிடத்தை வந்து சேரும் வரை யேசுராவின் நக்கலும் ஓயவில்லை. றெஜினோல்டின் நரி ஊளையும் நிற்கவில்லை. யேசுராசா ஏனிப்படி நடந்து கொண்டாரென முதலில் எனக்கு விளங்கவில்லை. சண்முகனோடு இது குறித்து உரையாடிய பின்பு தான் 'அகந்துக்' படத்துக்கு சண்முகன் முன் வைத்த விமர்சனத்திற்கான எதிரொலிதான் இந்த நக்கலும் நளினமுமெனப் புரிந்து கொண்டேன். ஒரு முதிர்ச்சியடைந்த பண்பட்ட கலைஞன் மாற்றுக் குரலுக்கு செவிமடுப்பான். மற்றவரது கருத்தை மதிப்பான். யேசு ஒரு சாமத்தியப்படாத குமர்ப்பெட்டை என ஏ.ஜே. கனகரட்ணா தனது நண்பர்களிடம் சொல்லியிருந்ததை இவ்விடத்தில் பொருத்திப் பார்ப்பது முக்கியமானது. ஒரு பக்குவமடைந்த மனிதனால் மட்டுமே நல்ல படைப்புக்களைத் தர இயலும். இந்நிலையில் மாற்றுக் கருத்துக்களுக்கு செவிமடுக்காத மற்றவரது கருத்தை மதிக்காத அடுத்தவர் மனத்தை எவ்வகையிலாவது புண்படுத்துவதில் முனைப்புக் காட்டி வரும் நமது பேரறிவாளரான யேசுராசாவால் எப்படி நல்ல படைப்புக்களைத் தர முடியும்?

**ஈழத் தமிழ் இலக்கியத்தின் நகர் நிலையை – நகரா நிலையை எப்படிப் பார்க்கிறீர்கள்.**

பெரும்பாலும் மாற்றத்தை உள்வாங்கி செயற் படக்கூடிய இலக்கியப் போக்கென்பது ஈழத் திலில்லை. இது தன்னியல்பாகவே ஒரு தேக்க நிலையை உருவாக்குகிறது. தவிர்க்க முடியாத சில காரணங்களால் ஒரு மாற்று இலக்கியப் போக்கென்பது கால ஒழுங்கில் நிகழக் கூடிய சாத்தியமும் அருகி விட்டது. சரிநிகர், நிகரி, அமுது, மூன்றாவது மனிதன், வியூ கம் எல்லாம் நமக்குத் தெரிந்த எடுத்துக் காட்டுக்கள். இனியொரு போதுமே இவ்விதழ்கள் வெளி வரப் போவதில்லையென்றாலும் இவை வெளிவந்த காலப் பகுதியில் ஒரு மாற்று இலக்கியப் போக்கை அறிமுகப் படுத்தியதில் பெரும் பங்காற்றியுள்ளன. பெருவெளி கூட ஆரம்ப இதழ்களில் காட்டிய வேகம் இப்போது தணிந்து ஒரு வருட இடைவெளியிலேயே வெளி வருகிறது. இப்போது காலந் தவறாமல் நாளிதழ்கள் போல சில சஞ்சிகைகள் வெளி வருகின்றன. இது முழுமையாக வியாபாரப் பொருளாகி விட்டதையே மறைமுகமாக நமக்குணர்த்துகிறது. இச்சஞ்சிகைகள் மூலம் மங்கிய ஓர் இலக்கியப் போக்கே முன்வைக்கப்படுகிறது.

தமிழகத்திலிருந்து வெளிவரும் சிற்றிதழ்களை நோக்கும் போது காலமாற்றத்தை கருத்திலெடுத்து புதிய புதிய இலக்கியப் போக்குகளுடன் வெளிவந்து கொண்டுதானிருக்கிறன. இவற்றுடன் ஒப்பிடும் போது நமது சிற்றிதழ்கள் ஈழத்து இலக்கியத்தை 50 வருடங்கள் பின்நோக்கி நகர்த்துவதிலே முனைப்புக் காட்டி வருகின்றன. காலமாற்றத்தை உள்வாங்கிக் கொள்ளாத வரைக்கும் நமது நாட்டில் தற்போது சிற்றிதழ்கள் என்ற பெயரில் வெளிவந்து கொண்டிருப்பவை ஈழத்தில் இலக்கியத் தேக்கத்துக்கே வழிகோலும் என்பதை உறுதியாகக் கூறுகிறேன்.

**'கவிதை எழுதாத கவிஞர்கள்' வாழ்க்கை, செயல் கவிதை போல இருந்த, இருக்கின்ற மனிதர்களை சந்தித்த அனுபவம்?**

என் அம்மாவினது இளையக்காவின் மூன்றாவது மகளான மோகனராணியை முதலில் குறிப்பிடலாம். இவரை பபியக்கா எனச் செல்லமாக அழைப்பேன். இவர் 1980 களின் பிற்பகுதியில் யாழ் பல்கலைக்கழகத்தில் பௌதீகவியற் துறையில் உதவி விரிவுரையாளராக இருந்தார். 1989 மார்ச் மாதமளவில் அரளி விதை தின்று தற்கொலை செய்து கொண்டார். சிறுவயதில் எனக்கு மிகவும் நெருங்கிய பெண்ணாக இருந்தார். என்னைக் கல்வியில் மேம்படுத்தி உயர் நிலைக்குக் கொண்டு வரவேண்டுமென முனைப்புக் காட்டினார். இவர் எங்கே சென்றாலும் நானும் நிழல் போலத் தொடர்ந்து செல்வேன். அப்போது இருவரும் கதைத்துக் கொண்டே செல்வோம். அவர் தனக்குத் தெரிந்ததை எல்லாம் சுவை பட எளிமையாகக் கூறிக் கொண்டே வருவார். சிலவேளைகளில் தான் பார்த்த

திரைப்படங்களின் கதைகளைக் கூட எனக்குக் கூறியிருக்கிறார். அசட்டுத் துணிச்சல் கொண்டவர். எதையும் அர்ப்பணிப்போடு செய்து முடிப்பார். எவரையும் புறங் கூறமாட்டார். அவரது மணிமணியான எழுத்துக்களடங்கிய குறிப்புக்களை இப்போதும் என்னுடன் வைத்திருக்கிறேன். எனது இளையண்ணாவை தனது செலவில் தனது வீட்டிலேயே தங்க வைத்துப் படிப்பித்தார். எல்லாம் காட்டுவாத்தை மேய்த்தது போலாகி விட்டது அவன் தேறவில்லை. தனது கருத்தைச் சொல்ல ஆளில்லாமல் தவித்தவருக்கு நான் நெருக்கமானேன். எனது வயதுக்கு மீறிய விடங்களைக் கூட அவர் எனக்கு சொல்லியிருக்கிறார். நான் புரியாமல் விழிக்கும் போது இதெல்லாம் இப்ப உனக்கு விளங்காது. ஆனால் எனக்குச் சொல்லுறதுக்கு நீதான் இருக்கிறாய் என்ன செய்ய? என்று சிரிப்பார். வந்த விசயம் முடிஞ்சால் போக வேண்டியது தான் என அடிக்கடி சொல்வார். அதேபோல் போய்விட்டார்.

அடுத்தவர் எனது அயல் வீட்டில்வசித்த குணரத்தினம் இவர் அபூ ர்வமாகவே வாய் திறப்பார். சீறாப்புராணத்தில் ஆமினாவைப் பொறுமையில் பூ மியில் எண் மடங்கு என வருணிப்பார் உமறுப்புலவர். இது குணரத்தினத்துக்கே முற்றிலும் பொருந்தும். இரு ஆண் சகோதரர்களுடனும் ஒரு பெண் சகோதரியோடும் பிறந்த இவர் தனது பால்யவயதில் வறுமையின் கொடுமையை அனுபவித்தவர். சாரனை மார்ப்புக்குக் குறுக்காகக் கட்டிக் கொண்டு பெரிய கடகத்தோடு கூட்டுறவுக் கடைக்குப் போய் கோதுமை மாவை வாங்கி தலையில் சுமந்து வருவார். ஹாட்லிக் கல்லூரியில் கணிதப் பிரிவில் கற்றார். தேர்வு முடிவுகள் திருப்திகரமாக அமையவில்லை. அக்காலப்பகுதியல் தமிழ் இளைஞர்களை ஸ்ரீலங்கா காவற்படைக்கு (Police) சேர்த்தார்கள். அத்தருணம் குணரட்ணமும் அதில் சேர்ந்து பொலிஸ் கொன்ஸ்ரபிளானார். இவர் ஏறாவூ ர் காவல் நிலையத்தில் கடமையாற்றிக் கொண்டிருந்த தருணம் ஊருக்கு வந்தார். அப்போது விடுதலைப்புலிகள் இயக்கம் காவல் நிலையங்கள் மீது தாக்குதல் நிகழ்த்தத் தொடங்கியிருந்தது. ஊருக்கு வந்திருந்த குணரட்ணம் ஒருநாள் மந்திகையிலிருந்த இளங்கோ என்ற நண்பனைச் சந்திக்கப் போய் திரும்பி வந்த போது இயக்கம் இவரை மறித்து ஏறாவூ ர்க் காவல் நிலையம் தொடர்பான தகவல்களைச் சேகரித்துக் கொண்டதுடன் குறித்த தினமொன்றில் அக்காவல் நிலையத்தின் மீது தாக்குதல் நிகழ்த்தப்போவதாகவும் அன்றைய தினம் அங்கே நிற்க வேண்டாமெனவும் சொல்லிச் சென்றது. ஆனால் குணரட்ணம் குறித்த நாளில் கடமைக்குச் சமுகமளித்து ஏறாவூ ர்க் காவல் நிலையம் தாக்குதலுக்குள்ளான போது துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி மரணமடைந்தார். 1985 காலப்பகுதியில் நிகழ்ந்த இவரது மரணம் எனதூரை மிகுந்த அதிரச்சிக்குள்ளாக்கியது. பின்னர் இவரது தினக்குறிப்பை அவரது சகோதரர்எடுத்து வாசித்த போது அதில் எனது இப்போதைய வருமானம் வீட்டுச் செலவுக்கும் சகோதரியை மணமுடிப்பதற்கும் போதுமானதல்ல. அண்மையில் பதவி உயர்வுக்கும் சாத்தியமில்லை. பொலிஸ் நிலையம் தாக்குதலுக்குள்ளாகும் போது நானிறந்தால் பதவி உயர்வு கிடைப்பதுடன் அம்மாவுக்கு சம்பளத்துடன் கூடிய ஒய்வூ தியம் கிடைக்கும் என்பதால் இவ்வாய்ப்பை நழுவ விடக் கூடாது என எழுதப்பட்டிருந்தது. இவரது தாய் இப்போது சம்பளத்துடன் ஓய்வூ தியம் பெறுவதுடன் எமது ஊருக்குள்ளேயே பெரும் பணக்காரியாகி விட்டார். குணரட்ணம் இப்போது ஒவ்வொரு ஆண்டுத் திதியிலும் நினைவு கூரப்படுமொருவராக மாறிவிட்டார். சேற்றில் முளைத்த செந்தாமரை யென்பது இவருக்கு மிகப் பொருந்தும்.

மற்றவர் எனது இளையண்ணாவின் மனைவியின் தகப்பனார். இவரை அம்மைய்யா என்றழைப்போம். இவர் சாதாரண தரம் கூடக் கற்கவில்லை. ஆனால் சொல், செயல் இரண்டிலும் கல்வி மான்களை விட மேம்பட்டவர். முரசுமோட்டையில் நல்ல கமக்காரன். செல்வாக்கான மனிதன். வயது வேறுபாடின்றி மரியாதையாக நடந்து கொள்வார். இவருடன் நான் பழகிய நாள்கள் மிகக் குறைவென்றாலும் என் மீது மிகுந்த அன்பும் மரியாதையும் செலுத்தி பல வருடங்கள் பழகியவர் போல் நெருக்கமாகி விட்டார். அப்போது நான் ஓடிய சைக்கிள் பாவனை யிலிருந்து விலக்கும் நிலைக்கு வந்து விட்டது. 2001 காலப்பகுதியில் எனது வீட்டில் வந்து தங்கியிருந்த அம்மைய்யா எனது சைக்கிளை ஒரு நாள் சோதித்துப் பார்த்தார். அடுத்த நாள் காலையில் எங்கோ புறப் பட்டுப் போனார். திரும்பி வரும் போது புது சைக்கிளுடன் வந்தார். இனிமேல் இந்த சைக்கிளை ஓடுங்கோ என்று சொன்னார். பிறகு ஊருக்குக் கிளம்பி விட்டார். அதுதான் நான் அவரைக் கடைசியாகப் பார்த்தது. 2003 காலப் பகுதியில் புற்று நோய்த் தாக்கத்திற்குள்ளாகி அதன் விளை வாகத் தற்கொலை செய்து கொண்டார். அம்மைய்யா போன்ற மனிதர்கள் வீட்டி லிருப்பது கூட ஒரு வகையில் செல்வம் தான். இப்போது நான் ஓட்டும் சைக்கள் அவர் எடுத்துத் தந்தது தான். அதன் பின்னர் வேறு சைக்கிள் எடுக்கவில்லை. அவரே என்னுடன் இருப்பதாக உணர் கிறேன். இவர்களைத் தவிர மேலும் சிலரைப் பற்றி ஏற்கனவே குறிப்பிட்டிருக்கிறேன். உங்களைக் கூட வாழ்க்கை, செயல், சொல் எல்லாம் கவிதை போன்றி ருக்குமொருவராகவே அடை யாளம் காண்கிறேன்.

**விடுதலைப் புலிகளின் தோல்வியை – அழிவை எப்படிப் பார்க்கிறீர்கள்?**

அநேகர் பதிலளித்து ஓய்ந்து விட்ட கேள்வியிது. இருப்பினும் சில விடயங்களைக் குறிப்பி ட்டாக வேண்டும். 2001 காலப்பகுதியில் தேவதாசன் யாழ்ப்பாணத்தில் சலன சித்திரம் என்ற அமைப்பை ஆரம்பித்தார். ஈழத்தின் திரைக் கலை தொடர்பில் அக்கறை கொண்டி ருந்த ஓர் இயக்கமாக அது எனக்குத் தோன்றியதால் நானும் அதில் இணைந்து கொண்டேன். காலப்போக்கில் அந்த அமைப்பினால் எதையும் ஆக்கபூ ர்வமாக முன்னெடுக்க முடியா தென்பதையும் தேவதாசன் மூளைச் சலவை செய்து கருத்துத்திணிப்புச் செய்வதில் விண்ணர் என்பதையும் உணர்ந்து கொண்டேன். 2002 காலப்பகுதியில் புலிகளின் தலைவர் பிரபாகரன் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்ட அன்றைய தினம் வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரியில் தேவதாசன் ஒரு கூட்டத்தை நடாத்தினார். அவர் உரையாற்றும் போது இன்றோடு பிரபாகரனின் கதை முடிந்து விட்டது. இரு தசாப்தத்திற்கு மேலாக முன்னெடுக்கப்பட்டு வந்த விடுதலைப் போராட்டம் மோசமான பின்னடைவை எதிர்

நோக்கியுள்ளது. இப்போது பிரபாகரன் ஒரு பொறிக்குள் அகப்பட்ட எலி. அதிலிருந்து வெளியேறுவது கடினம். இந்த ஒப்பந்தம் சமாதானத்தைக் கொண்டு வந்திருப்பதான ஒரு மாயை. உண்மையில் இவ்வொப்பந்தம் முன்னொரு போதும் நாம் கண்டிராத போர் ஒன்றுக்கான முன்னேற்பாடு என்பதை நாம் ஒவ்வொருவரும் விளங்கிக் கொள்ள வேண்டும். ரணில் விக்கிரமசிங்க பேரின வாதிகளுக்குக் கிடைத்த ஒரு சிறந்த ராஜதந்திரி இன்னுமொரு 10 வருடங்களுக்குள் புலிகள் இயக்கம் வேரோடு அழிக்கப்படுவதற்கான ஒரு திட்டமுன் வரைபு தான் இப்புரிந்துணர்வு ஒப்பந்தம் என்றெல்லாம் எடுத்துக் கூறினார். அப்போது அவர் அதை பரபரப்புக்காகக் கூறுகிறார் என நினைத்தேன். ஆனால் அவர் சொன்னதெல்லாம் நடந்து முடிந்து விட்டது. தம்மீதான விமர்சனத்தைத் தேசத்துரோகமென முத்திரை குத்தி மாற்றுக் குரல்களை செவிமடுக்கத் தவறியதுதான் புலிகளின் அழிவுக்கு முக்கிய காரணம். இதுதவிர புலிகளின் சமர் வெற்றிகளுக்கெல்லாம் மிதமிஞ்சிய முக்கியத்துவமளித்து நமது ஊடகங்களெல்லாம் கொம்பு சீவி விட்டதும் இன்னொரு முக்கிய காரணம். இவற்றைவிட புலிகளின் தலைவர். எம்.ஜி. ஆரின் இரசிகராக இருந்தார். தன்னை யொரு தமிழ்ச்சினிமாக் கதா நாயகன் போல் எண்ணினார். பஞ்ச் வசனங்கள் பேசினார். 'பொங்கிடும் கடற்கரை யோரத்திலே...' போன்ற தன் மீதான வாழ்த்துப் பாடல்களில் பெருவிருப்புக் கொண்டிருந்தார். 1996 காலப்பகுதியில் நான் பார்த்த ஒளி வீச்சு வீடியோ சஞ்சிகையில் ... 'பொங்கிடும் கடற்ரை ஓரத்திலே...' பாடலுக்கு விஜயகாந்த் பாணியில் நடிக்கவும் செய்தார். யதார்த்தமற்ற ஓர் உலகத்தைக் கட்டமைத்து இலட்சிய வேங்கைகள் இறப்பதுமில்லை விடுதலைப் புலிகள் வீழ்வதுமில்லை. புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம், வித்துடல் விதைப்பு, மாவீரர்துயிலுமில்லம் என்றெல்லாம் வெறும் அலங்கார வார்த்தைகளால் ஈழ விடுதலைப் போராட்டத்தை அர்த்தமிழக்க வைத்தார். யதார்த்த நிலைக்கு விரோதியாக எப்போதுமே இருந்தார். இவர் போரில் கொண்டிருந்த முனைப்பை இராஜதந்திரத்தில் காட்டத் தவறிவிட்டார். இதை நன்கு புரிந்து கொண்ட சிங்கள அரசானது இப்போர் முனைப்பைத் தணித்து விடும் நடவடிக்கையிலே இறங்கியது.

'நிகரி' இதழ் வெளிவந்து கொண்டிருந்த போது தமிழினத்திற்கு எச்சரிக்கை விடுப்பதைப் போல அவ்விதழில் ஒரு கட்டுரை வெளியானது. பலஸ்தீனத்தில் நோர்வேயின் தலையீட்டினால் என்ன நிகழ்ந்ததென்பதுவும் இலங்கையில் நோர்வேயின் தலையீட்டினால் என்ன நிகழப் போகின்றதென்பதும் அக்கட்டுரையில் விரிவாக அலசப்பட்டிருந்தது. இதை எத்தனை பேர் நம்மிடையே சீர்தூக்கிப் பார்த்தார்கள் என்பதும் கேள்விக்குரியது. புலிகளின் போர் முனைப்பைக் குலைப்பதற்கான ஒவ்வொரு நடவடிக்கையையும் அரசானது நன்கு திட்டமிட்ட வகையில் மேற்கொண்டது. இதனொரு முக்கிய அங்கம்தான் புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் மூலம் ஏற்படுத்தப்பட்ட சமாதான காலம். இச்சமாதான காலத்தில் அரசானது இரு முக்கிய இலக்குகளை நிர்ணயித்து முழுமையாக வெற்றியடைந்தது. 1. எதிர்காலத்தில் யுத்தம் ஏற்பட வாய்ப்பேதுமில்லை என்ற மாயையைத் தோற்றுவித்து புலிகள் இயக்க உறுப்பினர்களை குடும்ப வாழ்க்கைக்கு கொண்டு வந்தது. 2. கருணாவைப் பிரித்தாளும் தந்திரோபாயத்தின் மூலம் புலிகள் இயக்கத்தினுள்ளேயே வலுவான உளவாளிகளைத் தோற்றுவித்து இயங்கச் செய்தது. இவற்றின் மூலமாகக் குடும்ப வாழ்வில் ஈடுபட்ட புலிகளால் யுத்தத்திற்குள் முனைப்புடன் போராட இயலவில்லை.



இறுதிக்கட்டப் போரின் போக்கைத் தலைகீழாக மாற்றக் கூடிய தாக்குதல் நடவடிக்கையொன்றை மேற்கொள்வதற்கு புலிகளின் உயர்மட்டத் தளபதிகள் ஆனந்தபுரத்தில் ஒன்று கூடித்திட்டமொன்றை வகுப்பதற்குத் தயாராகிய நிலையில் அரசு ஏற்படுத்திய உளவு வலைப்பின்னல் மூலம் கிடைத்த தகவலின் அடிப்படையில் ஆனந்தபுரத்தில் மேற்கொண்ட இரசாயன ஆயுதத்தாக்குதல் மூலம் அங்கு ஒன்று கூடியிருந்த அனைவரையுமே கொன்று குவிக்க முடிந்தது. சமாதான காலத்தில் வன்னியில் நடைபெற்ற பிரபாகரனுடனான பத்திரிகையாளர் சந்திப்பிற்குச் சென்றிருந்தவர்கள் மிகத் தீவிரமாகப் புலிகளால் உடற்சோதனைக்கு உட்படுத்தப் பட்டிருந்தனர். புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் அவர்களின் அனுமதியின்றிக் காற்றுக் கூட உள்நுழைய முடியாதிருந்தது. ஆனால் அரசாங்கமானது தனது பிரித்தாளும் தந்திரோபாயத்தால் இந்நிலைப்பாட்டைத் தலைகீழாக மாற்றியமைத்தது. ஓர் அசம்பாவிதம் நிகழ்ந்தால் எதிர் காலத்தில் அதுபோல நேராமலிருப்பதற்கு வலுவான மாற்று வழிகளைக் கொண்டிருக்க வேண்டுமென்பது தந்திரோபாயத்திட்டமிடலில் ஒரு முக்கியமான அம்சம். ஆனால் புலிகளிடமிருந்ததோ 'போர்' என்ற ஒரேயொரு மாற்றுவழிதான். அதுகூட காலப்போக்கில் மிகப் பலவீனமான மாற்று வழியாகி விட்டது. இதுவே புலிகள் இயக்கத்தைத் தோல்விக்கு இட்டுச் சென்றது.

**போருக்கு மக்கள் பலியிடப்பட்டது மற்றும் பணயக் கைதிகளாகப் பயன்படுத்தியமை பற்றி உங்கள் கருத்துநிலை என்ன?**

புலிகள் இயக்கம் தலையெடுக்க ஆரம்பித்த காலத்திலிருந்தே மக்களைக் கவசமாகப் பயன்படுத்தும் மிக மோசமான தந்திரோபாயத்தைப் பிரயோகித்து வந்துள்ளனர். மக்களின் நடமாட்டமற்ற பிரதேசங்களில் அவர்கள் தாக்குதல் நடத்திய சம்பவங்கள் மிகக் குறைவானவை. மக்களிலிருந்து அந்நியப் பட்டுத்தான் புலிகள் இயக்கம் செயற்பட்டு வந்துள்ளது. தமிழீழ விடுதலைப் போராட்டத்தை மக்கள் மயப்படுத்தியிருந்தால் எப்போதோ நாம் எமதுரிமையை வென்றெடுத்திருக்க முடியும். ஆனால் புலிகள் இதை ஒருபோதும் விரும்பவில்லை. போரில் மக்களைக் கைதிகளாக்கிப் பலியிடுவதன் மூலம் தமதிருப்பை உறுதிப்படுத்திக் கொள்ளக் கூடிய சாதகமான சூழல் 2005 நவெம்பர் மாதம் வரைக்குமிருந்தது. அதாவது சர்வதேச அழுத்தங்களுக்கு முகங் கொடுக்க அஞ்சியவர்களே பெரும்பாலும் ஆட்சிப் பீடத்திலிருந்தனர்.

மகிந்த ராஜபக்ஷ ஆட்சிப் பீடமேறியதும் நிலைமை தலைகீழாக மாறியது சர்வதேச அழுத்தத்தைக் கருத்திற் கொள்ளாத ஒரு சனாதிபதியை முதன் முதலாகப் புலிகள் இயக்கம் எதிர்கொண்டது. தமது வழமையான தந்திரோபாய நகர்வின் மூலமாக மகிந்த ராஜபக்ஷவையும் கையாளலாமெனப் புலிகள் நம்பினர். 1990 களின் முற்பகுதியில் ரணசிங்க பிரேமதாசாவுடன் பகடையாட்டம் நிகழ்ந்ததைப் போல மகிந்த ராஜபக்ஷவுடன் பகடை யாடலாமெனப் புலிகள் நினைத்தனர். புலிகள் மகிந்த ராஜபக்ஷவை உளவியல் ரீதியாகப் பலவீனப்படுத்தும் நடவடிக்கைகளைத் தொடங்கினர். அந்நடவடிக்கைகளை யெல்லாம் புலிகளை உளவியல் ரீதியாகப் பலவீனப்படுத்தும் வாய்ப்பாக மகிந்த திசை மாற்றினார். கிணறு வெட்ட பூதம் கிளம்பிய கதையாக புலிகள் மகிந்தாவை உளவியல் ரீதியாகப் பலவீனப்படுத்த மேற்கொண்ட ஒவ்வொரு நடவடிக்கை க்குமான எதிர்விளைவு புலிகளை மிக மோசமாக உளவியல் ரீதியாகப் பலவீனப்படுத்துவதாயிருந்தது. இதைப் புலிகள் முன்னொரு காலத்திலும் எதிர்நோக்கியதில்லை யென்பதால் அவர்கள் முழுமையாகக் குழப்பமடையத் தொடங்கினர். எப்போதும் அவர்களிடமிருந்த மாற்றுவழி யுத்தம் தான். அவர்கள் இறுதி யுத்தத்திற்குத் தயாரான போது போதிய படை பலத்தைக் கொண்டிருக்காமையால் மக்களைக் கட்டாயாப்படுத்தி யுத்தத்தில் ஈடுபடுத்துவதைத் தவிர வேறு வழியில்லாமல் போய் விட்டது. ஏற்கனவே நான் குறிப்பிட்டதைப் போல் தமிழீழ விடுதலைப் போராட்டம் மக்கள் மயப்படுத்தப்பட்டிருந்தால் மக்களைக் கட்டாயப்படுத்தி யுத்தத்தில் ஈடுபடுத்த வேண்டிய அவசியமேதுமில்லை. அத்தவறு இவ்வாறு மக்களை யுத்தத்திலீடுபடுத்திய போது அது வெற்றியளிக்கத் தவறியதோடு மக்கள் புலிகளுக்கு எதிரானவர்களாக மாறினர். இதனால் புலிகளின் அடுத்த கட்ட நகர்வு மக்களைப் பணயக் கைதிகளாக வைத்து யுத்தத்தை முன்னகர்த்தும் மோசமான தந்திரோபாயமாக உருவெடுத்தது. இத்தந்திரோபாயமும் வெற்றியளிக்க வில்லை. இதனால் மேலும் செய்வதறியாது குழப்பமடைந்த புலிகள் அரச கட்டுப்பாட்டுப் பிரதேசத்தினுள் செல்ல முயன்ற மக்களைச் சுட்டுக் கொலை செய்ய வேண்டி யேற்பட்டது. உண்மையில் மக்களைப் பணயக் கைதிகளாகப் பயன்படுத்தி யுத்தத்தில் பலியிட்டதை எக்காலத்திலும் எவ்விதத்திலும் நியாயப்படுத்தி விட முடியாது.

**அண்மையில் வெளியான ஐக்கிய நாடுகள் அமையத்தின் இலங்கையில் போர்க் குற்றம் தொடர்பான அறிக்கையில் 40000 பேர் வரை கொல்லப்பட்டுள்ளதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. இவ்வறிக்கை எவ்வகையான தாக்கத்தை ஏற்படுத்தும்?**

அவ்வறிக்கை மிக அண்மையில் எவ்விதமான தாக்கத்தையும் ஏற்படுத்தப் போவதில்லை. ஏற்படுத்தப் போவதில்லையென்பதே நாம் வரலாற்று ரீதியாகக் கற்றுக் கொண்ட படிப்பினையாகும். ஆனாலும் ஒரு பாரிய மனிதப் படுகொலை நிகழ்ந்து முடிந்துள்ளமைக்கான முக்கிய சான்றாக இது பதிவாகிவிட்டது. எதிர்காலத்தில் இலங்கையின் வரலாற்றைக் கற்போர் சிங்களப் பேரினவாத அரசானது சிறுபான்மைத் தமிழினத்தை எந்தளவுக்கு ஒடுக்கியிருந்ததென்பதை நன்குணர்ந்து கொள்ள இது வசதியளிக்கும். இந்தவகையில் மட்டுமே இவ்வறிக்கையின் முக்கியத்துவத்தை தற்போது நாங்கள் அறியலாம். மறுவளமாக சர்வதேச மட்டத்தில் இவ்வறிக்கையினால் இலங்கையரசின் மீதான அழுத்தம் மிகுந்து விட்ட நிலையிலும் மகிந்தராஜபக்ஷ இது குறித்துப் பெரிதாக அலட்டிக் கொள்ளவில்லை. 'ஐக்கிய நாடுகள் அமையத்தில் எமக்கு நண்பர்கள் இருக்கிறார்கள்' என்று அறிக்கை விடுத்திருந்தார். இந்த அறிக்கை விடுப்பானது ஐக்கிய நாடுகள் அமையத்தின் அறிக்கை பற்றிய சிங்களப் பேரினவாத அரசின் மிக மோசமான எதிர்வு கூறலாகின்றது. மகிந்த குறிப்பிட்ட நண்பர்கள் யாரென்பதை நாங்கள் நன்கறிவோம். கர்ணமகாராசாவின் கவச குண்டலம் போல் ரஸ்யாவும் சீனாவும் வீற்றோ அதிகாரத்தை மகிந்தாவுக்குச் சாதகமாகப் பிரயோகிக்கப் போகின்றன. ஐக்கிய நாடுகள் அமையமென்பது இன்றைக்கு உலகளாவிய ரீதியில் வலுவிழந்து வருமோர் அமைப்பாக மாறி வருகிறது. ஒப்புக்கு சப்பாணியாக இருக்கும் இத்தகைய அமையமொன்று உண்மையில் தேவைதானா? என்ற கேள்விதான் எழுகின்றது. உலகளாவிய ரீதியில் இன்று நடைபெற்று வரும் மனித உரிமை மீறல் நடவடிக்கைகளுக்கெல்லாம் ஐக்கிய நாடுகள் அமையம் வலுவிழந்திருப்பதே பிரதான காரணம். மனித உரிமை மீறல் நடவடிக்கைகளில் துணிகரமாக ஈடுபடும் நாடுகள் வீற்றோ அதிகாரமுடைய நாடுகளுக்கு நேசமுடையனவாய் இருப்பதை அவதானிக்கலாம். இந்நிலையில் ஐக்கிய நாடுகள் அமையம் மனித உரிமை மீறல் மற்றும் போர்க்குற்றம் தொடர்பாக அறிக்கை வெளியிடுவதற்கு முன் ஆற்ற வேண்டியது என்ன என்பது தான் நமக்கு முன்னுள்ள பிரதானமான வினா? இதை இரு வழிகளில் அணுகலாமென நான் கருதுகிறேன். முதலாவது ஐக்கிய நாடுகள் அமையத்தினைக் கலைத்து விட்டு வலுவுள்ளவொரு நிறுவன அமைப்பை உருவாக்கிக் கொள்ளலாம். இரண்டாவது ஐக்கியநாடுகள் அமையத்தைக் கலைக்காமலே வீற்றோ அதிகாரம் தொடர்பான செயற்பாடுகளில் மாற்றங்களைக் கொண்டு வரலாம். அதாவது வீற்றோ அதிகாரத்துடன் இணைந்த வகையில் பிற அங்கத்தவ நாடுகளின் ஆதரவு குறித்த கணிப்பீட்டுப்

புள்ளியையும் கவனத்திலெடுத்து இறுதித் தீர்மானத்தை மேற்கொள்ளுமோர் ஏற்பாட்டினை நடைமுறைக்குக் கொண்டுவரலாம். இது பல வழிகளில் ஐக்கிய நாடுகள் அமையத்தை வலுப்படுத்தும்.

● ● ●

(இந் நேர்காணலில் கூறப்பட்டுள்ள கருத்துக்கள் ராகவனின் கருத்துக்களே அன்றி அது எவ்வகையிலும் மகுடத்தின் கருத்தாக அமைய மாட்டாது.

நவீன தமிழ் இலக்கியப் போக்குகள் தொடர்பாக புதிய கருத்தாடல்களுக்கு வழி திறந்து விட்டிருக்கும் இந் நேர்காணல் தொடர்பான எதிர்வினைகளையும் ஒரு ஆரோக்கியமான கருத்துப் பகிர்வையும் ஆவலுடன் எதிர்பார்க்கின்றோம்.)

- ஆசிரியர் -

# நேர்கண்டவர் அறிமுகம்



## பா.துவாரகன்

பெயர்: பாலசுப்பிரமணியம் துவாரகன். பா.துவாரகன், மு.பா.துவாரகன், துவாரகன் ஆகிய பெயர்களில் எழுதி வருகிறேன். பிறந்தது 1975, யாழ்ப்பாணம் ஏழாலை. வசிப்பதும் ஏழாலை. படித்தது ஏழாலை தெற்கு அமெரிக்கன் மிசன் தமிழ்க்கலவன் பாடசாலை, தெல்லிப்பழை யூனியன் கல்லூரி. யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் கணித பாடத்தில் விஞ்ஞானமாணிப் பட்டத்தை 2000ஆம் ஆண்டு பெற்றுக்கொண்டேன். தற்போது அபிவிருத்தி உதவியாளராக யாழ் போதனா வைத்தியசாலையில் கடமையாற்றுகிறேன்.

ஊடகத்துறை விருப்பம். அல்ஜசிரா போன்று ஒரு தமிழ்த் தொலைக்காட்சி இல்லையே என்று நினைப்புதுண்டு. அரசியல், சமூக விடயங்களைத் தேடிக் கற்பது இயல்பாகிவிட்டது.

கனடாவில் இருந்து வெளிவந்த வைகறை என்ற வார இதழுக்காக வயலின் வித்துவான் சோமாஸ்கந்த சர்மா, மனித உரிமை செயற்பாட்டாளரும் சமூகப் போராளியுமான கேகாலை மலர் என அறியப்பட்ட மேகலா சண்முகம், தமிழ்த் தேசியத்தின்பால் தெளிவான சிந்தையுடையவரும் எழுத்தாளருமான மு.பொன்னம்பலம் முதலான 10 பேரையும் காலம் சஞ்சிகைக்காக நாடக இயக்குநரும் நடிகருமான தர்மசிறி பண்டாரநாயக்க, பேராசிரியர் தயா சோமசுந்தரம் மற்றும் பேராசிரியர் சிவத்தம்பி ஆகியோரையும் நேர்காணல் செய்யச் சந்தர்ப்பங் கிடைத்தது.

கலைமுகம் சஞ்சிகையில் காம்யுவின் அந்நியன் நாவலின் தமிழ் மொழிபெயர்ப்புக்கு எழுதிய 'அந்நியனும் காலம் பற்றிய பிரக்ஞையும்' என்ற விமரிசனமும் (இது காலம் சஞ்சிகையிலும் பிரசுரமானது) 2008இல் யாழ்ப்பாணத்தில் 'நிசா'புயலால் ஏற்பட்ட வெள்ளப் பெருக்குப்பற்றி எழுதிய 'எண்பது வருடங்களுக்குப் பிறகு ஒரு மழை நாள்' என்ற கட்டுரையும் நிறைவைத் தருவன. பத்திரிகைளுக்கும் சஞ்சிகைளுக்கும் கட்டுரைகள் அவ்வப்போது எழுதுவதுண்டு.

கர்நாடக சங்கீதம் கேட்டுக் கொண்டே இருக்கலாம். செம்பை வைத்திநாத பாகவதர் பாடுகின்ற தியாகராஜருடைய கீர்த்தனைகளைக் கேட்கின்ற போது தெலுங்கிலே அவை இருப்பதுபோல் தெரியாது. நளினகாந்தி இராகத்தில் 'மனவி(னா)லகிஞ்ச ராதடே மர்ம(மெ)ல்ல தெல்பெத னே மனஸா' ஐ செம்பை பாடுகிறபோது அந்த கீர்த்தனை தெலுங்கென்றே உணர்ந்ததில்லை. சங்கராபரணத்திலே 'எதுட நிலிசிதே நீது ஸொம்மு(லே)மி போவுரா', சரஸ்வதி மனோகரி இராகத்தில் 'எந்த வேடு கொந்து ராக வ பந்த(மே)லரா ஓ ராக வ' முதலானவற்றைத் திரும்பத் திரும்பக் கேட்பேன். தேவாரம், திருவாசகம் இவற்றைப் பண்ணோடு - இசையோடு பாடுகின்ற போது மெய் மறந்து கேட்கத் தோன்றும். சில வருடங்களுக்கு முன்னர் ஜெயா ரிவியில் ஒளிபரப்பாகிய மார்கழி மகோற்சவத்தில் விஜய் சிவா கந்தரனுபூதி பாடியதைக் கேட்ட பிறகு கந்தரனுபூதியைப் பாடமாக்க வேண்டும் என்ற எண்ணம் ஏற்பட்டது. பாடிய விதம் - இராகம் மனதினை இலயிக்கச் செய்தது.

Hunchback of Notre Dame, Brotherhood முதலான திரைப்படங்கள் பற்றி எழுத விருப்பம். செர்மானியத் திரைப்பட விழா ஒன்றில் பார்த்த Vier Minuten ( நான்கு நிமிடம்) என்ற திரைப்படத்தை மறுபடியும் பார்க்க வேண்டும். வெளியே செல்லும்போது புகைப்படக் கருவி இல்லாமல் செல்ல விரும்பியதில்லை.

கொழும்பிலே வாழ்ந்த காலத்தில் தமிழறிஞர் உமாமகேசுவரம் பிள்ளையை நேர்காணல் செய்யப்போய் தமிழ் படிக்க நேர்ந்தது. பண்டிதர் நாகலிங்கம் அவர்களை நேர்காணல் செய்யவும் அவரிடம் தமிழ் படிக்கவும் காரணமாக இருந்தவர் ஆசிரியர் உமாமகேசுவரம் பிள்ளை அவர்கள்.

ச.இராகவன், எஸ்.சிவதாஸ், மு.பொன்னம்பலம், கேகாலை மலர், கெஷரீன் ராதிகா சேவியர், சோபாசக்தி, முனைவர் அரங்கராஜ் முதலானவர்களை விரிவான தளத்தில் நேர்காணல் செய்ய விருப்பம். காலம் இடந்தரவேண்டும். இராகவனை நேர்காணல் செய்தது மகிழ்ச்சி.

இதுவரை துவாரகன் என்ற பெயரில் கவிதை, சிறுகதை எதுவுமே எழுதிப் பிரசுரித்ததில்லை. இணையத்தளம் ஏதுமில்லை. முத்துக்குமாருக்காகக் கூட ஒரு வரி எழுதியதில்லை. போரின் இறுதிநாள்களில் நடந்தவற்றை அறிந்த பிறகு சிங்களமொழி படிப்பது துன்பந்தருவதாய் உள்ளது.

துவாரகன் என்ற புனைபெயரில் கவிதைகள் எழுதிவருபவர் சுப்பிரமணியம் குணேஸ்வரன் என்ற இயற்பெயரைக் கொண்ட கவிஞர். வல்லைவெளி - http://www.vallaivelie.blogspot.com/, குணேஸ்வரன் - http://skuneswaran.blogspot.com/ முதலான பல இணையத் தளங்களுக்குச் சொந்தக்காரர். மூச்சுக் காற்றால் நிறையும் வெளிகள், அலைவும் உலைவும் ஆகிய இருநூல்களும் சுப்பிரமணியம் குணேஸ்வரன் என்ற இயற்பெயரைக் கொண்ட துவாரகன் எழுதியதே. பாலசுப்பிரமணியம் துவாரகன் என்ற இயற்பெயரைக் கொண்ட சிறியேன் எழுதியதல்ல.

# கடிதங்கள் கருத்துக்கள்

அன்பார்ந்த மகுடம் ஆசிரியர் அவர்களுக்கு,

1. மகுடம் இதழ் - 2இல் இராகவனின் பேட்டி வாசித்தேன். இன்று நம்மவர் எழுதும் சிறுகதைகளை விட சுவையானதாக இருந்தது. அவரது மறைக்காத உண்மையும் தனக்குரியதாக்கிக் கொண்டதாக கூறும் மௌனமும் ஒருவித ஆத்மீக(சத்திய) பரிசோதனைக்கு கிட்டே கொண்டு செல்கிறது எனலாம். இவை போன்ற பேட்டிகள் மிக உவப்பானவை. பிரசுரித்தமைக்கு நன்று.

**மு.பொன்னம்பலம்.- கொழும்பு**

2. மகுடம் இரண்டாவது இதழ் கிடைக்கப்பெற்றேன். இப்படியொரு சஞ்சிகையை வெளிக்கொணரும் தங்களது உழைப்பிற்காக ஒரு வாசகனாய் தலைவணங்கி பாராட்டி வாழ்த்துகிறேன்.
சிறுகதைகள், கட்டுரைகள், கவிதைகள் அனைத்தும் அருமையாக அமைந்திருக்கின்றன. விதவிதமான வாசித்தலைக் கொடுத்தன. முக்கியமாக துவாரகனின் ராகவனுடனான நேர்காணல் மிகஅருமை. ராகவனின் படைப்புக்களை வாசித்திருக்கிறேன். அந்த அனுபவம் அலாதியானது. ஒரு வாசகனாய் ராகவனின் வாசிப்பனுபவங்களை ஒரு நேர்கோட்டில் உள்ள தோழனை நேருக்குநேர் சந்தித்ததைப்போல் உணர்கிறேன்.
ராகவா நீ வாசித்து உணர்ந்து அனுபவித்ததை எல்லாம் உன்னுடன் மீட்டிப் பார்க்கிறேன். உன் தோழன் 'தாஸ்தயாவெஸ்கி உன் வீட்டில் இருப்பாரென உறுதியாக நம்புகிறேன். ஏனெனில் அவரைக் கடந்திடாது இவ்வளவு தூரம் நீ பயணித்திருக்க முடியாது. உன் அனுபவங்களை அறிய அடுத்த மகுடத்திற்காக காத்திருக்கும் கொக்காய் ஒற்றைக் காலில் நிற்கிறேன். மகுடம் மங்கிடாது மென்மேலும் மின்னிட வாழ்த்துகிறேன்.

**சுதர்மமகராஜன் - கண்டி**

3. மகுடம் இதழ் - 2ஐப் பார்த்தேன். கிழக்கு மாகாணத்திலிருந்து இன்னும் வரும் சில சஞ்சிகைகளில் மகுடம் கலை இலக்கிய சமூக பண்பாட்டு காலாண்டிதழ் மிக சிறப்பாக ஆக்கப் பெற்றிருக்கிறது. அதன் இலக்கிய கதை மானிடம் தழைக்க உதவும் என்பது தெளிவாகிறது. கவிதைகள் சித்தாந்தனின் சிறுகதை வித்தியாசமான நவீன போக்கை நகர்த்திச் செல்கிறது. பயணக் கட்டுரையின் தொடக்கமே தனிச்சிறப்பு. அ.ச.பாய்வாவுக்கு பாராட்டுக்கள். மகுடம் இலக்கியப்பணி தொடர வாழ்த்துக்கள்.

**அ.வே.கெங்காதரன், பருத்தித்துறை.**

4. அன்புக்குரிய மகுடம் ஆசிரியர் அவர்கட்கு.
இராகவனின் பேட்டியில் எனது கதை இன்னொரு கதைக்குள் காலம் சிற்றிதழில் அடங்கியிருந்த தகவல் இருந்தது. சில மாதங்களுக்கு முன்னர் எனது நண்பரொருவர் 'காலம்' எனது கதையை இன்னொரு தலைப்பில் பிரசுரித்திருப்பதை யாழ்.பல்கலைக்கழக நூலகத்தில் கண்டதாக எனக்கு போன் பண்ணியிருந்தார். எனக்கு ஒரு பிரதியைக்கூட அனுப்பாத அவர்களது பண்பற்ற தன்மை குறித்து அப்போது நான் மனம் வருந்தியிருந்தேன். இப்பொழுது மர்மம் புரிகிறது.

**வே.தில்லைநாதன் - கொழும்பு**

5. கிழக்கிலங்கையிலிருந்து வெளிவருகின்ற மகுடம் இரண்டாவது இதழ் கையில் தள்ளிக் கதவைத் திறக்கும் காற்றைப் போல் மெய்யாகவே சிந்தனையைத் தூண்டித் துருவக்கூடிய ஆக்கங்களோடு வந்திருப்பது ஆரோக்கியமான சமகால இலக்கிய நிகழ்வு.
எழுத்தை இலக்கியத்தை ஆக்கவியலை நேசிக்கும் ஒவ்வொரு நுகர்வாளர்களும் தேடிப்பார்க்க வேண்டிய படிக்க வேண்டிய சஞ்சிகை மகுடம்.

**நீலாபாலன் - தினக்குரல் (15.07.2012)**

6. மட்டக்களப்பு மண்ணை மேலும் வியக்கச் செய்யும் விதமாக ஒரு அபூர்வமாக மலரும் ஒரு பூவையொத்து மகுடம் எனும் கலைஇலக்கிய சமூக பண்பாட்டுக் காலாண்டிதழை சற்று தாமதமாகவே வாசிக்கக் கிடைத்தது.
மகுடத்தின் இரண்டாம் இதழில் இடம்பெற்றிருக்கும் ஒரு முக்கியமான நேர்காணல் குறித்து நான் இங்கு குறிப்பிட்டே ஆக வேண்டும். நீண்ட நாட்களுக்குப் பிறகு ஒரு நிறைவானதும் நேர்மையானதுமான ஒரு நேர்காணலை வாசித்த திருப்தி இராகவனின் நேர்காணலை வாசித்தபோது ஏற்பட்டது. எவ்விதமான பொய்ச்சாயங்களும் பூடகமான பதில்களுமற்று வெளிப்படையாக அவர் அளித்துள்ள பதில்கள் சுவாரசியமாகவும் அதேசமயம் பாதியில் மூடிவைக்கத் தோன்றச் செய்யாத ஒரு நல்ல புதினத்தை வாசிப்பதை ஒத்ததுமான உணர்வைத் தந்தது. இவ்வளவு விரிவாகவும் தெளிவாகவும் உரையாடக்கூடியவர்க்குள் ஒளிந்திருக்கும் இறந்தகால அலைவர்கள் இன்னும் இன்னும் பல நல்ல எழுத்துக்களை அவர்களிடமிருந்து வெளிக் கொண்டுவரும் என்பது நிச்சயம். அவரது நேர்காணலின் அடுத்த பகுதிக்காக காத்திருக்கிறேன்.

**எம்.ரிஷான் ஷெரிப் - தினகரன் (26.08.2012)**

7. அண்மையில் கிழக்கிலங்கையிலிருந்து வெளியாகியுள்ள மகுடம் கலை இலக்கிய சமூக பண்பாட்டு மும்மாத சஞ்சிகை மிகுந்த அவதானிப்புக்குரியதாக ஆக்கங்களைக் கொண்டு மிகவும் வித்தியாசமான வெளியீடாக முகம் காட்டுகிறது. என்றுமில்லாதவாறு இலக்கிய உலகில் படைப்பியலில் நவீனத்துவம் மேலாண்மை செலுத்தி வருகின்றபோது எழுத்தியலின் எல்லாத் துறைகளிலும் கவிதை சிறுகதை நாவல் போன்ற எல்லாவற்றிலும் வியத்தகு மாற்றங்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. மகுடம் காலாண்டிதழ் இந்தப் புதிய போக்கை கௌவ்வி வரும் ஊடகமாக செயல்படுவதையே தனது செல்நெறியாக கொண்டு பயணம் தொடர்ந்திருக்கிறது என்பதை இதுவரை வெளியான மகுடம் இதழ்கள் உறுதிப்படுத்துகின்றன.

**கவிமணி – நீலாபாலன் - வீரகேசரி (28.07.2012)**

8. மானுடம் சிறக்க உழைப்பது மகுடம் தானதுவாகித் தழைப்பதும் 'மகுடம்' என்ற சமுதாய மேம்பாட்டுச் சிந்தனையோடு தமிழிலக்கியப் பணிக்கு வந்துள்ளது மகுடம் சஞ்சிகை. ஆசிரியர் வி. மைக்கல் கொலின் புதிய எழுத்து, புதிய இலக்கிய சிந்தனை விரும்பிகளுக்கு இது உவப்பானது என்பதை இதன் 2 ஆவது இதழ் அம்சங்கள் உணர வைத்துள்ளன. இன்றைய ஈழத்து நவீன தமிழிலக்கியத்தின் தவிர்க்க முடியாத ஆளுமையாக நிமிர்ந்து வருபவர் ச. இராகவன். 'மௌனமே வாழ்க்கையாக' என்ற தலைப்பில் இராகவனை நேர் கண்டு பா. துவாரகன் எழுதியுள்ளார். இவ் வாக்கம் ச.இராகவனின் நனவிடை தோய்தல் எனத்தான் சொல்ல வைக்கின்றது. இளமைக்காலந் தொட்டு பிறப்பு(11.08.1976) இன்று வரைக்கான இராகவனின் பாடசாலை, வீட்டு வாழ்க்கை, இலக்கிய அனுபவங்கள் என்பன விலாவாரியாகச் சொல்லப்பட்டுள்ளன. இருபத்தி மூன்று பக்கங்களுக்கு நேர்கானல் நீண்டு அடுத்த இதழிலும் தொடரவிருக்கின்றது. இவர் சிறு கதை, கட்டுரை என்பவற்றோடு 'மூக்குப் பேணி' என்ற குறும்பட இயக்குநராகவுமிருந்து தனது ஆளுமையைக் கவனிப்புக குரியதாக்கியவர். சம கால ஈழச் சிறுகதைகளை இவ்விதழில் படிக்க முடிகின்றது. கதை மாந்தர் பேச்சாடல்கள் ஒறுப்பாக்கப்பட்டு ஆக்க கர்த்தாவின் உரைநடையில் கட்டியெழுப்பப்பட்டுள்ளன. **Known Devil is Better than an Unkown Angel** என அடிக்கடி அலுவலகங்களின் பேச்சுக்களில் உலாவும் அபிப்பிராயத்தை சித்தார்த்தனின் 'அலங்கார மூர்த்தியின் அலுவலகக் கோப்பு' சிறுகதை அடிநாதமாக்கியுள்ளது. அலுவலகங்களில் எழும் ஒரு நிலைப்பாட்டை யதார்த்தமாக வெளிக்காட்டுகின்றது. எண்களுடன் பயணித்தல் திசேரா படைத்தது தமிழ்ச் சிறு கதையுலகில் ஒரு புதிய கருவை நடமாட விட்டுள்ளது. 'எல்லாம் நிறைவேறிற்று' இறுதிப் போசனத்தில் யேசுக்கிறிஸ்துவை காட்டிக் கொடுத்ததை மீளுரைப்புச் செய்கின்றது வி.மைக்கல் கொலின் தன்னெழுத்தில் தருகிறார். ஒரு மனிதன் பலத்தோடு நிற்கும் போது அவனோடு நின்று அவனைப் புகழ்வதும் அவன் பலம் குன்றும் போது அவனைக் கேலி செய்து அவனை விட்டு ஒதுங்கிக் கொள்வதும் மனித இயல்பென்பதை இவ்வெழுத்துருவில் காண முடிகின்றது. வாசித்து முடிந்ததும் முள்ளிவாய்க்காலில் நடந்த கடைசிப் போரை மனது தொட்டுச் சென்றது. ஈழத்தின் மிக முக்கியமான நவீன இலக்கிய சஞ்சிகையென்ற கணிப்பைப் பெறத் தக்க 'மகுடம்' சஞ்சிகையின் வாசிப்பு சமகால ஈழக்கலை இலக்கியம் சார்பான மீள் பார்வையின் தேவையைத் தூண்டுகின்றது. இலக்கியத் தேடல்கள் வரவேற்று வளர்க்கப்படவேண்டும்.

**சமரசன் - வீரகேசரி – (20-10-2012)**

*கடிதங்கள்...... கடிதங்கள்...... கடிதங்கள்...... கடிதங்கள்...... கடிதங்கள்...... கடிதங்கள்...... கடிதங்கள்......*

மட்டு நகரில்

NEB

50 ANNIVERSARY CELEBRATION NEB 1958 ★ 2008

சுத்தமான....

சுகாதாரமான....

"A" தரச் சான்றிதழ் பெற்ற

முதற்தர பேக்கரி









# நியு எம்பயர் பேக்கரி







186, திருமலை வீதி,
மட்டக்களப்பு.
T.P :- 065 2223105

# புதிய ஆண்டில் புதிய அறிமுகம்

**Eastern Association Photographic Art** EAPA

ஆதரவில்

05.04.2008 அன்று மட்டக்களப்பு அரசடி மகாஜனக் கல்லூரி கலையரங்கில்
இடம்பெற்ற "மக்களுடன் உறவாடல்" கண்காட்சியின் போது கிழக்கில் முதன்முறையாக
"கரிஷ்மா அல்பத்தை" அறிமுகப்படுத்திய
"ஓவியா" ஸ்தாபனத்தாரின் மற்றுமோர்
புதிய அறிமுகம்

| | |
|---|---|
| 08x24 | (08x12) |
| 12x24 | (12x12) |
| 10x30 | (10x15) |
| 12x30 | (12x15) |
| 12x36 | (12x18) |

ஆகிய அளவுகளில்

## CNT அல்பம்

Gloosy - Matt - Velvettouch
Lostor - silktouch Metatlie
ஆகிய தரங்களில் "CNT அல்பங்கள்"
செய்து கொள்ள நீங்கள் நாடவேண்டிய இடம்.

## "ஓவியா ஸ்ருடியோ"

28/1, திருமலை வீதி, மட்டக்களப்பு.

தொலைபேசி இல.: 077 6127263, 075 9607599

**ஸ்ருடியோ மற்றும் படப்பிடிப்பாளர்களுக்கு விசேட விலையில்**

ISSN-2279-1906




கிழக்கில் உதயமாகும்

சூரியக் கதிர்களினால்

மிளிருவதற்கு!

நாடு முழுவதிலும் 40,000 இற்கும் மேற்பட்ட அங்கத்தினர்கள் மிக எடுப்பாக இருக்குமொரு இடம்தான் பிரண்டிக்ஸ். அதுமாத்திரமல்ல ஜனாதிபதி விருதினால் கௌரவிக்கப்பட்ட மிகபிரமாண்டமான ஏற்றுமதியாளரும் கூட. கிழக்கின் உதயத்திற்கு பிரண்டிக்ස் நாம் முன்னின்று மட்டக்களப்பில் உங்களனைவருடனும் கைகோர்த்து ஒரு புதிய பயணத்திற்கு...

brandix®
x'pressions

34/ஏ, செமட்றி ரோட்,கள்ளியன்காடு, மட்டக்களப்பு